தெய்வகணை

வெளிச்சம்

ஸ்ரீ

ராமஜெயம்.

உலககுணக்கண்ணாடியென்னுந்

தெய்வகுண வெளிச்சம்.

இஃது,

பெங்களூர்

ஆ-ஐயாசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

சென்னை-சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

இதன் விலை] [அணா 8.





ஸ்ரீ

ராமஜெயம்.

உலககுணக்கண்ணாடியென்னுந்

தெய்வகுண வெளிச்சம்.

இஃது,

பெங்களூர்

ஆ-ஐயாசாமி முதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

SIVAGAMY VILASAM PRESS

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

சென்னை-சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

இதன் விலை] [அணா 8.

உலககுணக் கண்ணுடிக்கு

முகவுரை.

இந்நூலுக்கு உலககுணக்கண்ணுடியென்று பெயரிடப்பட்ட காரணம் என்னவெனில், உலகத்தி லிராநின்ற துர்க்குணம், நற்குணங்களைக் கண்ணுடியைப்போற் காண்பிக்குந் தன்மையினுலே தான். ஆனதால் இந்நூலை வாசித்தால் உலகத்தன்மையையும், அதிலுள்ள சமுத்திரத்தையும், நதிகளையும், நாடு நகரங்களையும், அவைகளிலுள்ள புருடர் ஸ்திரீகளுடைய சுபாவ குணுதிசயங்களையும், ஸ்தலங்கள் தீர்த்தங்களுடைய மகிமைகளையும், சூரியநாராயணன் குணங்கள் முதலியவைவையும் அறிந்து தர்மார்த்த காம மோட்சம் இன்னவையென் றுணர்ந்து நன்னெறியில் நடந்து இக பரசௌக்கியங்களை யடைந்து வாழலாம்.

இப்பேர்ப்பட்ட நூல் காஞ்சிமண்டலத்தி லிருந்த வித்துவ சிரோன்மணியாகிய வேங்கடாசாரியர் அவர்களால் வடமொழியில் "விஸ்வகுணுதெரிசனம்" என்று சுலோகமாகச் செய்யப்பட்டிருந்தும், அவ் வடமொழி கற்றவர்களுக்குள்ளுஞ் சிறந்த வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு உணரக்கூடாததாக யிருக்கிறபடியால் அவ் வடமொழிக்கு அந்நியப்பட்டவர்களைக் குறித்து விவரிக்கவேண்டிய தில்லையே.

ஆனதால் அந்நூலை வடமொழியினின்றுந் தென்மொழியில் கற்ருேர் மற்ருேர் யாவரும் உணரும்பொருட்டு எழுத்துக்களுஞ் சொற்களும் மிகுந்த புணர்ச்சியின்றி வாக்கியநடையாக யியற்றித் தரும்படி பலபேர் கேட்டுக்கொண்டபடியால் சமஸ்கிருதபண்டிதராகிய கொ. ஒ. ஆதிநாராயண சாஸ்திரி அவர்கள்மூலமாகச் சிறியேன் புத்திக்கு விளங்கியமட்டும் மொழிபெயர்த்து உலககுணக் கண்ணுடியென்று பெயரிட்டனன்.

இந்நூலில் எழுத்து, சொல், பொருள் முதலிய குற்றங்கள் இருந்தபோதிலும் அவைகளைக் கொள்ளாமல் அவைகளில் அடங்கியிருக்கும் முக்கிய பலன்களைக் கொள்ளுவது கற்றுணர்ந்த

பெரியோர் கடனாதலால் அதைக்குறித்து அதிகமாக விவரிக்கவேண்டியதில்லை யென்கிற நம்பிக்கையால் இவ்வளவில் நிறுத்தியதைக்குறித்து அவர்கள் மன்னிப்பார்களென்றே நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் சமஸ்கிருத முக்கிய * சிலேஷைபதங்களுக்கும், அரும்பதங்களுக்கும், அந்தந்தப் பக்கத்தி னடியில் குறிப்பிட்டு எழுதியிருப்பதைப்பார்த்து படித்துக்கொள்ளவேண்டியது.

உ

சாற்றுக்கவிகள்.

சென்னப்பட்டணம் ம-ா-ா-ஸ்ரீ,

கா. பச்சையப்பமுதலியாரவர்கள் கல்விச்சாலையில்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய ம-ா-ா-ஸ்ரீ,

கா. சபாபதி முதலியா ரவர்கள் இயற்றிய

நேரிசைவெண்பா.

அண்டர்புக ழாறைநக ரையாசாமிக் குரிசில்
கண்டவுலக குணக்கண்ணாடி—கொண்டினிது
பார்த்து மகிழ்வாமொப் பனைபூண்டார் பெண்ணமுதே
சீர்த்த புலவரெனச் செப்பு.

---

* சிலேஷை பதமென்பது-ஒருசொல் இரண்டர்த்தமாகுதல்.

ம-ா-ா-ஸ்ரீ,

கவி-அரங்கப்பிள்ளையவர்கள் குமாரராகிய

முத்தமிழ்க்கவி,

திருவேங்கடப்பிள்ளையவர்கள் சொல்லிய

இரட்டையாசிரியவிருத்தம்.

உலகெலா முண்டுமிழு மொருமுதற் கடவுளா
யுளமலி யருத்தியோர்க்கு
ஒழிவிலாத் தன்பத மளிப்பதொ டிகத்தினி
லொருங்குறச் செல்வமுதவும்
உவணப்ப தாகையன் பஞ்சா யுதன்சுவண
வுடையுடுத் தொளிர்முகுந்தன்
உபநிடத முடிவினன் மறைமிசை நிருத்தமிடு
முபயபா தாரவிந்தம்

இலகுறத் தன்மனதி னிறுவிய சிரத்தையோ
னிசைமுத்து ராமவள்ளல்
இன்பமே வன்பினுக் குரியநன் மனையாட்டி
யெழின்மிகு குழந்தையம்மை
ஈன்றபொழு திற்பெரி துவக்குமொரு தன்மகனை
யியல்வல னெனக்கேட்டபேர்
தெனுமொழி நிறைந்திடவு நன்குபுரி யுந்தவத்
தேழ்புவி யளந்தபுகழ்சேர்

நலனெலா நிறையுநற் கங்கைக் குலாம்புதியி
னடுவணி லுதித்தமதியின்
நல்லுதய மானவ னெனப்பலர் துதித்திடவு
நானிலந் தனிலுதித்தோன்
நவில்சுகுண நிறைமுத் தமிழ்க்கலா நிதிமுற்று
நனியுணர்ந் திடுவிவேக
நாதனையா சாமி யென்றியற் பெயர்பெற்ற
நயமிகுவ் ஜீகரத்தன்

பலகலைப் பொருள்குலவு விஸ்வகுண தரிசனப்
  பனுவலைத் தமிழிலினிதாப்
பண்புறையு முலககுண கண்ணாடி யென்னப்
  பரிந்தியற் றின்னதனையிப்
பதிராஜ விர்த்திபோ தினியச்சு சாலையில்
  பதித்தளித் தனனெவர்களும்
பரவுபூ வாடைவேங் கடரா வெனும்விப்ர
  பாக்கிய குலாதித்தனே.

ஆசிரியவிருத்தம்.

சீர்திகழ்தடங்கள்வாரிசமலரத் தினகரனுதித்ததைநிகர்ப்பத்
திருவளருலககுணக்கண்ணாடியெனச்செவ்வடமொழிதனிலிருந்து
நார்திகழ்ஜீவரியாவருமுணர நற்றமிழால்மொழிபெயர்த்தான்
நாரணன்றனைமனமலர்த்தவிசில் நண்புடனிருத்தியபெரியோர்
பேர்திகழ்புலவோராதியர்களிக்கப் பெட்புறுமமிர்தம்போல்முன்னம்
பேசுறும்பலநூல்தந்தவனுறைப் பிரபலன்கங்கையங்குலத்தோன்
ஏர்திகழ்முத்திராமமாலியற்று மினியநற்றவத்தினில்வந்தோன்
இணையிலாக்கலைகளாய்ந்துணர்ந்திடும் வேளெனுமையாசாமியாமுகிலே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

உலககுணக்கண்ணாடியென்னுந்

தெய்வகுண வெளிச்சம்.

காப்பு.

இன்னிசைவெண்பா.

உலககுணக் கண்ணாடி யொப்பற்ற விந்நூல்
இலகநிறை வுறவே யென்னெஞ்சே-எந்நாளும்
முத்தொழில்கள் செய்தளிக்கு மூலத்தின் றுண்மலரைப்
பத்தியுட னே பணி.

அவையடக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்வளம் படைத்துப் பூவுல காளும்
புரவலர் வருசிறு பொருளை
என்வளந் தருமென் றிகழ்தரார் கொள்வ
ரியற்கையன் றேவஃ தேபோல்
புன்வள மையா சாமிசொல் சிறுநூல்
புந்தியில் மகிழ்ந்துகொள் வார்சீர்
மன்வளப் பெருநூல் கற்றுணர்ந் திலகு
மாசிலாப் புலவர்கள் மாதோ.

ஹிந்துக்கள்

தெய்வகுண வெளிச்சம்.

சூரியபகவானைக்குறித்து.

ஒருகாலத்தில் சமானமாகிய ரூபமும், வயசும், நேசமும் உண்டாயிருந்த கிருசானு, விஸ்வாவசு என்கிற இரண்டு கந்தருவர் உலகமுழுமையுந் தரிசிக்கவேணுமென்கிற அபேட்சையால் ஒரு விமானத்திலேறி ஆகாயமார்க்கத்தில் சஞ்சரித்தார்கள் அவ்விரண்டுபேரில் கிருசானுவென்பவன் அதிக பொருமையுள்ளவனாய்த் துர்க்குணங்களையே கவனிக்கப்பட்டவனாகவிருந்தான். விஸ்வாவசு வென்பவன் நற்குணங்களையே கவனிக்கப்பட்டவனாகவிருந்தான். இப்படியிருக்கும்போது வேதங்களை முழுமையும் உணர்ந்த தெ விஸ்வாவசு வென்பவன் தனக்கெதிராகப் பிரகாசிக்கின்றவனாகியுந் தாமரைகளுக்கு மித்திரனாகியுமிருக்கிற சூரியனைப் பார்த்து நமஸ்காரஞ்செய்து சொல்லியதாவது * சக்கரவாகப்பட்சிகளுடைய பிரமசரியமென்கிற விரதத்தை நீக்குகிறதற்குக் குருவாகியும், சாயாதேவியினுடைய விலாசத்தில் லோலனாகியுமிருக்கிற சூரியபகவானுக்கு நமஸ்காரமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ எனதன்புள்ள விஸ்வாவசுவே சகல லோகங்களையுங் கிரகிக்கும்படியாகிய சூரியனை நீ எப்படி நமஸ்காரஞ்செய்கிறாய் அவனுடைய குரூரத்தன்மைகளைப் பார் ஏழைகளாகிய மார்க்கஸ்தரை தான் ○ வசுமந்தன் என்கிற பெயரை உடைத்தாயிருந்தும் வெய்யலினால் கருகும்படி செய்கிறான் பூமியின் வளப்பத்தைப் பிரித்துப்போடுகிறான் பயிர்

---

* சக்கரவாகப்பட்சிகள்-பகற்காலத்திற்றான் ஆணும் பெண்ணும் அணைகிறது ஆனதால் சூரியனைக் குருவென்றான்.

○ வசுமந்தன் என்றால் - பொருளுடையவன், கிரணங்களையுடையவன் என்பதாம்.

களை வாடிப்போகச்செய்கிறான் மார்க்கஸ்தர் ஆயாசங்களை நீக்கும்படியாகிய குளங்களுடைய வைபவத்தை அபகரிக்கிறான் இப்படிப்பட்ட குரூரனாகிய சூரியனிடத்தில் கொஞ்சமாவது குணமிருக்குதென்று சொல்வதற் கென்ன இட மிருக்கின்றதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசு வென்பவன் தன் சிநேகிதனைப் பார்த்து ஓ கிருசானுவே பகவானாகியும் பத்மபந்துவாகியு மிராநின்ற சூரியனை நீ என்னத்துக்கு நிந்திக்கிறாய் அவனுடைய குணங்களைக்கேள் சூரியனானவன் தன்னுடைய கிரணங்களினால் மழையையுண்டாக்கி உலகங்களுக்குப் புஷ்டியையுஞ் சந்தோஷத்தையுஞ் செய்விக்கிறான் இன்னுஞ் ஜீவகோடிகள் யாவற்றுக்குந் தங்கள் பார்வைக்கு அந்தகாரமாக விருக்கப்பட்டவைகளை நீக்குகிறவனாகியும், பெரியோர்களுக்கு மோட்சத்துக்கு வழிகொடுக்கிறவனாகியும், இலட்சுமிக்கு வீடாகிய தாமரைகளை மலரும்படிச் செய்கிறவனாகியுஞ், சகல உலகங்களுக்கும் பந்துவாகியும், ஆகாயத்திற்கு ஆபரணமாகியுமிராநின்ற சூரியபகவானை யாவர்தான் ஸ்தோத்திரஞ்செய்யார்கள் இன்னும் அந்தகாரத்தை நீக்குகிற சூரியனை எந்ததினத்தில் பார்க்கிறதில்லையோ அந்த நாளை உலகோர் துர்நாளென்று சொல்லுவார்கள். இந்த சூரியன் பிராணிகளுடைய ரோகங்களைப் பரிகாரஞ்செய்கிறான் குளங்களில் பொருந்திய தாமரைசமூகங்களை மலரச்செய்கிறான் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்கிற திக்குப்பாலகர்களும் இன்னும் அநேக தேவர்களும் பிரசித்தமாகவிருந்தாலும் பரிசுத்தமாகிய பிராமணாள் முதலானவர்கள் எந்த சூரியனுக்கு மூன்றுகாலங்களிலும் அர்க்கியப்பிரதானங்கள் செய்கிறார்களோ அப்பேர்ப்பட்ட * வேதத்திரியசொரூபமான இந்த சூரியனே சகல உலகங்களையும் பரிசுத்தஞ்செய்துக்கொண்டிருக்கிறான் ஓ ஜனங்களே தேவர்கள் முதலானவர்களைப் போஷணைசெய்யப்பட்டவனாகியுஞ், சக்கரவாகப்பட்சிகளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறவனாகியும், பிசாசக்கூட்டங்களுக்குப் பயங்கரத்தை உண்டாக்குகிறவனாகியும், நமஸ்காரஞ்செய்யப்பட்டவர்களுடைய ரோகங்களைப் போக்கடிக்கப்பட்டவனாகியுந், தாமரைகளை மலரச்செய்பவனாகியும், ஆகாயத்திற்கு ஆபரணமாகியுமிருக்கிற சூரியனை எக்காலமும் நமஸ்காரஞ் செய்யுங்களென்றான்.

---

* வேதத்திரியம் என்பது-இருக்கு, எசுர், சாமம்.

ஸ்ரீமந் நாராயணனைக்குறித்து.

மறுபடியும் கூ விஸ்வாவசு வென்பவன் கிருசானுவுடனே விமானத்தைச் சூரியனுக்குப் பிரதட்சணமாக நடத்தி சூரியபிம்பத்தின் மத்தியில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை நமஸ்காரஞ்செய்தான். எப்படியென்றால் சத்குணங்களுக்குச் சமுத்திரமாகியுந், திக்கில்லாதவர்களுக்குப் பந்துவாகியும், பாபங்களை நீக்குகிறவனாகியுந் தேகங்களுடையவர்களுக்கு ஆத்மசொரூபனாகியும், இலட்சுமிநேத்திரங்களுக்கு ஆனந்தத்தையுண்டாக்குகிறவனாகியும், அஞ்ஞானத்தை நீக்குகிறவனாகியுஞ், சூரியமண்டலத்தில் வாசஞ்செய்துக்கொண்டிராநின்ற பரமாத்மாவுக்கு நமஸ்காரஞ்செய்து பக்தி அதிகரித்தவனாகி இன்னுஞ் சொல்லுகிறான். மலர்ந்த தாமரைகளுக்கு நிகரான நேத்திரங்களுள்ளவனாகியும், பக்தர்களுடையசமுசாரங்களை நீக்குகிறவனாகியும், இலட்சுமிசமேதனாகியும், பொன்மயமாகியுமிருக்கிற சுவாமி இப்போதெனக்கு மிகவும் ஆனந்தத்தை யுண்டாக்குகிறானென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் என்ன விஸ்வாவசுவே மிகுந்த தயாளுனியனாகிய நாராயணனை விவேகவானாகிய நீயும் ஸ்தோத்திரஞ்செய்கிறாய் அவனுடைய நிர்த்தயைத்தன்மையைச் சொல்லுகிறேன் கேள் ஆதியில் தானே சகல உலகங்களையுஞ் சிருஷ்டித்து தானே காப்பாற்றி தானே சம்மாரஞ்செய்து ஆனந்தத்தை யடைகிறவன் நிந்தைக்குப் பாத்தியனாகமாட்டானா உலகத்தில் உத்தமமாகிய பல விருட்சங்களைத் தானே உற்பத்திசெய்து அவைகளுக்கு நல்ல ஜலங்களை வார்த்து வளர்த்தவன் வைத்தியக்காரனானாலும் வெட்டுவானா ஒருக்கால் வெட்டினாலுஞ் சந்தோஷப்படுவானா இன்னும் உலகத்தில் கடினசித்தத்தையுடைய அரசனானாலுந் தன்னுடைய உத்தரவுபடிக்குச் செய்யாமல் கர்வத்தினால் உத்தரவை மீறினவனுக்கே கோபத்தினால் தகுந்த தண்டனைசெய்கிறான் இந்த நாராயணன் தேகம் உடையவர்களுக்கு அந்தரியாமியாகவிருந்து துன்மார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்து பின்பு அவர்களைக் குற்றவாளிகளென்று நரகத்தில் தள்ளுகிறான் இப்பேர்ப்பட்ட நாராயணன் தயாளுனியன் ஆகமாட்டானவென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசு வென்பவன் ஓ கிருசானுவே உன்னுடைய புத்தியைப் பார்த்தால் மிகவும் ஸ்தூலமாகவிருக்கின்றது என்னத்தினுலென்றால் மிகுந்த கிருபையுள்ளவனுகியும், இலட்சுமிக்குப் பிராணநாயகனுகியும் யிராநின்ற பகவானுகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியையும் நீ நிந்திக்கிறதினுலேதான் அந்த நாராயணமூர்த்தியானவன் வெகுகாலமாய் சமுசார சமுத்திரத்தில் மூழ்கியிருந்து தன்னைநோக்கி நமஸ்காரஞ்செய்கிற ஜனங்களைத் தன்னுடைய பக்தர்கள் என்கிறதாக அங்கீகரித்து மிகுந்த கிருபையுள்ளவனுய் தேவர்களுக்கும் அசாத்தியமாகிய தன்னுடைய பதவியில் சேர்த்துக்கொள்ளுகிறுன். இன்னும் அந்தநாராயணன் முதலையினுல் பிடிக்கப்பட்டு மகா வருத்தமுற்று ஆதிமூலமேயென் றழைத்த கஜேந்திரனைக் காப்பாற்றும்பொருட்டு * விலாசத்தில் மிகவு மபேட்சையுள்ள இலட்சுமிதேவியை எண்ணமலும், நீளாதேவியைப் பார்க்காமலும், பூமிதேவியை விரும்பாமலும், ஆதிசேஷனுகிய சயனத்தை விட்டவனுகியும், அதிகவேகமுள்ள கருடன்மீது ஏருதவனுகியும், பரமபதத்திலிருந்து மிகுந்த சீக்கிரமாகவந்து அந்த கஜேந்திரனை சம்ரட்சணைசெய்தான். இன்னும் பிரகலாதனனுடைய வியசனத்தைப் பார்த்துப் பொறுக்கமாட்டாமல் அதிக கர்வத்தினுலே மகாத்மாக்களுடைய சகல காரியங்களையும் பங்கஞ்செய்யப்பட்டவனுகிய கடினசித்தத்தையுடைய இரணியகசிபன் என்கிற யானையைக் கண்டிக்கும்பொருட்டு சகல லோகங்களும் பயப்படத்தக்கதாகக் கண்டத்தின்மேல் சிம்மமுக உருவங்கொண்டு ஷ இரணியகசிபனைக் கொன்று பிரகலாதனை சம்ரட்சணைசெய்தான். இன்னும் இராஜசபையில் வியசனப்பட்டுக்கொண்டிருந்த துரெளபதியினுடைய ஆபத்தைப் பரிகாரஞ்செய்யவேண்டியதில் பரமகிருபையுடையவனுங், கருடத்துவஜத்தை யுடையவனுமாகிய சுவாமி தட்டுப்பலகை யில்லாமலும், பாவோட்டுங் குழாய் படாமலும், அறுந்த நூல்களைச் சேர்க்கும் ஆயாசமில்லாமலும் இப்பேர்ப்பட்ட விசித்திரமாக வஸ்திரங்களைச் சிருஷ்டிசெய்தவன் எங்களை சம்ரட்சணை செய்யக்கடவன். இன்னும் இராமாவதாரஞ் செய்தபோது ஒரு காகமானது தனது துயரத்தை நீங்கி சுகத்தை யடைந்தது. கிழத்தன்மையை யுடைய கழுகும் உத்தமலோகத்தை யடைந்தது. வேடனும் உத்தமகீர்த்தியை வகித்து உயர்ந்த பதவியையடைந்தான். குரங்கும்

* விலாசம் என்பது-ஆடவர்மகளிர் விளையாட்டு.

இராட்சசனும் இராச்சியபதவியை யடைந்தார்கள். ஆகையால் இலட்சுமிபதியாகிய அந்த பகவானுடைய கிருபையைச் சொல்ல வாக்குகளுக்கு அதீதப்பட்டிருக்கின்றது. ஆனதால் இப்பேர்ப்பட்ட கிருபாசமுத்திரனாகியுந், தேவர்கள் நாயகனாகியு மிராநின்ற ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினிடத்திலுந் தயாசூனியத்தன்மையை உபன்னியாசஞ்செய்கிற உன்னுடைய புத்தியின் தன்மையானது உனக்கு மிகவும் பாபத்தை உண்டாகச்செய்கின்றது. இன்னுஞ் சொல்லுகிறேன் கேள் இலட்சுமிபதியாகிய சுவாமியானவர் கற்களைப்போல சடவஸ்துவாகிய சீவாத்துமாக்களுக்கு சுவர்க்கத்தையும் மோட்சத்தையுஞ் சம்பாதிக்கிற சரீரத்தைக் கொடுத்திருந்தும் அதுகளுக்கு உபகார ஞாபகம் இல்லவேயில்லை. தன்னால் செய்யப்பட்ட துர்க்கருமங்களுடைய பரிபாகத்தினால் ஒருகாலத்தில் துக்கஞ் சம்பவித்தால் சாட்சியாகியும், நிரபராதியாகியுமிருக்கிற சுவாமியினிடத்தில் ஜீவர்கள் கிருபாசூனியத்தை ஆரோபணைசெய்து நிந்திப்பார்கள். அவர்கள் யாரெனில் பாமராளாகிய ஜீவர்களே ஆனால் அது நியாயமல்ல எப்படியெனில் கிலேசங்களுடைய பரிகாரத்துக்காக சுவாமியினால் கொடுக்கப்பட்ட இந்திரியசமூகங்களினாலேயுந், தேகத்தினாலேயுஞ் ஜீவனானவன் தனக்கு அனர்த்தங்களைச் சம்பாதித்துக்கொண்டால் நியமித்த சுவாமியின் பேரில் என்னகுற்ற மிருக்கிறது. தகப்பனானவன் புத்திரனுக்கு சத்துருக்களைச் செயிக்கும்பொருட்டு ஆயுதத்தைக் கொடுத்திருந்தால் அவன் அந்தப்படி செய்யாமல் தன் தேகத்தை அதனாலடித்துக் காயஞ்செய்துக்கொண்டால் அக்குற்றம் தகப்பனைச் சேருமா சேராதே அதைப்போல சுவாமியினுடைய குற்றம் ஒன்றுமில்லையே விசேஷஞ் சொல்லவேண்டியதென்ன ஆனால் சர்வேசுரனான அந்த சுவாமி ஜீவாத்துமாக்களுக்குத் தன்னுடைய சுவரூபந் தெரியும்பொருட்டு அநேக சாஸ்திரங்களையுந் தன்னுடைய ஆராதனைக்காகச் சரீரத்தையுந், தன்னுடைய தியானத்துக்காக மனதையுஞ், சுத்தியடையும்பொருட்டுத் தீர்த்தாதிகளையுந், தத்துவ உபதேச மடைவதற்கு உத்தமகுருக்களையு முண்டுபண்ணிக் கொடுத்து நம்மை அனுக்கிரகஞ்செய்கிறான். ஆனாலும் இந்த சமுசாரத்திலேயே நாம் பிரமித்துக்கொண்டிருந்தால் அந்த சுவாமி என்னசெய்வான். என்றுஞ் ஜீவர்களுக்கு சிருஷ்டி ஸ்திதியினால் சனன மரணங்களின் வேதைகள் தீராமல் சிரமப்படுத்துவதை நீக்கும்பொருட்டே திருமால் ஷெ ஜீவர்களைத் தன் திருவயிற்

றில் அடங்கச்செய்து சீராகக் காப்பாற்றுகிருன். ஆனதால் அவன் பரமதயாளனென்றுஞ் சொன்ஞன்.

பூமிதேவியைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தைநடத்தி கீழே நோக்கினவனாக விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிருன் ஓ! கிருசானுவே; சகல புருஷார்த்தங்களுக்குஞ் ஸாதகமான அனுஷ்ட்டானங்களுக்கு ஸ்தானமாகவிருக்கப்பட்ட பூலோகத்தைப் பாரென்று சொல்லி இந்தக் கீழ்லோகத்திலிருக்கிற புருடர்களால் செய்யப்படுகிற மிகுந்த பரிசுத்தமான யாகங்களில் மந்திரபூதமாய் ருசிகரமாகிய அவிர்ப்பாகங்கள் சுவர்க்கத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற தேவர்களால் பூஜிக்கப்படுகின்றது. இப்பேர்ப்பட்ட வேதப்பிரவீணரான புண்ணியவான்களாகிய மனுஷர்களால் அலங்கரிக்கப்பட்டதாகியுந், திவ்வியக்ஷேத்திரங்கள் திவ்வியநதிகள் முதலானவைகளால் பரிசுத்தமுமாகிய பூமிதேவிக்கு நமஸ்காரமென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! சிநேகிதனுகிய விஸ்வாவசுவே; நீ சுவர்க்கலோகத்தில் இருக்கிறவனுயிருந்தும், மத்தியலோகமாகிய பூலோகத்தை நமஸ்காரஞ்செய்வது யோக்கியமல்ல; அதெப்படியெனில் பூலோகத்தை யடைந்த ஜனங்களெல்லாம் ஜனன்மரண முதலான மனோவேதைகளும் அனேகவித வியாதிகளுமாகிய கஷ்டங்களினுல் பீடிதராய் எப்பொழுதுஞ் சோகத்தையே அனுபவித்துக்கொண்டிருக்கிருர்கள். இந்தக் கலியுகத்தில் நீச்சாளாகியுந் துன்மார்க்கங்களையே முக்கியமாகத் தேடப்பட்டவர்களாகியும் மதோன்மத்தர்களாகியு மிருக்கிற அரசர்களால் சம்பவித்த பங்கத்தையுடைய பூமிக்கு எந்த வித்துவான்களாவது தேவர்களாவது இச்சிப்பார்களா? இன்னும் மனிதர்கள் பாலியத்திலாவது, எவ்வனத்திலாவது, வார்த்தீகத்திலாவது மரணமடைந்து எமதூதர்களால் அனேகவாதைகளை அடைவார்கள். இந்தப்படி அபரிமிதமாகிய விபத்துகளை யுடைத்தாயிருக்கிற அந்தமனிதர்கள் பிழைத்திருப்பதினுலேதான் என்ன சுக மிருக்கின்றது. எருதுகள் எந்த கிராமத்துக்குப் போனுலும் அதுகளுக்கு ஏருழுதல் முதலான கஷ்டங்கள் தப்பிப்போகுமா வென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! அன்பனுகிய கிருசானுவே; நீ சொல்லியது நிச்சயமே। ஆனாலும் இந்த பூமியில் சன்மமெடுத்தலைக்குறித்து தூஷிக்கவேண்டாம். ஏனெனில் இராவணன்முதலான இராட்சதர்களைச் சம்மாரஞ்செய்து உலகத்துக்கு க்ஷேமத்தை உண்டாக்கிய இராமன் இப்பூமியில் பிறந்த மனுஷனல்லவா? அவனுக்குத் தகப்பனுகியுந், தேவேந்திரனுக்கு இராட்சதர்களுடன் யுத்தஞ்சம்பவித்த காலங்களில் சகாயபூதனுகியு மிருந்த தசரதன் மனுஷனல்லவா? சகல துஷ்டர்களால் நிறைந்த பூமிபாரத்தை நீக்கின கிருஷ்ணன் மனுஷசன்மத்தில் பிரசித்தனல்லவா? இப்பேர்ப்பட்ட மனுஷர்களைவிட எந்ததேவர்கள், எந்தத் தானவர்கள்தான் பிரபாவங்களில் அதிகரித்திருக்கிறுர்கள். இன்னும் மாந்தாதா, பகீரதன், சகரன், ககுஸ்தன், ரகு, பூரு, புரூரவசு, சிபி, ருக்குமாங்கதன், சனகன், நகுஷன், ஹைஹயன், யயாதி நளன், தருமன் இவர்கள் முதலாகிய பிரசித்தியுள்ள கீர்த்திவந்தாளாகிய அனேக அரசர்கள் பிறந்திருக்கவில்லையாவென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் பாதிசம்மதியுள்ளவனுகச்சொல்லுகிறுன்ః என்னவெனில் இதாயுகங்களில் நல்லகுணவான்களாகிய பலபேர் பூமண்டலத்தில் இருந்திருப்பார்கள்; இந்தக் கலியுகத்திலிருக்கிற எல்லாரும் லேசமான குணமுமில்லாமல் மிகுந்ததோஷமே யுடைத்தாயிருக்கிறுர்கள். இன்னும் இந்தக்கலிகாலத்தில் மிகுந்தகாமத்தினுல் மாசடைந்த மனதுடையவர்களாகியுங், குரோதமுள்ளவர்களாகியுந், துரபிமானத்துக்குங், கர்வத்துக்கும் ஸ்தானங்களாகியும் பாபங்களினுலேயே ஜன்மத்தை யடைந்தவர்களாகியுமிருக்கிற துஷ்ட்ட ராஜாக்களைப் பார்க்கிறதும் மிகவுந் தோஷத்துக்கு இடமாக விருக்கிறதென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசு சொல்லுகிறுன் ஓ! கிருசானுவே இக்கலிகாலத்திலேயும் எல்லாமனிதர்களையும் நிந்தனைசெய்யக்கூடாது எப்போதுஞ் சில சாதுக்கள் இருக்கவே யிருக்கிறுர்கள்ః எப்படியெனில் பாபங்களினுல் பூரணமாகி மதோன்மத்தர்களான அரசர்களுடைய விசுவாசத்தில் அபேட்சையில்லாதவர்களாகியுங் கமலநேத்திரனுன சுவாமியினுடைய சந்தோஷவிலாசத்துக்குக் கிரகத்தைப்போன்ற இருதயத்தை யுள்ளவர்களாகியும் வேதமார்க்கத்தினுடைய நிருவாகத்துக்காக பூமியில் உதித்தவர்களாகியும் நிருமலசித்தராகியுமிருக்கிற எத்தனையோபேர் தன்னியர்கள் இந்

தக் கலியுகத்திலுங் காணும்படி யிருக்கிறுர்கள். மோட்சத்தை யடைய விரும்புவோர்கள் இப்பூமியில் மானிடதேகமெடுத்தே ஞானமார்க்கத்தை அனுஷ்டித்து அடையவேண்டும். இப்போது நான் சொல்லியதில் உனக்கு விசுவாச மில்லாதிருக்குமாகில் அந்தந்த ஸ்தலங்களில் சஞ்சாரஞ்செய்து அந்தந்த குணங்களைக் காண்பிக்கிறேனென்று சொன்னுன்.

பதரிகாசிரமத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் விரலினுல் காண்பித்துச் சொல்லுகிறுன் என்னவெனில் இது பதரிகாசிரமம் என்கிற ஸ்தலம் இந்த ஸ்தலத்தில் நாராயணன் நமஸ்கரித்தவர்களுடைய அதிகமான பாபத்தையும் நீக்குகிறவனுகத் * தபசு செய்கிறுன். இந்த ஸ்தலத்தில் பிரகாசமான புத்தியினுல் விஷயங்களை நீக்கியிருக்கிற சர்ஜ்ஜனர்கள் சேஷசயனனுன நாராயணமூர்த்தியை எப்பொழுதும் பூஜை செய்துக்கொண்டிருக்கிறுர்களென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஒ நேயனே இந்த ஸ்தலத்தில் நீ குணங்களைச் சாதிப்பது எனக்குச் சம்மதிப்படவில்லை ஏனெனில் எந்தக்காரணத்தினுல் இந்த ஸ்தலத்தில் கற்களைப்போலிருக்கிற பனிக்கட்டிகளும், மிகுந்த சீதளமுள்ள காற்றுகளுஞ் சகிப்பதற்கு அசக்கியமாகவிருந்து ஜனங்கள் ஜலத்தில் ஸ்நானஞ் செய்வதற்குப் பயப்படுவார்களோ அந்தக் காரணத்தால் நிர்மலமாகிய தவமுதலாகிய கருமங்களை இந்த ஸ்தலத்தில் எப்படி அனுஷ்டிப்பார்களென்றுன்.

---

* தபசுசெய்கிறது-மானைக்காட்டி மான்களை அகப்படுத்துவதுபோல தபசுசெய்யும்விதத்தைக் காண்பித்து சர்ச்சனர்களைத் தன்பதத்தில் சேர்க்கும்பொருட்டேயாம். ஆ-ஐ.

o பாமகிமத்தோடு-என்பது அதிகமான பனியுடனே என்றும் உத்கிருஷ்ட்டமாகிய மகிமையுடனே என்றும் ஆகும்.

o சரோகாளென்பது - சரசுகளைப் பொருந்தினவர்களென்றும், ரோகத்துடனே கூடினவர்களென்றும் ஆகும்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே உன்னால் சொல்லப்பட்டது என் மதத்துக்குச் சம்மதியாகவே யிருக்கின்றது எப்படியெனில் * பாமகிமத்தொடு கூடியிருக்கிறபடியால் வைகுண்டத்துடனே ஒப்பவடைந்ததாக விருக்கின்ற இந்த ஸ்தலத்தைப் பொருந்தினவர்கள் விவேகவான்களாகியுஞ் சாந்தமுள்ளவர்களாகியுமாகி இந்த ஸ்தலத்தில் திரிகாலங்களிலும் அடிக்கடி ஸ்நானநிமித்தியமாகச் ០ சரோகாளாலும் கருடத்துவஜனை சுவாமியினுடைய அனுக்கிரகத்தால் மிகுந்த ஆரோக்கியமுள்ளவர்களாக விருக்கிறார்களென்று சொன்னான்.

அயோத்தியைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பினவனாக அதிகமான இலட்சுமிவிலாசத்துடனே விருத்தியாகிக்கொண்டிருக்கும் அயோத்தியாபுரிக்கு நமஸ்காரம். அதற்குச் சமீபத்தி லிருக்கிறதாகியும், அனேகபாவங்களை நீக்குகிறதாகியுமிருக்கிற சரயுநதிக்கு நமஸ்காரம். அந்நதியினுடைய கரை பூமியில் பிரகாசமாகவிருப்பதுஞ் சூரியவம்ச அரசர்களுடைய கீர்த்திகளென்கிற கொடிகளுக்கு ஆதாரவிருட்சங்களைப்போலிருக்கிற யூகஸ்தம்பங்களுக்கு நமஸ்காரமென்று பின்னும் அடிக்கடி ஷை சரயுநதியைப்பார்த்து பக்தியுடனே சொல்லுகிறான். சமுசாரமென்கிற சமுத்திரத்தை வற்றும்படியாகச்செய்வதும் பாதத்தில் கண்ணுடைய கௌதமருடைய தருமபத்தினியாகிய அகலிகைக்குச் சிவனேவ விஷதமாகியுமிருக்கின்ற ஸ்ரீராமனுடைய பாததூளியினால் வியாபிக்கப்பட்டு சகலமான பாபங்களையும் நிவர்த்திசெய்கிற இந்த சரயுநதியை நமஸ்காரஞ் செய்கிறேன். இன்னுஞ் சுபங்களுக்கெல்லாம் விலாச ஸ்தானமாகியும் நீலமேகத்தைப்போல மனோகரமாகிய மேனியையுடையவனாகியும் அயோத்தியாபுரியை ஸ்தானமாக யுடையவனாகியுந் தன்னை

---

* பாமகிமத்தோடு-என்பது அதிகமான பனியுடனே என்றும் உத்கிருஷ்டமாகிய மகிமையுடனே என்றும் ஆகும்.

០ சரோகாளென்பது - சரசுகளைப் பொருந்தினவர்களென்றும், ரோகத்துடனே கூடினவர்களென்றும் ஆகும்.

நமஸ்காரஞ் செய்கின்றவர்களுக்கு சமுசாரமென்கிற ஆரண்ணிய த்தில் ஸஞ்சாரத்தால் உண்டாகிற ஆயாசத்தைப் பரிகாரஞ் செய்கிறவனுகியும் மன்மதனுக்கு வெழ்க்க மூண்டாக்கத்தக்க ஸவுந்தரியமுள்ளவனுகியுஞ் சீதாபிராட்டியினுடைய விஸ்வாசமுள்ள கடைக்கண்பார்வைக்குப் பாத்திரனுகியுந் திக்குகள் அந்தத்திலும் பிரசித்தமான மகிமையுள்ளவனுகியுஞ் சகல தேவர்களால் நமஸ்காரஞ்செய்யத்தக்கவனுகியும் ஸ்ரீராமனென்கிற நாமத்தையுடைய தெய்வம் நமக்கு க்ஷேமத்தை யுண்டாக்கக்கடவது. இன்னுந் தன்னுடைய பாணத்தினல் இராவணனுடைய துஷ்ட ஆக்கினைக்குப் பயப்பட்டுக்கொண்டிருந்த சமஸ்த லோகங்களுடைய ஆபத்தை நிவர்த்திசெய்தவனுகியுஞ் சீதாதேவிப் பிராணநாயகனுகியும் அபரிமிதமாகிய சமுசார சமுத்திரத்தைத் தாண்டும்படிச் செய்கிறவனுகியும், முனீஸ்வராளுடைய இஷ்டார்த்தங்களை நிறைவேற்றுகிறவனுகியுமிருக்கிற அந்த ராமசுவாமி தீனத்தன்மைக்கு முக்கிய ஆதாரமாக விருக்கப்பட்ட என்னிடத்தில் கிருபாரசத்தை மிகவும் பொழியட்டும் இன்னும் எந்த ராமசுவாமியினுடைய சிரோஷ்டமான பாதபத்மங்களுடைய தூசு முனிசிரோஷ்டராகிய கௌதமருக்குப் புண்ணிய சம்பாதனைக்குக் காரணமாக விருக்கின்ற தருமபத்தினியை உத்பத்திசெய்ததோ அப்பேர்ப்பட்ட ஆச்சரியமான சரித்திரங்களுள்ள ஸ்ரீராமன் சர்வோத்தமனுக விருக்கின்றான். இன்னும் எவன் காகத்துக்குங், கழுவுக்கும், வேடனுக்கும், குரங்குக்கும், இராட்சசனுக்குங் கோரின இஷ்டார்த்தங்களைக் கொடுத்தவனே அப்பேர்ப்பட்ட மகாதாதாவாகியுஞ் ஜனகபுத்திரியாகிய சீதாதேவிக்குப் பிரியனுகியுமிருக்கிற ஸ்ரீராமன் எங்களுக்கு அனேகமாகிய சுபங்களைக் கொடுக்கட்டும் இன்னும் பூமியில் இஷ்டார்த்தங்களைக் கொடுக்கிறவனுகியும், ஒப்பில்லாத பிரகாசத்தையுடைய தனுசைத் தரித்தவனுகியும், அதிகமான ஆபத்துகளைப் போக்கடிப்பவனுகியுஞ், சத்துருக்கூட்டங்களை நாசஞ்செய்பவனுகியுமிருக்கிற அந்த ராமன் கோபத்தினல் குரூரனுகிய * கும்பசனகனைவனைத் துண்டங்களாகச் செய்தனனென்றான்.

---

* கும்பசனகன்-என்பது கும்பனுக்குத் தகப்பனுகிய கும்பகர்னனென்றும், பாண்டங்களைச்செய்யுங் குயவனென்றும்ஆகும்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, விவேகமில்லாதவர்களுடைய காரியங்களைப்போலக் காரியங்களை நடத்திய ஸ்ரீராமனை நீ ஏன் இந்தப்படி தோத்திரஞ்செய்கிறாய் அந்த ராமன் தான் ஜேஷ்டனாகவிருந்தும் மாற்றான்தாய்க்குச் சந்தோஷத்துக்காக இரதகஜதுரகபதாதிகளால் சம்பூர்ணமாகவிருக்கின்ற தன் சொந்தமாகிய இராச்சியத்தைவிட்டுப் பத்தினியாகிய சீதாதேவியைக் கூட அழைத்துக்கொண்டு கடூரமாகிய ஆரண்ணியத்தில் பிரவேசித்தபடியால் விவேகமில்லாதவனென்று ஏன் சொல்லக்கூடாது உலகத்தில் எவனானாலுஞ் சுத்தமாகவிருக்கிற பசுவின் பாலை விட்டுவிட்டு கஞ்சித்தண்ணீரைக் குடிக்க இச்சிப்பானா இன்னும் அந்த ராமன் (இராவணனுடைய கர்வத்தைப் பங்கஞ்செய்தவனாகியும், புத்திசாலியாகியும், தைரியசாலியாகியுமாகிய வாலியை) திரஸ்காரஞ்செய்து இராட்சசக்கூட்டங்களைச் செயிக்கும்பொருட்டு சுக்ரீவனுக்கு அநுக்கிரகஞ்செய்து அங்கீகரித்தான். மகத்தான மலையைப் பேதிக்கிறதற்கு அபேட்சையுள்ளவன் அதைப் பிளக்கும்படியான சிற்றுளியை எறிந்துவிட்டு தாமரை இதழினால் பிளக்க எவனாவது மனதில் நினைப்பானா இன்னுஞ் சமுத்திரத்தில் வாராவதிகட்டி துஷ்டர்களாகிய இராட்சதர்களைக் கண்டித்து இராவணனைச் சம்மாரஞ்செய்த அந்த ராமன் அக்கினிப்பிரவேசஞ்செய்து மகா பரிசுத்தமானவளென்று பரிஷ்காரமாகத் தெரியவந்த சீதாதேவியைப் பொருந்தினவனாகி மறுபடியும் லோகமாதாவாகியும், மகா பதிவிரதையாகியும், பூமிபுத்திரியாகியுமிருக்கிற சீதாதேவியைக் கருப்பமாயிருக்கிறகாலத்தில் வனத்துக் கனுப்பினான். ஆ! ஆ! இவைகளெப்படிப்பட்ட ஆச்சரியமான காரியங்களென்று சொன்னான்.

இதைக் கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! சினேகிதனாகிய கிருசானுவே நீ குணமாகிய காரியங்களிலே தோஷமாக ஏன் சொல்லுகிறாய் எப்படியென்றால் அந்த இராமசுவாமி தான் ஜேஷ்டனானாலுந் தகப்பனுடைய வாக்கு அசத்தியமாகாமற் செய்யும்பொருட்டுஞ், சமஸ்த உலகங்களைச் சம்ரட்சணை செய்யும்பொருட்டுந் தன்னுடைய இராச்சியத்தைத் துரும்புக்குச்சமானமாக நினைத்தான். அப்பேர்ப்பட்ட இராமபத்திரனைத் துதிசெய்வதற்கு ஆதிசேஷனுஞ் சமர்த்தனாகமாட்டான். இன்னும் இந்த இராமபத்திரன் பராக்கிரமத்துக்குச் சமுத்திரமாகவிருந்த வாலி பிரசித்தமாகவும், நிர்ப்பயமாகவும் யிருக்கும்போதே சுக்கிரீவனை அபய

ஸ்தங்கொடுத்து அங்கீகரித்தானென்ப தெதுவோ அதனுல் சகல வேதங்களிலும் பிரசித்தமாகச் சொல்லப்பட்ட இந்த சுவாமியினு டைய தீனபந்துவ தயாளத்தன்மையென்பது மிகவும் பரிஷ்கார மாகத் தெரியவருகின்றது இன்னும் எப்பொழுதும் இலட்சுமி தேவியை மார்பில் தரித்தவனுனுலும் அந்த இலட்சுமிபதியாகிய விஷ்ணு இராமனென்கிற அவதாரமுள்ளவனுகவும், வீராதிவீர னுகவும் வந்து மனுஷர் சம்பந்தமாகிய காரியங்களை அபிநயஞ் செய்யப்பட்டவனுகவிருந்து எவனே ஒருத்தனுடைய வசனத் தைச் சகிக்காமல் பிரியமானவளாகியுங் கலியாணகுணங்களையு டையவளாகியு மிருக்கிற பத்தினியை ஆரண்ணியத்தில் அடையும் படிச் செய்தான் ஆகையால் இப்பேர்ப்பட்ட மானத்தையுடைய மற்றெருரு புருஷன் இவ்வுலகத்தில் காணப்பட்டானு இன்னும் வால்மீகி முதலான மகா வித்துவான்களும் எந்த இராமசுவாமியி னுடைய குணங்களில் சுவல்பங்கூடச் சொல்வதற்குச் சமர்த்தர்க ளாகமாட்டோமென்று சொன்னுர்களோ அப்பேர்ப்பட்ட அள வில்லாத அந்த இராமசுவாமியினுடைய குணங்கள் என்கிற சமு த்திரத்தில் ஒரு பிந்துவினுடைய அனேக பாகங்களில் ஒருபாகத் தின் அணுவில் கோடிபங்கில் ஒருபங்குமாத்திரம் என்னுல் சொ ல்லப்படுவதை பூஜிதையுடைய நீயே கேட்கவேண்டியதென்று சொல்லத்துடங்கினுன்.

ககுஸ்தமகாராஜனுடைய வம்சமென்கிற க்ஷீரசமுத்திரத்து க்குக் கவுஸ்துவமணியைப்போலிருப்பவனுங் கௌசலைதேவியி னுடைய புண்ணியக்கூட்டங்களென்கிற கற்பகவிருட்சத்துக்குப் புட்பக் கொத்துகளைப்போ லிருப்பவனுஞ் சிரேஷ்டனுகிய தசர தச்சக்ரவர்த்தியினுடைய வீட்டுக்கு அலங்காரமாகிய இந்திரநீல மணியைப்போ லிருப்பவனுஞ் ஜனகராஜபுத்திரியாகிய சீதாதே வியினுடைய நேத்திரங்களென்கிற சகோரபட்சிகளுக்குச் சந்திர னைப்போலிருப்பவனுஞ் சமுசாரமென்கிற மார்க்கத்தில் சஞ்சார த்தினுல் ஆயாசப்பட்டிருப்பவர்களுக்கு மிகவும் நிழலையுடைய விருட்சத்தைப்போ லிருப்பவனுஞ் சகலமாகிய பாபங்களென்கிற பிசாசக் கூட்டங்களுக்கு உச்சாடனஞ்செய்கிற மாந்திரீகனைப்போ லிருப்பவனுந் தயாரசமென்கிற அலைகளாகிய கூட்டங்களுக்குச் சமுத்திரம்போ லிருப்பவனும், முனிவர்களுடைய இஷ்டார்த்தங் களென்கிற தடாகங்களுக்கு வருஷிக்கும் மேகத்தைப்போலிருப் பவனுஞ், சகலமான வித்தைகளுக்கும் விலாசமான உத்தியானவ

ணத்தைப்போ லிருப்பவனும், விநயத்துக்கு ஆஸ்தான மண்டபத்தைப்போலிருப்பவனுந், தன்னைக் காண வருவோர்களுக்குச் சுலபமாயிருக்கிற குணத்துக்கும் பிரபாவத்துக்கும் மேன்மைக்கும் உரித்தாயிருக்குங் கிரகத்தைப்போ லிருப்பவனுஞ், சர்ச்சனத்தன்மைக்குந் தாதுருவத்தன்மைக்கும் ஒரு ஸ்தானமாகவிருப்பவனும், ஆதரணைக்கு முக்கியமாக விருப்பவனும், விஸ்வாசத்துக்கு வேதிகைப்போ லிருப்பவனும், உச்சாகத்துக்கு முக்கிய ஜீவனுதாரமானவனும், அனுக்கிரக லட்சுமிக்கு மாளிகைப்போலிருப்பவனும், பிரதாபத்துக்கு முக்கியகதியாக விருப்பவனும், ஆபத்துகளினால் கிலேசப்படுவோர்களுக்குப் பிராணஸ்தாபனை செய்பவனுந், தன்னை யடைந்தவர்களுக்கு முக்கிய திக்காகவிருப்பனும், அக்ஷயமாகிய சம்பத்துகள் அடங்கியிருப்பதற்கு ஸரசுபோலிருப்பவனுந், தேவேந்திரனுக்கு ஜீவனேவ விஷதம்போலிருப்பனுஞ், ஜெயலட்சுமிக்குப் பிறந்த வீடாகவிருப்பவனும், நிராகரிப்பதற்கு அசக்கியமாகியுங் கோரமாகியுமிருக்கிற தரித்திரமென்கிற சர்ப்பத்துக்குக் கருடனைப்போ லிருப்பவனுங், கோரத்தன்மையையுடைய தாடகையின் தேகமென்கிற அந்தகாரத்துக்குச் சூரியனைப் போலிருப்பவனுஞ், சுபாகுஎன்கிற மதயானைக்குச் சிம்மத்தைப்போ லிருப்பவனும், பரசுராமனுடைய கோபமென்கிற வனாந்திர நெருப்புக்கு மலையருவிபோ லிருப்பவனும், விராதனென்கிற துஷ்ட வியாதிக்குப் பிரபல மருந்தைப்போ லிருப்பவனுங், கரதூஷணனென்கிற முள்ளுச்செடிகளுக்குக் கூர்மையுள்ள கோடாலிபோ லிருப்பவனுந், துஷ்டனும் நீசனுமாகிய மாரீசனென்கிற மூங்கில்புதருக்குப் பிரசண்டமாருதம்போ லிருப்பவனுங், கழுராஜனாகிய ஜடாயுவுக்கு சுவர்க்கமுதலாகிய லோகங்களை அடைவதற்கு முக்கியமார்க்கமாக விருப்பவனுங், கவந்தனென்கிற சரசுக்கு வற்றச்செய்யும் வெய்யிலைப்போ லிருப்பவனுஞ், சவரியினுடைய மனதென்கிற குமுதத்துக்குச் சரத்து ருதுகாலச் சந்திரகையைப் போலிருப்பவனும், வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயனுடைய கீர்த்திகளென்கிற தர்ப்பைப் புட்பங்களைப் பிரகாசஞ்செய்விக்குஞ் சரத்துருதுகாலத்தைப்போ லிருப்பவனுஞ், சூரனாகிய வாலியென்கிற மேகத்தைச் சிதறடிக்கும்படியாகிய சண்டமாருதம்போ லிருப்பவனுஞ், சுக்கிரீவனுக்கு ராச்சியங்கொடுப்பதற்கு முக்கியகாரணமாகவிருப்பவனும், வானரங்களுக்கு சுதினத்தைப்போ லிருப்பவனுஞ், சமுத்திரத்தினுடைய நீக்குவதற்கு அசக்கியமாகிய சடத்

தன்மை யென்கிற ரோகத்துக்கு வைத்தியனைப்போ லிருப்பவனும் என்றால்; (சமுத்திரஞ் சடத்தன்மைவிட்டு சுவரூபத்தோடு வரும்படி செய்தவனும்.) துஷ்டர்களாகிய இராட்சசக் கூட்டங்களுக்குத் தூமகேது உதித்ததைப்போலிருப்பமனுங், கும்பகர்னனுடைய கர்வமென்கிற சமுத்திரத்துக்கு அகஸ்தியனைப்போலிருப்பவனும், பலவானாகிய இராவணனுடைய பிராண பர்வதத்துக்கு வச்சிராயுதம்போலிருப்பவனும், விபீஷணனுக்கு சாம்பிராச்சியங்கொடுப்பதில் கற்பக விருட்சங்களைப்போ லிருப்பவனும், அயோத்தியாபுரியி லிருக்கிற ஸ்திரீகளுடைய நேத்திரங்களுக்கு மிகவும் அற்புதமாகிய உச்சவமாக விருப்பவனும், மன்மதனுக்கும் அதிகரித்த சவுந்தரியங்களுடைய ஸ்ரீராமன் என்னுடைய மனதில் விளையாடிக்கொண்டிருக்கிறான்.

இன்னும் மதுரமான வாக்கினாலே புட்பத்தேன்களுடைய கர்வத்தைப் பங்கஞ்செய்தவனுஞ், சீதாசமேதனானவனுஞ், சத்துருக்களைச் சங்காரஞ்செய்பவனும், மிகுந்தாச்சரியமான சத்குணங்களுக்கு உத்தியானவனத்தைப்போ லிருப்பவனுங், கோரமாகிய வியாதிகளை நிவர்த்திசெய்பவனுந், தேவர் தானவர் முதலானவர்களால் நமஸ்கரிக்கப்பட்ட பாதங்களை யுடையவனுமாகிய ஸ்ரீராமசுவாமியை எப்போதுந் தியானஞ்செய்கிறேன். இன்னும் கிருபைக்கு ஆலயமாகவிருப்பவனும், மிகுந்த சந்தோஷம்பொருந்திய முகத்தையுடையவனும், வனத்தில் இராட்சதர்களை ஓடும்படிச்செய்கிற கோதண்டத்தை யுடையவனும், எப்பொழுதுந் தருமகுணத்தையுடையவனும், அனுமாரால் தோத்திரஞ் செய்யப்பட்டவனும், மனுஷர்களைப்போல் நடத்தைகளையுடைய பரப்பிரமமாகியிருக்கிற ஸ்ரீராமனிடத்தில் ஓ! மனதே சேர்வாயாக இன்னும் ஓ! பகவானே நீ மனுஷனாக விருக்கும்போது பாரிகைக்கு அபசாரஞ்செய்த காக்காசூரனிடத்தில் துரும்பும் பிரமாஸ்திரமாகவாயிற்று. மகேஸ்வரனுடைய தனுசுந் துரும்புபோலாயிற்று கல்லானது முனிவருக்குப் பாரியாளாயிற்று. உன்னுடைய பாதக்குறடுகளும் உத்தமராஜனாயிற்று. மகாசமுத்திரமும் ஒரு கால்வாயாயிற்று. குரங்குகளுஞ் சூரர்களைப்போலாயின. இராவணனு மசகத்தைப்போலாயினான். இன்னுங் கல்லுக்குப் பிராணனைக் கொடுக்குஞ் சக்தியில்லாத பாதங்களை யுடையவர்களுஞ், சராசரங்களுக்கு முக்தி கொடுக்க சக்திக ளில்லாதவர்களுஞ், சகலபூத

ங்களுக்கும் அபயங்கொடுக்க அசமர்த்தாளானவர்களும், ஈசனு டைய தனுசை பங்கஞ்செய்வதற்குக் கையிலாகாதவர்களுந், துரு ம்பை பிரமாஸ்திரமாகச் செய்யத்தெரியாதவர்களும், இராவணா சூரனைத் துரும்பாக நினைக்காதவர்களும், இலங்காபுரியைச் சாதி க்க சக்தியில்லாதவர்களுமாகிய இப்பேர்ப்பட்ட பிதுப்பைகளா கிய தேவர்களால் என்ன பிரயோசனமென்று சொன்னான்.

கங்கா நதியைக்குறித்து.

அப்புறம் விமானத்தை அந்த அயோத்தியாபுரிக்குப் பிரத ட்சணமாகத் திருப்பி கிருசானுவைப் பார்த்து விஸ்வாவசு சொ ல்லுகிறான் ஓ இஷ்டனே சமுசாரத்தின லுண்டாகிய துன்பங்க ளைப் போக்கப்பட்டதும், விஷ்ணுவினுடைய பாதங்களை ஆலிங்க னஞ்செய்ததும், ஆபத்துகளை நீக்கப்பட்டதுஞ், ஜனங்களுடைய மனதுகளை நிர்மலஞ்செய்யப்பட்டதும், மிகுந்த வெண்மையாகிய அலைகளையுடையதுஞ், சமுத்திரத்துடனே சங்கமமுடையதும், பாபங்களையெல்லாம் பங்கஞ்செய்வதுமாகிய கங்கையை இந்த ஸ்தலத்தில் நீ பாரென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் சொல்லுகிறான் ஓ விந யத்தையுடைய விஸ்வாவசுவே உபேட்சைசெய்யத்தக்க இந்த கங் காநதி ஜலத்தைப் பார்க்கவேண்டியதென்ன ஏனெனில் இந்த ஜல த்துக்கு * இரணிய அர்த்தாவினுடைய பாதத்தால் உத்பத்தியும் பிரம்மாவினுடைய சிரசை சேதனஞ்செய்தவனுடைய சிரசில் குரு பாரியாளிடத்து ஜாரனாகிய ο தோஷாகரனோடு கூடியிருக் கிற ஸ்திதியும் ? ஜலநிதியினிடத்தில் லயமாகிறதும் பிரசித்தமாக விருக்கின்றதேயென்றான்.

---

* இரணிய அர்த்தா-என்பது பொன் திருடினவனென்றும், இரணியகசிபனை சம்மாரஞ்செய்தவனென்றும் ஆகும்.

ο தோஷாகரன்-என்பது தோஷங்களுக்கெல்லாம் நிதியான வனென்றும், இராத்திரியில் கிரணங்களையுடைய சந்திரனென் றும் ஆகும்.

? ஜலநிதி-என்பது அவிவேகத்துக்கு நிதியென்றும், ஜலம் நிறைந்த சமுத்திரமென்றும் ஆகும்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான் ஏ மந்தபுத்தியையுடைய கிருசானுவே ஸ்ரீமந்நாராயணனுடைய பாதாரவிந்தத்திலிருந்து உத்பத்தியாகிய இந்தக் கங்கையை ஏன் நிந்தனைசெய்கிறாய் இந்த நதியினுடைய மகிமையைக் கேள் இக் கங்காநதிசம்பந்தமாகிய ஜலங் கருடத்துவஜனான விஷ்ணுவினுடைய பாதகமலத்தில் உத்பத்தியாகினது பிற்பாடு சந்திரசேகரனான ஈஸ்வரனைப் பரிசுத்தமாகச் செய்தது சகர சக்ரவர்த்தியினுடைய சந்ததியை மோட்சத்தை யடையச்செய்தது இப்பேர்ப்பட்ட இந்த ஜலத்தைவிட பரிசுத்தமான வஸ்து இந்தப் பூலோகத்தில் அதிகமானதாவது சமானமானதாவது உண்டா இன்னும் அந்த கங்காநதி பிரம்மாவினுடைய சரீரத்தைப்போல * சர்வதோமுகவதியாகி 0 சராகமான சரஸ்வதியைப் பொருந்தியிருக்கின்றது. கங்கை பிரம்மனென்கிற இரண்டிலும் முதலாவது விஷ்ணுவினுடைய பாதகமலத்தில் உத்பத்தியானதும், இரண்டாவது நாபிக்கமலத்தில் உத்பத்தியானதும் என்கிற இவ்விரண்டுதான் பேதம் இன்னும் விவேகவான்கள் இக்கங்கையைப் பொருந்தி பக்தியுடனே தங்கள் பிதிர்க்களுக்கு அஞ்சலிகரங்களால் ஜலத்தை விடுவார்கள் இதைப் பார்த்த அந்தப் பிதிர்க்களுடைய சகலமாகிய பாபங்களும் அவர்களுக்கு அந்தட்சணமே அஞ்சலிகரங்களால் ஜலத்தை விட்டுவிடுகிறது இன்னும் விவேகவானுகிய எவன் இந்தப் பாகீரதியை எப்போதுஞ் சேவிக்கிறானே அந்தத் தன்னியனானவன் யாகாதிகளைச் செய்தவனைப்போல் தேக அந்தத்தில் தேவத்தன்மையையடைந்து சுவர்க்கலோகத்தில் தேவாமிர்தத்தில் பாகீரதியென்று பிரசித்தியடைகிறானென்றால் (அமிர்தத்தில் பாகமுள்ளவனும் விமானமென்கிற இரதத்தையுடையவனுமென்பதாம்) இன்னுஞ் சரஸ்வதிநதியாலுஞ், சூரிய புத்திரியாகிய யமுனாநதியாலும் ஆலிங்கனஞ்செய்யப்பட்ட பிரவாகத்தையுள்ளதும், வெண்மையாகிய புட்பக்கொத்துகளைப்போல் நிர்மலமாகியுமிருக்கிற

---

* சர்வதோமுகவதி-என்பது (பிரம்மதேவனுடைய தேகம்) நான்கு முகங்களை யுடையதென்றும் (கங்கை) ஜலத்தையுடையவளென்றும் ஆகும்.

0 சராகமான சரஸ்வதி-என்பது விசுவாசத்துடன் கூடியிருக்கிற சரஸ்வதியென்றும், சிகப்பு நிறத்துடன் கூடியிருக்கிற சரஸ்வதிநதியென்றும் ஆகும்.

கங்கையானது திரிகுணங்களையுடைய பிரகிருதியைப்போலப் பிரகாசிக்கின்றது. ஆனாலும் இந்த கங்கை தோஷங்களை நாசஞ்செய்வதில் சமர்த்துள்ளவளானபடியால் அகாதமாகிய சமுசாரத்தை நிவர்த்திசெய்கின்றனள். இன்னும் அந்த விஷ்ணுவினுடைய பாதத்தில் உத்பத்தியாகி சமுத்திரத்துக்குப் பாரியாளாகிய இந்தக் கங்கை கம்பீரத்தினால் அந்த விஷ்ணுவினுடைய இருதயத்தையும் மாதுரியத்தால் அந்த சுவாமியினுடைய வாக்கையும், வெண்மையால் அப் பகவானுடைய கீர்த்தியையுஞ், சீதளத்தால் அம் மாதவனுடைய கிருபையையும், நிர்மலத்தால் அத் தேவனுடைய யுக்தியையும், எப்போதும் அனுக்கிரக சுபாவத்தால் அந்த நாராயணனுடைய முகத்தையும் அனுசரித்திருக்கிறதென்றுசொன்னான்

காசியைக்குறித்து.

அப்புறம் எதிரிலிருக்கிற காசியை விஸ்வாவசுவென்பவன் பார்த்து கரங்களைக் கூப்பினவனாகச் சந்தோஷத்துடனே சொல்லுகிறான். தேவேந்திரனுடைய கிரகத்துக்குச் சமானமாகிய மாளிகைகளையுடையதும் அனேகமாகிய அஸ்வங்களையும் யானைகளையுமுடையதுமாகிய இந்த காசிநகரமானது ஈஸ்வரனுடைய சிரசிலிருக்கிற சந்திரனுடைய கிரணங்களால் அந்தகாரமில்லாமல் எப்போதும் பிரகாசிக்கிறதென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, இந்தக் காசியுந் தோத்திரஞ் செய்யத்தக்கதா? ஏனெனில், இந்த நகரத்தில் எந்தஜனங்கள் ருசிகரமுள்ள அன்னத்தைப் போஜனஞ் செய்யப்பட்டவர்களாகியும், யானைகளையும் உத்தம குதிரைகளையும் வாகனங்களுடையவர்களாகியும், முத்தாரங்களை அணிந்தவர்களாகியுமிருந்து நேர்த்தியானமாளிகையில் சுந்தரமாகிய ஸ்திரீகளுடனே விலாசமாகவிருப்பார்களோ அப்பேர்ப்பட்ட ஜனங்கள் தேகஅந்தத்தில் விஷ ஆகாரமுள்ளவர்களாகியும், வெண்மையான விருஷபத்தை வாகனமாக வுள்ளவர்களாகியுங், கோரமாகிய அஸ்திகளைத் தரித்தவர்களாகியுமாகி மசானத்திலிருக்கிற பிசாசுகளுடனே பரவசமாகி நர்த்தனஞ் செய்யப்போவார்கள். இன்னும் ஒருமகாக்ஷேத்திரத்தில் சத்புருஷாளுக்குந் தானஞ்செய்யப்பட்டது ஒன்றாகவிருந்தாலும் அந்த க்ஷேத்திரமகிமையினால் ஜன

மாந்திரத்தில் கோடிபங்கு ஆகிறதென்று சாத்திரங்கள் பிரசித்தமாக விருக்கிறபடியால், ஓ! காசியே உன்னிடத்தில் பத்தியினாலே வாசஞ்செய்து சதாகாலம் அனேகவஸ்திரங்களைத் தானஞ்செய்த ஜனங்கள் ஜன்மாந்தரத்தில் * திகம்பரத்தன்மையை அடைவார்கள் ஆனதால் உனக்கொரு நமஸ்காரமென்றான். இன்னும் ஓ! காசியே எப்போதுஞ் சரோகபூமியுள்ள உன்னிடத்தில் ஆரோக்கியபூமியென்பது பொய்யான பிரசித்திதான்; என்னத்துக்கென்றால் உன்னிடத்தில் வாசஞ்செய்த ஜனங்களுக்கு ஜன்மாந்தரத்திலேயுந் தேகஞ் சூலத்தோடு கூடியிருக்கிறது சிரசு ஜலபாரமுள்ளதாகவிருக்கிறது அதனாலேதானென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! கிருசானுவே நீ புத்திசாதுரிய மில்லாதவனாகை குணத்தையுந் தோஷமாகச்சொல்லுகிறாய் இந்தக் காசிநகரத்தில் இருக்கிற போகிகளாகிய புருஷாளும் யோகிகளாலும் அடையக்கூடாத சிவசாரூபத்தை அடைவார்கள். எப்படியென்றால் இந்தக்காசிநகரத்தில் பரிசுத்தமில்லாத தேகத்தைவிட்டவனும், பாலநேத்திரத்தில் அக்கனியுஞ் சடையையுடைய சிரசினில் கங்கையுமுள்ள நிர்மலமாகிய சரீரத்தையடைவான். இன்னும் பிரதோஷகாலத்தில் நடனஞ்செய்கிற ஈஸ்வரன் இந்தக்காசிநகரத்தில் வாசஞ்செகிற ஜனங்களுக்கு அந்தியகாலத்தில் வலச்செவியினிடத்தில் தாரகமந்திரத்தினுடைய அக்ஷரங்களைச் சொல்லி தன்சுவரூபமாகப் பிரகாசஞ்செய்துக்கொள்ளுகிறான்; ஆனதால் இதுஉலகத்தில் முக்கியக்ஷேத்திரமாக விருக்கின்றதென்று சொன்னான்.

---

* திகம்பரத்தன்மை-என்பது திக்குகளை வஸ்திரமாகவுடைய சிவனுடைய சாரூபமென்றும், வஸ்திரமில்லாதவனென்றும் ஆகும்.

0 சரோகபூமி-யென்பது சரசுகளையுடைய பூமியென்றும், ரோகத்துடனேகூடிய பூமியென்றும் ஆகும்.

? தேகஞ் சூலத்தோடுகூடி-என்பது சிவரூபத்தால் சூலாயுதந் தரித்தவனென்றும், தேகஞ் சூலநோயுள்ளவனென்றும் ஆகும்.

§ சிரசு ஜலபாரம்-என்பது சிவசாரூபத்தில் சிரசில் கங்கையுள்ளவனென்றும், சிரசில் ஜலதோஷமுள்ளவனென்றும் ஆகும்.

காசிதேசப்பிராமணாளைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசு கங்கைநதியிலிராநின்ற தேசங்களைப்பார்த்து கரங்களைக் கூப்பினவனாக நாள்தோறும் பிராதக்காலங்களில் கங்காஜலத்தில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்துக்கொண்டிருக்கிறவர்களும், புட்பங்களால் ஈஸ்வரனைப் பூசை செய்துக்கொண்டிருக்கிறவர்களும், பூதேவர்களுமாகிய பிராமணாளுக்கு நமஸ்காரமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே கலிமகிமையால் சாஸ்திரங்களுக்கு விரோதமாகிய ஆசாரங்களை அனுஷ்டிப்பவர்களாகிய இத்தேசத்துப் பிராமணாளையும் நீ எப்படி நமஸ்காரஞ் செய்கிறாய்? இவர்களுடைய அக்கிரமங்களைச் சொல்லுகிறேன் கேள். இத்தேசத்துப்பிராமணாள் பிராதகாலத்தில் ஸ்நானஞ்செய்தாலும் வண்ணான் கொண்டுவரப்பட்டதுங் கழுதைகளால் சுமக்கப்பட்டதுமாகிய வஸ்திரங்களைப் பிரதிதினந் தரித்துக்கொண்டு வெளியில் போவார்கள்; போனபிற்பாடு மிலேச்சாள் முதலாகிய அசுசிஜனங்களைத் தொடுவார்கள் தொட்டாலும் மறுபடியும் ஸ்நானஞ்செய்கிறதில்லை; ஸ்நானஞ்செய்யாமலே போசனஞ்செய்கிறார்கள்; அப்படி போசனஞ்செய்தாலும் வெட்கப்படுகிறதில்லை: இன்னும் ஆயுதங்களால் ஜீவனஞ்செய்வார்கள். உத்கிருஷ்டமாகிய சாஸ்திரங்களைத் தியாகஞ்செய்து விடுவார்கள். சூத்திரனாலே கொண்டுவரப்பட்ட ஜலத்தால் ஸ்நானம் ஆசமனம் தேவதாபிஷேகம் சமையல் முதலானவைகளைச் செய்வார்கள். உச்சிஷ்டத்துக்குப் பயப்படுகிறதில்லை மிலேச்சராகிய அனேக பேதங்களுடைய துருக்கருடனே எப்போதுஞ் சாவகாசஞ் செய்துக்கொண்டிருக்கிறார்கள். பறையர்களையுஞ் சக்கிலிகளையுந் தொடுவதற்குச் சங்கோசமில்லாமலே வழிகளில் பிரவேசிப்பார்கள். இன்னும் நீசாளாகியுந் துஷ்டர்களாகியு மிருக்கிற மிலேச்சாளாலும் நாய்களாலும் பார்க்கப்பட்ட அன்னத்தை நிர்ப்பயமாகப் போசனஞ் செய்வார்கள். வேதாட்சரங்களை அறியாமல் பந்தியிலுட்கார்ந்து சாப்பிடுகிறதற்கு அயோக்கியாளாகிய துராசார சனங்களுடனே சமமாக உட்கார்ந்து புசிக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட அனாசாரங்களிருந்தாலும், மதுபானத்தால் மத்தத்தையுடைய பிரபுசனங்களை பயத்தப்பொருட்டு வேதங்களுக்கும் ஸ்மி

ருதிகளுக்குந் தூரமாயிருக்கின்றதுஞ் சாரமில்லாம லிருக்கின்றது மாகிய கருமங்களை அனுஷ்டிப்பார்கள். இன்னும் ஒருகன்னிகையை விவாகஞ்செய்துக்கொண்டு அவளுக்கு எவ்வனம் உண்டாகிற காலத்தில் கிரகத்திற்றனே விட்டுவிட்டு பொருளினிடத்தில் ஆசையுள்ளவர்களாய் தேசாந்கிரங்களில் வெகுநாள் சஞ்சாரஞ் செய்துக்கொண் டிருப்பார்கள். இந்தப்படிக்கு அந்கியோந்கிய சம்போக அபேட்சையால் அதிகரித்துப்போன யெவ்வனமுள்ளவர்களாகியும், உச்சாக மழுங்கிய மனதுடையவர்களாகியுமிருக்கிற சதி புருஷாளுக்குத் துன்பத்திற் காரணமாக விருக்கிற சேர்க்கையைப் பாபிஷ்டியாகிய தெய்வம் என்னவென்று நியமித்ததோ! இன்னும் இந்ததேசத்தில் பிராமணுள் அத்தியயனஞ் செய்கிறதேயில்லை: ஒருவேளை நூற்றிலொருத்தனுவது ஆயிரத்திலொருத்தனுவது அத்தியயனஞ் செய்தால் துஷ்டத்தன்மையாகிய தர்க்கங்களில் பிரையாசைப் படுகிருர்கள். வேதங்கள் ஸ்மிருதிகள் முதலாகியதுகளின் நல்ல சங்கதிகளைத் தூரமாக விட்டுவிடுவார்களென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! ஓ! கிருசானுவே இந்தப் பிராமணர்களை நீ தூஷிப்பதைக்கேட்டால் என்னுடைய மனது மிகவும் நடுங்குகின்றது உன்னுலே உபன்னியாசஞ் செய்யப்பட்ட இந்த ஆசார வித்தியாசங்களென்பது கலியுகத்தினுடைய தோஷமேதவிர பிராமணுளுடைய தோஷமல்ல. கலியுகத்தில் கிருதயுகசம்பந்தமாகிய நடத்தைகள் எப்படி சம்பவிக்கும்; பாபங்களென்கிற கோடிகளுக்குச் சமீபத்தில் ஆதரவு விருட்சத்தைப் போலிருக்கிற இந்த கலிகாலமென்பது எவர்களால் ஜெயிக்கக்கூடும். இந்தக் கலியுகமானது எப்படிப்பட்டதெனில் பாபகர்மங்களென்கிற கூட்டத்துக்கு மாளிகைப்போ லிருப்பதுவுந், துரகங்காரத்துக்குச் சிம்மாசனத்தைப்போ லிருப்பதுவுஞ் சாஸ்திரங்கள் சம்பந்தமான தலையெழுத்துகளை நாசஞ்செய்வதும், யாகங்களுககுச் சாந்திதினத்தைப்போ லிருப்பதுவுஞ், சமஸ்தமான வேதங்களுக்கும் பிரதமை திதியைப்போ லிருப்பதுவுஞ், சத்புருஷாளுடைய பூசையென்கிற மலரைக் குவிந்துபோகும்படிச் செய்வதுவும், பொருளாசைக்குப் பிறந்த வீடாகவிருப்பதுவும், அனேகமான அனர்த்தங்களைச் சம்பாதிப்பதுவுமாகிய இந்தக்கலி இப்போது விருத்தியாகிக்கொண்டிருக்கிறது இப்பேர்ப்பட்ட கலியு

கத்திலும் இந்த உலகத்தில் நூற்றிலொருவர் வேதமார்க்கத்தில் பக்தியுள்ளவராகவிருந்து சுவல்பமாவது கருமங்களை அனுஷ்டானஞ் செய்வார்கள் அவர்கள் (பாலைநிலத்தில் சுவல்பஜலமுள்ள சரசு யிருந்தாலும் அது எப்படி சிறப்படையுமோ) அதுபோல சிறப்படைவார்கள் இன்னும் எந்த பிராமணுள் சாயதிசனங்கவென்றும், ராஜபுத்திராளென்றும் பிரசித்தர்களாகவிருக்கிறூர்களோ அப்பேர்ப்பட்டவர்கள் ஆயுதங்களைத் தரித்தவர்களாகி தயாசூனியரான மிலேச்சப் பிரபுக்களைப் பிரயத்தினத்தால் அனுசரித்துத் தேவாலயங்களையும், பிராமணர்களையுஞ் சம்ரட்சணைசெய்வார்கள் அப்படிப்பட்ட தன்னியர்கள் வீடுகளிற்றூனே சும்மாயிருப்பார்களானால் இந்தப் பூமியில் தேவாலயங்களுக்கும் பிராமணத்தன்மையென்கிறதற்குங் கரங்களால் ஜலத்தைத் தாரை விட்டுவிடவேண்டியதாக விருக்குமென்றுசொல்லி அப்புறம் நான்கு திக்குகளையும் பார்த்தவனுகச் சிறப்பாகச் சொல்லுகிறூன் என்னவெனில் சேதுமுதல் இமாசலபரியந்திரம் சகலமான பூமிகளும் மிலேச்சர்களால் அபகரிக்கப்பட்டதாகியும் இராஜகூட்டங்களெல்லாம் ஓடிப்போனதாகியும் ஸ்ரீமந்நாராயணன் தயாசூனியனுக நித்திரைசெய்துக்கொண்டுங் கலிகாலந் தடங்கலில்லாமல் விருத்தியாகிக்கொண்டும் இந்தப்பிரகாரமாக விருக்கிறகாலத்திலும் ஒவ்வொருவர் உலகத்தில் சிரேஷ்டத்தன்மை வகித்தவராக வேதசம்பந்தமான மார்க்கத்தை அசஞ்சலமாக சம்ரட்சணை செய்துக்கொண்டுவருகிறூர்கள் இந்தத் தேசத்தி லிருக்கிற சனங்கள் விகிதமாகிய ஆசாரங்களைவிட்டு விரோதமாகிய ஆசாரங்களைப் பொருந்தினுலுந் திரிவிக்கிரமனுடைய திருவடிநகத்தால் உதித்துப் பரமபவித்திரமாகியதும் பாபங்களை நாசஞ்செய்வதில் பிணைப்பட்டிருப்பதும் ஆகிய கங்காநதியினுடைய ஜலமும் இவர்களுடைய தேசங்களில் எக்காலமும் பட்டுக்கொண்டிருக்கிறபடியால் இவர்களைவிட தன்னியர்கள் யாருமில்லை இன்னும் கௌடதேசங்களிலும், கன்னியாகுபஜதேசங்களிலும், மிதிலைதேசங்களிலும், இன்னும் இதரமான தேசங்களிலுந் தன்னியர்களாகிய சிலபேர் வித்துவான்களிருக்கிறபடியால்தான் இன்னும் பூமியில் கல்விகள் சீவித்துக்கொண்டிருக்கின்றன. இனி இந்த வார்த்தையை முக்கியமாகக் கேள் என்னவெனில் இந்தத் தேசத்தில் பிரசித்தியாகவிருக்கிற ஆசாரங்கள் அந்நியதேசத்தி லிருக்கிறவர்களுடைய மனதுக்கு இஷ்டமில்லாமற்போனுல் அதனுல் என்னகுற்றம் விவேகவான்களாகிய புத்தி

ர் தகப்பனுடைய மனதுக்கு இஷ்டப்பட்டிருக்கும்போது அந்தப்படி அந்நியன் மனதுக்கு இல்லாமற்போனால் அதனால் அப்புத்திரர்களுக்கு என்ன தோஷம் வரும் இன்னுமிந்தத் தேசத்தார் பிராதக்காலத்தில் சீதஜலத்தில் ஸ்நானஞ்செய்து பக்தியுடனே தேவதாபூஜை செய்வார்கள் எவ்வளவு பசியாயிருந்தபோதிலும் பழையசாதத்தைப் புசிக்கிறதில்லை கோமயத்தால் மெழுகப்பட்டயிடத்திலேயே சமயல்செய்வார்கள். அந்த இடத்திலிருந்து வெளியில் கொண்டுவந்த சாதத்தைப் புசிக்கிறதில்லை இப்படிப்பட்ட போஜன நியமம் எந்ததேசத்திற்றான் பார்க்கப்பட்டிருக்கிறதென்று சொன்னான்.

சமுத்திரத்தைக்குறித்து.

அப்புறம் விமானத்தைச் சிலதூரம் நடத்தி கரங்களைக் கூப்பினவனாகி விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான் பர்வதங்கள் உலகத்துக்குச் செய்துக்கொண்டிருந்த தொந்தரையால் கோபமுள்ளவனாகிய தேவேந்திரனுடைய வச்சிராயுதத்துக்கு மிகவும் பயப்பட்ட மயனாகபர்வதத்தினுடைய பிராணசம்ரட்சணை செய்ததால் பிரசித்தமான கீர்த்தியுள்ளவனும், தன்னிடத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற வாயுவென்கிற நாட்டிய ஆசாரியனால் நடனஞ்செய்விக்கப்பட்ட அலைகளையுடையவனும், யோக்கிய சனங்களால் தோத்திரஞ் செய்யத்தக்கவனுமாகிய இந்த சமுத்திரத்துக்கு நமஸ்காரமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் சிரிப்புடனே சொல்லுகிறான் ஓ விஸ்வாவசுவே பாமரானாலும் பானஞ்செய்வதற்கு அஸக்கியமாகிய ஜலத்தை யுள்ளதாகியுஞ், ஜலஜெந்துக்களுக்கு ஆதாரமாகியுமிருக்கிற இந்தச் சமுத்திரத்துக்கு நமஸ்காரஞ்செய்யவேணுமென்கிற இச்சை உனக்கு எப்படிதான் உண்டாயிற்று எனக்கானால் அபிவிருத்தியாயிருக்கிற கடூரமாகிய தொனியுள்ளவனும் நீசனாகியுமிருக்கிற இந்தச் சமுத்திரத்தினிடத்தில் கோபமேயுண்டாகிறது. எப்போதுங் கூச்சலுடையவனுஞ் சொலித்துக்கொண்டிருக்கிற சடாராக்கினியுள்ளவனும் மிகுந்த ஜலமுள்ளவனுமாகியிருக்கிறபடியால் இந்தச் சமுத்திரத்தைக்குறித்து சகலஜனங்களுந் தரித்திரனைப்பார்த்துக் கோபஞ்செய்வதுபோலக் கோப

ஞ்செய்வார்கள் இந்தச் சமுத்திரஞ் சமுர்த்தியாக விருப்பவனானும் அதிக லோபியாகிறபடியால் விவேகிகளாலே ஆதரணைசெய்யப்பட்டவனல்ல எப்படியெனில் இந்தச் சமுத்திரம் இரத்தினங்களெல்லாம் உத்பத்தியாகிற ஸ்தானமாகவிருந்தும் இலட்சுமியினுடைய உத்பத்திக்கு கிரகமாகவிருந்துஞ் * சுவர்னஸ்திதியுள்ளதாகவிருந்தும் அனேகமான ○ ஊர்மிகள் உள்ளவனாகவிருந்தும் அனேக தனங்களை விருத்திசெய்யத்தக்க கப்பல்களுடைய சஞ்சாரத்தை யுடையவனாகவிருந்தும் ஒருகாலத்திலேயும் ? விதரணியுடையவனாக விருக்கிறதில்லை. இந்தச் சமுத்திரத்தைச் சிருஷ்டிசெய்ததே பிரயோசனமில்லையென்று எனக்குத் தோன்றுகிறது. எப்படியெனில் இந்தச் சமுத்திர ஜலங் கரைகளிலிருக்கிற விருட்சங்களுக்கும் உபயோகமானதல்ல பயிர்களுக்கு உபயோகமென்பது எப்படிதானாகும் ஸ்நானஞ்செய்வதற்கும் யோக்கியமானதல்ல பானஞ்செய்வதற்கு எப்படித்தான் யோக்கியமாகும் எந்த விதத்திலும் இதராளுக்கு உபயோகமானதல்ல இன்னும் மிகவுங் கர்ஜனைசெய்துக்கொண்டிருப்பதும், அகாதமாகவிருப்பதுந், தன்க்குள்ளே யிருக்கிற துஷ்டஜெந்துக்களால் பயங்கரமாகவிருப்பதுமாகிய இந்த υ ஜலாசயத்தை சிருஷ்டிசெய்த பிரம்மதேவனுக்கு என்ன கீர்த்திதான் உண்டாகும் நீ சொல் இன்னும் (எவனுக்கு எப்போதும் பிரயத்தினஞ்செய்யாமல் அதிகமாகிய சுவர்னஸ்திதி பிராப்தியாகிக்கொண்டிருக்கிறதோ அவன் தன்னுடைய வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்யாமலிருந்தால் அக்கினிக்கு இரையாகவாவது, மர்த்தனஞ் செய்கிறவர்களுக்காவது, கட்டுகிறவர்களுக்காவது பாத்திரனாவான்.) இதற்குத் திருஷ்டாந்தம்

---

* சுவர்னஸ்தி-என்பது பொன்னுடைய விருத்தி என்னும் நிர்மலமாகிய சலத்தினுடைய விருத்தி என்றும் ஆகும்.

○ ஊர்மிக்கள்-என்பது மோதிரங்களையும், அலைகளையும் உடையனவென்று ஆகும்.

? விதரணியாக விருக்கிறதில்லை-என்பது தானஞ்செய்பவனாகிறதில்லையென்றும், கப்பல்கள் இல்லாதவனாக விருக்கிறதில்லையென்றும் ஆகும்.

υ ஜலாசயத்தை-என்பது ஜலத்துக்கு ஆதாரமானவனென்றும்; சடமாகிய மனதுள்ளவனென்றும் ஆகும்.

இந்தச் சமுத்திரத்தினிடத்திலிருக்கின்றது எப்படியெனில் வடவாமுகாக்கினிக்கு ஆகாரமாயும், விஷ்ணு இலட்சுமிதேவியை சேர விசேத்தபோது மந்தரகிரியால் கடையப்பட்டும், இராமாவதாரத்தில் வாராவதி கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் அகஸ்தியரால் பானஞ்செய்யப்பட்டு விடப்பட்டதினாலே உச்சிஷ்டமாகிறபடியால் சிஷ்டர்களாலே தொடக்கூடாததாகிய இச்சமுத்திரத்தைப் பொருந்தி மார்க்கண்டாகிய ஜனங்கள் மிகவுந் தாகமுள்ளவர்களானாலும் இந்த ஜலத்தைப் பானஞ்செய்வதில்லையென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ ஸிநேகிதனாகிய கிருசாநுவே சகல நதிகளுக்கும் ஆதாரமாகவிருக்கிற நதிபதியாகிய இந்த சமுத்திரந் தூஷிக்கத்தகுந்ததல்ல எப்படியெனில் உலகத்திற்கு முக்கிய நிலைதாரமாக விருக்கப்பட்ட கற்பு முதலானவைகளை அளிப்பவனும் தேவேந்திரனுக்கு உச்சைசிரவமென்கிற அச்வத்தைக் கொடுத்தவனும் மறுபடியும் அவனுக்கு தம்பியாக உபேந்திர அவதாரமாகிய விஷ்ணுவுக்கு இடதுகண்ணுகச் சந்திரனைத் தந்தவனுமாகிய இந்த சமுத்திரத்தைவிட இதமான மகா தாதாக்களில்லை நீ சொன்ன இன்னுந் தேவர்களுக்கு அமிர்தத்தையும் இஷ்டார்த்தங்களைக் கொடுக்கத்தக்க கற்பகவிருட்சத்தையும் காமதேனுவையுங் கொடுத்தவனும் சிவனுக்கு * சிதாம்சகனுங் கொடுத்திருக்கிறான். ஆகையால் இப்பேர்ப்பட்ட மகா தாதா எங்கேயாவது பார்க்கும்படி யிருக்கிறானா இன்னும் இவனுடைய பாக்கியத்தைச் சொல்வதற்கு ஆதிசேஷன் முதலானவர்களுஞ் சமர்த்தரல்லவர்களல்ல எப்படியெனில் இந்தச் சமுத்திரத்துக்கு உலகத்தைப் பரிசுத்தஞ்செய்கிறதும் ஜந்நுமகாரிஷிக்குப் புத்திரியாகியு மிருக்கிற கங்கையானவள் பாரியாளாக விருக்கின்றாள். உலகத்துக்கெல்லாம் ஆனந்தத்தை யுண்டாக்குகிற சந்திரன் குமாரனாக விருக்கின்றான். சகல ஜனங்களாலும் பூஜிக்கப்படும் இலட்சுமிதேவி குமாரத்தியாக விருக்கின்றாள். ஜகதீசனாகிய மகாவிஷ்ணுவே மருமகனாக விருக்கின்றான் ஆனதால் இந்தச் சமுத்திரம் யாவராலும் பூஜிக்கப் பாத்திரமானதென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

---

* சிதாம்சகனும்-என்பது சிவனுக்குச் சந்திரனைக் கொடுத்தவனென்றுஞ் சுப்பிரமாகிய வஸ்திரத்தைக் கொடுத்தவனென்றும் ஆகும்.

ஜகந்நாதத்தைக்குறித்து.

இன்னும் இந்தச் சமுத்திரத்தினுடைய பாக்கியத்தைப் பார். இந்தச் சமுத்திரக்கரையில் யக்ஷர்கள், அப்சரர்கள், கின்னரர், கந்தருவர் முதலாகிய தேவர்களால் எப்போதும் ஆசிரயிக்கப்பட்டதும், பகவானுடைய முக்கியமான வாசஸ்தலமாக விருப்பதுமாகிய புருஷோத்தமனாகிய மகாவிஷ்ணுவினுடைய பள்ளியஸ்தலமிருக்கின்றது. இந்த ஸ்தலத்தில் மரணமடைந்தவர்களுக்கு மோட்சமென்பது உள்ளங்கையிலிருக்கிறது அதுவுமிருக்கட்டும் அவர்களுடைய தேகந் தகனஞ்செய்யாமலிருந்தாலும் விகாரத்தையடையாமல் கட்டைகளைப்போ லிருக்கின்றது. இன்னும் இந்த ஸ்தலத்தில் நீசஜாதிகளாலே கொண்டுவரப்பட்ட அன்னமுதலானவைகளை இலட்சுமிபதியாகிய சுவாமிக்கு நைவேத்தியஞ்செய்து அந்த அன்னத்தைப் பக்தியுடனே புசித்தவர்களுக்குச் சன்மாந்தரத்தில் சம்பவித்த மகா பாபங்களெல்லாம் நாசமாகுமென்று பெரியோர் சொல்லுவார்கள் என்று சொல்லி பக்தி அதிகரித்தவனாக மரவிக்கிரகத்தில் பிரதிபலித்திருப்பவனாகியும், பாகங்களில் விவேகவான்களாலே ஓமஞ்செய்யப்பட்ட அவிர்ப்பாகங்களை அங்கீகரிக்கிறவனாகியுங், கிருபையால் குளிர்ச்சியுள்ளவனாகியும், பரமப்பிரகாசமாக வுள்ளவனாகியும், மிகவும் பரிசுத்தமுள்ளவனாகியுந், தேஜோரூபனாகியுமிருக்கிற ஜகந்நாதசுவாமிக்கு நமஸ்காரமென்று சொன்னான்.

குஜராத்திதேசத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் சிறப்பாகச் சொல்லுகிறான் ஓ சினேகிதனாகிய கிருசானுவே சகல சம்பத்துகளுக்கும் ஆதாரமாகவிருக்கிறபடியால் சுவர்க்கலோகத்தைப் பின்னிடும்படியாகச் செய்கிற இந்த குஜராத்தி தேசம் நேத்திரங்களுக்கு மிகவும் ஆனந்தகரமாக விருக்கின்றது. இந்தத் தேசத்தில் கற்பூரத்தோடு கூடியிருக்கிற ருசிகரமான பாக்கை யுடைத்தானதாகிய இளம் வெள்ளை வெற்றிலை ரசத்தால் மிகவுஞ் சிவப்பாகப் பிரகாசிக்கிற வாய்களுள்ளவரும், சகல சனங்களாலுஞ் சிறப்புச்செய்யத்தக்க திவ்ய வஸ்திரங்களைத் தரித்தவர்க

ளும், மிகவும் பிரகாசிக்கிற இரத்தினாபரணங்களை யுடையவர்களும், குங்குமத்தோடு கூடி மிகுந்த பரிமளத்துடன் சேர்ந்திருக்கிற கந்தங்களால் குமுகுமுவென்கிற தேகத்தை யுடையவர்களுமாகிய எவ்வனமுள்ள புருஷாள் தங்கள்தங்கள் மனதிஷ்டப்படிக்கு கிரீடைகள்செய்கிற எவ்வனஸ்திரீகளுடனே அதிக ஆனந்தமாக விருக்கின்றார்கள் இன்னும் இந்தத் தேசத்தில் ஸ்திரீகளுடைய சவுந்தரியமுஞ் சமானமில்லாதது எப்படியெனில் அவர்களுடைய தேகம் புடம்போட்ட பொன்னுக்குச் சமானமாகிய காந்தியுள்ளது அதரம் மிகவுஞ் சிவப்பாகியும் மிருதுவாகியுமிருக்கிறது கரங்கள் நூதனமாகிய மாந்தளிர்போலிருக்கிறது வாக்கு அமிர்தத்தாரையைப்போ லிருக்கிறது முகம் கமலத்தைப்போலிருக்கிறது நேத்திரங்கள் குமுத தளங்கள்போ லிருக்கிறது ஸ்தனங்கள் தங்கக் குடங்கள்போ லிருக்கிறது ஆனதால் இந்த குஜராத்தி ஸ்திரீகளுடைய எந்த அவயவங்கள்தான் எவ்வனபுருஷாளுக்கு மோகத்தை யுண்டாக்காததாக விருக்கிறதென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! நேயனே நீ சொல்லியது சத்தியந்தான், ஆனாலும் இந்த குஜராத்திதேசத்தார் வஸ்துவினுடைய சாரத்தை அனுபவிக்கத்தெரியாதவர்கள். எப்படியெனில் இந்தப் புருஷாள் (நாணமுங் காமவிகாரமும் உண்டாயிருப்பவர்களும் மின்னல்போன்ற தேககாந்தி யுள்ளவர்களுமாகிய நூதன எவ்வன ஸ்திரீகளைக் கிரீடைக்கு யோக்கியமானகாலத்தில்) வீடுகளிற்றானே விட்டவர்களாகியும், விலையுயர்ந்த நவரத்னமுதலாகிய வர்த்தகத்தில் லாபஞ்சம்பாதிக்க மிகுந்த ஆசையுள்ளவர்களாகியும் அனேகநாள் பிரயாணஞ் செய்யவேண்டிய தூரதேசங்களில் வெகுகாலஞ் சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருப்பார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன், ஓ! மந்தபுத்தியையுடைய கிருசானுவே, இது புருஷாளுக்கு உத்தமகுணமேயன்றி தோஷமல்ல; எப்படியெனில் இந்த குஜராத்திபுருஷாள் தேசதேசங்களிலிருக்கிற ஆச்சர்யங்களைச் சந்தோஷத்துடனே பார்க்கப்பட்டவர்களாகி மிகுதியான திரவியங்களைச் சம்பாதித்துக்கொண்டு வீட்டுக்குவந்து சகல சம்பத்துள்ளவர்களாய் வெகுகாலம் விரகத்தால் மிகுந்த ஆசையுள்ள தங்கள் தங்கள் ஸ்திரீகளுடனே கூடி மிகுதியான சவுக்கியத்தை அனுபவிப்பார்கள். இந்த குணங்களி

ல்லாதவர்களாகிய அதமபுருஷாளுடைய நடத்தைகள் எப்படிப்ப ட்டதென்றால்; தரித்திரத்தினாலும், அதிகவழக்கத்தினாலும், பெண்சாதியாலே அருவருப்புடையவனாகியும், இராசாங்கத்து அதிகாரஸ்தர்களுடைய அறிமுகமில்லாமையினால் சகல ஜனங்களுக்கும் பயப்படுபவனாகியும், புத்திப் பிரகாசமில்லாதவனாகியுஞ், சோம்பேறியாகியும், வீடுகளில் இருப்பவன் கிணற்றிலிருக்கும் ஆமையைப்போல * புவனசரித்திரத்தை என்னதான் தெரிந்துக்கொள்ளுவான்; அல்லது என்ன சுகத்தைத்தா னனுபவிப்பான். எவன் இதர வியாபாரங்களை விட்டுவிட்டு ஸ்திரீயினுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு வீட்டிற்றனே சோம்பேறியாக விருப்பானோ அவன் மந்தபுத்தியுள்ளவனாய்த் தரித்திரனாகப்போவான். எவன் பூமியில் சுகத்துடன் இருப்பதற்கு இச்சிப்பானோ அவன் அரசர்களுடைய சபையில் பிரவேசிக்கவேணும் அந்தச் சபையில் சுபமான வார்த்தைகளையே பேசவேணும்; தன் காரியத்தில் ஆத்திரப்படக்கூடாது; வியசனமில்லாமல் வந்தமட்டுக்கும் பொருளைச் சம்பாதிக்கவேண்டும். பிரபுவின் இஷ்டர்களுடைய கிருபையைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்; ஜனங்களுக்கு உபகாரங்கள் செய்யவேண்டும்; எவனுக்கும் அபகாரஞ் செய்யக்கூடாது. இன்னும் பிரபுவானவர்கள் அயுக்தமான வார்த்தைகளையாவது யுக்தமானவார்த்தைகளையாவது பேசினாலும் அவைகளையுங் கொண்டாடவேண்டும். அந்தப்பிரபுவினுடைய குருக்கள் என்ன அவிவேகிகளாக விருந்தாலும் அவர்களையும் பூஜிதை செய்யவேண்டும்: சபையில் எதுவும் அபேட்சையில்லாதவனைப்போல அபிநயிக்கவேண்டும், தன்னுடைய காரியத்தைப் பிரபு சந்தோஷமாக விருக்கும்போது இரகசியமாகச் சொல்லவேண்டும். இந்தப்படி நடப்பவர்களே விவேகவான்களாமென்று சொன்னான்.

யமுனாநதி தீரத்திலிருக்குங்
கிருஷ்ணவணக்குறித்து.

அப்புறம் விமானத்தை சிலதூரம் நடத்தி விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பினவனாகச் சந்தோஷத்துடனே சொல்லு

* புவனசரித்திர மென்பது-இதாசலத்தினுடைய சுவராசியமென்றும் ஆகும்.

கிறான் ஓ! யமுனாநதியே? கிருஷ்ணனுடைய ஆலிங்கனத்தால் விசேஷமாகிய நீலகாந்தியையுடைய உனக்கு நமஸ்காரம். உனது சலத்தினுடைய துளிகளால் வியாபிக்கப்பட்ட புஷ்பப்புதர் வீடுகளுக்கு நமஸ்காரம். கிருஷ்ணனை ஆலிங்கனஞ் செய்யவேணுமென்கிற இச்சையால் அப் புதர்வீட்டுக்குள்ளிருக்கிற கோபிகா ஸ்திரீகளுக்கு நமஸ்காரம் அந்தஸ்திரீகளால் ஆசரியிக்கப்பட்ட நாதனாகிய கிருஷ்ணசுவாமிக்கு நமஸ்காரவசனங்களை அத்தியயனஞ் செய்கிறோமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! ஓ! சிநேகிதனாகிய விஸ்வாவசுவே ஜாரர்களுக்குஞ் சோரர்களுக்குஞ் சிரோன்மணியாகியும் உலகத்தை வஞ்சனைசெய்பவனுமாகிய கிருஷ்ணனுடைய தியானத்தால் என்னபிரயோசனம் போதும் போதுமென்றான் ஏனெனில் இதராளுடைய வீடுகளில் வெண்ணெயைத் திருடி நேத்திரங்களைச் சிமிட்டிக்கொண்டு பட்சிக்கிறபோது கோபிகாஸ்திரீகளால் யிழுத்துக்கொண்டு வரப்பட்டவனாகி தாயாரிடத்தில் சேர்க்கும்படியாகிய கிருஷ்ணனைப்பார்த்து அந்த அசோதை ஓ கிருஷ்ணனே (லுண்டேர்மாநவநீதம்) என்பது வெண்ணெயைத் திருடாதேயென்று உனக்கு நான் சொல்லியிருந்தும் இந்த வெண்ணெயை நீ ஏன் திருடினாயென்று மிறட்டுகிற தாயைப்பார்த்து ஓ தாயே (மாநவநீதம்லுண்டேயே) என்பது மனுஷியாளால் கொண்டுவரப்பட்டதைத் திருடுயென்று நீ சொன்னபடிக்கே நான் திருடினேனென்று அந்த அபராதத்தைத் தாயார்பேரிலேயே சுமத்திவிட்டான் இன்னுங் குசோத்தியக்காரனாகிய கிருஷ்ணன் ஒரு கோபிகாஸ்திரீயினுடைய புஜத்தில் விளையாட்டாக ஒரு கிளிப்பிள்ளையை ஏற்றிவிட்டதினால் அவள் பயப்பட்டு ஓ கிருஷ்ணனே (அம்சங்கதம் சுகமிஹாபநய) என்பது புஜத்தில்பொருந்திய கிளியை இப்போது எடுத்து விடு என்று சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வசனத்தைக்கேட்டு அவளுடைய வஸ்திரத்தைக் களைந்துவிட்டவனாய் ஓ கோபிகாஸ்திரீயே (அம்சங்கதம் சுகமிஹாபநய) என்பது அம் என்கிற அட்சரத்துடனே சங்கதங் கூடிய சுகத்தை எடுத்து விடென்று நீ சொல்லியபடிக்கு அந்த அம்சுகமாகிய வஸ்திரத்தை நான் எடுத்துவிட்டேனென்று மோசஞ்செய்தான் இன்னும் முராசுரனை சம்மாரஞ்செய்த கிருஷ்ணன் ராதையுடனே கூடி இராக்காலமெல்லாம் ஒழித்தவனாகி உதயகாலத்தில் தன் வீட்டுக்கு வரும்போது நீளாதேவி பார்த்து ஓ கிருஷ்ணனே நீ (அ

பராதிகன்) என்பது அபராதம் உள்ளவன் ஆகவேண்டாமென்று பூர்வமே உனக்கு நான் சொல்லியிருந்தும் நீயேன் குற்றஞ்செய்தாயென்று கோபத்துடன் கேட்ட நீளாதேவியைப் பார்த்து ஓ தேவியே (அபராதிகன்) என்பது ராதையை விட்டவனாகவேண்டாமென்று நீ சொல்லிய வசனப்படிக்கே நான் ராதையுடனே கூடினவனானேனென்று மாயைவார்த்தைகளால் மயங்கச்செய்தானேனென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ இஷ்டனாகிய கிருசானுவே இந்தப்பிரகாரம் நீ சொல்லவேண்டாம் இந்த கிருஷ்ணனுடைய குணாதிசயங்களைக் கேள் பரமபாவனனாகியுஞ் சகல உலகங்களுடைய பாபங்களை நாசஞ்செய்வதற்கு அவதாரஞ்செய்தவனுந் தன்னைநோக்கிநமஸ்கரிக்கிறசனங்களுக்கு பரமானந்தத்தைக் கொடுக்கிறவனுமாகிய அந்த யதுநந்தனனாகிய கிருஷ்ணன் நிந்தையென்கிற மார்க்கத்துக்குத் தூரமாகவிருக்கப்பட்டவன் துஷ்டர்களுடைய நாசத்துக்காக அவதாரஞ்செய்த எந்த கிருஷ்ணனுடைய சரித்திரமென்கிறது சகல லோகத்தையும் பவித்திரஞ்செய்கிறதோ அப்பேர்ப்பட்ட பரமபுருஷனாகியுஞ் சமஸ்தமானவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட கிருஷ்ணனுக்கு நான் நமஸ்காரஞ் செய்கிறேன் இன்னும் இந்தக் கிருஷ்ணனுடைய அதிக ஆச்சரியமான சரித்திரத்தை நீ கேள் என்னவெனில் உலகத்தில் திருடனிடத்தில் திருட்டுத்தனம் பிரசித்தமாகவிருக்கின்றது அந்தத் திருட்டுத்தனத்தில் திருட்டுத்தன்மையென்பது எப்போதும் பார்க்கப்பட்டதல்ல இந்தக் கிருஷ்ணனுடைய திருட்டுத்தனமுதலாகிய காரியங்கள் சிரவணஞ்செய்கிறவர்களுடைய பாபங்களையெல்லாந் திருடுகின்றன இன்னும் இந்த கிருஷ்ணனென்கிற மேகம் பிரகாசிக்கிறபோது கம்சன் பொருந்தியிருந்த சம்பத்து லோபமடைந்தது உலகத்தில் கஷ்டங்களைக் கொடுக்கும்படியாகிய பாபங்களுக்கு உபசாந்தி யுண்டாயிற்று அம்சாசூரன் மரணத்தை யடைந்தான் கீர்த்தி யெங்கும் வியாபித்திருந்ததென்று சொல்லி பக்தி அதிகரித்தவனாக கம்சனை நாசஞ்செய்தவனும் முராசுரனை பேரில்லாமற் செய்தவனும் அம்சாசுரனை இம்சைசெய்தவனும் பாணாசுரனை க்ஷீணஞ்செய்தவனும் பகாசுரனைப் பிளந்துவிட்டவனும் பௌண்டரனை லோபஞ்செய்தவனும் நரகாசுரனை நாசஞ்செய்தவனும் தேவேந்திரனுடைய கவர்த்தை நிராகரித்தவனும் பக்தாளா

கிய சிஷ்டசனங்களுடைய கூட்டத்தை சம்ரட்சணைசெய்தவனுமா கிய கிருஷ்ணவதாரத்தையுடைய சுவாமிக்கு நாம் யாவரும் நமஸ்காரஞ் செய்யவேண்டியதே முக்கியகடமையென்றுசொன்னான்

ஆதிபகவானைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி வனங்கள் தேசங்கள், நதிகள், மலைகள் முதலானவைகளைப் பார்த்து ஆச்சரியத்துடனே ஆதிபகவனை உத்தேசித்து விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான் ஓ உலகத்துக்கு நாதனாகிய சுவாமியே எத்தனைவிதமாகிய கொடிகளையும், எத்தனை விருட்சங்களையும், எத்தனை மலைகளையும், எத்தனை சமுத்திரங்களையும், எத்தனை நதிகளையும், எத்தனைவிதமாகிய புருடர், ஸ்திரீகளையும், எத்தனை தேசங்களையும், எத்தனைவிதமான மிருகபட்சிகளையும் நீ சிருஷ்டிசெய்திருக்கிறாய் உன்னுடைய மகிமையென்பது புத்திக்கு அடங்குகிறதில்லையென்று சொல்லி நமஸ்காரஞ் செய்தான். இதைக்கேட்ட கிருசானுவும் நமஸ்காரஞ்செய்து மவுனமாக யிருந்துவிட்டான்.

மகராஷ்டிரதேசத்தைக்குறித்து.

அப்புறம் மற்றொரு தேசத்துக்கு விமானத்தை நடத்தி எதிரில் பார்த்து விஸ்வாவசுவென்பவன் வெகு சிறப்புடனே சொல்லுகிறான் மதுரமாகிய சலத்தால் நிறைந்திருப்பதும் ஒப்பில்லாத பிரகாசமுள்ளதுமாகிய மகாராஷ்டிரம் என்கிற பெயருடைய இந்தத் தேசந் தேவேந்திரனுடைய அமராவதிநகரத்துடனே சமானமாகப் பிரகாசிக்கிறது நற்குணங்களுக்குச் சமுத்திரத்தைப்போலிருக்கிற இந்தத் தேசத்தில் வாசஞ்செய்யுங் கிரகஸ்தர் சில பேர் சம்பத்துகளுடைய சமூர்த்தியுள்ளவர்களாய் எப்போதும் பக்தியுடனே மிகவும் அதிதிபூசை செய்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சினேகிதனாகிய கிருசானுவே பூர்வகாலத்திலிருந்த சரித்திரத்தை இப்போது ஏன் சொல்லுகிறாய் இப்போதானால் கலிமகிமையால் இதர சனங்களுக்குச் சம்மதியில்லாத கிரமங்கள் இத்தேசத்தில் வாசஞ்செய்கிறவர்களுக்கு உண்டாயிருக்கிறது எப்படியெனில் இந்தத் தேசத்தில்

பிராமணகுலத்தில் உதித்த சனங்கள் அனேகமான வியாபாரங்களால் காலங்கழிக்கிறவர்களாகி போஜனசமயத்தில் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனஞ் செய்வார்களேதவிர ஒருநாளும் விதிப்படி காலங்களில் சந்தியாவந்தனஞ் செய்கிறதில்லை இன்னும் பிராமண சம்மந்தமாகிய விருத்தியைத் தியாகஞ்செய்து கிராமங்களுக்குக் கணக்கராய் நானுவித வியாபாரங்களால் அனேகம்பேர் ஜீவனஞ் செய்வார்கள் இன்னும் இந்தப் பிராமணுளுக்கு உற்சவங்களில் பிரதானமாகவிருக்கிற உபநயன விவாகங்களென்கிறது கலிமகிமையால் காலபேதமில்லாமலிருக்கிறது வேதபாடத்துக்கு யோக்கியமான வயசில் மிலேச்சர்களுடைய பாஷை அட்சரங்களுடைய அப்பியாசத்தை ஒருகாலத்திலும் விடுவதில்லை இன்னும் மூடர்களாகியும் இடைவிடாது லௌகீக வசனங்களையே பேசிக்கொண்டிருக்கிறவருமாகிய இந்தப் பிராமணுளுக்கு கருமங்களில் மந்திரங்களைச் சொல்லவேண்டிய காலங்களில்மாத்திரம் மௌனமென்கிற விரதம் உண்டாயிருக்கிறது கிராமங்களுடைய வரவு செலவு எழுதுவதினுலேயே சகலமான காலத்தையுங் கழித்துக்கொண்டு பாரம்பரியமாக இந்தப்படி யிருக்கிற இவர்களுடைய பிராமணத் தன்மை ஒப்பில்லாதது இன்னும் வயிறு நிறைத்துக்கொள்ளவேண்டியதற்காக மிலேச்சர்களுக்குச் சேவக வியாபாரங்கள் செய்கிறதற்குத் தங்களுடைய சரீரத்தை சம்பளத்தால் விக்கிரயஞ்செய்துக்கொள்ளுவார்கள். இதுவுமிருக்கட்டும் பிராமணராகவிருந்துங் கணக்குகளில் சாதுரியங்களால் வஞ்சனைசெய்து தங்களைப் போஷித்துக்கொண்டிருக்கிற எஜமான்களுடைய திரவியத்தை அபகரித்து * சுவர்னஸ்தேயமென்கிற மகாபாதகத்தைச் செய்வார்கள் இன்னுங் கலிமகிமையால் சகல சனங்களுக்கும் யோக்கியன் அல்லது அயோக்கியனென்று தெரிந்துக்கொள்ளும் விவேகம் இல்லாமலிருக்கிறது மகா ஆச்சரியம் எப்படியென்றால் எந்த ஜனங்கள் இராத்திரிகாலங்களில் வீடுகளிற் பிரவேசித்தாவது ஆரண்ணியத்தில் பலவந்தமாகவாவது திருடுவார்களோ அவர்கள் தன்னுடைய எசமானனுடைய தனத்தை அபகரிப்பது இல்லையல்லவா அப்பேர்ப்பட்டவர்களை திருடர்களென்று யாவரும் நிந்திப்பார்கள். எந்த ஜனங்கள் கணக்குகளை வித்தியாசஞ்செய்து தங்களைப் போஷிக்கிற எசமானனுடைய பொருளைத் திருடுவார்களோ அப்

---

* சுவர்னஸ்தேவம்-என்பது பொன் திருடுதல்.

பேர்ப்பட்ட வஞ்சகர்களை இக்காலத்தில் சகல சனங்களும் மரியாதை செய்வார்கள் இந்தத் தேசம் ஒப்பில்லாததென்று நீ சொல்லியது சரியாகத்தா னிருக்கின்றது எப்படியெனில் இந்தத்தேசத்தில் சுவல்பகுணத்தால் அதிகமான பிரதிஷ்டை சம்பவிக்கிறது அதாவது வேதத்தினுடைய பத்து அட்சரங்களை எவன் தெரிந்துக்கொண்டவனே அவனே வேதவியாசன் எவன் ஒரு சுலோகத்தைச் சொல்லுகிறானே அவனே பிரகஸ்பதி எவன் ஔபாசன மாத்திரஞ் செய்வானே அவனே ஆபஸ்தம்பமகாரிஷி இந்தப்படியாக சிஷ்டர்களுக்கு (பங்கஞ்செய்கிற கலியுகத்தினால்) வித்தைகள் குறைந்துபோயிற்றேயென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் என்னடா கிருசானுவே பிராமணர்களிடத்திலேயே மிகவுந் தோஷங்களைச் சொல்லுகிறாய் இந்த தேசத்திலும் அக்கினிஹோத்திரஞ் செய்பவர்களுஞ் சாஸ்திரங்களுடைய அர்த்தங்களைப் போதிக்கிறதில் சாதுரியமுள்ளவர்களும் உபசாந்தியுள்ளவர்களும் யோகநிஷ்டையை யுடையவர்களும் ஆத்துமஞானமுள்ள மகாத்துமாக்களும் இதரவிஷயங்களைவிட்டு வேதமார்க்கத்திலேயே நிபுணரானவர்களும் அநேகம்பேரிருக்கிறார்கள் இன்னும் இந்த மகராஷ்டிரப் பிராமணர் காலக்கிரமப்படி ஸ்நானங்களால் பரிசுத்தியுடையவர்களாகியும் நியமப்படி செவிகளுக்கு ஆனந்தமாகப் புராணங்களைக் கேட்கிறவர்களாகியும் அபரிசுத்தர்களுடைய ஸ்பரிசத்தைத் தியாகஞ்செய்தவர்களாகியுந் தேவதாபூசைகளைச் செய்து பரிசுத்தமாகச் செய்யப்பட்ட அன்னத்தைப் புசிப்பார்கள் ஆகையால் இந்த தேசத்தில் சிரேஷ்டமாகிய இந்தக் குணம் பிரகாசமாகவிருக்கின்றது இன்னும் மகராஷ்டிரதேசத்தில் ஜனித்த இந்தப் பிராமணசமூகஞ் சேனாதிபதி அதிகாரத்தினாலாவது தேச அதிகாரத்தினாலாவது பிரபுஸ்தானத்தை அனுசரித்து பூதேவர்களாகிய பிராமணருடைய ஜீவனங்களை நடப்பிக்காமற்போனால் மிலேச்சர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்த உலகத்தில் பிராமணத்தன்மையுடனே இந்துக்களென்கிற நாமதேயமே இல்லாமற்போய்விடும் இன்னும் உன்னால் சொல்லப்பட்ட இவர்களுடைய சகல தோஷங்களுஞ் சாதுசனங்களுக்கு உபகாரஞ் செய்வதனால் பரிகாரமாகும் எப்படியெனில் உத்தம பிராமணருக்கு உபகாரஞ்செய்கிறதென்கிற ஒரு குணமே ஆயிரம் பாபங்களையும் பேதிக்கிறதற்குச் சமர்த்துள்ளதாகும் கூர்மையுள்ள கோடாலி ஒன்றானபோதிலும் அநேக

விஷ விருட்சங்களைச் சேதிக்கிறதற்குச் சமர்த்துள்ளதாகுமல்லவா வென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியதெல்லா மிருக்கட்டும் முதல்வருணத்துக்கு இரண்டாம் வருணமாகிய க்ஷத்திரியருடைய நடத்தைகளுள்ள இத்தேசத்து பிராமணனுடைய சில வியாபாரங்கள் சகிப்பதற்கு மிகவும் அசக்கியமானது எப்படியென்றால் பாபிஷ்டாளாகிய இந்தப் பிராமணாள் சேர்ந்து தேசதேசங்களிலுஞ் சஞ்சாரஞ்செய்பவர்களாய் பிராமணாள் முதலாகிய சகல சனங்களையும் பங்கஞ்செய்து அவர்களுடைய சகல சொத்துக்களையும் அபகரித்து தங்களுடைய வயிறுகளை நிறப்பிக்கொள்ளுகிறார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இது எதார்த்தமானதே ஆனாலும் இவர்களுடைய இந்த நடத்தைகள் சகிக்கத்தகுந்தது எப்படியெனில் மாயைகளில் சமர்த்துள்ளதாகி (சத்துருவாகிய அரசர்களுக்குப் பயத்தை யுண்டாக்குகிற) கதிகள்பொருந்திய மகாராஷ்டிரதேசத்திலிருக்கிற * படாளுடைய சமூகம் யுத்தத்தில் மிகவுஞ் சமர்த்துள்ளதாய் தேசதேசங்களிலுஞ் சஞ்சாரஞ்செய்யாமற் போகுமேயானால் தேவாலயங்களையும் பிராமணாள் முதலானவர்களையும் நிக்கிரகஞ்செய்கிற இந்தத் துருக்கர் தடையில்லாத மனோவச்சாகமுள்ளவர்களாய் சகல தேசங்களிலுந் தேவாலயங்களையும் இந்துக்களையும் இல்லாமற்செய்துவிடுவார்கள் இன்னும் இந்துக்களுக்குந் தேவாலயங்களுக்கும் இதத்தைச் செய்வதும் மிலேச்ச சமூகத்தைப் பிளந்துவிடுவதுமாகிய இந்த மகராஷ்டிரசேனையினுடைய நடத்தைகளைப் பூமியில் இந்துக்களென்பவர்கள் யாவரும் அதிக பிரயாசையாலாவது சகித்துக்கொள்ளவேண்டியது அவர்களுக்கு முக்கிய கடமையாகவிருக்கின்றது எப்படியெனில் தேகத்துக்கு ஆரோக்கியத்தை முக்கியமாக அபேட்சிக்கிறவர்கள் அனேக வாதைகளைத் தராநின்ற வியாதிகளை நாசஞ்செய்கிற உக்கிரமான ஔஷதங்களுடைய கசப்புமுதலான கடின குணங்களைச் சகிக்கவேண்டியதுபோலேதானென்று சொன்னான்.

---

* படாள்-என்பது சிப்பாய்கள்.

பைராகிகளைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி நான்கு பக்கத்திலும்பார்த்து விஸ்வாவசுவென்பவன் அனேகம்பேர் பைராகிகள் கும்புகூடி சகலவழிகளிலும் நிறைந்து வருகிறுர்களென்று சிறப்புடனே சொல்லுகிறுன். எப்படியெனில் தன்னியர்களாகிய இந்த பைராகிகள் மிகவுஞ் சஞ்சாரப்பிரயாசத்தை சகிக்கிறவர்களாய் அங்க வங்க கலிங்க மகத குரு கோசல கேகய காஸ்மீர குந்தல யவன பாஞ்சால நேபாள கேரள பாண்டிய துண்டீர சோள கர்ணுட கௌட லாட தேசங்களில் எப்போதுஞ் சஞ்சாரஞ்செய்வார்களென்முன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, நிந்தைக்குப் பாத்திரராகிய இந்த பைராகிகளைப்பார்த்து நீயேன் சந்தோஷிக்கிறுய்; எப்படியெனில் நானுஜாதிகளில் உத்பத்தியானவர்களானுலும், இந்தக்கலிபலத்தால் கூடியிருக்கிறவர்களும், வைராக்கியத்தை அபிநயம் பண்ணிக்கொண் டிருப்பவர்களும், வருணுச்சிரமங்களைத் தியாகஞ்செய்தவர்களும், யோக்கியாளாகிய வைதிகாளும் நமஸ்காரமுதலியது செய்யாதவர்களுந், தரித்திரத் தன்மையுடையவர்களும், மோசங்களில் சமர்த்துள்ளவர்களுமாகிய இந்தபைராகிகள், உதரபூர்த்திக்காக அஷ்டதிக்குகளிலேயும் பிட்சையெடுக்கிறுர்கள். இன்னும் நிர்மலமாகிய சரித்திரங்களுள் விஸ்வாமித்திரர் முதலாகிய மகாரிஷிகள் அனேகவிதங்களாகியும் ஒப்பில்லாததாகிய தவங்களாலும் எந்தபிராமணத் தன்மையைச் சம்பாதனைசெய்தார்களோ அப்பேர்ப்பட்ட ஜன்மத்தினுலே வந்த பிராமணத்தன்மையை சிலபேர் தியாகஞ்செய்தவர்களாய் மூன்றுவேதங்களுக்கும் அயோக்கியராகிய இந்த பாஷண்டிகளிடத்தில் பிரவேசித்துக் கெட்டுப்போயிருக்கிறுர்க ளென்முன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் என்ன கிருசானுவே விரக்தாளாகி அரிபக்தியுள்ள இவர்களிடத்திலுந் தோஷஞ்சொல்லுவதற்குப் பிரயத்தினமானுய். விஷ்ணுவிடத்தில் திடமான பக்தியிருந்தால் தோஷங்களுக்குப் பயப்பட வேண்டியதில்லைஃ பெரியதீபமிருந்தால் அந்தகாரத்தினுடைய பயமில்லை யல்லவா? இன்னுஞ் சருவோத்தமமாகிய அரிபக்தி என்பது துக்கங்களையுஞ் ஜன்மத்தையும் பாபங்களையும் பிரபலமாகிய மாயையும் நாசஞ்செ

ய்கின்றது. ஸ்ரீராமனுடைய ஒருபாணமே ஏழு பனைமரங்களையும், பர்வதத்தையும், பூதலத்தையும் வேகமாகப் பிளந்ததல்லவா? இன்னுஞ் சுபகரமாகிய சேஷாத்திரி நாயகனுகிய விஷ்ணுவினிடத்தில் வைத்திருக்கும் பக்தி என்பது நிறைந்திருக்கிற அஞ்ஞானத்தை நாசஞ்செய்கின்றது. பாபங்களென்கிற ஆரண்ணியத்தைசேதித்துவிடுகின்றது. இஷ்டார்த்தங்களை விஸ்தாரமாகக் கொடுக்கின்றது. அனேகமாகிய உற்சவங்களை அபிவிர்த்திசெய்கின்றது. மனதை அமிர்தப்பிரவாகங்களால் எப்பொழுதும் நனைக்கின்றது. பரிபக்குவமாகவுஞ் செய்கின்றது. இன்னும் புண்ணியத்தன்மையுடைய கங்கைமுதலாகிய நதிகளின் ஸ்தானங்களால் பரிசுத்தமான தேகங்களுடையவர்களும், அனேக க்ஷேத்திரங்களில் யாத்திரை செய்பவர்களும், வீடு பெண்சாதி பிள்ளை இவைகளில் அபேட்சிக்காத வைராக்கிய முள்ளவர்களுமாகிய இந்த பைராகிகளை குணவான்கள் யாவரும் விசுவாசஞ் செய்யவேண்டியதாக விருக்கிறதென்று சொன்னன்.

ஆந்திரதேசத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் செவ்வையாகப் பரிசீலனை செய்து சொல்லுகிறுன், எப்படியெனில் இங்கே சீவனஞ் செய்துக்கொண்டிருக்கிறவர்களாகிய மிகவும் ரமணீயமாகிய வேதக்கிரமத்தைப் பாடஞ்செய்கிறவர்களால் ஆச்சிரயிக்கப்பட்டது. மத்தியபாகத்தில் பிராமணர்களையுடையதும்ாகிய இந்த ஆந்திரதேசஞ் சமுத்திரத்தைப்போலப் பிரகாசிக்கிறதென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவெனபவன் ஓ! விஸ்வாவசுவே, மரியாதையில்லாத இந்த தேசத்தை நீயேன் பூஷணெய்கிறுய் எப்படியெனில் இத்தேசத்தில் பிரதிகிராமங்களிலும் எப்போதுஞ் சூத்திரன் எஜமானனுகவிருக்கிறுன். பிராமணன் அவனுக்குச் சேவகனுகப் பக்கத்திலிருந்து கணக்குகள் சொல்லிக்கொண்டிருக்கிறுன். வேதத்தை அத்தியயனஞ் செய்தவன் (பாலநிலத்தின் சரசுபோலே) எங்கேயாவது ஒருத்தனிருந்தால் அவன் சுபகருமங்களையும் அசுபகருமங்களையுஞ் செய்விக்கும்படியாகிய புரோகி

தவேலையில் அதிகாரியாகவிருப்பான். இன்னும் மகாராஷ்டிர தேசத்தாரிடத்திலிருக்கிற தோஷங்களெல்லாம் தேசத்தாரிடத்திலுமிருக்கிறதென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! சிநேகிதனுகிய கிருசானுவே, நீ இந்தப்படி சொல்லவேண்டாம்; இத்தேசத்தார் யாகங்களைச் செய்யாமற்போனுலும் போகட்டும் புராதன வசனங்களாகிய வேதங்களை அத்தியயனஞ் செய்யாம லிருந்தாலு மிருக்கட்டும் இவர்களுக்குத் தேவர்களிடத்தில் பக்தியும் பூதேவர்களாகிய பிராமணர்களுக்குத் தானஞ்செய்வதுஞ் சகலமான தோஷங்களையும் பரிகாரஞ்செய்கின்றது. இன்னும் இவர்களுடைய பாக்கியத்தைப் பார் அரசர்கள் செல்வப்பொருளுடைய இப்பூமியை அனுபவிப்பதுபோலே இத்தேசத்திலிருக்கிற எவ்வன புருஷோள் யாவருங் காமத்தால் மதத்திருக்கிற தங்கள் தங்கள் ஸ்திரீகளை அனுபவிப்பார்கள் எப்படியெனில் அந்த ஸ்திரீகளுடைய வயிற்றிலிருக்கும் ரோமரேகைகளை யமுனுநதியைப்போலேயும் அவர்கள் அணிந்திருக்குஞ் சொகுசாகிய முத்தாரங்களை கங்காநதியைப்போலேயும் அவர்கள் ஸ்தனங்களைப் பர்வதங்கள்போலேயும் அவர்கள் நாபிகளைக் குளங்கள்போலேயும் அவர்கள் தேககாந்தியை இரத்தினக்காந்திபோலேயும் மிகவுஞ் சுந்தரமாகப் பூமிக்கு ஒப்பாயிருக்கிறபடியினுலேதான் இன்னுங் கற்பகவிருட்சந் தனது புட்பங்களுடைய சாரத்தை அபகரிக்கிற * மதுபங்களை யெப்போதுந் தன்னிடத்தில் சந்தோஷத்துடனே உடைத்தாயிருக்கிறது. கர்னன் எப்போதும் அருச்சுனன் கீர்த்தியினுடைய நாசத்தையே கோரினவனுக விருப்பான். நீலமேகங் கர்ஜனைசெய்துக்கொண்டிருக்கும் இந்த ஆந்திரதேசத்து அரசர்கள் எப்போதும் இப்பேர்ப்பட்ட குணங்களில்லாமல் நிர்த்தோஷமாகிய தாதுருவத்தை யுடைத்தாயிருக்கிருர்கள். இன்னுங் கிருஷ்ணுநதி கோதாவரிநதிகளுடைய மத்தியபாகத்திலிருக்கிற வைதிகராகிய இந்தப் பிராமணுளுடைய சம்பிரதாயம் மிகவுஞ் சந்தோஷிக்கத் தக்கதாக விருக்கின்றது. எப்படியெனில் இந்தப் பிரதேசத்தில் வேதபாடத்தால் பாபங்களை நிராகரித்தவர்களும் நீதிசாஸ்திரங்களைத் தெரிந்தவர்களுமாகிய அனேக பிராமணுள் பிரதி வசந்தகாலத்திலேயும் யாகங்களைச் செய்பவர்களாகியும் எப்போதும் முகு

* மதுபங்கள்-என்பது வண்டுகள்.

ந்தனிடத்தில் பக்தியுள்ளவர்களாகியுஞ் சுகத்தோ டிருக்கின்றார் கள் இன்னும் இத்தேசத்திலிருக்கிற அதிகாரஸ்தருடைய நிஷ்கரி ஷை களங்கமில்லாததாக விருக்கின்றது எப்படியெனில் ஆசிரயி த்தால் அரசனையே ஆசிரயிக்கவேண்டுமென்றுஞ் சம்பாதித்தால் விசேஷ திரவியங்களையே சம்பாதிக்கவேண்டுமென்றுஞ் செய் தால் தாதுருத்துவமே செய்யவேண்டுமென்றும் பொருந்தவேண் டுமானல் பத்துத்திக்குகளிலும் வியாபிக்கிற கீர்த்தியையே பொ ருந்தவேண்டுமென்பதே யென்று சொன்னன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியது இருந்தாலும் இத்தேசத்தில் எப்போதும் மிகவும் பாபங்களினலே நிறைந்திருக்கிற துருக்கர் விசேஷமாகச் சஞ்சா ரஞ்செய்துக்கொண்டிருக்கிறார்கள் எப்படியென்றால் வாயுவேகத் தை அதிகரிக்கிற வேகமுள்ள அஸ்வங்களால் பிரகாசிக்கிறவர்க ளும் பூமியில் சிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும் நாசஞ் செய்பவர்களும் யாகங்கள் முதலாகிய தருமங்களைப் பங்கஞ்செய் வதற்கு * தீட்சை வகித்தவர்களும் உலகத்தில் மிகவும் பயங்கரா ளாகியுமிருக்கிற மிலேச்சர் வாசஞ்செய்துக்கொண் டிருக்கிறார்க ளென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓகிருசானுவே இது நிட்சயந்தான் ஆனலும் இந்த துருக்கர் யவனர் முதலானவர்களி லிருக்கிற அசாதாரமாகிய பராக்கிரமமென்கிற குணத்தை நீ கிர கித்துக்கொள் என்னவெனில் சமர்த்துள்ளவர்களும் ஆயிரத்துக் கதிகமாகவிருப்பவர்களுமாகிய இதராளாகிய படாள் யுத்தத்துக் குச் சேர்ந்திருந்தாலும் அந்தச்சமையத்தில் இந்தத் துருக்கர்முத லானவர்களில் ஒருவனுவது குதிரையின்மீதேறி கத்தியைத் தக தகவென்று அசையும்படிச்செய்து தன் தண்டிலிருந்து கோபத் துடனே புறப்படுவானனல் மேற்சொல்லிய படாள்யாவரும் பய ந்தவர்களாகப் புல்லைக் கடிப்பார்கள் அல்லது மரணத்தையடை வார்கள் இன்னும் இந்தத் துருக்கர்முதலானவர்கள் பங்கி மது பானமுதலியவைகளைச் செய்வார்கள் தேசங்களை ஆக்கிரமிப்பார் கள் பரஸ்திரீகளை அபகரிப்பார்கள் யாவரையுந் திட்டுவார்கள் இப்பேர்ப்பட்ட தோஷங்களிருந்தாலும் யுத்தமுகத்தில் தேகத்

* தீட்சை-என்பது சங்கணங் கட்டிக்கொள்ளல் முதலியது.

தைத் திரணத்தைப்போல விட்டுவிட்டு பலாத்காரமாக வீரசுவர்க்கத்தினுடைய கதவுகளை அடித்து நொக்கிப் பிரவேசிப்பார்களென்று சொன்னன்.

கர்நாடதேசத்தைக்குறித்து.

அப்புறம் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறன் ஓ கிருசானுவே பூர்வத்தில் எந்த கர்நாடதேசம் காதுகளுக்குப் பூஷணமாக விருந்ததோ அப்பேர்ப்பட்ட கர்நாடதேசம் இப்போது கண்களுக்குப் பூஷ்ணமாக விருக்கின்றது பார் இந்த தேசத்தினுடைய ரமணீயத்தன்மை நேத்திரங்களுக்கு மிகவும் ஆனந்தகரமானது எப்படியெனில் இத்தேசத்தில் பிரதி நகரத்திலேயும் உத்தியானவனங்களும் அந்தந்த உத்தியான வனங்களிலும் பக்குவமான பாக்குமரங்களும் அந்தந்தப் பாக்குமரங்களிலும் குலைகளும் அந்தந்தக் குலைகளிலுந் தேன் பொழிந்துக்கொண்டிருக்கிறதும் அந்தந்தத் தேனுடைய பிந்துக்களிலும் வண்டுகள் ரீங்காரத்துடனே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறதும் அந்தந்த ரீங்காரத்தினல் ஸ்திரீகளுக்கு அதிகமான மதம் உண்டாகிறதும் அந்தந்த மதங்களிடத்திலும் மன்மதன் பிரகாசித்துக்கொண் டிருக்கிறனென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நிந்தைசெய்யத்தக்க இந்த தேசத்தை நீயேன் சிறப்பிக்கிருய் போதும் இத்தேசத்தில் வேதங்களிடத்திலும் வைதிகாளிடத்திலுந் துவேஷமுள்ளவர்களும் விபூதியை அணிந்துக்கொண்டிருக்கிறவர்களும் லிங்கங்களால் ஆலிங்கனஞ் செய்யப்பட்ட மார்பையுடையவர்களும் கடினர்களுமாகிய பாஷண்டிகள் அனேகம்பேரிருக்கிருர்கள் இன்னு மிவர்களுடைய அபசாரத்தைக் கேள் சந்திரனுடைய கிரணங்களென்கிற திவ்வியாமிர்தங்களால் அபிஷேகஞ்செய்யப்பட்டவனுந் திரிபுர சம்மாரஞ் செய்தவனுமாகிய சிவனுடைய சிரசை லிங்கதாரிகளாகிய இந்த சூத்திராள் தங்களுடைய குருவென்பவனுடைய பாதஜலத்தால் அபிஷேகஞ்செய்வார்கள் ஆ ஆ இது மிகவும் அனுசாரமாகிய நடத்தையென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனாகிய கிருசானுவே நீ இந்தப்படிக்கு தூஷிக்கவேண்டாம், இந்ததேசத்திலேயும் எதுகிரிஎன்கிற * திருநாராயணபுர முதலாகிய திவ்விய க்ஷேத்திரங்கள் விசேஷமாக விருக்கின்றது. அதில் இந்த எதுகிரி என்பது நமஸ்கரிக்கிறவர்களுடைய அசாத்தியமாகிய பாபங்களைப் பரிகாரஞ் செய்வதுவும், நிர்மலமாகிய புத்தியுள்ளவரும் மாயாதீத ரானவருமாகிய முனிவர்களால் சேவிக்கப்பட்டதுமாகி மிகவும் பிரகாசிக்கின்றது. இந்த கிரியில் நாராயணனென்கிற நீலமேகம் ஆனந்தத்தை வருஷித்துக்கொண்டு பிரகாசமாக விருக்கின்றது, இன்னும் எதுகிரியினுடைய தடத்தில் வாசஞ்செய்வதும் தேவேந்திரனுடைய கிரீடத்தில் பிரகாசிக்கின்ற மணிகணங்களுடைய காந்திகளால் நிராஜனஞ் செய்யப்பட்ட பாதக மலங்களுடையதும், நீருண்ட மேகத்தைப்போல் ரூபமுள்ளதும் நாராயணனென்கிற நாமதேயத்தால் பூஷிக்கப்பட்டதும், அபாரமாகிய கிருபாரசத்தை யுடையதுமாகிய பரதெய்வம் பிரகாசிக்கின்றது. இன்னும் எந்தசுவாமி பூருவயுகத்தில் (யாதவட்சுமாபுருத்தை) என்றால், யாதவர்களுக்கு இராஜாவாகிய பலராமனை மேன்மையாகச் செய்துக்கொண்டு பிரகாசித்துக்கொண்டிருந்தானோ அப்பேர்ப்பட்ட சுவாமி இந்தகாலத்தில் (யாதவட்சுமாபுருத்தை)என்றால் எதுகிரியைக் கீழாகச்செய்துகொண்டு பிரகாசிக்கிறான். இன்னும் இந்தமலையில் கருடனாலே சுவேதத்தீவிலிருந்து முன்னால்கொண்டுவரப்பட்ட வெண்மையாகிய திருமண்ணை தன்னியர்களானவர்கள் எப்போதும் நெற்றியில் அணிந்தவர்களாய் மனதினுடைய மலினத்தை நீக்கிக்கொள்ளுவார்கள். இன்னும் இந்த பருவதத்தில் கங்காநதி பிரவேசத்தால் பிரசித்தமானதும், நிர்மலமானதுமாகிய ஸரஸு சுவாமியை பஜனைசெய்கிற பக்தனைப்போலப் பாபங்களை நீக்குகின்றது. இன்னுஞ் சாலிவாகன வம்சத்து அரசர்களில் சிரேஷ்டராகியும் உத்தமகுண சீலராகியுமிருக்கிற மகாராஜா அவர்கள் கிருஷ்ணராஜஉடையவர்களாலுஞ், சிரேஷ்ட இராஜதானியாகிய பங்காளத்தின் அதியுத்தம மகிமைதங்கிய கவர்னர் ஜனரலவர்களாலும் அதிகாரம் பெற்றவராகியும், நீதிவந்தராகியும், ஜனோபகாரியாகியுமிருக்கிற கனம்பொருந்திய கமீஷனர் துரை

---

* திருநாராயணபுரப்புராணம் முத்தமிழ்க்கவி, ஆ. திருவேங்கடப்பிள்ளை இயற்றி இருக்கிறார். ஆ - ஐ.

யவர்களால் போஷணை செய்யப்பட்டுக்கொண்டுவருகிற மைசூர் பெங்களூர் என்கிற நகரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும் வேதோத்தமர்களாகிய பிராமணுள்முதலிய பண்டிதஜனங்கள் வாசஞ் செய்துக்கொண்டிருக்கிறார்கள். இந்துகுடும்ப சம்ரட்சணைசங்கமும் விருத்தியாகிக்கொண் டிருக்கின்றது. இன்னும் பெங்களூருக்கு வடபாகத்தில் சிரேஷ்டமாகியும் பரிசுத்தமாகியுமிருக்கிற க்ஷீரநதியென்கிற பாலாறு உற்பத்தியாகிற நந்திமலை பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. மேற்கு பாகத்தில் சிரேஷ்டமாகிய * சிவகங்கை என்னுஞ் சிறந்த ஸ்தலமும் சொலித்துக்கொண்டிருக்கிறதென்று சொன்னான்.) ஆ-ஐ.

உடுபியைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான்: இந்த ரஜிதபீட்டபுரமென்பது அதிகமான காந்தியை வகித்துக்கொண்டிருக்கிறது, இந்தஸ்தலத்தில் வாசஞ் செய்து சுபகருமங்களையுடைய விவேகியானவன் பரமயோகியாய்ப் பிரகாசிப்பான்; இன்னும் இந்தஸ்தலத்தில் பிராமணோத்தமர்களால் அமிர்தமென்கிற மோக்ஷத்தில் அபேட்சையால் மிகவும் சேவிக்கப்பட்டவனும், பூமியில் பிரசித்தமான கீர்த்தியையுடையவனும் ஆகிறபடியால் ஆனந்ததீர்த்தனென்கிற நாமதேயத்தை உண்மையாகச் செய்விக்கிற ஒருமுனிவரன் ० ஆவிர்ப்பவித்தான் என்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, மேற்படிமுனிவரன் நீசொல்லியபடி இருக்கலாம். ஆனாலும் இவருடைய மதத்தை அனுசரிக்கிறவர்களும், இப்போதிருக்கிறவர்களுமாகிய பிராமணுளுடைய விரோதமான அனேக ஆசாரங்களைக்கேள் என்னவெனில் எப்போதுஞ் சந்தியாவந்தனங் கிரமமாகச் செய்யாதவர்களுஞ், சாஸ்திரங்களை அப்பியாசஞ் செய்பவர்களு

---

* சிவகங்கைபுராணம் வல்லூர் தேவராஜபிள்ளை இயற்றியிருக்கிறார் ஆ ஐ.

० ஆவிர்ப்பவித்தல்-என்பது தோன்றுதல்.

மாகிய மாத்துவப்பிராமணுள் சூரியன் உதித்து மத்தியானகாலத்தில் காலேயில் செய்யவேண்டிய சந்தியாவந்தனத்தைச் செய்வார்கள்; இப்படியிருந்தும் பூமியில் தன்னியனுகியும், இதர மதஸ்தனுகியும் இராகின்ற பிராமணனை பூஜிதைசெய்வதில்லை; விகிதகருமங்களைத்தியாகஞ்செய்வதில் பயப்படுகிறதில்லை; இன்னு மிவர்களுக்குக்குருவாகிய இந்த மடாதிபதியான சன்னியாசியும் உலகத்தில் மிகவுஞ் சிரேஷ்டமான காயத்திரியையும், எக்ஞோபவீதத்தையுஞ், சிகையையும், பரிகாரஞ்செய்தவனுய் வைராக்கிய முள்ளவனைப்போலே சன்னியாசி ஆசிரமத்தை யடைந்து பல்லக்கு ஏறினவனுகப் பயமில்லாமல் தேசாந்திரங்களில் திரவியங்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்காக சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கிறுன். கலியுகத்தினுடைய மகிமையால் வித்துவான்களுக்கும் மிகவும் இந்த அஞ்ஞானம் உண்டாயிருக்கிறது. என்னவெனில் அக்கிரமமான எந்த சன்னியாசிகளேயாவது தெரிசித்தால் * சசேலஸ்நானஞ் செய்யவேண்டியதோ எந்த சன்னியாசியினுடைய அன்னத்தைப்புசித்தால் ০ சாந்திராயணம்என்கிற பிராயச்சித்தஞ் சொல்லப்பட்டிருக்கிறதோ, எந்தவாகன மேறிக்கொண்டு வரும்படியாகிய சன்னியாசியைக்கண்டால் பரலோக ஆனிவருமோ அப்படிப்பட்ட சன்னியாசியினுடைய அன்னத்தை இக்காலத்தில் சகலபரங்களேயும் அரிக்கிறதென்று வித்துவான்களானவர்களும் பக்தியுடனே கிரகிப்பார்கள். இந்த கலிகாலத்திலிருக்கிற இராஜாக்கள் கிரகஸ்தரிடத்தில் துவேஷத்தையுஞ், சன்னியாசிகளிடத்தில் பட்சத்தையும், வைத்திருக்கின்றதைப்பார். எப்படியெனில் கிரகஸ்தர்களானவர்கள் உதரபூர்த்திக்காக பிட்சையையாசிப்பார்கள். பாதங்களைப் பிரயாணங்களால் வருத்தப்படுத்துவார்கள். கிழிந்துபோன பழையவஸ்திரங்களைத் தரித்திருப்பார்கள். சிதைந்துபோன வீடுகளில் வாசஞ்செய்வார்கள். சன்னியாசிகளானவர்கள் பிரகாசிக்கின்ற சொகுசான வஸ்திரங்களை அணிவார்கள். சிரேஷ்டமாகிய பல்லக்கிலேறித் திரிவார்கள். கிரகஸ்தர்களுக்கு

---

* சசேலஸ்நானம் - என்பது அணிந்திருக்கும் ஆடையுடன் முழுகுதல்.

০ சாந்திராயணம்-என்பது வளர்பிறைப் பிரதமைமுதல் நியமத்துடனே ஒவ்வொரு கவளமாக அதிகரித்து தேய்பிறைப் பிரதமைமுதல் ஒவ்வொரு கவளங் குறைத்துவிடுவது.

அன்னதானஞ்செய்வார்கள். நல்ல கல்லுகளால் கட்டியமடத்தில் வாசஞ்செய்வார்கள். ஆனபடியால் இது மிகவும் அக்கிரமமல்லவா, இன்னு மிந்த மத்துவமதத்தாராகிய பிராமணர்கள் வேதங்களை அப்பியாசஞ்செய்யாமல் சாஸ்திர தர்க்கங்களைப் பாடஞ்செய்துக்கொண்டிருக்கிறபடியால் பிரபுக்களை அனுசரிக்காமல் அவர்கள் சேவகாளை அனுசரிக்கிறவர்களுக்கு ஒப்பாக விருக்கின்ருர்கள். இன்னும் ஏகாதசிநாளில் காலை மாலை என்கிற இரண்டு காலங்களிலும் ஓமத்தை தியாகஞ்செய்வதனுல் இவாளுடைய அக்கினி லௌகிகமாகவாகிறது. ஆகையால் இவர்கள் செய்யும் யாகங்கள் (* பிஷ்டபசுவை யங்கீகரிக்கிறதும் நிஷ்பிரயோசனமான இமிசையில்லாததும் ஆகிறபடியால்) உத்தமமானதே யாகுமென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் என்ன கிருசானுவே விஷ்ணுபக்தியுள்ள இந்தப் பிராமணுளையுந் தூஷிக்கிருய். மத்துவ மதத்திலிருக்கிற இந்தப் பிராமணுளுடைய ரமணீயமான பக்தி பரிசுத்தமானதல்லவா, எப்படியெனில் இந்த மாத்துவாளில் பாலர்முதல் விருத்தர்பரியந்தம் அரிதினமாகிய ஏகாதசியில் உபவாசவிரதமென்கிறதுந் தடையில்லாமல் எப்போதும் நாராயணனுடைய ஆராதனையும் பாகவதரிடத்தில் மிகுந்த பக்தியுஞ் சாஸ்திரத்தினிடத்திலுங் குருக்கள் தினங்களிலுந் திடமான சிரத்தையும் மிகவுஞ் சிறப்பாக விருக்கின்றது ஆகையால் இவர்களிடத்தில் பாபஞ் சேருமோ இன்னும் இவர்களுக்குக் குருக்களாகிய சன்னியாசிகளுடைய நல்ல ஆசாரங்களுந் தோஷங்களைப் பரிகாரஞ்செய்வதா யிருக்கின்றது எப்படியெனில் இந்த எதிசிரேஷ்டரானவர்கள் விஷ்ணுவினுடைய அபிஷேகங்களாலும் நல்லபுராணங்களை மனனஞ்செய்வதினுலும் மோகத்தை அபகரிக்கிற புண்ணியதீர்த்த ஸ்நானங்களாலுஞ் சமுசார கஷ்டங்களை நீக்குகிற பிரமவித்தியா விசாரணையினுலுங் காலத்தையெல்லாம் க்ஷணமாகக் கழித்துக்கொண்டுவருகிருர்கள் இந்தச் சன்னியாசிகளின்மேல் உன்னுல் எந்த தூஷணை உபந்நியாசஞ் செய்யப்பட்டதோ அதுவும் உன்போலொத்தவர்களுக்கு ருசியாயிருக்குமேயன்றி குணத்தை கிரகிக்கிறவர்களுக்கு ருசிக்கமாட்டாது எப்படியென்ருல் சன்னியாசியானவன் அந்தந்ததேசங்களிலிருக்கிற சிஷ்

* பிஷ்டபசுவை-என்பது மாவினுல் செய்யப்பட்ட ஆடுமுதலானவைகள்.

யகூட்டங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வதற்காக தன் குரு ஆக்கினையினால் சஞ்சாரத்துக்கு யோக்கியமான வாகனத்தை ஏறினால் அதனாலே என்ன தோஷம் பக்தியுள்ள ஜனங்களால் கொடுக்கப்பட்ட திரவியத்தையெல்லாம் நாராயணனுடைய பூஜைக்கு ஆதீனமாகச் செய்துவிட்டு தான் புசிக்காமலிருந்தால் அதனால் இந்த சன்னியாசிக்கு நிந்தைசம்பவிக்குமா இன்னுந் தன்னுடைய சொத்தென்று அபிமானமில்லாத எதியினால் சுவாமிக்கு நிவேதனஞ் செய்யப்பட்ட அன்னங்களை எப்படி எதிஅன்னங்களென்று சொல்லப்படும் அப்படிப்பட்ட அன்னத்தைப் புசித்தவர்களுக்குத் தோஷந்தான் எப்படி வரும் இன்னும் இதர மதங்களிலிருக்கிற மடாதிபதிகளான எதிகளுடைய கிரமங்களும் இந்தப்படியேயிருக்குமென்று நீ தெரிந்துக்கொள் இன்னுஞ் சில பிராமணர்கள் பிறந்ததுமுதல் சோம்பல்தன்மையால் காலவிதிப்படி சந்தியாவந்தனஞ் செய்யாமலிருந்தால் அதனாலே என்னதான் தோஷமென்றுசொல்லலாம் வேத ஆசாரத்தை நடக்காமலிருப்பதே தேகிகளுக்கு தோஷமாகும் ஆனாலும் அசக்தியாக ஒவ்வொருகாலத்தில் அனுஷ்டிக்காமலிருந்தால் தோஷமில்லையல்லவா இன்னுந் தகப்பன் பாட்டன் முதலானவர்களுடைய மார்க்கத்தை அனுசரிக்கிறவன் தூஷணைக்குப் பாத்தியன் அல்லவென்று தருமசாஸ்திரந் தெரிந்தவர்களால் இந்த பிராமணனிடத்தில் தோஷஞ் சொல்லுவதற்கு அசக்கியமல்லவாவென்று சொன்னான்.

உடுபியைச் சூழ்ந்திருக்குந்
தேசங்களைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் எதிரிலிருக்கும் எல்லாத் தேசங்களைப் பார்த்துச் சொல்லுகிறான் ஓ கிருசானுவே இந்த ஒவ்வொரு தேசங்களிலும் புருடரும் ஸ்திரீகளும் பாஷை வேஷம் ஆசாரம் முதலானவைகளாலும் ஆபரணங்களாலும் இலட்சணமாகக் காணப்படுகிறார்கள் நீ பாரென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் சொல்லுகிறான் ஓ சினேகிதனாகிய விஸ்வாவசுவே நீ பாரென்று சொல்லாதே வானரங்களுக்குச் சமானமாகிய சனங்களுள்ள இந்தத் தேசங்களைச்

சீக்கிரமாகத் தாண்டிப்போகவேண்டியது ஏனென்றால் இந்தத் தேசத்திலிருக்கிற சனங்கள் (சந்திரிகையையும் அந்தகாரத்தையுஞ் சமமென்றுஞ், சம்பங்கிச்செடியும் முள்ளுச்செடியுஞ் சமமென்றும், ஆதிசேஷனும் நீர்ப்பாம்புஞ் சமமென்றுங், கமலமும் ஊமத்தைப் புட்பமுஞ் சமமென்றுங், குயிலுங் காக்கையுஞ் சமமென்றும், பால்சமுத்திரமுங் கிணறுஞ் சமமென்றும் நினைத்தால் எப்படியோ அப்படி) பண்டிதர்களையும் பாமரர்களையுஞ் சமமாகத் தெரிந்துக்கொள்ளும்படியான பிறவி மூடர்களாக விருக்கின்றார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் அதை யங்கீகரித்து விமானத்தை நடத்தினான்.

திருவேங்கடாஜலத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் போய் சந்தோஷத்துடனே கரங்களைக் கூப்பினவனாக விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான் என்னவெனில் ஓ கிருசானுவே மிகவும் பரிமளிக்காநின்ற தமாலவிருட்சங்களும் அபிவிருத்தியாயிருக்கிற மதுரமான மரங்களுந் திலகவிருட்சங்கள் முதலாகிய ரமணீயமான அனேக விருட்சஜாதிகளுள்ளதும் ஆசிரயித்தவர்களை சம்ரட்சணைசெய்வதும் இலட்சுமிபதியான விஷ்ணுவினுடைய விலாசங்களுக்கு அனுகூலமானதுமாகிய இந்த சேஷாசலத்தை சேவித்துக்கொள் இன்னும் முனிவர்களானவர்களும் இந்தத் திருமலையில் சர்ப்பங்களிலும் விருட்சங்களிலும், பட்சிகளிலும், புலிகளிலுஞ், சலங்களிலுங், கல்லுகளிலுங், கொடிகளிலுங், குகைகளிலும், பிரவாகங்களிலுந் தங்களுக்குச் சனனமாகவேண்டியதென்று எப்போதும் பிரார்த்திப்பார்கள். இந்த மலையினுடைய பாக்கியமென்பது மிகவும் அதிகமானது ஏனெனில் அகண்டமான வைபவத்துடைய நாராயணன் வைகுண்டத்திலும் ஆசையில்லாதவனா யிந்தப் பர்வதத்தில் ஆச்சரியமான நடத்தைகளுள்ளவனாயிருந்து இலட்சுமிதேவியுடனே விலாசமாக விருக்கிறதினாலேதான் இன்னும் அனேகமான வேதவசனங்களுடைய சாரமாயிருக்கிறவனும் உலகங்களுடைய சம்ரட்சணையில் முக்கியமாகிய தீரனானவனுந் திருவேங்கடத்தில் விளையாட்டுகளையுடையவனும் மார்பில் இலட்சுமிதேவியைத் தரித்தவனும்

பக்தர்களுடைய புத்திக்குச் சமீபமாயிருக்கிறவனுஞ் சகல இஷ்டார்த்தங்களையுங் கொடுக்கிறவனும் விகாரங்களில்லாதவனும் எதுவீரனுமாகிய பகவானிடத்தில் எப்போதுந் தியானமிருக்கவேணுமென்று சொல்லி சந்தோஷத்துடனே தியானஞ் செய்துக்கொண்டிருந்தான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓவிஸ்வாவசுவே இதர விஷயங்களில் * வியாசங்கமில்லாத உன்னுடைய மனதுமாத்திரம் இந்த சுவாமியினிடத்தில் திடமாகச் சேருமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனாகிய கிருசானுவே உன்னால் சொல்லப்பட்டது சத்தியந்தான் எப்படியென்றால் எப்போதும் பத்தினியை மார்பில் தரித்தவனும் இதைவிட ஆனந்தத்தை அடியார்களுக்கு அருள்செய்பவனுஞ் சேஷாசலத்தைப் பொருந்தியிருக்கிறவனுமாகிய சுவாமி எந்த ரசிகனுடைய மனதிற்றான் பிரவேசிக்கமாட்டானென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே மிகவுந் திரவியத்தில் ஆசையுள்ள இந்த சுவாமியை நீயேன் சிறப்புச் செய்கிறாய் ஏனெனில் இஷ்டார்த்தங்களாகவேண்டுமென்றாலும் பீடைகள் பரிகாரமாகவேண்டுமென்றாலும் இந்த சுவாமியைக்குறித்து சனங்கள் பக்தியுடனே பிரார்த்தனைசெய்து எந்தப்பொருளைக் கொடுக்கவேண்டுமென்று நிஷ்கரிசை செய்வார்களோ அவர்களுக்கு அந்தப்பலன் ஆனபின்பு அவர்கள் அந்தப் பொருளைக் கொடுக்காமலிருந்தால் இந்த சுவாமி மறுபடியும் அவர்களுக்குத் தானே ஒரு பயத்தை யுண்டாக்கி தனக்கிருக்கிற ○ இரணியஅர்த்தா என்ற நாமதேயத்துக்குச் சரியாக வட்டியுடனே மேற்படி பொருளை வாங்கிக்கொள்ளுகிறார் இன்னும் இந்த சுவாமி ஆரண்ணிய பூமியில் எவனோ ஒருத்தனைப் பார்த்து அப்பாவென்றழைத்து மிகவுந் தாகமுள்ளவனாகவிருக்கிறேன் கொஞ்சஞ் சலத்தைக் கொடுத்துக் காப்பாற்றென்று யாசித்தார் இந்தப் பருவதத்தில் எவனோ ஒருத்தன் பெரிய ஏரியைத் தோண்டிக்கொண்டிருக்கும்போது அந்த மண்ணைச் சுமந்தார் எவனோ ஒருத்தன் மண்ணால் செய்யப்பட்ட புஷ்பங்களைச் சமர்ப்பித்தால் அந்த புஷ்பங்களை

---

* வியாசங்கம்-என்பது வேலை முதலியது.

○ இரணிய அர்த்தா-என்பது பொன்னபகரிக்கிறவன்.

யே தரித்துக்கொண்டார் இப்பேர்ப்பட்ட இந்த சுவாமியும் வேதங்களையுணர்ந்த பெரியோர்களால் உலகங்களுக்கெல்லாம் இராஜனென்று ஸ்தோத்திரமுந் தியானமுஞ்செய்யப்படுகிருனென்ருன்

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நற்குணங்களையுடைய வேங்கடாசலபதியினிடத்திலும் ஏன் * அசூயையுள்ளவனுகவிருக்கிருய் ஏனெனில் பரமபுருஷனுகியுஞ் சகல ஜந்துகளுக்கும் நியமிக்கப்பட்டவனுகியுங் கிருபைக்குச் சமுத்திரமாகியுமிருக்கிற வேங்கடாசலபதி இந்த சேஷகிரியில் விளையாடிக்கொண்டிருக்கிறவராய் தன்னுடைய பரத்துவத்தை சுலபமானதென்று பிரகாசஞ் செய்விக்கிறதற்காக சகலமான உலகத்திலேயும் ஆச்சரியமான வைபவங்களால் எந்தெந்த மனுஷர்களுடைய லீலைகளைத்தான் செய்யவில்லை இன்னும் அஞ்சனகிரிக்கு அதிபதியாகிய இந்த சுவாமி அன்பர்களிடத்தில் ஏதாவது சுவல்பத்தைத்தான் வாங்கிக்கொண்டு அவர்களுடைய சகலமான இஷ்டார்த்தங்களையும் பூர்த்திசெய்து கிருஷ்ணுவதாரத்தில் குசேலமுனிக்குச் சம்பத்துகளைக் கொடுத்த ரீதியைப் பிரகாசஞ்செய்துவைக்கிருர் இன்னும் இந்த சுவாமிக்கு இலட்சுமிதேவி பிரியமுள்ள பாரியாயிருக்கிருள் ο சகஸ்ரவசுவானவன் வாசஸ்தலமாக விருக்கிருன் ? குவலயபதியானவன் மைத்துனனுக விருக்கின்ருன் ரத்னுகரனுகிய சமுத்திரன் மாமனுராக விருக்கின்ருன். தான் உலகங்களுக் கெல்லாம் அதிபதியாகி பூரணனுக விருக்கிருர். இப்படி யிருந்தாலும் பொருளை அபகரிக்கிறதென்பது தன்னை சேவிக்கிற சனங்களுக்கு மிகவும் அனுக்கிரகஞ் செய்வதற்கேயன்றி வேறில்லை. இன்னுஞ் சகலமுந் தள்ளும்படியான குணங்களல்லாமலிருக்கிற அனந்தமாகிய கலியாணகுணங்களுக்கு வாஸஸ்தலமாக விருக்கின்றவரும், உலகத்துக்கு ஆதிகாரண மானவரும் ஸ்ரீநிவாசனென்கிற பெயருடையவருமாகிய பரப்பிரம்மத்தினுடைய குணங்களென்கிற சமுத்திரத்தில் அமிர்த பிந்துக்களை

---

* அசூசை-என்பது குணத்தை தோஷமாகச் சொல்லுந்தன்மை.

ο சகஸ்ரவசு-என்பது ஆயிரமுதலான தனம் உள்ளவனென்றும் ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனென்றும் ஆகும்.

? குவலயபதி-என்பது பூமண்டலத்துக் கதிபதியென்றும் குவலய புஷ்பங்களுக்கு அதிபதியாகிய சந்திரனென்றும் ஆகும்.

எண்ணுவதற்கு பிரகஸ்பதி முதலானவர்களுக்கும் புத்தி சாமர்த்தியம் இல்லாமலிருக்கிறது. எப்படியென்றால் கம்பீரத்துக்கு முக்கிய ஆதாரமுள்ளவரும், மகிமைக்கு வாஸஸ்தலமாக விருப்பவரும் காந்தியென்னுங் கால்வாய்களுக்கு ஏரியைப்போலிருப்பவருஞ், சுபங்களென்கிற கமலங்களுக்கு உதயகாலத்தைப்போலிருப்பவரும், அபாரமாகிய கிருபையென்கிற பிரவாகத்துக்குச் சமுத்திரத்தைப்போலிருப்பவருஞ், சாதுரியலட்சுமி உதாரலட்சுமிகளுக்கு விலாசமாகிய கிரகத்தைப்போ லிருப்பவருமாகிய வேங்கடேசனென்கிற சுவாமியி னிடத்திலிருக்கிற நற்குணங்களுடைய கூட்டங்களை எண்ணுவதற்கு எந்த ஞானவானாலேதான் சக்கியமாகும். இன்னுஞ் சுவாமியினுடைய சகலமான குணங்களுடைய சமுகம் வேதங்களால் செவ்வையாய் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த சுவாமியினுடைய பரத்துவமென்பது பிரத்தியக்ஷமாக விருந்தாலுந் தெரிவதற்கு அசக்கியமென்கிற ஒரு சந்தேகம் உண்டாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் இந்தமலையினுடைய தன்னியத்தன்மை மிகவும் அதிகமானதல்லவா? எப்படியெனில் பிரசண்டராகியும் உலகத்துக்கு கண்டகராகியும்இருக்கிற இராட்சசர்களைக் கண்டிக்கிறதில் மிகவும் பண்டிதனானவனுஞ், சூரியமண்டலத்தில் வாசஞ்செய்பவனும், பாண்டவர்களிடத்தில் பிரியமுள்ளவனுமாகிய சுவாமி எவனோ அப்பேர்ப்பட்ட மலர்ந்த வெண்டாமரையைப்போலிருக்கிற நேத்திரங்களையுடைய சுவாமி அகண்டமான சகலகிரமங்கள் உள்ளவனாக சேஷாசலத்தினுடைய மத்திய பாகத்துக்கு ஆபரணத்தைப்போலப் பிரகாசிக்கிறான். இந்த சேஷாசலத்துக்குச் சிரோன்மணியைப்போலிருக்கிற சக்ராயுதத்தைத்தரித்த வேங்கடேசப்பெருமாளிடத்தில் இதரதேவர்களுக்குச் சாதாரணமல்லாத தாதுருத்துவத்தினுடைய சாதுரியத்தன்மை மிகவும் ரம்மியமாக விருக்கின்றது. நீ பார். எப்படியெனில் செவிடர்கள் ஊமைகளால் பாடப்பட்ட பாடல்களைக் கேழ்ப்பார்கள். கரங்களில்லாதவர்கள் அந்தப்பாடல்களை மிகவும் அபேட்சையுள்ளவர்களாக யெழுதிக்கொள்ளுவார்கள். குருடர்கள் அவைகளைச் சிறப்புடன் பார்த்துப்படிப்பார்கள். முடவர்கள் வேகமாகப் பருவதசிகரத்திலேறுவார்கள். மலடிகள் சிசுக்களை சுமந்துகொண்டு மிகவும் ஆலசியமுள்ளவர்களாய் மெதுவாய் நடப்பார்கள். இன்னும் அந்தப்பருவதத்தை நான்கு பக்கங்களிலும்பார்த்துச் சிறப்பாகச் சொல்லுகிறான். சகலபருவதங்களுக்கும் உன்னதமாயிருப்பதும்,

பிரசித்தமான குகைகளுள்ளதும், மிகவுங்குளிர்ச்சியுள்ளதும், பிரகாசமான மூங்கல்புதருள்ளதுந், திலகவிருட்சங்களுள்ளதும், மலைச்சாரலில் ஸ்பூர்த்திவிருட்சங்களுள்ளதுமாகிய இந்தப் பருவதத்தை வானரக்கூட்டங்கள் (ஜானகிபதியான ராமனைப்போலே) தங்களை சம்ரட்சணைசெய்கிறதாக நம்பிக்கொண்டு சேவகாளுடைய ரீதிகளை அனுசரித்திருக்கின்றன. இன்னும் பிரகாசமான வடவிருட்சங்களும் சுற்றுப்பக்கங்களில் சிறியகுன்றுகளுமுடைத்தாகிய இந்த சேஷாசலத்தில் ஒருமகத்தாகிய ஆச்சரியங் காணப்படுகின்றது. அதென்னவெனில் மேற்படி கிரியிலிருக்கிற நீலமேகந் தன்னுடையமார்பில் எக்காலத்துஞ் சஞ்சலமில்லாதிருக்கிற மின்னலைத்தரித்துக்கொண்டிருக்கிறது, அந்தமின்னலுந் தன்னுடைய மார்பில் * பயோதரத்தைத் தரித்துக்கொண் டிருக்கிறதென்று சொன்னான்.

ஆரண்ணியத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை தெற்காகநடத்தி விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிறான். ஓ! கிருசானுவே இந்த ஆரண்ணியத்தின் சிறப்பைப்பார், என்னவெனில், எதிரில் எங்கேயுங் கனமானவனங்களும் அந்தவனங்களில் மகா பருவதங்களும் அதுகளில் வீடுகளைப்போலிருக்கிற குகைகளும் அதுகளில் விளையாடிக்கொண் டிருக்கிற சிங்கங்களும் அதுகளுடைய தடங்கலில்லாததும் மதகஜங்களுக்குப் பயத்தை யுண்டாக்குகிறதுமாகிய தொனிகளும் இருக்கின்றனவென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே நேத்திரங்களுக்குக் கோரமாயிருக்கிறதும் மனுஷர்களைப் பட்சிக்கிற துஷ்ட மிருகங்களுள்ளதுமாகிய இந்தவனங்களை என் சிறப்பிக்கிறாய். எப்படியென்றால் இந்த ஆரண்ணியத்தில் மிகவுங் கல்லுகளும் பெருத்தபாம்புகளுந் திருடர்களும் முள்ளுகளும் உக்கிரமான புலிகளுந் தாவாக்கினியை உண்டாக்கிற மூங்கல்புதர்களும் விசேஷமாக விருக்கிறபடியால் இந்த ஆரண்ணியத்தைப் பார்த்தால் மனது மிகவும் பயத்தை யடைகின்றதென்றான்.

---

* பயோதரம் என்பது மேகமென்றும்; குசங்களென்றும் ஆகும்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! கிருசானுவே செவ்வையாக ஆலோசனைசெய்து இந்த ஆரண்ணியத்திலிருக்கிற குணங்களை நீ கிரகித்துக்கொள்; இந்த ஆரண்ணியங்களில் இராஜர்களாலே புசிக்கத்தக்க பழங்களும் வருத்தமில்லாமல் கிரகிக்கத்தக்கதாகும், இராஜஸ்திரீகளால் கோரும்படியான புஷ்பங்களும் பிரயத்தினமில்லாமல் அகப்படும். சூரிய கிரணங்களுடைய வெப்பமில்லா திருக்கும்படியாகிய சிலாக்கிரகங்களுஞ் சுலபமாகவிருக்கின்றது. ஆகையால் இந்த ஆரண்ணியங்களைப் பொருந்தியிருக்கிற ஜனங்களுடைய பாக்கியஞ் சொல்லுவதற்கு அசக்கியமாகவிருக்கின்றது. இன்னும் இந்த ஆரண்ணியங்களில் வாசஞ் செய்கிற வேடர்கள் குகைகளில் விளையாடிக்கொண்டிருக்கிற சிங்கங்களுடைய அஸ்தங்களால் பேதிக்கப்பட்ட மதயானைகளுடைய கும்பஸ்தலத்திலிருந்தும் வெளிப்பட்ட முத்துக்களுடைய மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட ஸ்திரீகளுடனே ரதிவிலாசங்கள் செய்துக்கொண்டு மிகவுஞ் சுகத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்களென்று சொன்னன்.

கடிகாசலத்தைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் எதிரில் பார்த்துச் சொல்லுகிறான். என்னவெனில், இந்த கடிகாசலங் கண்டதுக்குமேல் சிங்கரூபமான சுவாமியினுடைய கோரைப்பற்களுடைய காந்தியென்கிற சந்திரிகையால் ஸ்படிக மலையைப்போலே நேத்திரங்களுக்கு ஆனந்தத்தையுண்டாக்குகிறதென்று பக்தி அதிகரித்தவனாகச் சொல்லுகிறான். துவஜத்தில் கருடனையுள்ளவனும், இலட்சுமியுடனே விலாசமாக விருப்பவனும், நரகங்களுடைய தரிசனத்துக்கு விக்கினமானவனுமாகிய நரசிங்கசுவாமிக்கு நமஸ்காரம் இன்னும் எப்போதுமிருக்கிற சங்குசக்கரமுதலான லட்சணங்களுள்ளவனுந் தேவர்கள் கூட்டத்திலேலே பூசிக்கப்பட்ட பாதங்களையுடையவனுஞ் சத்துருசங்காரத்தில் சமர்த்தனுமாகிய நரசிங்கசுவாமிக்கு மங்களம் இன்னும் சம்பாசுரனுடைய கருவத்தை அரித்த தேவேந்திரனுக்கு க்ஷேமஞ்செய்வதற்காக தேகத்தை எடுத்தவனும் ருத்திரனால் ஸ்துதிசெய்யப்

பட்டவனும் ஸ்தம்பத்துக்கு சிசுவானவனுமாகிய சுவாமிக்கு மங்களமென்ருன்

இதைக்கேட்ட கிருசானு வென்பவன் ஓ! விஸ்வாவசுவே குரோதமயமாகவிருக்கிற நரசிங்கசுவாமியை என் ஸ்தோத்திரஞ் செய்கிருய். ஏனெனில் ஒருத்தனுகிய பிரகலாதனனைச் சந்தோஷப்படுத்துவதற்காக சகலமான உலகங்களுக்கும் மிகவும் பயங்கரமான சிங்கசம்பந்தமான ரூபத்தைவகித்த அந்தசுவாமியை ஸ்தோத்திரஞ்செய்வதற்கு என்னமாய் பாத்தியப்பட்டாயென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ!கிருசானுவே இந்தப்படிக்கு நீசொல்லாதே நாராயணனுனவன் பாபகிருத்தியங்களில் மிகவுந் துஷ்டனுன இரணியனுலே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த மூன்று உலகங்களுக்குந் துன்பத்தை நாசஞ்செய்வதற்காகவே பிரகலாதனனுடைய துன்பத்தைப் பரிவாரஞ் செய்கிறதென்கிற நிபத்தினுலே ஸ்தம்பத்திலிருந்து சம்பிரமமாக வுதித்தான். இன்னுஞ் சுவாமி நரன் சிங்கம் என்கிற இரண்டுஞ்சேர்ந்த ஒருருவத்தையடைந்து நித்தியனுகவிருந்தும் ஸ்தாவரமாகிய ஸ்தம்பத்திலே ஆவிர்ப்பவித்தனுய் வேதங்களில் சொல்லப்பட்ட தன்னுடைய விசித்திரமாகிய சக்தியைப் பிரகாசஞ் செய்துவைத்தான். இன்னும் மனுஷனுனவன் தன் சரீரத்தை எதார்த்தமாக (கடிகாசலம்) என்ருல் ஒருகடிகையில் அழிந்துப்போகுமென்பதைத் தெரிந்துக்கொண்டு பக்தியுடனே இந்த கடிகாசலத்திலேறி நரசிங்கசுவாமியினுடைய திருவடிகளைத் தெரிசனைசெய்தால் ஒருகாலத்திலேயும் நரகத்தில் விழப்போவதில்லை என்றுசொன்னுன்.

திருவெவ்வுளூரைக்குறித்தும்.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிருன். எப்படியெனில் இது வீக்ஷாரண்ணியமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த ஆரண்ணியத்தில் (ஹிருத்தாபநாசினி) யென்ருல் இருதயத்தில் இருக்கிற தாபங்களை நாசஞ் செய்வதென்கிற பேருள்ள ஸரசு இருக்கின்றது, இந்தத் தீர்த்தக்கரையில் வீரராகவனென்று பிரசித்தமான நாமதேயமுள்ளவனும் அதிகமான ஆயுதங்களுடைய பிரகாசமுள்ளவனுமாகிய மகாவிஷ்ணு சாலிஹோத்திரமகாரிஷி

யால் பூஜிக்கப்பட்ட (குசஸ்தலி) என்றால் தர்ப்பையுள்ள க்ஷேத்திரத்தைப்பொருந்தி ஜோதியாகப் பிரகாசிக்கிறான் இந்த வீரராகவசுவாமி தன்னுடைய பேர் எப்படி * திவிரேபமாக விருக்கிறதோ அப்படியே திவிரேபமென்கிற பேருள்ள வண்டுகளுடைய நிறத்தைப்போல நிறமுள்ளதும் மிகவும் ரமணீயமானதுமாகிய சரீரத்தைத் தரித்திருக்கிறான் பூரணச் சந்திரனாலே பூஜிக்கத்தகுந்த முகமுந் தேவேந்திரனாலே பூஜிக்கப்பட்ட பாதங்களும் ஒப்பில்லாததாகப் பிரகாசிக்கின்றதென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சிநேகிதனாகிய விஸ்வாவசுவே இந்த வீரராகவ சுவாமியினுடைய ஸ்தோத்திரத்தில் உனக்கு அசங்கியமில்லையா ஏனெனில் இந்த சுவாமியிடத்திலேயுஞ் சேஷாசலநாயகனான வேங்கடேசனிடத்தி லிருக்கிறதுபோல பரதனங்களைக் கிரகிப்பது முதலாகிய தோஷங்களிருக்கிறதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே அந்த வேங்கடேசப் பெருமாளிடத்தில் என்றால் சொல்லப்பட்ட சமாதானத்தினாலேயே இங்கேயும் நீ சந்தோஷிக்கவேண்டியது இன்னும் ஓ பாமரபுத்தியை யுடையவனே வீரராகவசுவாமியினிடத்தில் எவனுடைய மனதுதான் சந்தோஷப்படமாட்டாது. ஏனெனில் தன்னுடைய இச்சையினால் உலகத்தைச் சிருஷ்டிசெய்தவனும் இலட்சுமிதேவியுடைய பாதத்திலிருக்கிற செம்பஞ்சுக்குழம்பினால் அடையாளமாகிய மார்பையுடையவனுஞ் சாட்சாத் பரமபுருஷனானவனும் ருத்திரனாலே ஸ்துதிசெய்யப்பட்டவனும் வீக்ஷாரண்ணியத்துக்கு அதிபதியானவனுமாகிய வீரராகவசுவாமி திராட்சப்பழத்துக்குச் சமானமாகிய சாயித்தியமும் புத்தியினுடைய உபசாந்தியும், ஆயுசும், ஆரோக்கியமுந், தனமுங், கீர்த்தியும், மோட்சமும் முதலானவைகளில் அபேட்சையுள்ளவர்களுக்கு முக்கியகதியாகப் பிரகாசிக்கின்றான். இன்னும் புருஷோத்தமனும் எப்போதுந் தேவர்கள் முதலானவர்களை சம்ரட்சணைசெய்கிற கனகவல்லித்தேவியினால் ஆசிரயிக்கப்பட்டவனும் பக்தஜனங்களால் சேவிக்கப்பட்டவனுமாகிய வீரராகவசுவாமி இந்த வீக்ஷாரண்ணியத்தைப் பொருந்தி தன்னை ஆசிரயித்தவர்களுக்கு யோக்கியமான ஞானவாசனையை யுண்டாக்குகிறானென்று சொன்னான்.

---

* திவிரேபம்-என்பது இரண்டு கரங்களை யுடையதாம்.

ஸ்ரீபெரும்பூதூரைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் எதிரில் பார்த்துச் சந்தோஷமாகச் சொல்லுகிருன் என்னுல் பூருவத்தில் பார்க்கப்பட்டதுஞ் சகல தோஷங்களையும் நாசஞ்செய்வதுமாகிய இந்த ஸ்ரீபெரும்பூதூர் என்னுந் தலத்தில் விசேஷ பிரகாச முள்ளவனுங் குணங்களுக்குச் சமுத்திரமானவனும் இராமாநுஜாசாரியார் என்கிற முனிவரன் ஆவிர்ப்பவித்தான். மூன்று வேதங்களுடைய முடிவென்கிற க்ஷீரசமுத்திரத்தைக் கடைந்து உண்டான அமிர்தத்தைப்போலிருக்கிற தத்துவ ஞானம் இந்த ராமாநுஜாசாரியனை முக்கியகாரண முள்ளதாய் வித்துவான்களுக்கு இப்போதும் பிரகாசமாக விருக்கின்றது இன்னுங் காமமுதலாகிய சத்துருவர்க்கத்தை நீக்கும்படியான தன்னுடைய நாமபடனத்தினுடைய மகிமையுள்ளவனும் புத்தியில் தேவர்களுக்கு ஆசாரியாகிய பிரகஸ்பதியுடனே சமான பூஜிதையுள்ளவனும் வாக்குகளுக்கு அசக்கியமான மகிமையுள்ளவனும் பூரணச்சந்திரனைப்போல முகமுடையவனும் நிர்மலமாகிய காந்தியினுல் சூரியனை அவமானஞ்செய்பவனுமாகிய இராமாநுஜனென்கிற எதிராஜன் இந்தப் பூமியிலேயும் பரலோகத்திலேயும் க்ஷேமங்களை யுண்டாக்கக்கடவது. இன்னும் எந்த எதிராஜனுடைய வசனங்கள் பரவாதியை செயிக்கிறதோ தோஷமில்லாத ஞானத்தை யுண்டாக்குகிறதோ வித்துவான்களைச் சந்தோஷிக்கச்செய்கிறதோ வியசனங்களை நீக்குகிறதோ அப்பேர்ப்பட்ட இராமாநுஜனென்கிற எதிராஜன் சிரேஷ்டமாக விருக்கிருர். இன்னும் மீமாம்ஸா சாஸ்திரத்தினுடைய விமரிசையினுல் வித்துவான்களுக்கு மிகவும் ஆனந்தத்தை யுண்டாக்குகிற இந்த லட்மண முனிவரனுடைய பிரபந்தங்கள் ஸ்ரீராமருடைய பாணங்களைப்போலே சர்வ உத்கிருஷ்டமாக விருக்கின்றது. இந்த ஸ்தலத்தில் பக்தர்கள் வித்துவான்களில் முதன்மையான இந்த எதிராஜனை பிரதிதினமும் இவ்விதமாக நமஸ்காரஞ்செய்வார்கள் எப்படியென்ருல் எந்த இராமாநுஜர் எங்களைப்போலிருக்கிற தீனர்களைக் காப்பாற்றும் இச்சையுள்ளவராய் மிகவுங் கியானத்தினுடைய மகிமையுடனே பூமியில் அவதாரஞ்செய்தாரோ அப்பேர்ப்பட்டவரும் மானிடதேகத்தைத்தரித்த ஆதிசேஷனைவருங் கலிசம்பந்தமான பாபங்களை நாசஞ்செய்பவருமாகிய இராமாநுஜனென்கிற குருவுக்கு

நமஸ்காரஞ் செய்துக்கொண் டிருக்கிறார்கள் இன்னும் * யாமுன தீர்த்தசேவையில் ஆசக்தியுள்ள இரண்டு இராமாநுஜர்கள் நரகத்தை நிவர்த்திசெய்கிறதற்காகப் பூமியில் அவதாரஞ்செய்தார்கள். அந்த இரண்டுபேரில் பூர்வீகனாகிய இராமாநுஜன் பகவத்கீதையை யுண்டாக்கினான். நூதனமாகிய இராமாநுஜன் அந்த கீதைக்கு வியாக்கியானஞ் செய்தானென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியது சத்தியந்தான் ஆனாலும் அந்த இராமாநுஜருடைய மார்க்கத்தை அனுசரிக்கிற புத்திமான்களிடத்தில் அன்னியர்களுக்கு அவமானஞ்செய்வது முதலாகிய தோஷங்கள் பிரசித்தமாக விருக்கின்றது. எப்படியென்றால் இராமாநுஜருடைய மதத்தில் பிரவேசித்த புருஷன் உத்கிருஷ்டமாகிய குணங்களால் பூரணராகியும் வித்வான்களாகியுமிருக்கிற அன்னிய மதஸ்தருடைய பந்தியில் எப்போதும் புசிக்கிறதில்லை கடைசியில் பரிசுத்தமாகவிருக்கிற அன்னத்தை அவர்கள் பார்த்தால் அதைத் தியாகஞ் செய்துவிடுவான் அதுவுமிருக்கட்டும் தன் மதஸ்தருடனுஞ் சேர்ந்து புசிக்கிறதில்லை இன்னும் பிராமணவம்சத்தில் உத்பத்தியாயிருக்கிற இவர்களுக்குச் சகலமான புருஷார்த்தங்களையுஞ் சாதனை செய்துவைக்கிறதற்கு முக்கியமாகியும் அனாதியாகியுமிருக்கிற வேதம் பிரசித்தியாக விருக்கும்போது திராவிடபாஷைமயமான பிரபந்தத்தில் சிரமத்துடன் பாராயணஞ்செய்வது யுத்தமானதல்ல விஷ்ணுவினுடைய தேககாந்திகளால் வியாபிக்கப்பட்ட க்ஷீரசமுத்திரத்தினுடைய கரையைப் பொருந்தியிருக்கிறவன்பால் வேணுமென்று இச்சையுள்ளவனாய் கோபாலகன் வீட்டுக்கு எவன்தான் ஓடுவான் இன்னும் இந்த இராமாநுஜ மதத்திலிருக்கிற சிலபேருடைய ஆசாரங்கள் வைதிகாளுக்குச் சம்மதியானதல்ல ஏனெனில் ० பஞ்ச எக்கியங்களைத் தியாகஞ்செய்பவருந் திரவிடபாஷையிலி

---

* யாமுனதீர்த்தசேவையில் ஆசக்தியுள்ள இரண்டு இராமாநுஜர்-என்பது யமுனாநதிஜலத்தில் விளையாட்டையுடையவனும் பலராமனுக்குத் தம்பியுமாகிய கிருஷ்ணனென்றும், யாமுனதீர்த்தாசாரியருடைய சேவைசெய்பவனும், இராமாநுஜனுமாகிய எதிராஜனென்றும் ஆகும்.

० பஞ்ச எக்கியங்கள் - என்பது பிதுர்தர்ப்பனம், பூதபலி, வைசுவதேவ்வோமம், வேதபாராயணம், அதிதிபூசை ஆம்.

ருக்கிற கிரந்தங்களால் மூடர்களை மோகிக்கச்செய்பவரும் யாகங்களையெல்லாம் நிந்தைசெய்பவரும் அடிக்கடி விஷ்ணுவுக்கு நமஸ்காரஞ்செய்வது கூடாதென்று நிராகரிக்கிறவருஞ் சிரார்த்தங்களை லோபஞ்செய்பவருஞ் சன்னியாசிகளையுங் கிரகஸ்தாளாகிய தங்களுக்கு வந்தனஞ்செய்வித்துக்கொள்பவர்களுஞ் சத்புருஷாளிடத்தில் துவேஷத்தையுள்ளவர்களுமாகிய சிலபேர் அயோக்கிய காரியங்களாலேயே காலத்தைக் கழிப்பார்கள். இன்னும் அரியினுடைய பூஜைகாலத்தில் மணிநாகத்தைவிட்டு யிருக்கிறவர்களும் வேதங்களால் சொல்லப்பட்டதும் பிரசித்தமாயிருக்கிற மூன்றுலகங்களுக்கும் மாதாவாகிய இலட்சுமிதேவியினுடைய * விபுத்தன்மையைக் கண்டனைசெய்பவர்களும் தங்களுடைய இராமாநுஜ கூட்டத்தில் சமய பிடிவாதத்தால் தங்களுடைய சரணதீர்த்தத்தைத் தாங்களே பானஞ்செய்பவர்களுமாகிய சிலபேர் உலகத்தையெல்லாம் முழுகிப்போகச்செய்கிறார்கள் விஷ்ணுவையுந் தோஷத்துக்குப் பாத்திரனைச் செய்கிறார்கள் இன்னும் பஞ்சமகா எக்கியங்களும் இதரமான யாகங்களும் ஏதேதுண்டோ கிரகணஞ் சங்கிரமணமுதலாகிய காலங்களில் சகலமான வித்துவான்களும் எந்தெந்தக் கருமங்களைச் செய்வார்களோ அவையெல்லாங் காமிய கருமங்களென்று தியாகஞ்செய்து மூன்றுவேதங்களுடைய மார்க்கத்தை நாசஞ்செய்கிற இந்த மதஸ்தர்களாலே போஜனமென்கிறதும் மைதுனமென்கிறதுமாகிய இரண்டுமாத்திரம் நித்தியகருமங்களாக ஆசிரயிக்கப்பட்டதேதவிர வேறில்லை இன்னும் ஆபிரமுதலாகிய பொய்யான கட்டுக்கதைகளினுடைய அலங்காரத்தால் வித்துவான்களுக்கும் மோகத்தை யுண்டாக்குகிறவர்களுங் கபடத்துக்கு வாசமாகவிருக்கப்பட்டவர்களுமாகிய இந்த துஷ்டஜனங்கள் விநயத்தினுடைய அபினயத்தாலே உலகங்களையெல்லாஞ் செயிப்பார்கள். இன்னும் எந்த இராமாநுஜீயர் கோஷ்டியில் நீதி தெரிந்தவர்களுக்குப் பூஜிதையில்லையோ யாகஞ்செய்தவர்கள் பரிகாசத்துக்குப் பாத்திரரோ நிரக்ஷரகுக்ஷியா யிருக்கிறவர்களுந் தங்கள் சமய ஆசாரிகளுமாகியவர்கள் மிகவும் பூஜிக்கப்படுவார்களோ வேதங்களுக்குப் பரியாசமுண்டாகுமோ வருணாசிரமங்களுடைய பத்ததிபங்கத்தை யடையுமோ அப்பேர்ப்பட்டதுந் துஷ்டத்தன்மையுள்ள கலியுகத்தில் மிகவும் விருத்தியடைந்திருக்கிறதுஞ் சொல்லுவதற்கு அசக்கியமானதுமாகிய இந்த கோஷ்டி

* விபுத்தன்மை-என்பது தெய்வத்தன்மை ஆம்.

க்கு ஒருநமஸ்காரம். இன்னும் எந்தயாகங்கள் முதலானவைஒரு விசையாவது செய்யாமலிருந்தால் மிகவும் பாப முண்டாகுமோ அப்பேர்ப்பட்டதும் பிரகாசமாய் வேதத்தில் சொல்லப்பட்டது மாகியயாகாதிகளை தியாகஞ்செய்து தங்கள் சமயத்தில் கற்பிக்கப் பட்ட கருமங்களையே இவர்கள் செய்வார்களென்கிறதும் இந்தப் பாபிஷ்டியாகிய கலியுகத்தினுடைய ஒரு விலாசமாக விருக்கின் றது. இன்னும் இந்தமதஸ்தர்கள் நடனனுகிய சிவனுடைய சடை யிலிருந்துவந்த பிரவாகமென்று கங்கையில் ஸ்நானஞ் செய்கிறதி ல்லை, உப்புரசமுண்டான குட்டையென்று ஸமுத்திரத்தில் ஸ்நா னஞ்செய்கிறதில்லை. பசுவின் மலத்தினுடைய சாரத்தினலானதெ ன்று பஞ்சகவியத்தை பானஞ்செய்கிறதில்லை. இப்பேர்ப்பட்ட இவர்களுடைய தோஷங்களை எண்ணுவதற்கு எவன் சமர்த்துள் ளவனுவானென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் என்னடா கிருசானு வே! இலேசமாவது களங்கமில்லாதவரும், இராமாநுஜருடைய தரிசனத்தால் சிரேஷ்டர்களாகியுமிருக்கிற இந்தப் பெரியோர்க ளிடத்திலுந் தோஷஞ்சொல்லுவதற்கு ஏன் பிரயத்தினஞ் செய்கி றாய்: அல்லது உன்னைப்போலிருக்கிற அவிவேக ஜனங்களுக்கு மரியாதைதான் ஏனிருக்கும் எப்படியெனில், சர்வக்ஞனுகிய சிவ னுடையகண்டத்தில் துஷ்டமாகிய ஆலகால விஷத்தைப்போலே தூர்ச்சனர்கள் பெரியோர்களிடத்தில் மலினத்தை ஆரோபணைசெ ய்வார்கள். இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய மிகவும்பவித்திரமான ஆசாரத்தைப்பார். எப்படியெனில், இவர்கள் உச்சிஷ்டங்களைத் தூரத்திற்றனே பரிகரிப்பார்கள். துஷ்டர்களுடைய சகவாசத் தைத் தியாகஞ்செய்வார்கள்; பிராணங்களுக்கு ஆபத்துவந்தா லும் பந்துக்களல்லாதவர்களுடைய வீடுகளில் ஜலத்தையும் பான ஞ்செய்கிறதில்லை காமியகருமங்களை ஆசிரயிக்கிறதில்லை பகவானு டைய கயிங்கிரியத்திலேயே யிருப்பார்களாகையா லிந்த ஸ்ரீவைஷ் ணவர்களுடையகிரமஞ் சத்துவகுணமுள்ளவர்களால் மிகவுஞ்சிற ப்புச்செய்யத்தக்கதாக விருக்கின்றது; இன்னும் நெற்றியில் பரிசு த்தமான ஊர்த்துவபுண்டரதிலகமுங் கண்டத்தில் பத்மாக்ஷங்களு டையமாலையும், புஜங்களில் திவ்வியமாகிய சங்கு சக்கரங்களையு டைய முத்திரைகளும் வாக்கில் விஷ்ணுவையே முக்கியமாகத் துதித்துக்கொண்டிராநின்ற வசனங்களும், உத்கிருஷ்டமாக விரு

க்கின்றது. ஆகையால் பாபங்களைப் பரிகாரஞ் செய்பவர்களும், விஷ்ணுபக்தியால் பூரணமான இருதயங்களுள்ளவர்களுமாகிய இவர்களை த்தரிசனஞ்செய்தால் மோக்ஷம்உண்டாகும். இவர்களிடத்தில் நீதோஷங்களை ஆரோபணைச்செய்வது பரியாசத்துக்குப்பாத்திரமாக விருக்கின்றது. எப்படியெனில் இந்த இராமாநுஜ மதஸ்தர்கள் இஷ்டர்களாகிய பந்துஜனங்கள்தவிர அன்னியர்கள்பார்க்காமலே அன்னத்தைப் புசிக்கிறார்களென்பது தோஷமோ? அல்லது பாபங்களை நீக்குகிறகுணமோ என்பதை குணதோஷங்கள்தெரிந்த பெரியோர்களைக்கேள்: இன்னும் பந்துக்களல்லாதவர்களால் பார்க்கப்பட்ட அன்னத்தைப் புசிக்காமலிருக்கிற இவர்களிடத்தில் நீ சொல்லிய தோஷம் அந்நியராகிய சிஷ்டர்களால் தொடப்பட்ட அன்னத்தைப் புசிக்காமலிருக்கிற மகாராஷ்டர் மூதலானவர்களிடத்திலுஞ் சமமாக விருக்கின்றது. இப்பேர்ப்பட்டவர்களை நியமமாகப் போஜனஞ்செய்பவன் தூஷிக்கிறதில்லை. கண்ட இடத்திலெல்லாம் போஜனஞ் செய்பவனே தூஷிப்பான். ஆனாலும் இவர்களுக்கு இது பூஷணமேதவிர தூஷணமல்ல. இன்னுஞ் சடகோபர்முதலான ஆழ்வார்களால் செய்யப்பட்ட திவ்வியப் பிரபந்தங்களைப் பாராயணஞ்செய்வதில் எந்ததோஷம் உன்னால் சொல்லப்பட்டதோ அதுவும் ஸ்மிருதிபுராணங்களால் வேதார்த்தத்தைப் பிரகாசஞ்செய்கிற சத்புருஷர்களுக்கு இஷ்டமானதல்ல எப்படியென்றால் கிருபைக்கு நிதியைப்போலிருக்கிற வகுளாபரணரால் வேதாந்தங்களுடைய சந்திகளை விமரிசைசெய்து சிரேஷ்டமாக நிர்மிக்கப்பட்ட திவ்வியப்பிரபந்தத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்கும் ஸ்மிருதிபுராணங்களை அத்தியயனஞ் செய்பவர்களுக்கும் உன்னால் சொல்லப்பட்ட தூஷணஞ் சமமாக விருக்கும். இன்னும்யோக்கியமான விஷயங்களுள்ளது திராவிடவாக்கு ஆனாலும் விவேகவான்களாலே அங்கீகரிக்கத்தக்கதாக விருக்கும். அயோக்கியமான விஷயங்களுள்ளது சமஸ்கிருதவாக்கு ஆனாலும் நீக்கவேண்டியதாகவிருக்கும். மனதில் எப்போதும் அரிதியானஞ்செய்பவன் குரூபியானாலும் ஸ்துதிக்குப் பாத்திரனாவான். எப்போதும் ஸ்திரீகளுடைய ஸ்தனங்களையே சிந்திப்பவன் ரூபவந்தனாக விருந்தாலும் அப்படி யாகமாட்டானல்லவா, முக்கியமாக அகஸ்தியருடைய வியாகரணத்தால் விமரிசை செய்யப்பட்டதும் மகாத்துமாக்களாகிய பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமாகிய திராவிடபதங்களுக்கு சமஸ்கிருதத்தை

விட குறைவு என்னவிருக்கின்றது. எப்படியென்றால் சமுத்திரத்தை உள்ளங்கையில் அடங்கும்படிச் செய்துகொண்ட முனிவரன் எந்த திராவிட பதங்களுக்கு வியாகரணஞ் செய்தானோ, சடகோபர்முதலான ஆழ்வார்கள் பிரபந்தங்களைச் செய்தார்களோ, பரிசுத்தாளாகிய பூர்வீகரான ஆசாரியர்கள் அத்தியயனஞ் செய்தார்களோ, அப்பேர்ப்பட்ட திராவிட வசனங்களுடைய மகிமைகள் வாக்குகளுக்கு அதீதப்பட்டு உத்கிருஷ்டமாக விருக்கின்றது. இன்னுஞ் சிலபேரிடத்தில் உன்னால் செய்யப்பட்ட தூஷணைக்கு நான் உத்தரவு சொல்லுகிறேன், கேள் என்னவெனில் ஆலசியமுள்ள சிலபேர் கருமங்களால் உண்டான கஷ்டங்களை சகிக்காமலிருந்தாலுந் திடமாகப் பகவானிடத்தில் பக்தியென்பது அவர்களுடைய சமுசாரதுக்கத்தை நாசஞ்செய்கிறது. எப்படியெனில், கஷ்டத்தை சகிக்காத ஜனங்களுக்கு லங்கணமுதலாகிய பத்தியங்கள் செய்யாமலிருந்தாலும் மிகவும்வீரியமுள்ள உத்கிருஷ்டமான அவுஷதம் அவர்கள் சுரத்தைப் பரிகாரஞ்செய்வதற்குச் சமர்த்துள்ளதல்லவா இன்னும் இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் இரகசியமான வியாக்கியானங்களாலும் இராமானுஜனுடைய சரித்திரத்தை ஸ்துதிசெய்வதினாலும், மூன்றுவேதங்களுக்குச் சமானமாகிய வகுளாபரணருடைய பிரபந்தங்களைப் பாராயணஞ் செய்வதினாலும், பாஷியத்தினுடைய அத்தியயனத்தாலும் அரியினுடைய பாதகயிங்கரியத்தாலும், பெரியோர்களுக்கு வந்தனஞ்செய்வதினாலும், நாட்களை க்ஷணமாகக் கழிப்பார்களென்று விஸ்வாவசு வென்பவன் மறுபடியும் க்ஷணமாத்திரம் யோசனைசெய்து சிறப்புடனேசொல்லுகிறான். இதெல்லாமிருக்கட்டும், அந்நியோந்நிய விரோதமாகத்தோன்றுகிற அநேகமான வேதவசனங்களுக்கு விரோதமில்லாமல் சாதிக்கிறதினாலே சமனவயஞ்செய்துக்கொண்டிருக்கிற இராமாநுஜருடைய அந்த வாக்கை மிகவுஞ் சந்தோஷிக்கிறேன். எப்படியென்றால், பரப்பிரமத்தை நிற்குணமென்று சொல்லுகிற வேதவாக்கியங்களுக்கு அந்த வஸ்துவினிடத்தில் துஷ்டகுணங்களில்லையென்கிற தாத்பரியமென்றும் அந்தப் பிரபஞ்சகுணம் என்கிற வேதவாக்கியங்களுக்கு அந்த வஸ்துவினிடத்தில் சுபகுணங்கள் முக்கியமாயிருக்கிறதென்கிற தாத்பரியமென்றும் அத்வைதத்தைப்போதிக்கிற வேதவாக்கியங்கள் விசிஷ்டாத்வைதத்தில் தாத்பரியமுள்ளதென்றுந் த்வைதத்தைச் சொல்லுகிற வேத வாக்கியங்களுக்கு நிஷ்க்கரிஷையாகவிருக்கிற ரூபங்களுக்குப் பேதமிருக்கும்,

என்கிற தாத்பரியமென்றும் இந்தப்படிக்கு இராமாநுஜாசாரிய ரால் சித்தாந்தஞ் செய்திருக்கிறபடியினால் அவருடைய மதஞ் சக லமானவேதவாக்கியங்களுக்குஞ்சமரசமாகவிருக்கின்றதென்றான்.

இதைக்கேட்ட கிருசாநுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, இது சத்தியந்தான். ஆனாலும், இந்த மதஸ்தர்களாகிய சிலபேர் சிஷ்டர்கள் ஆசாரியபுருஷர்களென்று பிரசித்தியுள்ளவர்களாய் சஞ்சாரஞ்செய்வார்கள். இவர்களுடையசெய்கை விமரிசை செய் பவர்களுக்கு ருசிக்கமாட்டாது, ஏனெனில் மார்க்கங்களில் பிரா மணாள் முதலானவர்களை சம்மாரஞ்செய்து அவர்களுடைய சகல பொருளையுந் திருடி மிகவும் மதமுள்ளவர்களாகி ஆரண்ணியங் களில் பருவதங்களில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற துஷ்டர்க ளாகிய சோரர்களாரோ இன்னும் நீசாளாகிய இதரசனங்களா ரோ அவர்களுக்கெல்லாம் இந்த ஆசாரியபுருஷர்கள் சக்கராங்கி தஞ்செய்து என்னமோ மந்திரோபதேசத்தைச் செய்து அவர்க ளால் கொடுக்கப்பட்ட திரவியங்களாலேயே வம்சபாரம்பரியமா கத் தேகபோஷணை செய்துக்கொள்ளுவார்கள். இன்னும் மிகவும் ஆசையுள்ள இந்த ஆசாரியபுருஷாள் ஜாரர்களையுஞ், சோரர்களை யுங், கிராதர்களையுந் தேசங்களைக் கொள்ளையடிக்கிறவர்களையும், பாஷிகோர்களையுஞ் சிஷ்யர்களாகச்செய்துக்கொண்டு வேதசாஸ் திரங்கள் தெரியாதவர்களானாலும், பிரமநிஷ்டாளாகிய பெரியோ ர்களுடனேயும், போஜனஞ்செய்கிறதில்லை. ஒருகாலத்திலாகிலும் அப்பேர்ப்பட்டவர்களுடைய எதிரில் வணக்கஞ் செய்கிறதில்லை. சமயத்தினால் உண்டான இந்த ஆசாரியபுருஷத்தன்மையென்பது பாமரர்களால் சிறப்புச்செய்யத் தகுந்ததேயன்றி வேறில்லை. இத ன்றியில் சிரேஷ்டமான ஆசாரங்களுடனே கூடியிருக்கிற மிகவும் யோக்கியர்களாகிய சிலபேர் பிராமணாளுக்கும் இந்த அதிகமான பிராந்தியென்பது நீக்குவதற்கு அசக்கியமாகவிருக்கின்றது. எப் படியென்றால், பரிசுத்தமான ஆசாரங்களுள்ளவருஞ் ஜிதேந்திரி யாளானவர்களுஞ் சுயவித்துவான்களுமாகிய பிராமணாள் ஆசார த்துக்குத் தூரமாயிருப்பவரும், மிகவும் ஆசையுள்ளவரும், வேத மார்க்கத்தைத் தெரியாமலிருப்பவருங் காமபீடையினால் பாப இருதயமுள்ளவர்களுமாகிய சில ஆசாரியபுருஷா ளென்பவர்களு க்கு சிஷ்யத்தன்மை அடைவார்களென்பது கலியினுடைய மகி மையால் உண்டானதேதவிர வேறில்லை. இன்னுந்தான் மோக்ஷம் அடைவதற்குச் சமர்த்தில்லாதவன் இதரானை மோக்ஷமார்க்கந்

னை எப்படி அடைவிப்பானென்று யோசனைசெய்யாமலும் வீணாகப் பொருள்விரயத்தை எண்ணாமலுஞ் ஜடமாகிய ஆசாரியபுருஷனைத் தன்குருவென்று பிர்மித்தவராய் அவனிடத்திலிருக்கிற புஸ்தகங்களுடைய ஆடம்பரங்களினாலும், அநேகமான உபகரணங்களுடனே கூடியிருக்கிற பெரிய தேவதா விக்கிரகங்களாலும் மோகம் உள்ளவர்களாக ஆசிரயிப்பார்கள். இன்னும் உலகத்தில் நிர்மலமான புத்தியுள்ள அநேக பெரியோர்கள் பிரகாசமாக விருந்தாலுந் தன்னுடைய குருவுடைய வம்சத்தில் உத்பத்தியானவனென்றுமாத்திரம் பார்த்து யோக்கியமான ஆசாரங்களில்லாதவனும் வேதசாஸ்திரங்களை அறியாதவனுமாகிய ஒரு மூடனை குருவென்று இவர்கள் பூஜிப்பார்கள் இது மிகவும் பார்க்கிறதற்குக் கஷ்டமானது கலியுகத்தினுடைய இன்னொரு மகிமையைக் கேள் என்னவெனில் பூமியில் பூர்வீகாளாகிய பெரியோர்கள் சிஷ்யசனங்களை அனேகவருஷங்கள் பணிவிடைகளால் அவனுடைய பக்தியை செவ்வையாய் பரிட்சைசெய்து அனுக்கிரகமுள்ளவராய் உபதேசஞ் செய்தார்களென்று சாஸ்திரப்பிரசித்தியாக விருக்கின்றது. இப்போது ஆசாரியனானவனே துஷ்டர்களைத்தானே விஸ்வாசத்தால் அவருக்கு இஷ்டமான போசனமுதலானதுகள் சமர்ப்பித்து அனேகவருஷங்களால் அவர்களுடைய இஷ்டத்தைச் சம்பாதித்துக்கொண்டு கிரமங்கிரமமாக சிஷ்யர்களாகச் சேர்த்துக்கொண்டு வருகிறானென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ மந்தபுத்தியையுள்ள கிருசானுவே மகாபுருஷர்களை இப்படி தூஷணைசெய்யாதே ஏனெனில் சமுசாரமென்கிற சமுத்திரத்தில் முழுகியிருக்கிற சனங்களை உத்தாரஞ்செய்வதற்காக உலகத்தில் யோக்கியமான வம்சத்தில் உதித்தவர்களுந் தன்னியர்களுமாகிய இந்த மகாபுருஷாள் கியான யீனாளாகிய புருஷர்களுக்குப் பாதகாணிக்கைமாத்திரத்தால் சந்துஷ்டியுள்ளவர்களாய் * பஞ்சசமஸ்காரங்களைச் செய்து பரிசுத்திசெய்வார்கள் இன்னுங் கமலநேத்திரனாகிய அரியினுடைய கயிங்கரியத்தால் பக்தியுள்ளவருஞ் சமுசாரமென்கிற சமுத்திரத்துக்குக் கப்பல்போ லிருப்பவர்களுமாகிய இந்த ஆசாரியபுருஷாள் உத்கிருஷ்டமான வம்சங்களில் அவதாரஞ் செய்யாம

---

* பஞ்ச சமஸ்காரம் - என்பது சக்கராங்கதம், புண்டரம், பெயர், மந்திரம், ஆராதனை.

விருந்தால் இந்த கலியுகத்தில் சகல ஜனங்களும் அரியினுடைய கயிங்கரியந் தெரியாமலும் உத்தமமான மந்திரோபதேசமில்லாமலும் தேகங்களில் சக்கிராங்கத மில்லாமலும் அதோகதியில் விழுந்துபோவார்கள் இன்னுந் தாபங்கள் முதலாகிய துஷ்டகாரியங்களால் பூாபங்களோடு கூடியிருக்கிற ஜனங்களையும் பரிசுத்தி செய்துக்கொண்டிருக்கிற மகாத்மாக்களாகிய இவர்களிடத்தில் தோஷத்தைச் சொன்னல் அது துஷ்டர்களைப் பரிசுத்தஞ்செய்கிற கங்காசலத்துக்குஞ் சமமாகவிருக்கும். இன்னும் யோக்கியமான வம்சத்தில் உத்பத்தியானவன் நல்ல ஆசார மில்லாமலிருந்தாலும் யோக்கியர்களால் சிறப்பு செய்யத்தக்கவனே ஆகுவான். துஷ்ட வம்சத்தில் உத்பத்தியானவன் நல்ல ஆசாரங்களோடு கூடியிருந்தாலும் யோக்கியர்களால் சிறப்பு செய்யத்தக்கவன் ஆகான் நல்ல விவேகமுள்ளவன் சுயமாக வுண்டான சாலக்கிராமத்தை செவ்வையான இலட்சணங்க ளில்லாமலிருந்தாலும் அங்கீகரிப்பான். ஒருத்தனல் செய்யப்பட்டிருக்குஞ் சாலக்கிராமத்தை சகல இலட்சணங்களோடு கூடியிருந்தாலும் அங்கீகரிக்கமாட்டானல்லவா என்று சொல்லி விநயத்துடனே கரங்களைக் கூப்பினவனுக சிஷ்யர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசுத்தமான திரவியத்தால் சந்தோஷத்தை அடைபவர்களும் ஆசாரமுள்ளவர்களும் முகுந்தனையே சரணமென்கிற தருமத்தில் நிஷ்டையுள்ளவரும் நல்ல சம்பிரதாயமுள்ளவர்களும் பரிசுத்தாளானவர்களுமாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருண்டோ அப்பேர்ப்பட்ட சகல தேவதா சுவரூபமான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு நமஸ்காரமென்று சொன்னன்.

திருவல்லிக்கேணியைக்குறித்து.

அப்புறஞ் சிலதூரம் விமானத்தை நடத்தி எதிரில் பார்த்து விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறன் தோஷங்களென்கிற பாணங்களால் பீடிக்கப்பட்ட இருதயம் உள்ளவர்களுக்கு * விசல்லியகரணியென்கிற மூலிகைப்போலிருக்கிற கைரவணியென்கிற திருவல்லிக்கேணி இது இதனுடைய கரையில் ஸ்ரீமந் நாராயணன் பார்த்தசாரதியென்று பிரசித்தியுள்ளவனுக மிகவும் பிரகாசிக்கிறன் இந்த சுவாமியினுடைய பாதகமலத்தில் உதிர்ந்திருக்கிற தேவேந்திரனுடைய கிரீடசம்பந்தமான மரகதமணிகளுக்கும் அ

ங்கே அர்ச்சனைசெய்திருக்கிற துளசிதளங்களுக்கும் பேதத்தை சனங்கள் கண்டு சொல்லுவதற்கு அசக்கியமாக விருக்கின்றது இன்னும் இந்த ஸ்தலத்தில் வாசஞ்செய்பவரும் வேதாந்தங்களுடைய சிந்தனையால் காலங் கழித்துக்கொண் டிருக்கிறவர்களுஞ் சாந்தமே தனமாகவுள்ளவருமாகிய சத்புருஷாள் தேகாந்தவனைக்கும் நல்ல காரியங்களைச் செய்து பிரகாசித்துக்கொண் டிருக்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இது நிட்சயந்தான் ஆனாலும் நல்ல குணங்களைத் தியாகஞ்செய்கிற ஊணனென்கிற ஜனங்களால் நிறைந்திருக்கிற பட்டணஞ் சமீபமாக விருக்கிறதே இந்த ஸ்தலத்துக்கு ஒரு தோஷமாக விருக்கின்றது உலகத்தில் இந்த ஊணனைவிட கபட சனங்கள் அகப்படுகிறது அசக்கியமல்லவா கிருபாகுணியரானவர்களுஞ் சுசியைத் தியாகஞ்செய்பவர்களுமாகிய இந்த ஊணன் பிராமணனைத் துருணத்தைப்போலெண்ணுவார்கள் இவர்களுடைய தோஷங்களைச் சொல்லுவதற்கு வாக்குகளுக்கு அதீதப்பட் டிருக்கிறதென்று சொல்லி மறுபடியும் வியசனத்துடனே சொல்லுகிறான் என்னவெனில் ஓ பாபிஷ்டியான விதியே சுசியைத் தியாகஞ்செய்த ஊணர் முதலான சனங்களிடத்தில் தனத்தையும் நல்ல ஆசாரமுள்ள சனங்களிடத்தில் தரித்திரத்தையுந் துர்ப்புத்தி யுள்ளவர்களிடத்தில் இராச்சியாதிபத்தியத்தையும் மிகவும் புத்திசாலிகளிடத்தில் பிட்சாடனத்தையுந் துஷ்ட சாதிகளில் உத்பத்தியான ஸ்திரீகளிடத்தில் திவ்விய சௌந்தரியத்தையும் உத்தம ஸ்திரீகளிடத்தில் விகாரரூபத்தையும் உண்டுபண்ணி சிருஷ்டித்த உனக்கு என்னதான் பிரயோசனத்தைப் பெற்றுக்கொண்டாயென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இந்த ஊணர்களிடத்திலுங் குணங்களைக் கிரகிக்கவேண்டியது யுக்தம் இந்த ஊணர்கள் அன்னியருடைய தனங்களை நியாயமில்லாமல் பலாத்காரமாக அபகரிக்கிறதில்லை பொய்யான பேச்சுகளைச் சொல்லுகிறதில்லை நானாவிதமாகத் திரவியங்களைச் சம்பாதிப்பார்கள் குற்றஞ் செய்தவர்களுக்குச் சாஸ்திரப்படிக்குத் தகுந்த தண்

---

* விசல்லியகரணி-என்பது பாண முனைகளை உதிரும்படிச் செய்யு மூலிகை.

டனே செய்வார்கள் ஆனல் இத்தேச ஆசாரங்களுக்கு விரோதமுள்ள ஆசாரங்க ளிருந்தபோதிலும் அவர்களிடத்திலும் ஷெ சுகுணங்களை நீ கிரகித்துக்கொள் (இன்னும் ஷெ சென்னைபுரியில் இங்கிலீஷ் குலோத்துங்கராகியும் மகா சிரேஷ்டராகியுஞ் சக்ரவர்த்தியாகியுமிருக்கிற குயின் விக்டோரியாரவர்கள் அதிகாரம்பெற்ற கவரன்மெண்டாரவர்கள் இந்துதேசமுழுமையும் அதிகாரஞ் செலுத்திக்கொண்டு பாரபட்சமில்லாமல் யாவரையுஞ் சமமாக நடத்திக்கொண்டு வருகிறபடியால் இந்த இராஜாங்கம் மற்ற இராஜாங்கங்களைவிட சிரேஷ்டமாக விருத்தியாகிக்கொண் டிருக்கின்றது இன்னும் ஷெ நகரத்தில் அனேக வேதோர்த்தமர்களாகிய பிராமணர்களும் வித்துவசிரோன்மணிகளுங் குபேரசம்பத்துக்கு நிகரான செல்வவான்களும் உலகோபகாரியங்களைச் செய்துக்கொண்டிருக்கிறபடியாலும் அழகில் மன்மதனைப் பழிக்கும் புருடர்களும் இரதியைப் பழிக்கும் ஸ்திரீகளும் அஸ்வங்கள் பூட்டிய அனேக இரதங்கள் முதலானவைகளும் இராப்பகல் வேற்றுமையில்லாமல் எக்காலமுஞ் சஞ்சரித்துக்கொண் டிருப்பதாலும் மாடமாளிகைகளுங் * கல்விச்சாலைகளுஞ் சத்திரங்களுந் தோப்புகளுந் தடாகங்களும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறபடியாலும் சமுத்திரத்தில் பலவித கப்பல் படகு முதலானவைகள் ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிக்குந் தேவ இரதங்களைப்போலே ஜொலித்துக்கொண்டிருப்பதாலும் தேவலோகத்தைப்போ லிருக்கிறதென்று சொன்னுன்.) ஆ-ஐ.

கச்சி வரதராஜனைக்குறித்து.

அப்புறம் ஐந்துகாதம் விமானத்தை மேற்காக நடத்தி எதிரில் பார்த்துச் சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் அத்திகிரிக்கு காஞ்சிபோலிருக்கிற o காஞ்சிநகரம் இது இந்த சிரேஷ்டமான நகரத்தில் விலாசமாக விருக்கின்ற ஸ்திரீகளுடைய முகங்களைப்

---

* கல்விக் குபயோகமாகிய வர்த்தமானதரங்கினி இராஜவிருத்திபோதினி பத்திரிகைகள்-பூ-வேங்கடராவ் அவர்களால் பிரசுரஞ் செய்யப்படுகின்றன. ஆ-ஐ.

o காஞ்சி-என்பது ஒட்டியாணம்.

பார்த்து ரசிகாளான எந்த எவ்வனபுருடர்தான் சந்திரனையும் நிர்மலமாகிய கண்ணுடியையுஞ் சுந்தரமாகிய கமலத்தையும் நிந்திக்காமலிருக்கிறார்கள். இன்னும் நல்ல மனதுள்ள சர்ச்சனர்களுடைய ஆதரணைக்குப் பாத்திரமானதும் மிகவும் அழகினாலே பிரகாசிக்கின்றதுந் தேவதாசஜூகங்களுக்கு அபிவிருத்திசெய்வதுஞ் சுபமான குணங்களுடையதுமாகிய இந்த காஞ்சிநகரம் மனதுக்கு மிகவும் ஆனந்தகரமாக விருக்கின்றது. இன்னும் இந்த நகரத்துக்குத் தென்பக்கத்தில் பகவானுடைய கிருபாரசத்தினுடைய பிரவாகத்தைப்போலே பரமபாவனமானதும் வேகவதியென்று பிரசித்தியானதுமாகிய ஓர் நதி ஓடிக்கொண்டிருக்கிறது அது இன்னும் எப்படிப்பட்டதெனில் தன் இரண்டு கரைகளிலும் மந்தமாருதத்தால் அசைவாடிக்கொண் டிருக்கிற விருட்சங்களுடைய முனைகளிலிருந்து உதிர்ந்துக்கொண் டிருக்கிற புட்பங்களால் பெருகிக்கொண் டிருக்கும் மிகவும் மாதுரியமுள்ள தேனையுடையதும் நுரைகளால் குஞ்சரிப்புள்ளதாக விருப்பதும் அஸ்வமேதயாகத்தைச் செய்துக்கொண்டிருந்த பிர்மாவை அதிசயமான வேகத்தால் பயப்படும்படியாகச் செய்ததுமாகிய இந்த வேகவதி தீர்த்தம் எங்களுடைய பாபங்களைநீக்கி சம்ரட்சணைசெய்யக்கடவது. இன்னுஞ் சத்புருஷாளுடைய கூட்டங்களால் பிரகாசிக்கிற அடிவாரமுள்ளதும், இஷ்டார்த்தங்களைக் கொடுக்கிறதும், நித்தியசுத்தனாகிய வரதராஜனை வகித்துக்கொண்டிருக்கிறதுமாகிய இந்த அத்திகிரி அழகாகப் பிரகாசிக்கின்றதென்று பக்தி அதிகரித்தவனாகி கரங்களைக் கூப்பிக்கொண்டு இந்த அத்திகிரியை ஆசிரயித்தவனுந் தேவலோகத்திலிருக்கிற கற்பகத்தருவுக்குங் காமதேனுவுக்கும் வெழ்க்க முண்டாகும்படியாக இஷ்டார்த்தங்களைக் கொடுப்பவனும், உலகத்தைப் பரிசுத்தஞ்செய்பவனுங், கிருபையினால் குளிர்ச்சியாகிய கண்களையுடையவனுஞ் சமுசாரத்தினாலுண்டாகிற துன்பங்களையெல்லாம் விமோசனஞ் செய்பவனும், * வபயால் பரிமளிக்காநின்ற அதரமுள்ளவனும், வரதனென்கிற பெயருள்ளவனுஞ், சாசுவதமான தேஜோரூபமாகவிருக்கிற சுவாமியைச் சேவைசெய்கிறோம். இன்னும் ஓ! கிருசானுவே சரத்ருதுகாலத்தில் மலரும்படியான கமலத்தைப்போலிருக்கிற கண்

---

* வப - என்பது யாகத்தின் அவிர்ப்பாகத்திலே முதன்மையானது.

களையுடையவனுஞ், சத்துருக்களுடைய கர்வத்தை நாசஞ்செய்ப வனும், ருத்திரன் தேவேந்திரன்முதலாகிய தேவர்களால் ஸ்துதி செய்யப்பட்டவனுமாகிய வரதராஜனை நீயெப்போதுஞ் சேவிப் பாயாக இன்னும் எந்த வபயை (இலட்சுமிதேவியினுடைய அத ரத்திலிருக்கிற அமிர்தரசத்தால் பரிமளிக்காநின்ற வரதராஜனு டைய வாயென்கிற கமலத்தால்) ஸ்பரிகிக்கப்பட்டதோ அப்பேர்ப்பட்ட பிர்மாவினுடைய அஸ்வமேதயாக சம்மந்தமாகிய வப யை தாபங்களையெல்லாம் நிவிர்த்திசெய்து மோக்ஷத்தை யடைவ தற்காக எப்போதுஞ் சேவிக்கிறோம். இன்னும்உலகங்களைப் போ ஷணைசெய்கிற சுபாவமுள்ளதுங் கரிகிரியைப் பொருந்தியிருப்பது மாகிய வரதமூர்த்தியும் மிகவுஞ் சலமுள்ளதுஞ் சமுத்திரத்துட னே சங்கமமாவதுமாகிய வேகவதிநதியும், இந்த இரண்டுஞ் செய மாக விருக்கின்றன. இவற்றுள் வேகவதிநதியானது பிர்மாவினு டைய எக்கியத்தைப் பங்கஞ்செய்வதற்காக உற்பத்தியானது வர தமூர்த்தி அந்தயாகத்தை நிறைவேற்றும்பொருட்டு விஸ்வாசத்தி னால் அவதாரஞ்செய்தது என்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஒ! விஸ்வாவசுவே, ஜெயத்தை யறியாம லிருக்கிறவனிடத்தில் ஜெயமாக விருக்கிறா னென்றும், யாகத்துக்கு பிரதிகூலனாக விருக்கிறவனிடத்தில் யா கத்தை நிறைவேற்றினவனென்றுஞ் சொல்லுகிறது அயுக்தமா னது எப்படியென்றால் * அஜயெக்ஞோத்பவனாகிய வரதனிடத் தில் ஜெயமுண்டாகிறது எப்படி ০ சவநாசானுகூலனாகிய வரதனி டத்தில் யாகத்தை நிறைவேற்றுவது எப்படி வருமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஒ! சினேகிதனாகிய கிருசானுவே, இந்த வரதராஜ சுவாமியினிடத்தில் சிலேஷையினா லேயே தோஷஞ்சொல்லுகிற உன்னாலே இவரிடத்தில் தோஷங்

---

* அஜயெக்ஞோத்பவன்-என்பது ஜெயந்தெரியாமல் உற்ப த்தியானவனென்று தோஷகற்பிதமும், பிர்மாவினுடைய யாகத் தில் உற்பத்தியானவனென்று எதார்த்தமும் ஆகும்.

০ சவநாசானுகூலன்-என்பது யாகத்தினுடைய நாசத்துக்கு அனுகூலனானவனென்று தோஷகற்பிதமும், யாகத்தில் அபேட் சையுள்ளவர்களுக்கு அனுகூல னானவனென்று எதார்த்தமும் ஆகும்.

களிலொன்றும் இல்லையென்று பிரசித்தஞ் செய்யப்பட்டது இது யுக்தந்தான். இன்னும் பத்மங்களை மலரும்படிச் செய்கிறவனும், நக்ஷத்திர மார்க்கமாகிய ஆகாசத்தைப் பிரகாசஞ் செய்பவனுஞ், சக்கரவாகப் பக்ஷிகளுக்கு ஆனந்தத்தைச் செய்பவனுமாகிய சூரியனிடத்தில் தோஷாயென்கிற இராத்திரியினுடைய சம்பந்தவார்த்தையே எப்படியில்லையோ அதுபோலவே இலட்சுமிதேவிக்கு உல்லாசத்தைச் செய்பவனுஞ், சத்புருஷாளுடையநடத்தைகளைப் பிரகாசஞ்செய்பவனுஞ், சக்கரதரனுமாகிய வரதராஜசுவாமியினிடத்தில் தோஷத்தினுடைய சம்பந்தவார்த்தை ஒருகாலத்திலுஞ் சேரமாட்டாதென்று சொல்லி அப்புறம் நான்கு பக்கங்களிலும் பார்த்து கரங்களைக் கூப்பினவனாகச் சொல்லுகிறான். அனந்தசரசை சேவிக்கிறேன். புண்ணியகோடி விமானத்துடனே கரிகிரியை ஆசிரயிக்கிறேன் அந்தரவேதியைத் தியானஞ்செய்கிறேன் அதனிடத்தில் பூஜைசெய்யப்பட்ட தேவாதிராஜனான வரதனை பஜனைசெய்கிறேன். கல்யாண கொட்டியிலிருக்கிற கமலவாசினியாகிய லட்சுமிதேவியைத் தியானஞ்செய்கிறேன். கிருஷ்ணசுவாமியையும், இராமசுவாமியையும், ஆதிவராகசுவாமியையும், ஸ்தோத்திரஞ் செய்கிறேன். முகுந்தனை ஆசிரயித்த பக்தர்களை நமஸ்கரிக்கிறேனென்று சொன்னான்.

அரங்கசுவாமியைக்குறித்து.

அப்புறம் மேற்கே கொஞ்சம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் ஆச்சரியத்துடனே சொல்லுகிறான். என்னவெனில் தன்னை அவமானஞ் செய்ததினாலே கோபத்தை யடைந்த சரஸ்வதிதேவி பிர்மாவினுடைய யாகத்துக்கு விக்னஞ் செய்வதற்காக நதிரூபமாக வருகிறபோது பிர்மா வியசனப் பட்டுக்கொண்டிருக்கவுந் தேவர்கள் அதைரியப் பட்டுக்கொண்டிருக்கவுஞ் சமுத்திரத்தில் சேதுவை உண்டாக்கினவனுங் கருடத்துவஜனானவனுமாகிய இந்த சுவாமி அந்த யாகத்தினுடைய விக்னத்தைப் பரிகாரஞ் செய்வதற்காகத்தானே சேதுவாக ஆகினான் இன்னும் பட்சிவாகனனாகிய இந்த சுவாமி சேதுவாக ஆனவனாய் சரஸ்வதியினுடைய அதிக வேகத்தையும், அவளுக்குப் பதியாகிய பிர்மாவினுடைய பயத்தையும், ஒரேகாலத்தில் தடைசெய்தான். இன்னுங் கமலத்தை ஜெயித்த நேத்திரங்களையுள்ளதுந் தமால புஷ்பத்தினு

டைய நிறமுள்ளதுமாகிய பகவானென்கிற ஒருமூர்த்தி ஈசானனு க்கு மித்திரனுகிய குபேரனுடைய திசையை பாதங்களின் நகங்க ளுடைய காந்திதாரையாலுங் கலசத்தி லுற்பத்தியான அகஸ்திய ருடைய திசையை மணிகிரீடத்திலிருக்கிற முத்துக்களுடைய கா ந்திகளாலும், புன்னகை செய்வதுபோலே ஜொலித்துக்கொண்டு வியாகரண வித்தையினுடைய வாசனையால் ரமணீயமான ஆதி சேஷனென்கிற சயனத்தில் நித்திரை செய்துக்கொண் டிருக்கின் றது. இன்னும் எந்த சுவாமி அரங்கக்ஷேத்திரத்தில் ஆதிசேஷனி டத்தில் சயனித்தவனுக அவதாரஞ்செய்தானே அப்பேர்ப்பட்ட வனும் பிர்மாவினுடைய யாகத்துக்கு விக்னமாகவந்த வேகவதி நதியினுடைய சலத்தைத் தடைசெய்வதில் எத்தனப்பட்டவனும், பாவனமாகியுஞ் சுவர்னகமலங்களை யுள்ளதுமாகிய அந்த நதியி னுடைய கரையிலிருக்கிறவனுங் கிருபையால் ரமணீயமான புத்தி யுள்ளவனும், நீலமேகத்தைப்போலே சாயையுள்ளவனுங் கோம லவல்லி தேவியுடனே கூடியிருப்பவனுமாகிய சுவாமி நமக்குக்ஷே மத்தை அபிவிருத்தி செய்யக்கடவது. இன்னுந் தியானஞ்செய்து சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் இந்திர நீலமணிகளுடைய இராசியைப்போலே சாமளவர்ணமாக விருக்கின்றவனும் ஆதிசே ஷனிடத்தில் சயனித்துக்கொண் டிருக்கிறவனுஞ் சந்திரனுக்குச் சமானமாகிய முகத்தையுடையவனுங் கமலங்களுக் கொப்பாகிய கண்களையுடையவனும், உன்னதமாகிய நாசியையுள்ளவனும் பிர் மாவுக்குப் பாரியாளாகிய சரஸ்வதிதேவியால் பூசிக்கப்பட்ட பா தங்களுள்ளவனும், தாமஸகுணமில்லாத ஜோதிசொரூபமாகவிரு க்கிறவனுந் தொண்டைப்பழத்துக் கொப்பான அதரமுள்ளவனுந் தன்னுடைய நாமகீர்த்தனை செய்தவர்களுக்கு இஷ்டார்த்தங்க ளைக் கொடுப்பவனுமாகிய இந்த சுவாமி எப்போதும் என்னு டைய இருதயத்தில் வாசஞ்செய்துக்கொண் டிருக்கக்கடவது. இன்னும் வேகவதிநதிக்கு சேதுவாக அவ்தாரஞ்செய்ததும், க்ஷீர சமுத்திரத்துக்கு குமாரத்தியாகிய இலட்சுமி தேவியினிடத்தில் பிரீதியுள்ளதுமாகிய இந்த ஆதிதேவதை நமஸ்கரித்தவர்களுடைய பாபங்களைச் சீக்கிரமாக நீக்கி சம்ரட்சணை செய்கிறதென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, நீ * ஆசுகவியாயிருந்தும், இந்த சுவாமியை என்னத்துக்குத் தியா

---

* ஆசுகவி-என்பது சீக்கிரமாகப் பாடுகிற புலவன்.

னஞ்செய்கிருய் ஏனெனில் இந்தசுவாமி ஆதியாகிய சப்தசாஸ்திரத்தைச்சொன்ன சர்ப்பராஜனை கீழாகச் செய்துக்கொண் டிருக்கிருன். களாநிதியான சந்திரனை முகத்தால் திரஸ்காரஞ்செய்திருக்கிருன். சரஸ்வதிவேகத்துக்கு விக்னஞ்செய்திருக்கிருன். இப்பேர்ப்பட்டவனை ஸ்துதிசெய்வதில் கலியானவனுக்கு எப்படி ருசியுண்டாகுமென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! கிருசானுவே, சிலேஷையினுலேயே தோஷஞ்சொல்வதில் என்ன பிரயோசனம், இந்தசுவாமியை ஆசிரயித்த சனங்களிடத்தில் தடங்கலில்லாமல் சரஸ்வதி பிரவாகமாக உத்கிருஷ்டமாக விருக்கின்றது. எப்படியெனில் மன்மதனுக்குப் பாரியாளாகிய இரதிதேவியினுடைய சுந்தரமாகிய அதரத்திலிருக்கிற அமிர்தத்தினுடைய கர்வத்தையெல்லாம் அபகரிக்கிறதற்கு எத்தனப்பட்டிருக்கிறதும், இந்த சுவாமியை ஆசிரயித்த ஜனங்களிடத்தில் பிரகாசமாக விருப்பதுமாகிய வாக்குகள் ரசிகாளான ஜனங்களுக்கு மிகவும் ஆனந்தத்தை யுண்டாக்குகின்றது. இன்னுஞ் சரஸ்வதிதேவி இந்த வாக்குகளைச் சிறப்புச்செய்கிற சமயங்களில் அசைக்கும்படியான தன்னுடைய மணிமகுடத்தில் தரித்திருக்கப்பட்ட கற்பகத்தரு புட்பங்களில் சஞ்சரித்துக்கொண் டிருக்கிற வண்டுகளுடைய தொனியென்கிற சுருதியினுல் சோபிக்கிற ரமணீயமான வீணைகனமுள்ளவளாயிருப்பாளென்று சொல்லி வடக்கு திசையைப்பார்த்து கரங்களைக் கூப்பினவனைகச் சொல்லுகிருன் என்னவெனில், ஸ்நானஞ்செய்தவர்களுக்கு க்ஷேமங்களைக் கொடுப்பதில் முக்கியகாரணமானதும், பொன் கமலங்களுடைய கூட்டத்தா லொழுகும்படியாகிய தேன்களால் உண்டாக்கப்பட்ட ஜலத்தினுடைய ருசியுள்ளதும், பிரமதேவனுல் பூஜிக்கப்பட்டதுஞ் சகியபருவதத்திலுதித்த காவேரியோடு சமானமாகிய வைபவமுள்ளதும், பூமியில் சகிக்கிறதற்கு அசக்கியமான பீடைகளை நிவிர்த்திசெய்வதும் பரிசுத்தமானதும் யோகீஸ்வரர்களுக்குப் புண்ணியகரமான சரசு அசாத்தியமான பாபங்களை நாசஞ்செய்யக்கடவதென்று சொன்னுன்.

அஷ்டபுஜசுவாமியைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் தென்திசையைப்பார்த்து கரங்களைக் கூப்பினவனுகச் சொல்லுகிறுன் என்னவெனில் உலகத்துக்கு ஆனந்தஞ்செய்கிறதுங் கஜேந்திர சரசினிலிருக்கிற கமல கூட்டங்களுடைய ரமணீயமான பரிமளத்தை வகித்த மாருதத்தால் குளிர்ச்சியாகவிருக்கிற திவ்விய ஆலயத்தில் பிரகாசிப்பதுங் கஷ்டமாகிய ஆபத்துகளை நிவர்த்திசெய்கிறதுங் கனமாகிய தவத்தினல் சிரமப்பட்ட ஆத்துமத்தையுடைய யோகீஸ்வரராளுக்குச் சந்தோஷத்தைச் செய்வதுந் தேவர்களால் சேவிக்கப்பட்டதும் அஷ்டபுஜங்களை யுள்ளதுமாகிய தேவதையை சேவிக்கிறேனென்றுன். இதைக்கேட்ட கிருசானுவென்பவன் மவுனமாக யிருந்துவிட்டான்.

தீபப்பிரகாசசுவாமியைக்குறித்து.

அப்புறம் மேற்கே கொஞ்சம் விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் தேவர்களுக்கு ஆனந்தத்தை யுண்டாக்குகிறவனும் பிரகாசமுள்ளவனும் அஞ்ஞானத்தை சாந்தஞ்செய்பவனுஞ் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுபவனுமாகிய தீபப்பிரகாசசுவாமி இந்த ஸ்தலத்தில் ஆனந்தமாக விருக்கிறுனென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே சிரேஷ்டமானபிரகாசமுள்ளவனும் இராத்திரியில் சஞ்சரிக்கிற இராட்சதர்களுக்குச் சத்துருவானவனும் இலட்சுமிதேவியுடனே கூடிப் பிரகாசிக்கிற காந்தியுள்ளவனுமென்றும் அதிகமாகிய அந்தகாரத்தினுடைய வியாபகமுள்ளவனும் இராத்திரியில் சஞ்சாரஞ் செய்பவர்களுக்குப் பிரதிகூலமாக விருக்கிறவனுந் தீபகூட்டங்களால் பிரகாசமாகிய காந்தியில்லாதவனுமென்றுஞ் சிலேஷையாகச் சொல்லி இந்த சுவாமிக்கு தீபப்பிரகாசமென்கிற பேர் எப்படித் தகுந்ததாகுமென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ மந்தபுத்தியையுடைய கிருசானுவே ஸ்புடஞ் செய்யப்பட்ட தசாவதாரங்களையுள்ளவனும் அதிகமாகிய யுத்தங்களால் பிரகாசிக்கிற கீர்த்தியுள்ள

வனும் உலகத்துக்கு நாயகனானவனுஞ் சக்கரத்தால் சகல பயங்களையும் நீக்குகிறவனுமாகிய இந்த சுவாமிக்கு தீபப்பிரகாசமென்கிற பேர் யுக்தமாக விருக்கிறதென்று சொன்னான்.

வேதாந்த தேசிகரைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிறான் என்னவெனில் ஸ்ரீரங்கநாயகருடைய ஆக்கினையால் வேதாந்தாசாரியரென்கிற நாமதேயத்தைப் பொருந்தினவரும் இந்திரியங்களை நிக்கிரகித் திருப்பவருமாகிய எந்த ஆசாரியனை வாதிகளாகிய கவிகளென்கிற யானைகளுக்கு சிங்கமானவரென்று பூமியில் பெரியோர்கள் சொல்லுவார்களோ அப்பேர்ப்பட்டவருஞ் சகலமாகிய சித்தாந்தமார்க்கங்களில் சுதந்தரத்தை யடைந்த வித்துவான்களுக்குத் தேவேந்திரனைப்போ லிருப்பவருமாகிய வேங்கடேசரென்கிற கவிராஜராகிய குருக்கள் இந்த ஸ்தலத்தில் ஆவிர்ப்பவித்தாரென்று ஜனங்களைப் பார்த்துச் சொல்லுகிறான் எப்படியெனில் துவைதம், அத்துவைதம் இந்த இரண்டு விஷயமான வாதங்களில் ரூபிக்கிறதற்கு அசக்கியமான சங்கதிகளை சாதனை செய்பவர்களுடைய கர்வத்தை நிராகரிப்பதுந் தேவ கங்கையினுடைய வேகத்தை அதிகரித்திருக்கிறதுமாகிய வாக்குகளுள்ளவனும் பாதகமலங்களை நமஸ்கரிக்கிறவர்களுடைய துக்கங்களைப் பரிகாரஞ்செய்வதில் சமர்த்துள்ள மாதவனுடைய கல்யாணகுணங்களை மனதினால் பானஞ்செய்து ஆனந்தமா யிருக்கிறவனுமாகிய மணிபோன்ற வேதாந்ததேசிகர் உங்களுக்கு மிகவுஞ் சந்தோஷத்தைச் செய்யக்கடவது இன்னும் அனேகமான வேதங்களில் * பரிசிரமஞ் செய்பவர்களுக்குச் சாஸ்திரங்களில் ஞானமே உண்டாகிறதில்லை இவ்விரண்டு மிருந்தாலும் பூமியில் சாயித்தியமென்பது சுவல்பமா யிருக்கிறதில்லை இம்மூன்றுமிருந்தாலும் விநயமும், ஆசாரமும், பக்தியும், சாந்தமும், சாதுரியமும் இருக்கிறதில்லை இவைகளெல்லாம் இந்த வேதாந்ததேசிகரை ஆசிரயித்து விளையாடிக்கொண் டிருக்கின்றன இன்னுங் குதிரைமுகத்தைப்போல முகமுள்ள அயக்கிரீவசுவாமியை உபாசனைசெய்து சுவல்பபுத்தியுள்ள துஷ்ட மதஸ்தருடைய கர்வத்தை சாந்தஞ்செய்

---

* பரிசிரமம்-என்பது பிரயாசை முதலியது.

கிற இந்த குருவை விட்டு இக் கலியுகத்தில் இதர குருவை எவன் ருன் அபேட்சிப்பானென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ இந்தப்படி சொல்வது சரியல்ல இந்த வேதாந்ததேசிகருடைய மார்க்கத்தை அனுசரிக்கிறதைவிட இதராளாகிய தென்கலையாருடைய மார்க்கமே உத்தமமென்று தோன்றுகிறது எப்படியென்றால் எந்த தென்கலையுடைய மார்க்கத்தில் அதிகமாவது சுவல்பமாவது சாதனை செய்யாம லிருந்தாலும் மோட்ச முண்டென்று சொல்லியிருக்கிறதோ கஷ்டத்தையுந் தனவிரயத்தையும் மிகவுஞ் செய்கிற யாகங்கள் முதலான உத்தமகர்மங்களை தியாகஞ்செய்வதினுல் எந்த மார்க்கஞ் சிறப்புக்குக் காரணமாக விருக்கிறதோ அப்பேர்ப்பட்ட மார்க்கத்தைவிட்டு உலகத்தில் காமியமான வேதோக்தகர்மங்களை அவசியம் அனுஷ்டானஞ் செய்யவேணுமென்று பிரகாசஞ் செய்வதனுல் கடினமாயிருக்கிற வேதாந்ததேசிகருடைய மார்க்கத்தை எவன்ருன் ஆசிரயிப்பானென்ருன்.

இதைக்கெட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நீ விமரிசை செய்வதில் சாதுரியசாலியாயிருந்தும் ஏன் இப்படிச் சொல்லுகிருய் வேதாந்தசாரியரால் சோதிக்கப்பட்டதுஞ் சத்புருஷர்களுக்குச் சம்மதமானதுமாகிய இதமான வடகலைமார்க்கத்தைத் தள்ளி மூடாளாகிய ஜனங்கள் இதரமான மார்க்கத்தை சபலத்திஞல் அனுசரிப்பார்கள் உலகத்தில் ரோகங்களால் பீடிக்கப்பட்ட சகல ஜனங்களுக்கு எந்த வைத்தியன் இஷ்டமான பதார்த்தங்களைப் போஜனஞ் செய் ஸ்திரீகளுடனே சங்கமஞ் செய்யென்று சொல்லுவானே அந்த வைத்தியனை அவர்கள் மிகவும் ஸ்தோத்திரஞ் செய்வார்கள் எவன் பத்தியஞ் சொல்லுவானே அந்த வைத்தியனை எப்போதும் நிந்திப்பார்களல்லவா இன்னுங் கிருபாசமுத்திரவனுனவனுஞ் சமுசாரமென்கிற சமுத்திரத்துக்குக் கப்பலானவனுமாகிய வேதாந்ததேசிகர் அவதாரஞ்செய்யாமலிருந்தால் இந்த உலகம் பக்திமார்க்கத்தைத் தெரியாததுஞ் சாஸ்திரங்களை அறியாததும் வேதாந்த கர்மங்க ளில்லாததுமாக ஆய்விடும் இன்னு மிந்த வேதாந்தசாரியனென்கிற ஆசாரியர் சகல வித்தைகளென்கிற சமுத்திரத்தி னுழத்தைக் கண்டவரானபடியால் இந்தக் காலத்திலிருக்கிற வித்துவான்களுடைய கூட்டத்துடனே சமமாக எண்ணத்தகுந்தவரல்ல வேறென்னவென்ருல்

எவன் நேத்திரங்களினுலே கேட்கிருனே எவன் பாதத்தினுல் உலகத்தைப் பார்க்கிருனே எவர்கள் முகத்தில் கஜரூபமாயும் அஸ்வரூபமாயு மிருக்கிருர்களோ அப்பேர்ப்பட்ட ஆதிசேஷன் கௌதமன் விநாயகன் அயக்கிரீவனென்கிற இவர்களுடனே இந்த வேதாந்ததேசிகர் எண்ணத்தகுந்தவர் இன்னும் இந்த வேங்கடநாதனென்கிற பேருள்ள (விஷ்ணுவினுடைய) மணி அதிகமான மோகமென்கிற பிசாசக் கிரகங்களை விமோசனஞ்செய்துவைக்கிற கம்பீரசப்தத்தால் செவிகளுக்கு ஆனந்தத்தை யுண்டாக்குகின்றது இன்னும் வேதாந்தத்தை ஸ்தாபனைசெய்கிற இவருக்கு வேதாந்தாசாரியனென்கிற பேர் தகுந்ததென்று * விவேகஞ் செய்தவர்களாய் தாந்தாசாரியனென்பார்கள் என்றுல் இந்திரியநிக்கிரகமுள்ளவனென்று தெரிந்துக்கொள்வார்களென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே பிரம்மாவுக்குப் பாரியாளாகிய சரஸ்வதிதேவியினுடைய கொப்புகளிலிருக்கும்படியாகிய சம்பங்கிப் புஷ்பங்களைப்போல் மிகவும் மிருதுவாகிய (கவிராஜர்களுக்குள் கண்டீரவத்தைப்போலிருக்கிற வேதாந்தாசாரியருடைய) வாக்குகள் கற்களைப்போலே கடினமாயும் மிகவும் பொருமையோடு கூடியுமிருக்கிற பிரதிவாதிகளுடைய இருதயங்களைப் பேதிக்கிறதற்கு எப்படிதான் சமர்த்துள்ளதாகுமென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனுகிய கிருசானுவே சொல்லுகிறேன் கேள் புட்பங்களைப்போல் மிருதுவானதுஞ் சத்புருஷாளுக்குச் சந்தோஷஞ்செய்வதுமாகிய வேதாந்தாசாரியருடைய வாக்குகள் திட்டமான கற்களைப்போலே கடினமாயிருக்கிற வைரிகளுடைய இருதயங்களையும் பேதிக்கிறது கிருஷ்ணனுடைய பாதம் நந்தன் முதலான சர்ச்சனர்களால் சந்தோஷிக்கத்தகுந்த மிருதுத்தன்மை யுள்ளதாளுலும் பேதிக்கிறதற்கு அசாத்தியமாகவிருந்த சகடாசுரனிடத்தில் வச்சிராயுதத்தினுடைய ரீதியைப் பொருந்தவில்லையாயென்று சொல்லிக் கரங்களைக் கூப்பினவனுகப் பிரார்த்தனை செய்கிருன் எப்படியெனில் தன்னை அபேட்சித்தவர்களுக்குக் கற்பகவிருட்சத்தைப்போ லிருக்கிற வேதாந்தாசாரியனென்கிற குருக்கள் கர்வத்தோடுகூடியிரு

---

* விவேகம் - என்பது விமரிசையென்றும் வே-என்கிற யெழுத்து லோபமென்றும் ஆகும்.

க்கிற குச்சித சித்தாந்தமுள்ளவருடைய துஷ்டசமயங்களைத் தள்ளுவதற்கும் ஞானமென்கிற முளையை விருத்திசெய்வதற்குப் பிரபலமாகிய கலியுகத்திலும் வேதமார்க்கத்துக்கு ஜெயமுண்டாவதற்கும் ஸ்ரீ ராமாநுஜருடைய மதத்தை சம்ரட்சணைசெய்கிற வித்துவான்களுக்குச் சந்தோஷஞ்செய்வதற்கும் பாபங்களென்கிற ஆரண்ணியத்தைப் பிளக்கிறதற்குஞ் சர்வோத்கிருஷ்டமாக விருக்கவேண்டியதென்று சொன்னான்.

நரசிம்மசுவாமியைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் எதிரில் பார்த்துக் கரங்களைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறான். கம்பீரமாகிய வேகவதி நதியினுடைய கரையில் பாபங்களைப் பரிகாரஞ்செய்கிற பூமியில் கற்பக விருக்ஷத்தைப்போலே அவதாரஞ்செய்தவனும், இலட்சுமி சமேதனும் அபிவிருத்தியா யிருக்கிறவனுமாகிய நரசிம்மசுவாமி எங்கள் சம்பந்தமாகிய காமமுதலிய வைரிவர்க்கங்களைப் பரிகாரஞ்செய்யட்டுமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் மௌனமாக விருந்துவிட்டான்.

வைகுண்டப்பெருமாளைக்குறித்து.

அப்புறம் இன்னொருவிடத்தில் பார்த்து கரங்களைக் கூப்பிக்கொண்டு விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான். என்னவெனில் பயங்களால் பீடிக்கப்பட்ட ஜனங்களுக்கு ஜீவனௌவிஷதம்போலிருக்கிற கிருபையுள்ள வைகுண்டசுவாமி என்கிறவருக்கு நமஸ்காரங்களைச் செய்கிறோம். வேதத்தில் பரமேசனென்று சொல்லப்பட்ட அந்தசுவாமி இந்தஸ்தலத்தில் நாமதேயத்தாலும் பரமேசனென்று பிரசித்தமாக விருக்கின்றார். இது யுக்தந்தான் ஏனெனில் எப்போதும் விடாமலிருக்கிற இலட்சுமிதேவியுள்ள விஷ்ணு * அபரமன் எப்படியாவான். ரமாபதியான விஷ்ணுவைப்பாக்

---

* அபரமன்-என்பது இலட்சுமியை நீங்காதவனென்றும், சர்வோத்தம னல்லாதவ னெப்படியாவானென்றும் ஆகும்.

கிலும் இதரரான தேவர்கள் அபரமரென்று யுக்தமாகச் சொல்ல லாம். விஷ்ணு பரமனென்று வேதம் பிரசித்தமாக விருக்கின்றது இன்னும் விஷ்ணு சர்வோத்தமனென்கிற விஷயத்தில் வேதசிரசு களாகிய உபநிடதங்கள் பிரசித்தமாக விருக்கின்றது. வியாசர் பராசர்முதலான முனிவர்களுடைய கிரந்தங்களும், முக்கியமான ஆதரணையோடுகூடி யிருக்கின்றன. இதன்றியில் எவன் பாதஜலத்தைக் கொடுத்தானோ எவன் அந்த ஜலத்தைக் கைகளால் கிரகித்தானோ எவன் அந்த ஜலத்தை சிரசினால் கிரகித்தானோ இந்த மூன்றுபேரில் பரமனானவனை எவர்கள்தான் தெரிந்துக்கொள்ளா திருப்பார்கள். இன்னும் எந்த துஷ்டவாதிகளானவர் தோஷங்களைநீக்குகிற விஷ்ணுவினுடைய பாதாரவிந்தத்தை அஞ்ஞானத்தினால் அனுசரிக்கிறதில்லையோ அப்பேர்ப்பட்டவர்களுடைய மதமென்கிறது இந்த ஸ்தலத்தில் சுவயமாகவே விஷ்ணு பாதாரவிந்தத்தை அனுசரிக்கிறது என்றால், ஆகாச தாமரைப் போல சூனியமாக விருக்கிறதென்று சொன்னான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் மௌனமாக விருந்துவிட்டான்.

உலகளந்தப்பெருமாளைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் இன்னொருவிடத்தில் பார்த்துச் சொல்லுகிறான். நான்கு பக்கங்களிலும், இருக்கிற விருக்ஷங்களுடைய புஷ்பங்களிலிருந்து ஒழுகிக்கொண்டிருக்கிற தேன்களுடைய தாரையால் அபிஷேகஞ் செய்யப்பட்டதுஞ் சிரேஷ்டமானதுஞ் சூரியனுடைய சஞ்சாரவேகத்தைத்தடைசெய்கிற கோபுரங்களுள்ளதுமாகிய திரிவிக்கிரம சுவாமியினுடையஆலயத்தை ஓ! கிருசானுவே, நீ பார் இன்னும் ஆசிரயிக்கிறவர்களுக்கு நாசமில்லாத மோக்ஷமென்கிற மாளிகைக்கு ஏணியாக விருப்பதுஞ் சந்தோஷத்தினால் ஊர்த்துவாகாரமாக நிறுத்தப்பட்டதுமாகிய திரிவிக்கிரம சுவாமியினுடைய பாதம் எங்களை சம்ரட்சணை செய்யட்டும் மூன்றுலகங்களைத் தானஞ்செய்ததனால் பலிச்சக்ரவர்த்திக்கு உண்டான சுபகரமான கீர்த்தியென்கிற குடைக்குத் தீர்க்கமாகிய இந்திரநீல கஜிதமாகிய தண்டத்தைப்போலே இந்த சுவாமியினுடைய பாதந்தோன்றி யிருந்ததென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, மாயையுள்ளவனுங் கிரமமில்லாதவனுமாகிய இந்ததிரிவிக்கிரமனை

யேன் சந்தோஷிக்கிருய். எப்படியென்ருல் இந்த உலகளந்தப்பெ ருமாள் தான் இலட்சுமியோடு கூடியிருந்தாலும், இராக்ஷசனுல் * குப்பிரதிக்கிரகத்தைச்செய்து அதிகமான சம்பத்தைப் பொரு ந்தினவனுகி அந்த சம்பத்தை o கோத்திரபேதகனுக்குக் கொடுத் தான். இன்னும் பரிசீலனைசெய்தால் இந்த உலகளந்தப்பெருமாள் கபடமில்லாதவர்களால் சிறப்புச் செய்யத்தக்கவனல்ல ஏனெனில் இந்த திரிவிக்கிரமன் எப்போதும் விடாமலிருக்கிற பாரியை யுள் ளவனுக விருந்தாலும், பிரமசாரியைப்போ லானவனுகி தாதா வைவஞ்சித்து * கவிக்குத் துக்கத்தைச்செய்தான். தான் பூசுரனு யிருந்தும் o பூதான வத்துவத்தைப் பொருந்தி யிருக்கிறனெ ன்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஒ! கிருசானுவே, உத்தமமான குணங்களில் தோஷத்தைக் கற்பிக்கிற பாண்டித்திய முள்ள உன்னுடைய இந்த சிலேஷை சமத்காரம் இருக்கட்டும் புண்டரீகாக்ஷனுகிய விஷ்ணு ஆசிரயித்தவர்களை சம்ரட்சணைசெய் வதற்காகத் தன்னுடைய மகிமைக்குத் தகாதரூபத்தையும் பொ ருந்தியிருக்கிறன் எப்படியென்ருல் ஈஸ்வரனுகிய இந்த விஷ்ணு எப்போதுஞ் சர்வோத்தமனுக விருந்தாலும், எப்போதும் இல ட்சுமியை யுடையவனுக விருந்தாலும், மிகவும் மகத்தாகிய பதவி யைக் கொடுக்கிறவனுக விருந்தாலும், தன்னை ஆசிரயித்த தேவே ந்திரனை சம்ரட்சணை செய்வதற்காக வாமனரூபத்தை அங்கீகரி த்து பலிச்சக்ரவர்த்தியினிடத்தில் மூன்றடி பூமியை யாசித்தான். இன்னுங் கங்கையை உத்பத்திசெய்ததுந் தேவர்களுடைய துன்ப

---

* குப்பிரதிக் கிரகத்தை-என்பது பூமியைத் தானம் வாங்கி னவனென்றும், துஷ்டமாகியதானம்வாங்கினவனென்று மாகும்.

o கோத்திர பேதகனுக்கு-என்பது பருவதங்களைப்பேதித்த இந்திரனுக்கென்றும், வம்சத்தை நாசஞ் செய்தவனுக்கென்று தோஷகற்பிதமுமாகும்.

* கவிக்கு-என்பது சுக்கிராசாரியனுக்கும், வித்துவானுக்கு மாகும்.

o பூதான வத்துவத்தை-என்பது பூமியில் இராக்ஷசத் தன் மையென்று தோஷகற்பிதமும், பூதானம் வாங்குந்தன்மையென் றுமாகும்.

த்தைப் பரிகாரஞ்செய்ததுந் திரிவிக்கிரம சம்பந்த மானதுமாகிய எந்தபாகத்தை வித்துவான்கள் ஈசனுக்குப் பிரகாசமாகிய சிரோ பூஷணத்தைக் கொடுத்ததென்றுஞ் சமுத்திரத்துக்கு மாமனென தென்றுஞ்சொல்லுவார்களோ அந்த பாதம் எங்களை சம்ரட்சணை செய்யக்கடவதென்று சொன்னான்.

கச்சிக்காமாக்ஷியம்மையைக்குறித்து.

அப்புறங் கொஞ்சம் இடந்தாண்டி எதிரில்பார்த்து விஸ்வா வசுவென்பவன் சொல்லுகிறான் என்னவெனில், இந்த காஞ்சிநக ரத்துக்குப் பூஷணமாயிருக்கிறதுஞ் சேவிக்கிறவர்களுக்குக் கற்ப கக்கொடிபோ லிருப்பதுந் தேவசேனைகளுக்கு சம்ரட்சணைக் கர்த்தாவா யிருக்கிறதும், ஈஸ்வரனுக்கு சகலமான சொத்தாக விருக்கிறதுமாகிய காமாட்சிதேவி மிகவும் பிரகாசமாக விருக்கிறதென்றுசொல்லி சந்தோஷத்துடனே கரங்களைக் கூப்பிக்கொண்டு பக்தியுடனே விமரிசைசெய்து சொல்லுகிறான். என்னவெனில், ஓ ! காமாட்சிதேவியே? உன்னுடைய தந்தகாந்தியைப்பார்த்தால் யார்தான் மல்லிகைமொக்கை நிந்திக்கமாட்டார்கள். உன்னுடைய முகந் தரிசனமானால் தேவஜனங்கள் சந்திரனையுஞ் சந்தோஷித்துப் பார்க்கமாட்டார்கள். உன்னுடைய நேத்திரங்களைப்பார்த்தால் மறுபடியும் பாலர்கள்கூட நீலோற்பலத்தை ஆதரிக்கமாட்டார்கள். உன்னுடைய மதுரமான வாக்குகளைக் கேழ்விப்பட்டால் தேனிடத்திலும் மதுரந்தோன்றாது ஆனதால் உனக்குநீயே ஒப்பா யிருக்கிறாயென்று ஸ்தோத்திரஞ் செய்துக்கொண் டிருந்தான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ ! விஸ்வாவசுவே, இந்த காமாட்சிதேவியினிடத்தில் சகல ஜனங்களாலுஞ் சந்தோஷிக்கத்தகுந்த சவுந்தரியமிருக்கின்றது சத்தியந்தான். ஆனாலும், அது பிரயோசனம் இல்லாததென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், பருவதராஜபுத்திரியாகிய இந்த காமாட்சிதேவிக்குப் பதியானவன் * விருபாக்ஷனென்று பிரசித்தியடைந்தவன் இன்

---

* விருபாக்ஷன் - என்பது விகாரமாகிய கண்களுள்ளவனென்றும், விசேஷமாகிய ரூபமுள்ள நெற்றிக்கண் ணுள்ளவனென்றும் ஆகும்.

னும் மன்மதனைச் சம்மாரஞ்செய்தவன் இந்ததேவிக்குக் குமாரனானவன் யானைமுகமுள்ளவனுந் தொந்தி வயிறுள்ளவனுமாகையால் சவுந்தரியத்துக்குத் தகுந்தபலன் என்னவிருக்கிறது. இன்னும் இந்த அம்பிகைக்குந் திரியம்பகனுக்குந் தம்பதித்தன்மை என்பது தகுந்ததாகவில்லை. எப்படியென்றால் இந்த அம்பிகை சர்வமங்களாவென்று பிரசித்தியுள்ளவள் அந்த சிவன் மசானமே வீடாகவுள்ளவன் இந்த அம்பிகை சுவர்ன ஆபரணங்களுள்ளவளாய் பிரகாசிக்கின்றவள். அந்த சிவன் திக்குகளில் பிக்ஷையெடுத்துத் திரிகின்றவன் இந்த அம்பிகை குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்டவள். அந்த சிவன் பஸ்மராசியால் பூசிக்கொண்டிருப்பவன். இந்த அம்பிகை சுரிகுழலுள்ளவள். அந்தசிவன் சடைகளால் பயங்கரமாக விருப்பவனென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! சிநேகிதனாகிய கிருசானுவே, இப்படி சொல்லாதே உலகத்தில் வாசஸ்தலம் வஸ்திரம்முதலானவை செவ்வையாக வில்லாதிருந்தாலும் மஹாத்துமாக்களுடைய சுபாவமான யோக்கியதை குறைச்சலாகிறதில்லை. எப்படியென்றால், இந்த சிவன் ஆனைத்தோலைப் போர்த்துக்கொண்டிருந்தாலும், எப்போதும் மசானத்தில் வாசஞ் செய்துக்கொண்டிருந்தாலும் சர்ப்பக்கூட்டங்களைத் தரித்துக்கொண்டிருந்தாலும் இவன் மகாத்துமாவே தவிர வேறல்ல பாசிகளால் சுற்றிக்கொண்டிருக்கிறதுஞ் சேற்றில் முளைத்திருக்கிறதும் நீலவர்னமாகிய வண்டுகளைத் தரித்திருக்கிறதுமாகிய கமலம் ரமணீயமானதல்லவா இன்னும் எந்தப் புருஷனிடத்தில் பிரவிடையாகிய ஸ்திரீ மோகமுள்ளவளாகிறளோ அந்தப் புருஷன் மிகவுஞ் சுந்தரனானவன் ரசிகனுடைய மனது எந்தப் பாடலில் மோகம் அடைகிறதோ அந்தப் பாடல்தான் ரமணீயமானது இன்னும் இந்தவிடத்தில் ஒரு ஆச்சரியத்தைப் பார் காமன் சிவனுடைய நேத்திரத்தின் தரிசனத்தால் அபஜயத்தை யடைந்தானென்று பிரசித்தியாகவிருக்கின்றது அது இந்த ஸ்தலத்தில் வித்தியாசமாக விருக்கின்றது எப்படியெனில் (சிவன் காமாட்சி தரிசனத்தால் அபஜயத்தை யடைந்திருப்பதினாலேதான்) என்றால் காமாட்சி திருஷ்டிக்கு வசப்பட்டவனென்றுங் காமனுடைய நேத்திரத்தால் அபஜயம் அடைந்தவனென்று ஆச்சரியகற்பனையுமாகும் இன்னும் இந்தக் காமாட்சிதேவிக்குப் புத்திரபாக்கியமும் பூர்ணமாகத்தா னிருக்

கிறது எப்படியென்றால் இமோத்பர்வத குமாரத்தியாகிய இந்தக் காமாட்சிதேவியினுடைய முதல்குமாரன் யானைமுகத்தைப்போலேயுள்ள சந்திரசமானமாகிய முகமுள்ளவனாய் தீர்க்காயுசுள்ளவன் இத் தேவியினுடைய இரண்டாவதுகுமாரன் ஆறுமுகங்களுள்ளவனாய் ஐந்து முகங்களையுடைய தகப்பனைவிட அதிகனானவனென்று சொன்னான்.

கச்சி ஏகாம்பரநாதனைக்குறித்து.

அப்புறங் கொஞ்சம் அசைந்து சந்தோஷத்துடனே விஸ்வாவசுவென்பவன் சொல்லுகிறான் எந்த சிவனுக்கு பாலநேத்திரம் அக்கினிக்கு இருப்பிடமாகியும் புத்திரன் அக்கினியிலிருந்து உத்பத்தியானவனாகியுமிருக்குமோ எந்த சிவனுடைய பத்தினி பருவதராஜகுமாரத்தியாகியும் ஆபரணங்கள் சர்ப்பக்கூட்டங்களாகியுமிருக்குமோ அப்பேர்ப்பட்டவனுங் கைலாசவாசியானவனுஞ் சந்திரசேகரனானவனுமாகிய பரமசிவன் இந்த ஸ்தலத்தில் மதுரமாகிய மாமரத்தி னடியில் ஆவிர்ப்பவித்திருக்கிறான் ஆனதால் இச் சிவனை தரிசிப்போமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சினேகிதனாகியவிஸ்வாவசுவே உலகத்துக்கு விரோதமாகிய சரித்திரங்களுள்ள இந்த ஈஸ்வரனை ஏன் வர்ணிக்கிறாய் நேத்திரங்களுக்குக் குளிர்ச்சியுண்டாக்குகிற ஜனங்களையே பார்ப்போம் இந்த பசுபதியாகிய சிவன் * ஸ்தாணு என்ற தன் நாமதேயத்தை எதார்த்தமாகச் செய்கிறதற்காக நேத்திரத்தில் அக்கினியை வைத்துக்கொண் டிருக்கிறானென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இந்த ரகசியத்தை நான் சொல்லுகிறேன் தெரிந்துக்கொள் என்னவெனில் இந்த சிவன் கங்கையினுடைய சம்பந்தத்தால் சந்திரனாலேயுஞ் சந்திரனுடைய சம்பந்தத்தால் கங்கையினாலேயும் உண்டாகிற அதிசீதளத்தினுடைய வாதையை நீக்கிக்கொள்ளுவதற்காக அக்கினிரூபமான மூன்றாவது நேத்திரத்தை கும்பட்டியைப்போலே தரித்துக்கொண் டிருக்கிறானென்றான்.

---

* ஸ்தாணு-என்பது மரத்துண்டென்றுமாகும்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே அந்த பட்சத்தில் சந்திரபிறையினுலுந் தேவகங்காபிரவாகத்தினுலுங் குளிர்ச்சியான சிரசுள்ள திரிபுர அரசனுகிய சிவனுக்கு அபிஷேகத்தில் பிரீதி எப்படியுண்டாகும் ஆகையால் கங்கையினுடைய அலைகளாலுஞ் சந்திரனுடைய அமிர்த தாரைகளாலும் எப்போதும் நனைந்த சிரசுள்ள சிவனுக்கு சில ஜனங்கள் வியர்த்தமாக அபிஷேகஞ் செய்வார்கள் ஜலத்தால் திருப்தியுள்ளவர்களுக்கு யார்தான் ஜலத்தைக் கொடுப்பார்களென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இந்த விஷயத்திலும் யுக்தமான உத்தரவு சொல்லுகிறேன் என்னவெனில் அக்கினியைத் தரித்துக்கொண்டிருப்பதாலும் விஷத்தை பானஞ்செய்ததனுலும் விஷத்தை வகித்த சர்ப்பங்களை அணிந்துக்கொண்டிருப்பதாலும் தவித்துக்கொண்டிருக்கிற சரீரமுள்ள சிவனுக்கு எப்போதுந் தேவகங்கையைத் தரித்துக்கொண்டிருந்தாலும் அபிஷேகத்தில் பிரீதியுண்டாயிருக்கிறதென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இதிருக்கட்டும் இன்னென்று கேட்கிறேன் இந்தச் சந்திரன் ஆகாயத்தைவிட்டு இந்த சங்கரனுடைய சிரசில் கங்கையின் அலைகளுடைய மத்தியில் சுவல்ப சரீரம் உள்ளவனுய் எப்போதும் யென்னத்துக்கு யிருக்கிறுனென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே அதற்குக் காரணத்தைக் கேள் இந்தச் சந்திரன் சமுத்திரனுக்குத்தான் குமாரனென்று யாவருக்குந் தெரிவிக்கிறதற்காக அந்தச்சமுத்திரனுக்குப் பட்டபுஸ்திரீயாகிய கங்கையினுடைய உதரத்தில் சுவல்பசரீரமுள்ளவனுய் சிவனுடைய சிரசிலிருக்கிறுனென்றுன்.

இதைக் கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே * லுப்தனுகிய சிவன் பலத்தை அபேட்சிக்கிறவர்களால் விஸ்வாசஞ்செய்யத்தக்கவனல்ல எப்படியென்றுல் இந்தசிவன் ○ சூட்சும

---

* லுப்தன்-என்பது லோபியானவனென்றும், வேடாவதாரமுள்ளவனென்றும் ஆகும்.

○ சூட்சுமசிதாம்சுகம்-என்பது மெல்லீசும் வெண்மையுமாகிய வஸ்திரமுள்ளவனென்றும், சூட்சுமமாகிய சந்திரனைத் தரித்தவனென்றும் ஆகும்.

சிதாம்சுகம் உள்ளவனு யிருந்தாலும் வஸ்திரந் தரிக்காதவன் * அயிமதரபதத்தி லிருந்தாலும் லுப்தனுக இரும்பை அஸ்தத்திலுள்ளவன் o தண்டுலசத்துவம் உள்ளவனு யிருந்தாலும் பிட்சையை யாசிக்கின்றவனென்றுன் இன்னுஞ் சகல ஜனங்களுக்கு ஜீவனத்தைக் கொடுக்கிற கங்கைக்கும் இந்த சிவனுடைய சம்பந்தத்தால் லுப்தத்தன்மை சேர்ந்திருக்கின்றது எப்படியெனில் முக்தபுருஷர்களால் ஆசிரயிக்கப்பட்டதும் விஷ்ணுபாதத்தால் உத்பத்தியானதும் அஷ்டவசுக்களில் உத்தமனுகிய பீஷ்மாச்சாரியனைப் பெற்றதுமாகிய கங்கை ரத்தினுகரனுகிய சமுத்திரனுடனே எப்போதுஞ் சம்பந்தமுள்ளவளா யிருந்தாலுங் ૭ கபர்திகாசையை விடுகிறதில்லை இன்னும் சமுர்த்தியாகிய ஜலமுள்ளதும் அதிகமான தாமரை பரிமளமுள்ளதுமாகிய கங்கை ஜன்னுமுனிவரனுடைய யாகத்தை விகாதஞ்செய்ததுந் தட்சனுடைய யாகத்தை நாசஞ்செய்த இந்த சிவனுடைய சகவாசதோஷத்தினுலேதான் இன்னுஞ் சிரிப்புடனே சொல்லுகிறுன் இந்த சிவன் பொன்மலையைக் கையில் தரித்திருந்தாலும் குபேரனுக்கு சினேகிதனுகவிருந்தாலும் வெள்ளிமலையில் வாசஞ் செய்துக்கொண் டிருந்தாலும் இவனுக்கு பிக்ஷை யாசிக்கின்றதே உண்டாயிருக்கின்றன ? வக்கிறமாகிய விதி தலைமேலிருந்தால் சம்பத்து எப்படிதான் வரும் இன்னும் விரோதமாகிய தருமங்களுள்ளவனும் ஆனைத்தோலையணிந்தவனுமாகிய இந்தச் சிவன் ஸ்துதிசெய்யத் தகுந்தவனல்ல எப்படியெனில் இந்தச் சிவன் சிரசினில் சந்திரசம்பந்தமாகிய பிரகாசத்தையும் நெற்றியில் நெருப்பு சம்பந்தமாகிய பிரகாசத்தையும் அங்கங்களில் சர்ப்பங்களுடைய சிரசுகளிலுள்ள மணிகளால்

---

* அயிமதரபதத்தில்-என்பது பொன் கூட்டங்களைத் தரித்த ஸ்தானமுள்ளவனென்றும், இமோத்பருவத சம்பந்தமான ஸ்தலமென்றும் ஆகும்.

o தண்டுலசத்துவம் - என்பது அரிசியிருந்தாலுமென்றும், நந்தீஸ்வரனுல் பிரகாசித்தாலுமென்றும் ஆகும்.

૭ கபர்திகாசை-என்பது சிவன்மேலாசையென்றும், பலகனிமேலாசையென்றும் ஆகும்.

? வக்கிறமாகிய விதி-என்பது வளைவாகிய சந்திரனென்றும் ஆகும்.

உண்டான பிரகாசத்தையுந் தரித்திருந்தாலும் * அந்தகாரியென்கிற நாமதேயத்தை வகித்திருக்கிருன் இன்னும் இந்தச் சிவன் தாரகாசுரனை சம்மாரஞ்செய்த தாரகாரிஎன்கிற சுப்பிரமணியனை துடையின்மீதும் நட்சத்திரங்களுக் கதிபதியாகிய தாரகாதிபனென்கிற சந்திரனை சிரசின்மீது வகித்தும் ஈஸ்வரியை பாதி சரீரமாகத் தரித்தும் நெற்றியில் நேத்திரத்தை வகித்து மிருக்கிருனென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே பத சிலேஷையே முக்கியமாயுள்ள இந்த தூஷணையால் என்ன பிரயோசனம் ⁰ முருத்துயுஞ்ஜயனுகிய இந்த சிவனுடைய மகாதாதுருத்துவம் யாவராலும் ஸ்துதிசெய்யத் தகுந்ததாயும் இதரதேவர்களுக்கு சாதாரணமல்லாததாயும் யிருக்கின்றது. எப்படியென்ருல் முனிபுத்திரனுகிய மார்க்கண்டேயருக்குத் தீர்க்காயுசுகொடுத்தான் பிரசித்தனுகிய பகீரதனுக்கு சகல இஷ்டார்த்தங்களைக் கொடுக்கிறதும் விஷ்ணுவினுடைய பாதஜலமானதுமாகிய தேவகங்கையைக் கொடுத்தான் குரூராளாகிய பாணன் இராவணன்முதலாகிய இராட்சதர்களுக்கு இஷ்டமாகிய வரங்களைக் கொடுத்தான் ஆகையால் இந்த சிவனுடைய மகாதாதுருத்துவமென்பது எல்லா ஜனங்களுக்குஞ் சந்தோஷத்தைச் செய்வதா யிருக்கிறதென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இந்த மகாதேவனுடைய மகாதாதுருத்வம் எல்லா ஜனங்களுக்குஞ் சந்தோஷஞ் செய்வதென்று உன்னுல் சொல்லப்பட்டது சம்மதியானதல்ல ஏனெனில் எந்த சிவன் தானவர் முதலானவர்களுக்கு வரங்களைக் கொடுத்து உலகத்துக்குந் தனக்குந் துக்கத்தைச் சம்பாதித்தானே அந்த சிவனுடைய மகாதாதுருத்துவம் உனக்கு மாத்திரந்தான் ரமணீயமானதென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ வக்கிரமாகிய புத்தியுள்ள கிருசானுவே குணத்தையுந் தோஷமாக ஏன் சொல்லுகிருய் என்னவெனில் இந்த ஈஸ்வரன் அடிக்கடி தயித்தியர்களுக்கு

---

* அந்தகாரி - யென்பது அந்தகாசுரனுக்குச் சத்துருவென்றும், இருளுள்ளவனென்றும் ஆகும்.

0 முருத்துயுஞ்ஜயன்-என்பது எமனை ஜயித்தவனும்.

வரங்களைக் கொடுக்காமலே போவானாகில் அந்தத் தயித்தியர்களுக்கு உலகத்தை வாதை செய்கிறதற்கு சக்தி இல்லாமற்போகும் விஷ்ணுவுக்குங் கிருபை யுண்டாவதற்குக் காரணமில்லாமற்போகும் அந்த விஷ்ணுவானவர் முதலான அவதாரங்களைச் செய்யாமற்போவான் சேது பகவத்கீதைமுதலானது பிரகாசிக்காமற்போகும் இந்த மனிதர் சமுசாரமென்கிற சமுத்திரத்தைத்தாண்டிப் போகமாட்டார்கள். ஆனதால் பம்பாநதியினுடைய அலைகளால் குளிர்ச்சியான மந்தமாருதத்தால் அசைவாடிக்கொண்டிருக்கிற விருக்ஷங்களிலிருந்து ஒழுகிக்கொண்டிருக்கிற பூந்தேன்களால் அபிஷேகஞ் செய்யப்பட்டவனுங் கிருபைக்கு க்ஷீரசமுத்திரத்தைப்போ லிருப்பவனுமாகிய சேஷாத்திரிக்குப் பதியான சுவாமி தன்னை யாசித்த ஜனங்களுக்கு ஒப்பில்லாத சம்பத்துகளைக் கொடுப்பானென்றுசொல்லி இந்த காஞ்சிநகரத்தைக்குறித்து சிறப்புடனே சொல்லுகிறான். என்னவெனில் இந்த சிவன் அல்பனாயிருந்தாலுங் காஞ்சியில் வாசஞ்செய்ததால் கௌரவத்தை யடைந்திருக்கிறான். * ஏதத் புரஸ்தாணு கிரீசனென்று பிரசித்தியைப் பொருந்தியிருக்கின்றதல்லவா வென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, ஒருத்தருக்கொருத்தர் விரோதமான சுபாவங்களுள்ள இரண்டு தேவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்த காஞ்சிநகரத்தை என் ஸ்தோத்திரஞ்செய்கிறாய் எப்படியென்றால், இந்த காஞ்சிநகரத்தில் கிழக்கு மேற்கு பாகங்களில் இரண்டு தேவர்கள் பிரகாசிக்கின்றார்கள். அவர்களில் ஒருவன் o விநாயகனை கீழ்பாகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான். இன்னொருவன் எதிரில் வைத்துக்கொண்டிருக்கிறான். இன்னும் ஒருவன் ഉ அனுஷ்ட மூர்த்தியானவன்

---

* ஏதத்புரஸ்தாணு - என்பது இந்த பட்டணத்தி லிருக்கிற அணுவென்றும், இந்தப் பட்டணத்திலிருக்கிற சிவனென்றும் ஆகும்.

o விநாயகன்-என்பது கருடனுக்குங் கணபதிக்கும் ஆகும்.

ഉ அனுஷ்டமூர்த்தி-என்பது நாசமில்லாத சரீரத்தை யுள்ளவனென்றும், அஷ்டமூர்த்திகளுள்ளவனல்லவென்று மாகும். (விஷ்ணு.)

ஒருவன் ? அஷ்டமூர்த்தி யானவனென்று உலகத்தில் பிரசித்தி யுள்ளவர்களா யிருக்கிருர்கள். இன்னும் ஒருவன் கஜத்தினுடைய் துன்பத்தை நிவாரணசெய்தான். இன்னொருவன் கஜத்துக்குத் துன்பத்தைச்செய்தான். இன்னும் இந்த இரண்டு தேவர்களிலொருவன் ஃ த்விஜராஜனை ஏறிக்கொண்டிருக்கிருன். இன்னொருவன் தலையில் பூஷணமாகச் செய்துக்கொண்டிருக்கிருன். இன்னும்ஒருவன் தேவகங்கையைப் பாதத்தில் தரிக்கிருன். இன்னொருவன் சிரசினில் தரிக்கிருன். இந்தப்படி விரோதமுள்ள தேவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காஞ்சி நகரத்தினுடைய சகவாசத்தால் கரிகிரியும் அப்பேர்ப்பட்டதாகவே யிருக்கின்றது. எப்படியெனில், மகாயாகத்தைப் பொருந்தியிருக்கிற பிர்மாவை சேதித்தவனுஞ் சம்ரட்சணை செய்தவனும், யானைக்குப் பயஞ்செய்தவனும், அபயங்கொடுத்தவனும், ஆகிய சிவன் விஷ்ணுயென்கிற இரண்டு தேவர்கள் இந்தமலைக்கு அடியிலுஞ் சிகரத்திலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிருர்கள். இன்னும் ஒருதோஷமிருக்கின்றது. என்னவெனில், இந்த காஞ்சிநகரத்தில் எந்தஜனங்கள் * தரானுசங்கத்தையும், o கதாந்நுவயத்தையும், நீக்குகிறதற்காக வாசஞ்செய்து இந்த அத்திகிரியை யாசிரயிக்கிருர்களோ அவர்கள் தேகாந்தத்தில் முக்கியமாக அவ்விரண்டையும் அடைவார்களென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! சிநேகிதனுகிய கிருசானுவே, நீ இந்தப்படிசொல்லாதே இந்த காஞ்சிநகரம் ஒரேரூபமுள்ள தேவர்களுள்ளதென்று சாதிக்கிறேன்கேள். எப்படியெனில், (பணிபதி சரஸ்புரநதியென்ருல், அனந்த சரசுனிடத்தில் பிரகாசிக்கிறவனும், சேஷனென்கிற ஆரத்திருல் பிரகாசிக்கிறவனும்,) (இபநாயகதரோத்த மாங்கசோபிதனு) என்ருல் அத்

? அஷ்டமூர்த்தி-என்பது பஞ்சபூதங்களுஞ் சூரிய சந்திரர்களும், யாகஞ்செய்த புருஷனுமென்கிற எட்டு சரீரமுள்ளவனும். (சிவன்.)

ஃ த்விஜராஜன்-என்பது கருடனுக்குஞ் சந்திரனுக்குமாகும்.

* தரானுஷங்கம்-என்பது யயமென்றும், சங்குவென்றும். ஆகும்.

o கதாந்நுவயம்-என்பது ரோகமென்றும், கதையென்றும் ஆகும்.

திகிரியினுடைய சிகரத்தில் பிரகாசிக்காநின்ற தேகமுள்ளவனுஞ் சுந்தரமான சந்திரனைத்தரித்த சிரசினல் பிரகாசிக்காநின்றதேகமுள்ளவனுமாகிய அரி அரன் என்கிறபேருள்ள தேவர்கள் கீழ்க்காஞ்சியிலும் மேற்காஞ்சியிலும் சர்வோத்தமமாக விருக்கிறார்கள் இன்னும் உன்னால் சொல்லப்பட்டதெல்லாம் இக்காஞ்சிநகரத்துக்கு பூஷணமேதவிர தூஷணையல்லவென்று சொன்னான்.

பாண்டவதூதசுவாமியைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் இன்னொரிடத்தைப் பார்த்து ஓ ! கிருசானுவே, இப்போது என்னுடைய பாக்கியம் பக்குவமாயிற்று. எப்படியெனில், தேவஸ்திரீகளால் கானஞ்செய்யப்பட்டவனுங் கமலங்களைப்போல் நேத்திரங்களுள்ளவனும், முனிவர்களால் தியானஞ் செய்யப்பட்டவனும், வியாசருடைய கிரந்தங்களில் பாண்டவதூதனென்று பிரசித்தமாகச் சொல்லப்பட்டவனுமாகிய சுவாமி இப்போ தென்னுடைய நேத்திரங்களுக்குத்தரிசனைகொடுத்தானென்றான்.

இதைக் கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே தனக்கு அயோக்கியமாகிய வியாபாரத்தைச்செய்த இந்த சுவாமியை ஏன்வர்ணிக்கிறாய் ஏனெனில், இந்த சுவாமிதான் சகலமான உலகங்களுக்கும், ஈஸ்வரனுகவிருந்துங் குந்திபுத்திரராகிய பாண்டவர்களுக்குத் தூதனானான். என்கிறது மிகவும் அயுக்தமானது காந்திகளுக்கெல்லாம் அதிபதியாகிய சூரியன் மின்மினிப்பூச்சியிருக்கும் ஸ்தலத்தில் அதற்குத் தாசானுதாசனாயிருக்கிறானென்று சொல்வதுயோக்கியர்களுக்குச் சம்மதியாகவிருக்குமாவென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் தோஷங்களில் முக்கியபார்வையுள்ள ஓ! கிருசானுவே, பகவானுடைய குணங்களில் தோஷபுத்தியினால் நீயே தோஷத்துக்குப் பாத்திரனாவாய் ஆனால் கவித்துவத்துக்குக் கம்பீரமுஞ் சம்பத்துக்கு உதாரத்துவமும், பிரபுத்துவத்துக்குச் சவுரியமுங் குருத்துவத்துக்கு வித்தையும், மகாவம்சத்தில் ஜனித்தவர்களுக்கு நல்லாசாரமும், மகத்துவகுசலபத்துவமும் பூஷணமென்று பெரியோர்கள் சொல்லுவார்களல்லவா? இக்குணங்களெல்லாம் இந்த சுவாமியினிடத்தில் வாசமாகவிருக்கிறதென்று சொன்னான்.

விஜயராகவ சுவாமியைக்குறித்து.

அப்புறங் கொஞ்சம் விமானத்தைநடத்தி விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிருன். மலர்ந்தரமணீயமான தாமரைகளுடைய சாந்தி கர்வத்தை திக்காரஞ்செய்த கண்களுடைய அழகுள்ள விஜயராகவசுவாமி மிகவும் பரிசுத்தமாகிய குருத்ரசரோவரத்தினுடைய சமீபத்தில் சர்வோத்தமமாக விருக்கிருன். இன்னுஞ் சம்பாதிக்குச் சகோதரனுகிய ஜடாயுவென்கிற பேருள்ள குளக்கரையில் ஆவிர்ப்பவித்த விஜயராகவசுவாமி என்கிற பாரிஜாத தரு மிகவும் பிரகாசிக்கின்றது. ஆனல் இந்தவிருட்சம் * சாகைகளுடைய மேல் பாகத்திலேயே பெரியோர்களால் பார்க்கப்படுகின்றது. சகலமான ο சுமனப்பிரபஞ்சமும் இந்த விருக்ஷத்துக்கு அடிபாகத்திற்ருன் இருக்கிறதென்று சொல்லி மறுபடியும் பக்தி அதிகரித்தவனுய் ஜனங்களைக்குறித்து போகத்தையும் மோக்ஷத்தையும் அபேக்ஷிக்கிற ஓ! ஜனங்களே, இந்த வார்த்தையைக் கேளுங்கள். என்னவெனில், எந்தசுவாமி ஜடாயுவை இந்த ஸ்தலத்தில் தகனத்தால் * சம்ஸ்காரஞ்செய்தானே அப்பேர்ப்பட்டவனும் பிரசித்தமாக அடுத்தவர்களிடத்தில் பிரீதியுள்ளவனுஞ் சூரனுனவனுமாகிய விஜயராகவசுவாமியை எப்போதும் நமஸ்காரஞ்செய்யுங்கள் இன்னும் இந்த ஜடாயுக்ஷேத்திரத்தில் உலகப்பிரசித்தமாகிய ஒரு மகிமையிருக்கின்றது. என்னவெனில், புத்திரர்வேண்டிய அபேக்ஷயால் இந்தஸ்தலத்துக்குவந்த ஸ்திரீகளால் வறுக்கப்பட்ட பச்சைப்பயிர்கள் இந்த விஜயராகவ சுவாமியினுடைய மகிமையால் அந்த ஸ்திரீகளுடைய புளகாங்கிதங்களுடனே திடமானமுளைகள் உண்டானதாக வாகிறதென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! விஸ்வாவசுவே, தன்னுடைய மகிமைக்குத் தகாத ஸ்தலத்திலிருக்கிற இந்த விஜயராகவசுவாமியை ஏன்.ஸ்துதிசெய்கிருய். எப்படியெனில், இந்த விஜயராகவசுவாமி சுகரால் ஸ்துதிசெய்யப்பட்டவனுகியும் அசம்

---

* சாகை-என்பது மரக்கிளைக்கும், வேதங்களுக்கும் ஆகும்.

ο சுமனப்பிரபஞ்சம் - என்பது புஷ்பங்களுடைய கூட்டங்களென்றும், தேவகூட்டங்களென்றும், ஆகும்.

* சம்ஸ்காரம் - என்பது பரிசுத்தமுதலியது.

வாகனன் மயூரவாகனன் முதலானவர்களால் கானஞ்செய்யப் பட்டவனுகியுங் கருடவாகனனுகியும் க்ஷீரசமுத்திரத்தில் வாசஞ் செய்பவனுகியு மிருந்தாலும், இந்த ० குருத்ரசரோ வரத்தினு டைய சமீபத்தில் இப்போது வாசஞ்செய்திருக்கிருனென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஒ! கிருசானுவே, நீ சொன்னது தயாசமுத்திரனுகிய இந்த சுவாமிக்கு பூஷணமே தவிர வேறல்ல. எப்படியெனில், இந்த விஷ்ணு தமோகுணத்தை நீங்கியிருக்கிறதும் பிரசித்தமானதுமாகிய உத்தமபதமான வைகுண்டத்தில் சகலதுக்கங்களும் நிவிர்த்தி செய்துக்கொண்டிருக்கிற ஞானவான்களால் பூஜிக்கப்பட்டவனுகி யிருந்தாலும் மனுஷர்களுடைய நேத்திரங்களைக் கிருதார்த்தஞ் செய்வதற்காக திடமான கிருபையுள்ளவனுய் பகுகாலமாக இந்த ஸ்தலத்தில் ஆவிர்ப்பவித் திருக்கிருனென்றுசொன்னுன்.

க்ஷீரநதியாகியபாலாறைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் விமானத்தை தெற்காக நடத்தி சந்தோஷத்துடனே சொல்லுகின்ருன். என்னவெனில், கங்கை சிந்து சரஸ்வதி சுபபரை துங்கை யமுனை காவேரி இந்த நதிகளைப்போலே பாப கூட்டங்களென்கிற நெருப்புகளை நாசஞ் செய்வதுந் துக்கங்களைச் சாந்திசெய்வதும், ஞானவான்களாகிய ஜனங்களால் அடிக்கடி ஸ்நானஞ் செய்யும்படியானதும், மூடர்களுக்கும் பரிசுத்தமாகிய புத்தியை யுண்டாக்குகிறதுமாகிய க்ஷீர நதி இந்த இடத்தில் காணப்படுகின்றது. இன்னும் நூதனமாகிய தன்ஜலத்தில் ஸ்நானஞ்செய்கிற ஜனங்களை குபேரனுக்கு ஒப்பாகச்செய்வதும் பண்டித ஜனங்களால் ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டதுமாகிய இந்தப் பாலாறு என்னுடைய தேகத்துக்கு துக்கத்தை யுண்டாக்குகிற கனமான பாபங்களை க்ஷீணித்துப் போகும்படி செய்யட்டுமென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஒ! விஸ்வாவசுவே, இது சரிதான். ஆனுலும் தெய்வத்தினுல்தான் இந்த க்ஷீரநதிக்கு

---

० குருத்ரசரோவரம் - என்பது கழுகு தடாகமாகும்.

சுவாரசியமில்லாமல் செய்யப்பட்டது. ஏனெனில், லேசமாவது கல்மஷமில்லாமலிருக்கிற இந்த க்ஷீரநதி மதுரமாக விருந்தாலும், உப்பு சமுத்திரத்துடனே சம்பந்தப்படாம லிருந்தால் சாது ஜனங்களுக்கு ரமணீயமாக விருக்குமென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ! கிருசானுவே, குணத்தையுந் தோஷமாகச் சொல்லுகிருய். எப்படியென்ருல், சமுத்திரத்துடனே சங்கமமாகியும், ரமணீயமாகியுமிருக்கிற நதி ஜலத்தில் ஸ்நானஞ்செய்தால் பாபங்களெல்லாம் பரிகாரமாகுமென்றும், யோக்கியமான புத்திவருமென்றும், வித்துவான்கள் தருமசாஸ்திரங்களில் சொல்லி யிருக்கிருர்களல்லவா ஆனதால் இந்த நதியுஞ் சிரேஷ்டமானதென்று (இன்னுஞ் சொல்லுகிருன். இந்த நதியின் கரையில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற சிரேஷ்டமாகிய நகரத்தைப்பார் இதுதான் * ஆறைமாநகரென்றும், ஆறுக்காடென்றும், ஷடாரண்ணியமென்றும் பெயர்பெற்று அநேகம் பெரியோர்முதலானவர்கள் வாசஞ்செய்துக்கொண் டிருக்கவும் இகபர சவுக்கியங்களை அடையவும் அநேகவிதத்தில் உதவியாக விருக்கிறதென்றுசொன்னுன்.) ஆ-ஐ.

○ சூத்திரரைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் நான்கு திக்குகளிலும் பார்த்து இப்பேர்ப்பட்ட காஞ்சி நகரத்தையுடையதும், பாலாறையுள்ளதும், நெற்பயிர் கரும்பு வாழை தென்னைமுதலியவைகளால் சிறப்புற்றேங்குவதுமாகிய * இந்த தொண்டை மண்டலத்திலிருக்கிற பூவைசியர்களென்றும், வேளாளர்களென்றும், அகமுடை

---

* ஆறைமாநகர். இதுதான் இந்நூல்செய்த, ஆ - ஐயாசாமி முதலியாரவர்கள் ஜனித்த ஸ்தலம். ஆ-ஐ.

○ சூத்திரர்-என்பது சூத்திர முள்ளவர்களாம். எப்படியெனில், இவர்கள் பயிர்முதலானவைகள் செய்யாவிடில் சூத்திரமில்லாத பொம்மைகளைப்போல ஜீவசெந்துக்கள் உயிரிழந்துவிடுவதினுலேதான். ஆ-ஐ.

* தொண்ட மண்டலமென்பது-தொண்டமான் சக்ரவர்த்தி ஆண்டநாடென்றும், அல்லது தொண்டைமண்டலமென்பது பூமிதேவிக்குக் கழுத்தென்றும் ஆகும். ஆ-ஐ.

யவர்களென்றும் பெயர்களையுடைய சூத்திரர்செய்யும் உழவுமுத லிய தொழில்களால் பிராமணுள்முதலிய யாவருக்கும் இகபரங்க ளுக்குச் சாதகமான எக்காரியங்களுந் தடையின்றி நடந்தேறிவரு கின்றன. ஆனதால் இவர்கள் பூமக்களென்றுஞ் சிறப்புப் பெயர் பெற்றுப் புகழ் புண்ணியங்களுக்குப் பாத்திரர்களாகப் பிரகாசிக் கிறார்களென்று சந்தோஷத்துடனே சொன்னான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ! சிநேகிதனாகிய விஸ் வாவசுவே, நீ சொல்லியவர்களைக்குறித்து நான் சந்தோஷிக்கமா ட்டேன். ஏனெனில், அவர்கள் வாயில்லாத ஜீவனாகிய மாடுமுத லானவைகளை ஏரிற்கட்டி அவைகள் மிகவும் வருந்தி அலுத்துப் போகும்படி செய்கிறார்கள். அப்படி அவர்கள் ஏருழும்போது அநேக ஜீவஜந்துக்கள் மடிந்துபோகின்றன பயிர்கள்செழித்தோ ங்கிக் கதிர்கள் விட்டிருக்குங்காலத்தில் கொஞ்சமாவது பச்சாத் தாபமில்லாமல் அவைகளை அறுத்துவிடுகிறார்கள். பள்ளர் பறை யர்களைக்கொண்டு பயிர்த்தொழில்களைச் செய்துக் கொள்ளுகிறார் கள். ஆனதால், இவர்கள் செய்யுந்தொழில்களால் பாவங்களைச் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் இவர்களிற் சிலர் வியா பாரங்களைச்செய்வதில் உண்மைக்கு விரோதமாகிய பொய்சொல் வதில் பின்னிடையாதிருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் தங்கள் குல பாஷைகளைக் கிரமமாகக் கற்றுணர்ந்துக்கொள்ளாமலே ஊண பாஷைகளிற் றங்கள் காலத்தைக் கழித்துக் கொஞ்சங் கற்றுக் கொண்டு தங்கள் மதாசார முதலியவைகளை தூஷித்துக்கொண் டிருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் தங்கள் சுயபாஷைகளைக் கொஞ் சங் கற்றுக்கொண்டு மடாதிபதிகளென்றும், வேதாந்திகளென் றும் பேர்வைத்துக்கொண்டு பாமராளாகிய ஜனங்களை மயக்கி ஏதோ மந்திரோபதேசஞ்செய்வதாக அவர்களுடைய பணமுதலா கியவைகளை அபகரிக்கின்றார்கள். இன்னுஞ் சிலர் தங்கள் ஜாண் வயிறு வளர்க்கவேண்டி தங்களை ஊணர்முதலானவர்களுக்கு அடி மைகளாகச்செய்து படாள்முதலாகிய உத்தியோகங்களைப் பெற் றுக் காலங்கழிக்கிறார்கள். ஆனதால் இந்தப்படியாகிய இவர்களு டைய நடத்தைகள் ஒன்றுஞ் சந்தோஷிக்கத் தக்கதாக விருக்க வில்லை என்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ மந்தபுத்தியையு டைய கிருசானுவே உன் குணத்தை இவர்களிடத்திலுங் காண்பி

க்காவிட்டால் உனக்கு அவமானமென்று நினைத்தாய்போ லிருக்கிறது ஆகிலும் அவர்களுடைய குணுதிசயங்களைக் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேள் அவர்கள் ஏரில் மாடு முதலானவைகளைக் கட்டி அவைகளுடன் தாங்களுஞ் சமரசமாகக் கஷ்டப்படுகிறுர்கள் அப்படிப் பட்டும் ஏரை விட்டவுடனே தங்கள் அருமையான பிள்ளைகளைப்பார்க்கிலும் அதிக அன்புடனே அந்த மாடு முதலானவைகளை ஜலத்திஞல் கழுவி தேய்த்துக் குளிப்பாட்டி புல் முதலியவைகளைப் போட்டுவிட்டு தாங்களும் ஸ்நானமுதலியவைகளைச்செய்து தங்கள் காலக்கடமைகளை முடித்துக்கொண்டு தங்களுக்குத் தங்கள் ஸ்திரீகள் கொண்டுவந்திருக்கும் போஜனமுதலியவைகளைச் சாப்பிடுவார்கள் இன்னும் அவர்கள் ஏருழுதலால் சில ஜீவஜெந்துக்கள் இறந்துபோனுலும் அவர்கள் இரவும் பகலுங் கஷ்டப்பட்டு முயர்ச்சிசெய்வதால் வளர்ந்தோங்கும் பயிர் முதலானவைகளில் அளவுக்கடங்காத அனேக ஜீவஜெந்துக்கள் புசித்து ஜீவித்து விருத்தியாகின்றதே இந்தப் புண்ணியங்களை அளவிட உன்னுலாகுமா இன்னும் பயிர்கள் செழித்துக் கதிர்விட்டபின்பு அவைகளை யறுக்காமல் விட்டுவிட்டால் வீணுக வாடி வதங்கிப் பாழாகப்போகுமல்லவா அந்தப்படி போகாமல் காலங்கள் நோக்கி அவைகளை யறுத்துப் போரடிக்குங் களத்தில் புல்வேறு தானியம் வேறுசெய்து அவ்விடத்தில் வந்த பிராமணுள் முதலிய சகல ஜனங்களுக்குந் தகுந்தபடி தானஞ்செய்து நின்றதில் ஆறில் ஒருபங்கு * அரசனுக்குக் கொடுத்துவிட்டு மீந்த ஐந்துபங்கில் தேவர்கள், பிதிர்தேவர்கள், பெரியோர்கள், சுற்றத்தார்கள், தாங்கள் என்கிற ஐந்துவிடங்களுக்குங் கிரமப்படி பங்கிட்டு நடந்துக்கொள்ளும்படியானவர்களும் இன்னும் பலவிதத்தில் உபகாரஞ் செய்யுங் குணங்களை யுடையவர்களுமாகிய இவர்களுக்குச் சமானம் எவர்களைச் சொல்லலாம் நீ சொல் உலகத்திலுள்ள மற்றவர்கள் இதர தொழில்களாலே பெரும்பொருள்களைச் சம்பாதித்தவிடத்தும் உணவின்பொருட்டு உழுது பயிர்செய்யும்படியாகிய இப் புண்ணியவான்களிடத்துச் சொல்லவேண்டியபடியினுலேதானின்னும் இவர்கள் எப்போதும் பூதேவர்களாகிய பிராமணுள் விஷயத்தில் பக்தி விசுவாசமுள்ளவர்களும் அரசர்களிடத்தில்

* அரசனுக்குக் கொடுப்பது-தங்களையுந் தங்கள் நாட்டையுங் கிரமப்படி காத்து அரசர்கள் விருத்தியாகும்பொருட்டே ஆம்; ஆ-ஐ.

அதிகமரியாதையுள்ளவர்களுமாகி உலகங்களுக்கெல்லாஞ்சீவனே வவிஷதம்போலப் பிரகாசிக்கின்றார்கள் இவர்களுடைய ஸ்திரீகளும் அழகுடனே உத்தமகுணங்களை யுடையவர்களாய் தங்கள்தங்கள் புருஷன் இஷ்டப்படி நடந்து இல்லறங்களைக் கிரமமாகநடத்துகிறார்கள் இன்னும் இவர்கள் பள்ளர் பறையர்களால் பயிர்த்தொழில் செய்வித்துக்கொண்டு அவர்களையும் பிள்ளைகளைப்போலக் காப்பாற்றிவருவதால் புண்ணியமேயன்றி பாவமென்று எவர்களுஞ் சொல்லார்கள் இன்னு மிவர்களிற் சிலர் வர்த்தகவிஷயத்தில் பொய் சொல்லுகிறார்களென்பது கொள்ளவருபவர் எதார்த்தமுள்ளவராக விருந்தால் அவர்களிடத்தில் உண்மையே பேசுவார்கள் கொள்ள வந்தவர்கள் உண்மையில்லாதவர்களாக விருப்பதைக் கண்டால் அவர்களுக்குத் தாங்களும் உண்மையைச்சொல்லார்கள் ஏனெனில் உலகத்தில்அம்பினை அம்பால் வெல்வர் ஆரத்தினை அரமாற் றேய்ப்பர் என்பது பிரசித்தியாகவே யிருக்கின்றதல்லவா இன்னும் இவர்களிற் சிலர் நீ சொல்லியபடி ஊணபாஷைகளில் காலத்தைக் கழித்து தங்கள் மதாசாரமுதலியவைகளைத் தூஷிப்பது உண்மையானதென்று நீ நம்பவேண்டாம் அவர்கள் தங்களுக்கு நேரிட்டிருக்கும் அன்னியர்களுடைய பழக்கவாசனையாலுந் தங்கள் குலக்கல்வியை செவ்வையாய்ப் பார்வையிடாம லிருப்பதாலுங் கலிமகிமையாலுந்தான் பேசுகிறார்கள் ஆனாலும் அப்படிப்பட்டவர்களுந் தருந்த காலங்களில் பிராமணாள் முதலிய யாவருக்கும் உபகாரஞ்செய்வதிலும் ஆசாரமாக நடந்துக்கொள்வதிலுங் கிரமமாகவே யிருக்கிறார்கள் இன்னும் நீ சொல்லியபடியே மடாதிபதிகள் வேதாந்திக ளிருந்தாலும் அவர்களிற் சிலபேர் வித்துவான்களாகியும் வேதாந்தசாஸ்திரங்களை யறிந்தவர்களாகியும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற மார்க்கங்களை அனுசரித்தவர்களாகி தங்கள்தங்கள் சீஷர்களுக்கு மந்திரோபதேச முதலியவைகளைப் போதித்து நன்மார்க்கங்களை யனுசரிக்கச்செய்கிறார்கள் ஆனதால் அப்பேர்ப்பட்ட மடாதிபதிகளையும் வேதாந்திகளையும் யாவர்தான் ஸ்தோத்திரஞ் செய்யாதிருப்பார்கள் இன்னுஞ் சிலர் அரசர்களிடத்தில் படாளாகியும் சேனாதிபதிகளாகியும் மந்திரிகளாகியும் இன்னும் அனேகமான உத்தியோகங்களும்பெற்று வருணாசாரக் கிரமங்கள் தப்பாமல் உலகோபகாரஞ் செய்துக்கொண்டுவருகிறார்கள் இன்னு மிந்த வம்சஸ்தர்களுக்குள்ளாக சிறந்த வித்துவான்கள் தோன்றி தேவபாஷையி

லிருப்பதற்குச் சரியாக அனேக பிரபந்தங்களையும் புராணங்களை யுஞ் சாஸ்திரங்களையும் இன்னும் பலநூல்களையும் உலகோபகார மாகச் செய்து தாங்களும் மதாசார தருமங்களின்படி கிரமமாக நடந்து யாவரும் புகழும்படியான பிரசித்தியுள்ளவர்களாகப் பிர காசிக்கின்ருர்கள் இந்தப்படியே சேர சோழ பாண்டியதேசங்க ளில் யிருப்பவர்களையும் நீ உன்மனதில் வைத்துக்கொள்ளென்று சொன்ஞன். ஆ-ஐ.

பாகாநதியைக்குறித்து.

அப்புறந் தெற்காக கொஞ்சம் விமானத்தைநடத்தி விஸ்வா வசுவென்பவன் சொல்லுகிருன் என்னவெனில் தன் கரையிலிரு க்கிற ஜனங்கள் கூட்டங்களுக்கு மோகமுதலான தோஷங்களில் லாத ஒரு நல்ல குணத்தைக் கொடுக்கிறதுஞ் சுபமாகிய பிரவாக முள்ளதும் பண்டிதஜனங்களால் ஸ்நானஞ்செய்யப்பட்டுக்கொண் டிருப்பதுமாகிய இந்த பாகாநதி பாபங்களை ஆகுதி வாங்கிக்கொ ள்ளுகின்றது இந்த நதியினுடைய வடபாகத்தில் சுரோத்திரிய சிரோன்மணிகளுக்கு வாசஞ்செய்வதற்கு யோக்கியமானதும் எ ல்லாக் குணங்களு முள்ளதுமாகிய அனேக அக்கிரகாரங்கள் கா ணப்படுகின்றன அவைகளில் செவிகளுக்கு ஆனந்தகரமானதும் மதுரமானதுமாகிய வண்டுகளுடைய ரீங்காரமுள்ள கரையிலிருக் கிற விருட்சங்களிலிருந்து ஒழுகிக்கொண்டிருக்கிற தேன்களு டைய தாரைகளுடனே கூடியிருக்கிற ஜலமுள்ள பாகாநதியினு டைய கால்வாய்களால் சூழ்ந்துக்கொண்டிருக்கப்பட்டதும் ஆத் திரேயவம்சத்தாராகிய வித்துவான்களுடைய யாகங்களில் அவிர் ப்பாகங்களின் சம்பந்தமாகிய பரிமளத்தால் ரமணீயமானதும் பூமியில் மிகவும் அழகுள்ளதுமாகிய அரசரணிபாலம் என்கிற நல் ல கிராமம் பிரகாசிக்கின்றது இன்னும் ரகுநாததீட்சதரால் பரி பாலனஞ்செய்யப்பட்ட இந்த அக்கிரகாரமானது சரயுநதியால் சூழப்பட்டிருக்கிற அயோத்தியாநகரத்தினுடைய காந்தியை ஒத் திருக்கிறதென்று சொல்லி விமானத்தைக் கொஞ்சங் கீழே தாழ் த்தி க்ஷீரநதி பாகாநதி என்கிற இரண்டு நதியினுடைய கரைகளை ப்பார்த்துச் சொல்லுகிருன் என்னவெனில் பாகாநதி க்ஷீரநதிக் கரைகளில் யோக்கியமான குணங்களுள்ள சாதுசிரோன்மணிக ளால் கூடியிருக்கிற அனேக அக்கிரகாரங்கள் பூதேவிக்கு உத்தம மான ஆரங்களைப்போலே பிரகாசிக்கிறதென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இந்தக் கிராமங்களை ஆசிரயித்த ஜனங்களிடத்தில் சுந்தரமாகிய முத்துகளென்கிறதே யில்லாமலிருக்கிறபோது இது * அக்கிரகாரங்களென்று எப்படிச் சொல்லுவார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓகிருசானுவே உன்னால் சொல்லப்பட்ட வசனத்தால் இந்த கிராமங்களுக்கு ஒரு தூஷணை வரமாட்டாது ஆகையால் ஒப்புக்கொண்டு சந்தோஷப்படுகிறேனென்று சொல்லி தொண்டமண்டல முழுமையும் பார்த்து சந்தோஷம் அதிகரித்தவனாக ஓ கிருசானுவே இந்தத் தொண்டமண்டலத்தினுடைய பரிசுத்தியையும் ரமணீயத்தையும் நீ பார் இந்தத் தேசத்தில் நதிகளுடைய அந்தந்தக் கரையிலும் அக்கிரகாரங்கள் பிரகாசிக்கின்றன அந்தந்த அக்கிரகாரங்களிலும் பூதேவர்களாகிய பிராமணருடைய கூட்டங்கள் மிகவு மிருக்கின்றன அந்தக்கூட்டங்களிலும் யோக்கியமான யாகங்கள் அபிவிருத்தியாக நடந்துக்கொண்டிருக்கின்றன அந்தந்த யாகங்களிலும் உண்டான ஸ்தோத்திரங்கள் * சஸ்திரங்கள் முதலாகிய சப்தங்கள் செவிகளுக்கு ஆனந்தகரமாகக் கேழ்க்கப்படுகின்றன இன்னும் இந்தத் தொண்டமண்டலத்திலிருக்கிறவர்களும் க்ஷீரநதியினுடைய நுரை கூட்டங்களுக்குச் சரியான கீர்த்தியுள்ளவர்களுமாகிய வித்துவான்களுடைய மிகவும் பிரசித்தியுள்ளதும் எல்லாத்தேசத்தாராலும் ஸ்துதிசெய்யத்தக்கதும் பாபங்களுக்குத் தூரமாகவிருப்பதுமாகியநடத்தைகள் எவர்களுக்குத்தான்ருசிக்காமலிருக்குமென்றான்

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இந்தக் கலியுகத்திலும் யாகத்தைச் செய்பவர்களுடைய நடத்தைகள் புத்திமான்களுக்கு எப்படித்தான் ருசிக்கும் ஏனெனில் இந்தக் கலியுகத்தில் யாகத்து ௦ ருத்விக்குகளுடைய சம்பத்து சரியாகவில்லை யாகஞ் செய்பவனுக்கு யோக்கியமாகிய சாமர்த்தியமுமில்லை பரிசுத்தமாகிய திரவியமுமில்லை இருதயசுத்தியுமில்லை இப்படியிரு

* அக்கிரகாரங்கள் - என்பது உத்தமமான மாலையென்றும் ஆகும்.

* சஸ்திரங்கள்-என்பது தேவர்களை அழைத்துவருகிறது முதலாகிய மந்திரமாம்.

௦ ருத்விக்குகள்-என்பது யாகஞ்செய்விக்கிற பிராமணர்.

ந்தாலும் பிராமணர்கள் சுவல்பதனமுள்ளவர்களாயிருந்தும் பிரசித்தியை அபேட்சித்தவர்களாய் வீணுக பசு இம்சையைச் செய்வார்கள் இன்னு மிந்தக் கலியுகத்தில் பிராமணர்கள் ௨ சௌசவிதியைச் செய்வதற்கு சமர்த்தரல்ல * ஆசமனம் ஸ்நானமுதலாகிய நியமங்களை நினைப்பதற்குஞ் சமர்த்துள்ளவர்களல்ல இப்பேர்ப்பட்ட o அக்கினிவோத்திர நியமமும் ௨ இஷ்டிகளை அனுஷ்டானஞ்செய்வதும், பசுசகிதமாகியஅக்கினி ஸ்டோமமுதலாகிய யாகங்களும், ?. அக்கினி சித்தியையும் எப்படிதான் கிரமமாக சம்பவிக்குமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ மந்தபுத்தியுள்ளவனே, பொய்வார்த்தைகளை யேன் பேசுகிறாய் மிகவும் யோக்கியர்களாகிய பிராமணர்கள் * சிஷ்டர்களிடத்தில் யோக்கியமான திரவியத்தை வாங்கிக்கொண்டு வித்தியாபலத்தினாலுஞ் சம்பாதித்து வேதங்களிலும் o கல்பங்களிலுஞ் சூத்திரங்களிலுஞ் சமர்த்துள்ளவர்களும் பக்தியுள்ளவர்களும் பரிசுத்தி யுள்ளவர்களுமாகிய ருத்விக்குகளை அடைந்து பகவத்பிரீதியை மிகவும் அபேட்சித்து எப்போதும் யாகங்களைச் செய்பவர்களாய் இந்தக் கலியுகத்தையுங் கிருதயுகத்துக்குச் சமானமாகச் செய்வார்கள். இன்னுந் தாங்கள் யாகத்துக்கு யோக்கியமான திரவியமுள்ளவர்க ளல்லவென்று நினைத்து யாகத்தை நீக்கினவர்களுக்குத் தங்களுடைய அன்னங்களால் பகவானுடைய ஆராதனமும் பிரயோசனமில்லாமற் போகுமல்லவா? ஆகையால் பிரயத்தினத்தால் பரிசுத்தமாகிய திரவியத்தைச் சம்பாதித்து பகவானுடைய கயிங்கரியத்தைச்

---

௨ சௌசவிதி-என்பது மண்முதலியவைகால் சுத்திசெய்வது

* ஆசமனம்-என்பது மந்திரங்களால் ஜலபானஞ் செய்வது முதலியவைகள்.

o அக்கினி வோத்திரநியமம்-என்பது யாகஞ்செய்த அக்கினியைப் பரிசுத்தமாக ஆயசுவரைக்குங் காப்பாற்றுதல்.

௨ இஷ்டிகள்-என்பது அமாவாசை பௌர்நமிமுதலாகிய காலங்களில் செய்யவேண்டியகருமங்கள்.

? அக்கினி சித்தியை-என்பது தேகாந்தத்தில் யாகாக்கினியால் தகனஞ்செய்வது.

* சிஷ்டர்கள்-என்பது ஆசாரமுள்ளவர்கள்.

o கல்பங்கள்-என்பது வேத விதிகளைச்சொல்வது.

செய்தால் அது யாகத்துக்குச் சமானமானது எப்படிதானுகமாட்டாது. இன்னும் இம்சைசெய்பவன் பாபத்தை யடைவானென்று எந்தவேதஞ் சொல்லுகிறதோ அந்த வேதத்திலேயே யாகத்தில் பசு இம்சையை விதித்திருக்கிறபோது எந்த வைதிகன்றான் சமுசயப்படுவான். இன்னும் இராமாநுஜாசாரியாரும் யாகத்தில் பசு இம்சையென்கிறது இம்சையல்லவென்று சொல்லியிருக்கிறபோது அவருடைய மதத்திலிருக்கிற எவனாவது யாகத்தைதூஷித்தால் அவனைவிட இதரனாகிய குருத்துரோகி எவன்றானுவான். இன்னும் ஜைநர்களுக்கு அந்நியனானவன் இதர இம்சைகளைப் போலே யாக சம்பந்தமான இம்சையில் அசங்கியப் படுவானானால் அப்பேர்ப்பட்டவன் பரஸ்திரீகளிடத்தில் புத்திராளுடைய உத்பத்தியை நிந்திக்கிறதைப்போலே யோக்கியமான தன் பத்தினியிடத்திலும், புத்திரோதபத்தியை நிந்திக்க வேண்டியதுதானே இன்னும் பரிசுத்தர்களாகிய ருத்விக்குகளில்லையென்கிற சமுசயத்தால் சிலர் நித்தியமாகிய யாகத்தை கலியுகத்தில் தியாகஞ் செய்வார்களென்றால் குருவானவன் அபரிசுத்தனென்கிற சமுசயத்தால் வைஷ்ணவத்துக்கு ஆகவேண்டிய சக்கிராங்கிதம் அனுக்கிரகமுதலாகிய யாவற்றையுந் தியாகஞ்செய்துவிட வேண்டியதுதானே இன்னுஞ் சகலமான வேதங்களாலும், ஸ்மிருதிகளாலும், இதியாசங்களாலும், புராணங்களாலும், நியமிக்கப்பட்டதும், விஷ்ணுவினுடைய ஆக்கினையால் சித்தமானதுமாகிய யாகங்களைத்தியாகஞ் செய்து மேற்கண்டவைகளுக்கு விரோதமான கிருத்தியங்களைசெய்கிற சிலர் இதரானையுந் தம்மைப்போலாகும்படி போதிப்பார்களாதலால் அநேக வார்த்தைகளால் என்ன பிரயோசனம் எந்த வைஷ்ணவர்கள் வெள்ளாடுகளைச் சேதிக்கவேணுமென்கிற பயத்தால் யாகத்தைத் தியாகஞ்செய்பவர்களோ அவர்கள் சிஷ்யர்களுக்கு வருத்த முண்டாகுமென்கிறபயத்தால் சக்கிராங்கிதத்தினுடைய கிரமத்தை தியாகஞ் செய்துவிடலாமல்லவா? ஆனால் முதலாவதாகிய யாகவிஷயத்தில் பகு பெரியோர்களுடைய சம்மதியும் பகவத் பிரீதியென்கிற பலமும் உண்டாகுந் தனப் பிராப்தியில்லை. இரண்டாவதாகிய சக்கராங்கித விஷயத்தில் சுவல்பஜனங்களுடைய சம்மதியுந் திரவியப்பிராப்தியும் உண்டாகும், இதுதான் இரண்டுக்கும் பேதமிருக்கிறதென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் சத்புருஷனாகிய ஓ விஸ்வாவசுவே, காய்ந்திருக்கப்பட்ட சங்குசக்கரங்களால் பிராணிக

ளைச் சுடும்படியாகச்செய்கிறதை வெள்ளாட்டினுடைய கொலை யுடனே சமமாக ஏன் வர்ணிக்கிறுயென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் குண தோஷங்களு டைய தாரதம்மியத்தை அறியாத ஓ கிருசானுவே, இந்த வசனத் தைக் கேள் ஆயிரம் வெள்ளாடுகளுடைய கொலைகளைப்பார்க் கிலும் ஒரு பிராமணனுடைய இம்சை அதிகமானது. ஆகையால் பிராமணனைச் சுடும்படியாகச் செய்கிறது பசு இம்சையுடன் சமா னமல்லவென்று எப்படி சொல்லுகிருய் சாஸ்திர விதிப்படிக்குக் காய்ந்த சங்குசக்கரத்தைத் தரித்துக்கொள்வது சிரேஷ்டமென்று சொன்னுல் வேதத்திலே சொல்லியிருக்கிற விதிப்படிக்கு யாகத் தில் பசு இம்சையால் தருமத்துக்கு ஆனிவருமா இந்தப்படிக்கு (உள்ளங்கை நெல்லிக்கனி) இருக்கிறதென்று சாதிக்கிறதற்கு வே றே பிரமாணத்தைக் கல்பனை செய்வதுபோலே பதினுயிரம்வேத வசனங்களால் விதிக்கப்பட்ட யாகஞ் செய்வதினுடைய ஆவசிய கத்தை நான் சாதனைசெய்வதனுல் என்ன பிரயோசனம் போது மென்றுசொன்னுன்.

செஞ்சிக்கோட்டையைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசு வென்பவன் தெற்காக விமானத்தை நடத்தி சிரக்கம்பத்துடனே சொல்லுகிருன். இந்த செஞ்சிபுரியெ ன்பது சகல பூமியிலிருக்கிற ஸ்திரீகளைப்பார்க்கிலுஞ் சவுந்தரியத் தால் அதிகரித்திருக்கிற சுந்தரஸ்திரீகளுடைய பாதத் தண்டைக ளுடைய ரமணீயமான சப்தங்களால் மோகித்துக்கொண்டிருக் கிற எவ்வன புருஷர்களுடைய கூட்டங்களினுல் பரிபூரணமாயும், ஈஸ்வரனு லெரிக்கப்பட்ட மன்மதனை பிழைத்திருப்பதாகச் செய் ததர்யும் பிரகாசிக்கிறது. இன்னும் ருக்கு எஜுர் சாமம்என்கிற வேதங்களுக்கு வாசஸ்தலமாக விருப்பவரும் பரிசுத்தர்களானவ ரும், ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் வித்தைகளிலுஞ் சமர்த் துள்ளவருந் தர்க்கசாஸ்திரம் வியாகரணம் மீமாம்சை வேதாந்த மென்கிற சமுத்திரங்களுடைய ஆழத்தைக்கண்டவருமாகிய பிரா மணர்கள் இந்த நகரத்தில் வாசஞ் செய்வார்களென்றுன்.

இதைக்கேட்ட் கிருசானு வென்பவன் ஓ விஸ்வாவசுவே, அநேக அரசர்கள் நூதனமாயும் அசாத்தியமாயுமிருக்கிற இந்த

நகரத்தினுடைய கோட்டையை சாதிக்கவந்த சமயங்களில் யுத்த ரங்கத்தில் நர்த்தனஞ் செய்துக்கொண்டிருக்கிற படாளுடைய சிரசுகளா லொழுகிக்கொண்டிருக்கிற இரத்தப் பிரவாகங்களாலுந் துர்க்கந்தமுள்ள மாமிசங்களாலும், எலும்புகளாலும் நிறைந்திருக்கிற இந்த நகரம் எவ்வளவும் பிரகாசிக்கிறதில்லை என்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓசிநேகிதனாகிய கிருசானுவே, நல்ல குணங்களுடனே கூடியிருக்கிற இந்த நகரத்தை நீ நிந்தைசெய்வதுபோல் அபிநயித்து ஸ்தோத்திரந்தான் செய்தாய். எப்படியென்றால், அந்தந்த தேசங்களில் புராதனங்களாகிய இதர இராஜதானிகளை ஆண்டுக்கொண்டிருக்கிற இராஜாக்களும் யுத்தத்தில் தேகாந்தத்தைப் பொருந்தியாவது இந்த நகரத்தை அபேட்சிப்பார்களல்லவா வென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் செவ்வையாக ஆலோசனைசெய்து புராதனர்களும் நூதனர்களுமாகிய இராஜாக்களுக்கு இந்த அவிவேகம் நிவாரணைசெய்வதற்கு அசக்கியமானது ஏனெனில், இராஜாக்கள் தங்களுக்குச் சமுர்த்தியாகத் திரவியமிருந்தாலும், விருத்தியாகிக்கொண்டிருக்கிற இராச்சியமிருந்தாலும் கண்களுடைய அழகினால் கமலங்களுடைய கர்வத்தை திக்கரித்தவர்களுஞ் சம்போகத்துக்குத் தகுந்தவர்களுமாகிய சுந்தரஸ்திரீகளை உபேட்சைசெய்து துர்க்குணங்களால் பரிபூரணராகி பலாத்காரத்தால் சத்துரு ராஜாக்களுடைய பூமியை அபகரிக்கவேணுமென்று சேனைகளுடனேகூடி யுத்தத்தில் மரணம் அடைவதற்குச் சம்பிரமப்படுவார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ விரோதமாகியபுத்தியையுள்ள கிருசானுவே, விவேகத்தை அவிவேகமென்று சொல்லுகிறாய் எப்படியெனில் இந்த இராஜாக்கள் சம்பத்தென்கிறது கானகத்தி லுற்பத்தியாகிற நதிப்பிரவாகத்துக்குச் சமானமாகியதென்றும், பிரபத்துவமென்கிறது மின்னலுக்குச் சமானமாகியதென்றும், ஸ்திரீகளென்கிறவர்கள் சூரியகிரணங்களால் வியாபிக்கப்பட்ட சாயங்காலத்தினுடைய காந்திக்குச் சமானமாகிய எவ்வன முள்ளவர்களென்றுந் தேகமென்கிறது எண்ணெயில்லாத தீபத்துக்குச் சமானமாகியதென்றும் ஆலோசனைசெய்து பரிசுத்தர்களாய் சுவர்க்கத்தை யடைவதற்காக யுத்தமென்கிற அக்கினியில் பிராணங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னுஞ்சூரனானவன் யுத்தத்

தில் உதிரத்தால் தேகமுழுமையும் ரக்தனுனபோது சுவர்க்கத்தி லிருக்கிற தேவதாஸ்திரீ பதியினுடைய குணத்தை அனுசரிக்கிற வளைப்போலே தானும் (ரக்தையாவாள்.) என்றால் பிரீதியுள்ளவ ளாவாள் அந்தசூரனுனவன் அதிகமாய் மரணங்களால் சேதிக்கப் பட்ட தேகமுள்ளவனுனபோது அந்தஸ்திரீயும் மன்மதனுடைய பாணங்களால் பேதிக்கப்பட்ட தேக முள்ளவளாவாள். இன்னும் யுக்தமென்கிற அக்கினியில் பிராணங்களை ஓமஞ்செய்த சூரனுன வன் தேஜசுள்ளவனுந் திவ்வியமாகிய விமானத்திலிருக்கிறவனுங் கையினுல் தேவதாஸ்திரீயினுடைய குசங்களைப் பிடித்துக்கொண் டிருக்கிறவனும், அந்தஸ்திரீயால் நகக்குறியுள்ளவனுமானவனுக சுவர்க்கத்தி லிருந்துகொண்டு காந்தியில்லாததும் பூமியில்விழுந்தி ருக்கிறதுங் கையில் திடமாகக் கத்தியைப் பிடித்துக்கொண்டிருக் கிறதுஞ் சத்துருக்களுடைய அநேக பாணங்களால் காயங்களுள் ளதுமாகிய பூர்வசரீரத்தைப்பார்த்து அருயையுள்ளவனுய் தன்னு டைய நூதன சரீரத்தைப் பார்த்துச் சந்தோஷப்படுவானென்று சொன்னுன்.

பிநாகினிநதியைக்குறித்து.

அப்புறம் மற்றொரிடத்தில் விமானத்தை நடத்தி விஸ்வாவ சுவென்பவன் சொல்லுகிறுன் ஓ கிருசானுவே மகத்தாகிய பாப ங்களையெல்லாம் நாசஞ்செய்கிற பிநாகினிநதியையும் பளுவில்லாத ஜலமுள்ள கருடநதியையும் பார் இந்த நதிகளுடைய தடத்தில் இரண்டாவது தேவேந்திரனைப்போலே யிருக்கிற தேவநாயகன் மிகவும் பிரகாசிக்கிறுனென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் மௌனமாக விருந்து விட்டான்.

ஸ்ரீமுஷ்ணக்ஷேத்திரத்தைக்குறித்து.

அப்புறம் அதற்கு மேற்கே சிலதூரம் விமானத்தை நடத்தி னவனுய் பகு சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் என்னவெனில் சகலமான பாபங்களையும் பரிகாரஞ்செய்கிற ஸ்ரீ முஷ்ணமென் கிற க்ஷேத்திரம் நேத்திரங்களுக்கு இப்போது தரிசனமானபடி

யால் என்னுடைய புராதனமாகிய நல்ல விரதங்களெல்லாம் பக்குவமாயிற்று இன்றைய உதயகாலம் மிகவுஞ் சுபகரமானது இந்தஸ்தலத்தில் சராசரங்களுக்குள்ளேயெல்லாம் வியாபித்திருப்பதுஞ் சுராசுரர்களால் சேவிக்கப்பட்டதும் எப்போதுஞ் சத்புருஷர்களுடைய கூட்டங்களால் துதிசெய்யப்பட்டதுஞ் சந்தோஷங்களுக்கு உத்தமமான நிதியானதுங் கருடத்துவஜமுள்ளதுமாகிய வராகரூபமுள்ள தேவதை நமஸ்காரஞ் செய்பவர்களுடைய தாபங்களையெல்லாம் நிவர்த்திசெய்கின்றது இன்னு மிந்த ஸ்தலத்திலிருக்கிற மகாத்துமாக்கள் இந்த சுவாமியை எப்போதும் பினுகினிநதிதீரத்திலிருக்கிற ஆலயத்தில் வாசஞ்செய்வதும் இடுப்பில் பிரகாசமாக அஸ்தங்களை வைத்துக்கொண்டிருப்பதும் புஷ்டியுள்ளதும் ரசாதலத்திலிருந்து இந்த ஸ்தலத்தில் ஆவிர்ப்பவித்தும் மதுரமான மாமரங்களுடைய வனங்களிலும் வாசஞ்செய்துக்கொண்டிருப்பதுமாகிய சிரேஷ்டமான வராகரூபமுள்ள தேவதையென்றுந் தங்களால் தரிசனஞ் செய்யப்படுகிறதென்றும் ஸ்துதிசெய்வார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே ஸ்ரீ மகாவிஷ்ணு துர்க்குணங்களுக்கெல்லாம் விரோதியாயிருந்தாலும் பூமியினிடத்து ஆசையினால் வராகரூபமாகவாகினான் இது மிகவும் அயுக்தமானது இப்பேர்ப்பட்டவனே இப்படியாகிறபோது பூலாபத்தில் ஆசையினால் மனுஷனானவன் எந்தெந்த வேஷத்தைத்தான் இப்போது எடுக்கமாட்டான் நீ சொல்லென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நீ பகவானுடைய ஆயிரம் அவதாரங்களையுந் தெரியாதவன் ஆனதால் கேள் கைடபாசுரனைச் சம்மாரஞ்செய்த விஷ்ணு மச்சாவதாரத்தையும், கூர்மாவதாரத்தையும், வராகவதாரத்தையும், நரசிம்மாவதாரத்தையும் இன்னும் எந்தெந்த அவதாரங்களைச் செய்தானே அவையெல்லாம் மாயைசம்பந்தமல்ல அப்பேர்ப்பட்ட அவதாரங்களிலும் இந்த விஷ்ணு தன்னுடைய நல்ல சுபாவத்தை விடுகிறதில்லை இன்னும் எந்த வராகசுவாமி உலகத்துக்கு க்ஷேமம் விரும்பினவனாய் இராட்சதர்களால் பீடிக்கப்பட்டதுஞ் சமுத்திரத்தினுடைய ஆழமாகிய ஜலமென்கிற காவற்கூட்டத்தில் முழுகச்செய்யப்பட்டதுமாகிய பூமியை கோரைக்கிழங்குபோலே எடுத்தானே அப்பேர்ப்பட்டவனும் உலகத்துக்கு ஆதாரமாக விருக்கி

றவனுமாகிய வராகசுவாமியை ஸ்தோத்திரஞ்செய்வதற்குப் பூமியில் எவன்ருன் சமர்த்தனுவானென்று சொல்லி பக்தி அதிகரித்தவனுய் வராகசுவாமியைத் தியானஞ்செய்து சொல்லுகிருன் மாயையினுல் வராகரூபமாகிய ஓ சுவாமியே உன்னுடைய எந்தக் கோரையென்கிற ஸ்தம்பத்தில் பூமியென்கிறது சமுத்திரமென்கிற எண்ணெய்ப்பிரவாகத்தால் நிரப்பப்பட்டதாய் தீப்பாத்திரத்தினுடைய ரீதியைப் பொருந்தியிருக்கின்றதோ இரத்தினமயமாகிய தடங்களுள்ள மேருபருவதம் அந்தத் தீப்பாத்திரத்தில் அசையாமலிருக்கிற தீபத்தினுடைய ரீதியை அடைந்திருக்கிறதோ அப்பேர்ப்பட்ட திடமானதுந் தீர்க்கமானதுமாகிய கோரையென்கிற ஸ்தம்பத்தை தியானஞ்செய்கிறேனென்று சொன்னுன்.

காவேரியைக்குறித்து.

அப்புறம் மற்ருேரிடத்துக்கு விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் காவேரியின் மந்தமாருதத்தினுடைய ஸ்பரிசத்தைப் பொருந்தி சொல்லுகிருன் என்னவெனில் காவேரியின் கமலங்களுடையவுஞ் சிரேஷ்டமான குமுதங்களுடையவுஞ் சம்பந்தமுள்ளதுந் தொனிசெய்கிறதுமாகிய பெரிய அலைகளில் விளையாட்டாக உஞ்சலாடுவதைப்போலே சஞ்சாரத்தால் மிகவுமுண்டான குளிர்ச்சியாலும் பரிமளத்தாலும் பிரகாசிக்கிறவனும் அந்த ஜலத்தில் ஸ்நானத்தினுடைய ரசத்தைத் தெரிந்திருக்கிறவனுமாகிய இந்த மந்தமாருதவாய்வு ஆயாசப்பட்ட மார்க்கஸ்தர்களுடைய சிரமத்தை தட்சணம் நிவாரணசெய்வதனுல் எவர்களுக்குத்தான் ஸ்தோத்திரஞ் செய்யத்தக்கவனுகமாட்டான் இன்னுங் காவேரிப் பிரவாகத்தைப் பார்த்துச் சிரக்கம்பத்துடனே சொல்லுகிருன் எப்படியெனில் ஸ்ரீரங்கத்துடனே சம்பந்தப்பட்டிருப்பதும் அலைகளால் அசைவாடிக்கொண்டிருக்கிற கமலக்கூட்டங்களுள்ளதுமாகிய (சகியபருவதபுத்திரியான) காவேரியினுடைய விஸ்தாரமான பிரவாகத்தைச் சிறப்புச்செய்கிறேன் அந்தப் பிரவாகம் பாபங்களைச் சாந்திசெய்வதற்காக ஆவிர்ப்பவித்ததுதானே இந்தக் காவேரி இன்னும் எப்படிப்பட்டதென்ருல் பாபங்களால் வியாகுலப்பட்டிருக்கிற மனிதர்களுடைய சகலமான பாபங்களையும் பரிகாரஞ்செய்வதில் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறதுந் தன்னுடைய கரைகளில் நெருங்கியிருக்கப்பட்ட வகுளர், திலகம்

ஆமலகம், சரளம், குந்தம், சந்தனம், மந்தாரம், ரசாலம், கோளம், கேசரம், பத்தரம், கதம்பம், ஜம்பு, பலாசம், கபித்தம், லோத்திரம், சிலீந்திரம், பாடலம், கிரமுகம் முதலாகிய அனேகவிருட்சங்களுடைய புஷ்பக்கொத்துகளுடைய கூட்டங்களிலிருந் தொழுகிக்கொண்டிருக்கிறதும் அதிகமாகிய ஆயாசத்தை நிவாரணை செய்வதுமாகிய பூந்தேன்களுடைய ரசத்தைப் பானஞ்செய்யவேணுமென்கிற அபேட்சையினல் சஞ்சாரஞ் செய்துக்கொண் டிருக்கிறதும் நீலமேகமென்கிற பிராந்தியை உண்டாக்குவதுமாகிய வண்டுக்கூட்டங்களால் வியாபிக்கப்பட்டிருப்பதினுலே யமுனுநதிக்கு ஒப்பாகவிருக்கிறதும் இன்னும் இராத்திரிக்காலங்களில் தங்கள்தங்கள் புருஷர்களுடனே செய்யப்பட்ட அதிகமாகிய சுரதகிரீடைகளால் உண்டான சிரமமுள்ள (அரசர்களுடைய அந்தப்புற) ஸ்திரீகளுடைய ஸ்நானகாலங்களில் உஞ்சலைப்போ லாடிக்கொண்டிருக்கிற பெரிய முத்தாரங்களிலிருக்கிற முத்துகளுடைய காந்திக்கூட்டங்களால் வெண்மையாகச் செய்யப்பட்ட ஜலமுள்ளதாணபடியால் பீதாம்பரமுள்ள விஷ்ணுவினுடைய பாதகமலத்தில் ஆவிர்ப்பவித்த கங்காநதியினுடைய சவுந்தரியத்தை நிகர்க்கின்றதும் இன்னும் எப்போதுந் தன்னுடைய மத்தியத்தி லிருக்கிறவனும் புராணபுருஷனுனவனுமாகிய ஸ்ரீரங்கசுவாமிக்கு சயனமாக விருக்கிற ஆதிசேஷனுடைய படங்களிலிருக்கிற இரத்தினங்களுடைய காந்திதாரைகளால் கொஞ்சஞ் சிவப்பாக விருக்கிறபடியால் சரஸ்வதிநதிக்குச் சமானமாக விருக்கிறதும் இன்னும் இரண்டுபக்கங்களிலும் நியமத்தால் தருமங்களை அனுஷ்டானஞ்செய்வதில் சிரத்தையினல் பத்மாசனம் போட்டுக்கொண்டிருக்கிறவர்களும் பரிசுத்தர்களுமான பூதேவர்களுமாகிய பிராமணர்களால் ஆரம்பஞ்செய்யப்பட்ட பிரம்ம எக்கியங்களில் சொல்லப்பட்ட மந்திரபிரமாணங்களை இரண்டுமூன்றுதரஞ் சொல்லிக்கொண்டிருப்பதாய் எப்போதுங் கமலங்களுடைய மத்தியத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறபடியால் (ஸ்ரீரங்கராஜனுடைய நாபிக்கமலத்தில் பிரகாசிக்காநின்ற பிரம்மாவின் முகங்களுடையகிரமத்தைப்) பிரகாசஞ்செய்துக்கொண் டிருக்கிறதும் மதத்திருக்கிறதுமாகிய எவ்வன அன்னங்கள் பேடையன்னங்களுடனே ஆலிங்கனஞ் சும்பனமுதலாகிய காமக்கிரீடைகள் செய்வதனுல் உண்டாகிற தொந்தரவினுலே உதிர்ந்துக்கொண்டிருக்கிற நூதன தாமரைப்புஷ்பங்களுடைய மகரந்தப்பொடிகளால் நல்ல சந்தனத்தால் பூரப்ப

ட்ட தேகமுள்ளதுபோ லிருக்கிறதும் இன்னு மிந்த காவேரிசம்ப ந்தமாகிய ஜலத்தில் ஆகாசமென்கிற பிராந்தியினுல் விதுவென்கிற பேருள்ள சந்திரன் வந்து (ஸ்ரீரங்கத்தில் வாசஞ்செய்துக்கொண் டிருக்கிறவனுந் தனக்குச் சமானமாகிய விதுவென்கிற பேருள்ள வனுமாகிய விஷ்ணு அனேக அவதாரங்கள் செய்திருக்கிறுனென் கிற பொருமையினுல்) தானும் அனேக ரூபங்களைத் தரித்துப் பிரகாசிக்கிறுனே என்னமோவென்கிற சொல்ப சந்தோஷத்தைக் கொடுக்கிற சந்தேகமென்பது அவ்விடத்தில் ஒன்றுக்கொன்று திடமான ஆலிங்கனத்தால் மிகவும் சந்தோஷத்துடனிருக்கிற சக் ரவாகப்பட்சி தம்பதிகளுடைய கூட்டங்களால் நிவாரணையானபி ன்பு சம்பூர்ணமான மோகமுள்ள எவ்வன புருஷர்களால் கண் சிமிட்டாமல் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கிற (சந்தோஷவிலாச த்தால் கழுத்துவரைக்கு முழுகியிருக்கிற தேகங்களுள்ள) சுந்தர ஸ்திரீகளுடைய முகங்களால் அலங்கரிக்கப்பட்டதும் இன்னும் சரஸ்வதிநதியுடனே சங்கமமாயிருக்கிறதுங் கவேரனென்கிற ரா ஜரிஷிக்கு குமாரத்தியாயிருக்கிறதும் உபசாந்தமுள்ள மகாத்து மாக்களுக்குப் பிரியமான வாசஸ்தலமாயிருக்கிறதுஞ் சுவர்னநதி யென்கிற பேர் வகித்திருக்கிறதும் ஸ்நானஞ்செய்பவர்களுடைய வும் ஸ்துதிசெய்பவர்களுடையவும் பாபங்களைப் பரிகாரஞ்செய் கிறதும் மார்க்கஸ்தர்களுடைய சிரமத்தை நிவாரணஞ்செய்கிறது மாகிய இந்த காவேரிநதி கண்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை விளையச்செய்கின்றது இன்னும் பவமென்கிற சமுசாரத்தை வற்ற ச்செய்கிறதுஞ் சுவர்னகாந்தியுள்ளதுஞ் சகியபருவதத்துக்குக் கு மாரத்தியுமாகிய காவேரிநதி பவனென்கிற சிவனுல் வற்றச்செய் யப்பட்டதும் நுரைகளால் வெள்ளியைப்போல் காந்தியுள்ளதுஞ் சகியபுத்திரியல்லாததுமாகிய கங்காநதியைப் பரியாசஞ்செய்கின் றது இன்னும் இந்தக் காவேரிக்குப் புருஷனுனவனை சுவர்னவந் தனென்றும் இதைச் சுவர்னநதியென்றுஞ் சொல்லுவார்கள் ஆ கையால் இந்த இரண்டுபேருக்குந் தம்பதித்தன்மையென்கிறது மிகவும் யோக்கியமாகப் பிரகாசிக்கின்றதென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இர ண்டுபக்கங்களிலும் மிகவும் பிரகாசிக்காநின்ற மதுரமாகிய மாம ரங்களுள்ளதும் மத்தியபாகத்திலிருக்கிற ரங்கநாயகசுவாமியினுல் பிரகாசமுள்ளதும் "பக்கங்களில்பிரகாசிக்கிற தாம்பரமுள்ளதும் மத்தியபாகத்தில் தகரம், வெள்ளியினுடைய பிரகாசமுள்ளதும்"

ஆகிய இந்தக் காவேரிநதி கனகநதியென்கிற பிரசித்தியை எப்படி யடையுமென்று சிலேஷையாகச் சொன்னான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நிஷ்காரணமான இந்த தூஷணையைக் கற்பிக்கிற உனக்குத்தான் தூஷணை வரும் மிகவும் ரமணீயமான இந்தக் காவேரியைப் பார் எப்படிப்பட்டதெனில் சகியபருவதத்துக்குக் குமாரத்தியாகிய இந்தக் காவேரி பீதாம்பரனால் அலங்கரிக்கப்பட்ட மத்தியபாகமுள்ளதுங் கமலங்களென்கிற மாலைகளுள்ளதும் ரமணீயமான பிரவாகமுள்ளதுமாகி தகப்பனுடைய வீட்டிலிருந்து சமுத்திரமென்கிற புருஷனுடைய சமீபத்துக்குச் சந்தோஷமுள்ளவளாய்ப் போகிறாள் இன்னும் இந்தக் காவேரியினுடைய இரண்டு கரைகளிலும் மலர்ந்திருக்கிறதும் வெண்மையாயிருக்கிறதுமாகிய புஷ்பக்கொத்துகளால் பிரகாசிக்கிற நுனிகளுள்ள விருட்சங்கள் இந்தக் காவேரிநதியைத் தாண்டுவதற்கு எத்தனப்பட்டவர்களாய்ச் சிரசுகளில் கட்டப்பட்ட வெள்ளையாகிய வஸ்திரங்களுள்ள மார்க்கஸ்தரைப்போலே பிரகாசிக்கின்றனவென்று சொன்னான்.

ஸ்ரீரங்கத்தைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் விமானத்தைக் கொஞ்சம் நடத்தி கீழே நோக்கினவனாகச் சந்தோஷத்துடனே சொல்லுகிறான் மான்கன்றுகளுடைய நேத்திரங்களைப்போற் கண்களுடைய சுந்தரஸ்திரீகளுடனே நூதனமாகிய விலாசங்களுக்கு ரமணீயமானதுங் கிச்சிலிச்செடிகள் முதலாகிய அனேக விருட்சங்களால் நிறைந்திருக்கிற உத்தியானவனங்களுள்ளதும் நீதிசாஸ்திரமென்கிற சமுத்திரத்தின் கரைகளைக்கண்ட பண்டிதஜனங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய இந்த ஸ்ரீரங்கமென்கிற திவ்விய நகரம் மிகவும் பிரகாசமாகவிருக்கின்றது இன்னும் நிதானமாகப் பார்த்து சிரக்கம்பத்துடனே சொல்லுகிறார் என்னவெனில் இந்தத் திவ்விய நகரத்தில் உத்தியானவனங்களிலிருக்கிற சரசுகளில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற அன்னங்கள் தர்க்கசாஸ்திரத்தினுடைய வாதங்களை உபக்கிரமஞ் செய்துக்கொண்டிருக்கின்றன லீலைகளுக்காகிய இந்தஉத்தியானவனங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற ஆண்குயில்கள் பதஞ்சலிமுனிவரால் சொல்லப்பட்ட

வியாகரண சூத்திரங்களைச் சொல்லி விளையாடிக்கொண்டிருக்கின்றன இங்கிருக்கிற சிறுவர்களெல்லாம் விளையாட்டுகளைப்போலே துவைத அத்துவைதப் பிரசங்கத்தைச் செய்கிறார்கள் * நாகணவாய்ப்புட்கள் சுவேச்சையாக மீமாம்ச சாஸ்திரசம்பந்தமாகிய காரிகைகளை அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கின்றன இன்னும் பிராதக்காலங்களிலும் நிர்மலமாகிய காவேரிஜலத்தில் ஸ்நானஞ் செய்து அடிக்கடி சேஷசயனனுன அரங்கநாதனை நேத்திரங்களால் பானஞ்செய்பவர்களுஞ் சகலமான விஷயங்களைத் தியாகஞ்செய்திருக்கிறவர்களுமாகிய யோகீஸ்வரர்கள் பாபங்களையெல்லாம் நாசஞ்செய்துக்கொள்பவர்களாய் இந்த ஸ்தலத்தில் காலத்தை க்ஷணமாகக் கழிக்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ விரோதமான வார்த்தைகளையே சொல்லுகிறாய் எப்படியெனில் இந்தஸ்தலத்தில் மான்களுடைய கண்களைப்போற் கண்களுடைய ஸ்திரீகளைத் தியாகஞ்செய்திருக்கிற முனிவர்களுக்கு ० சாரங்க திருஷ்டி ருசிக்கும். மாயை சம்பந்தத்தைத் தியாகஞ்செய்ய வேணுமென்கிற இச்சையுள்ள ஞானவான்களுக்கு ௨ கவேரஜா சங்கருசி யுண்டாகுமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனுகியகிருசானுவே, உன்னுற் சொல்லப்படுகிற சிலேஷை பதங்களுடைய விரோதங்களுக்கு வியாசர்தான் சமாதானஞ் சொல்லவேண்டியதென்றுசொல்லி எதிரிற்பார்த்து கைகூப்பினவனுக எந்த சுவாமி ஸ்ரீரங்கத்திற் பிரகாசிக்கிறானே? எந்த சுவாமியினுடைய தேகத்தில் இலட்சுமி பிரகாசிக்கிறாளோ? அந்த சுவாமிக்கு நமஸ்காரஞ்செய்கிறேன். அதனுல் மோகத்தையெல்லாம் நீக்குகிறேனென்றான். இன்னுஞ் சர்ப்பராஜனுகிய ஆதிசேஷனை சயனமாக

---

* நாகணவாய்ப்புள்-என்பது மயினு.

० சாரங்கதிருஷ்டி-என்பது மான்கண்களைப்போற் கண்களுள்ளஸ்திரீகளென்று தோஷகற்பிதமும், அந்த ரங்கநாயகன் தரிசனமென் றெதார்த்தமுமாகும்.

௨ கவேரஜாசங்கருசி-என்பது ஞானவான்களுக்கு மாயையினுடைய சம்பந்தத்தில் ருசியென்று தோஷகற்பிதமும், காவேரியினுடைய ஸ்நானத்தில் அபேட்சையென் றெதார்த்தமாகும்.

யுடையவனுஞ் சக்கரக்கையனும், உலகங்களுக்கெல்லாம் முக்கிய கர்த்தனுங் கஜேந்திரனுடைய பயத்தை நிவாரணை செய்தவனும், பரஞ்சோதி சொரூபனுமாகிய அரங்கநாதனை நமஸ்காரஞ் செய்கிறேனென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே * மகாபுஜங்கனாகிய இந்த சுவாமியை ஏன் நமஸ்காரஞ்செய்கிறாய் ஏனெனில் நீலவர்ணமாகிய பெரிய மேகத்தைப்போலே பிரகாசிக்கிற காந்தியுள்ளவனும், புஜங்கனென்கிற பேருள்ளவனுஞ் சிரேஷ்டமாகிய ஸ்ரீரங்கஸ்தலத்தில் எப்போதும் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறவனுஞ் சிங்காரமுள்ள ஜனங்களுக்குள்ளே முதன்மையுள்ளவனும் பரமபுருஷனுமாகிய இந்தசுவாமி மதில்களுடையகூட்டங்களின் மத்தியபாகத்தில் ராஜகிரகத்திலிருக்கிற லட்சுமிதேவியினுடைய சந்நிதியில் சங்கையில்லாமல் நித்திரை செய்துக்கொண்டிருக்கிறானென்றும், மத்திய எவ்வனமுள்ள ஸ்திரீகளுடைய உன்னதமாகிய குசங்களில் மிகவும் அபேட்சையுள்ளவனுஞ் ஜாரபுருஷனென்று பேர்வகித்தவனுங் காந்தியுள்ள நாட்டியசாலையில் எப்போதும் வாசஞ்செய்வதில் அபேட்சையுள்ளவனுஞ் சிங்காரமுள்ளவர்களுக்குள்ளே முதன்மையுள்ளவனும், பரமபுருஷனுமாகிய இவன் மதில் கூட்டங்களுடைய மத்தியபாகத்திலிருக்கிற ராஜகிரகத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற ஸ்திரீயினுடைய சமீபத்தில் பயமில்லாமல் நித்திரை செய்கிறானென்றுஞ் சிலேஷையாகச் சொன்னான்.

இதைக் கேட்ட விஸ்வாவசு வென்பவன் ஓ கிருசானுவே, சிலேஷையினால் சொல்லப்படுகிற உன் வசனங்கள் தோஷத்தைச் சம்பாதிக்கிறதல்ல மற்றென்னவென்றால் சந்தோஷத்தைச் சம்பாதிக்கிறதே ஆகையால் இந்த விஷயத்தில் நான் உத்தரவு சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இராஜர்களால் தங்கள் கிரீடங்களி லணியப்பட்ட பாதங்களுள்ளவனும், அபகாரங்களை நீக்கியிருக்கிறவனுமாகிய இந்த அரங்கநாயகசுவாமி தோஷங்களுக்குச் சம்பந்தப்படாமல் பூரணச்சந்திரனைப்போற் பிரகாசிக்கிறான். இன்னுஞ்சுபகரமாகிய அரங்கக்ஷேத்திரத்தில் பிரகாசிக்கிற சரீரமுள்ளவனும், நல்லானந்தமுள்ள ஞானிகளுக்குத் திருப்திசெய்பவனுமாகிய இந்

o மகாபுஜங்கன்-என்பது மகாஜாரபுருஷனென்றும், சிரேஷ்டமாகிய சர்ப்பத்தையுடையவனென்று மாகும்.

தச்சுவாமியைத் தரிசனஞ்செய்தபின்பு மானுடனே கலந்துகாண்பிக்கிற சரீரமுள்ளவனுங் குமுதங்களுக்குத் திருப்திசெய்பவனுமாகிய சந்திரனை தரிசனஞ்செய்யமாட்டேன். இன்னும் இந்தஅரங்கநாதனை சேவைசெய்பவன் தீனத்தன்மை யடையமாட்டான். மாயாசம்பந்தத்தை நீக்கினவனென்று பிரசித்தியையடைவான் இன்னும் இந்த ஸ்தலத்தில் சந்திரபுஷ்கரணியென்றொரு தீர்த்தம் மிகவும் ரமணீயமாக கமலங்கள் முதலானவைகளாலே கண்களுக்கு ஆனந்தகரமாக விருக்கின்றது. இன்னும் இந்த அரங்கஸ்தலமென்பது இலட்சுமிபதியான விஷ்ணுவினுடைய ஆவிர்ப்பவ ஸ்தலங்களில் முதன்மையானது இந்தத் தீர்த்தமும் எந்தக் காவேரியை வேதங்கள் ஸ்துதிசெய்கிறதோ அப்பேர்ப்பட்டதும், வாயுவினுல் விருத்தியடைகிறதுமாகிய காவேரியே இன்னுஞ் சகலமான உலகங்களுக்கு நாயகனுஞ் சர்வாத்துமானுமாகிய விஷ்ணு இந்த நகரத்துக்கு நாயகன் ஆகையால் இந்த நகரத்தில் வாசம் லபிக்குமேயானுல் உலகத்தில் எவன்ருன் வைகுண்டத்தை யபேட்சிப்பானென்ருன்.

இதைக் கேட்ட கிருசானுவென்பவன் பாதி சம்மதியுள்ளவனுகச்சொல்லுகிருன் சாயங்காலத்தில் மலருகின்ற குமுதங்களைப்போலே சாமளவர்ணமாகிய சரீரமுள்ளவனும், அஞ்ஞானத்துக்குப் பங்கஞ்செய்பவனுஞ் சந்திரனைப்போ லிருக்கிறவனுமாகிய அரங்கசுவாமியை பதியாகவுள்ள இந்த ஸ்தலம் அநேக விஷயங்களிலும் ரமணீயமான தேசமி ஆனுலும், இந்த ஸ்தலத்தில் துஷ்டர்களுஞ் சாந்தமாகிய மனதுள்ளவர்களுக்குத் துன்பஞ்செய்பவர்களுமாகிய துர்ச்சனர்கள் சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கிருர்கள். இவர்களுடைய விருத்தியினுலே இந்த ஸ்தலத்தில் சம்பத்துள்ள ஜனங்கள் பயமில்லாம லிருக்கமாட்டார்களல்லவா? இன்னும் எப்போதுஞ் சுவர்னநதியினுடைய மத்தியபாகத்தில் அபேட்சையுள்ளவனுஞ் சலனமில்லாத சம்பத்துக்கு நிதியாயிருக்கிறவனும், மார்பில் இலட்சுமிதேவியைத் தரித்தவனுமாகிய சுவாமி இந்த துர்ச்சனர்களுக்குப் பயப்பட்டோ என்னமோ அநேக மதில்களால் சுற்றிக்கொண்டிருக்கப்பட்ட ஸ்தலத்தில் அரங்கநாயகனென்று தன்னுடைய நாமதேயத்தை பிரசித்திசெய்துக்கொண்டு ஆதிசேஷனிடத்தில் சயனித்துக்கொண்டிருக்கிருனென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் புன்னகைசெய்து ஓ சினேகிதனே ஒருகாலத்திலேயும் ஸ்ரீமந்தர்களுக்குத் துன்பம்வருவதில்லை அவர்களுக்கு அபராதஞ்செய்கிற துர்ச்சனர்களுக்குச் சுவயமாகவே துன்பஞ்சம்பவிக்கும் எப்படியெனில் அந்நியர்களுடைய திரவியங்களை அபகரிக்கவேணுமென்கிற ஆசையினால் பிரயத்தினஞ்செய்கிற துர்ச்சனனானவன் சுவயமாகவே நாசத்தையடைவான் பெரிதாகிய தீபத்தை விழுங்கவேணுமென்று பிரயத்தினப்படுகிற வீட்டிற்பறவை தனக்குத்தானே தகிக்கப்படுமல்லவா இந்தப் பிரசங்கங்களெல்லாம்போதும் இனி ஸ்ரீரங்கமே வாசமாகவுள்ள அந்த இலட்சுமிபதியாகிய சுவாமியைத் தியானஞ்செய்கிறேன். எப்படியெனில், இந்த அரங்கநாதசுவாமி காதிவம்சத்தில்ஜனித்த இராஜரிஷியாகிய விஸ்வாமித்திரரிஷியினால் உபதேசிக்கப்பட்ட மகத்தாகிய பக்தியுள்ள இராமனால் பூஜைசெய்யப்பட்டான் அந்த ராகவன் அயோக்கியமாகிய வஸ்துவைப் பரித்தியாகஞ்செய்து யோக்கியமாகியவஸ்துவை சங்காகஞ்செய்பவன் எப்படியென்றால், (குரங்கராஜனை) எனில் மாரீசனென்கிற மானைச் சம்மரித்து அரங்கராஜனை பூஜைசெய்தான். இன்னும் பக்தி அதிகரித்தவனாய் பகவானை உபதேசித்துச் சொல்லுகிறான். என்னவெனில், ஓ பரமபுருஷனாகிய சுவாமியே தேவர்களுடைய ஸ்தோத்திரதொனிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறவனுஞ் சத்துருக்களில் அதிகமாகிய கோபமுள்ளவனும் நமஸ்கரிக்கிறவர்களுடைய பாபங்களை நாசஞ்செய்பவனும், எப்போதுங் கயிங்கரியத்தில் அபேட்சையுள்ளவனும் அழகாகிய சரீரத்தையுள்ளவனும், எப்போதுஞ் சம்பூர்ணமான ஆனந்தமுள்ளவனும், பூரணச்சந்திரனுக்குச் சமானனுமாகிய ஆதிசேஷனிடத்தில் நீ சயனித்துக்கொண்டிருக்கிறாய் இன்னும் பகவானாகிய ஓ ரங்கநாதசுவாமியே உன்னுடைய * இடதுகண்வியாகரணத்தைச் சொல்லியதன்றோ 0 வலதுகண் அந்த வியாகரணத்தை வாக்கியரூபமாக விவரித்துச் சொல்லியதன்றோ ௨ சயனமானது அந்தவியாகரணத்துக்குச்சரியாக பாஷியஞ்செய்ததன்றோ? வாகனமானது வேதமயமாகிய துவிஜராஜனாகியதன்றோ? மருமகள் சரஸ்வதியன்றோ? இப்பேர்ப்பட்ட

* இடதுகண்-என்பது சந்திரனாகிய பாணினிமகாரிஷி.

0 வலதுகண்-என்பது சூரியனாகிய வரருசிமகாரிஷி.

௨ சயனம்-என்பது சேஷனாகிய பதஞ்சலிமகாரிஷி.

உன்னுடையசபையில் கவிஜனங்கள் ஸ்தோத்திரஞ்செய்வதற்குப் பயப்படுவார்களல்லவா? ஆனதால் நானும் பேசப் பயப்படுகிறேன். இன்னுங் கரங்களைக்கூப்பினவனாய் பிரார்த்தனையுடனே சொல்லுகிறான், என்னவெனில், சிரேஷ்டமாகிய குணங்கள்கூட்டத்துக்கு எல்லையானவனும் மேகத்தைப்போலே சாமளகாந்தியுள்ளவனும், எப்போதுந் தேவஸ்திரீகளால் கானஞ்செய்யப்பட்ட நாமங்களுள்ளவனுஞ் சமுசாரபாசங்களைப் பரிகாரஞ்செய்பவனும், பிரகாசமாகிய பொன்முதலிய ஆபரணங்களுள்ளவனுமாகிய அரங்கநாதசுவாமி எனக்கு மங்களஞ் செய்யக்கடவதென்று சொன்னான்.

ஸ்ரீரங்கநாயகியைக்குறித்து.

அப்புறம் இன்னொரிடத்தைப்பார்த்து விஸ்வாவசுவென்பவன் வினயத்துடனே சொல்லுகிறான், குமுதங்களுடைய கர்வத்தை திரஸ்காரஞ்செய்கிற நேத்திரங்களுள்ளவளுங் காந்திகளெல்லாங்கூடி ஒருருவத்தைப்போலிருப்பவளும், அரங்கநாதசுவாமிக்குப் பாரியானவளுமாகிய ஸ்ரீரங்கநாயகிதேவியை ஸ்துதிசெய்கிறேன் ஒ தாயாகிய இலட்சுமிதேவியே நீசமுசாரபாசத்தை யடைந்தவர்களுக்கு மோகத்தை நாசஞ்செய்வதில் ஒருமூலிகையாகவும் மோக்ஷமார்க்கத்துக்கு ஏணியாகவுஞ் சித்தசுத்திசெய்வதற்கு சித்தகுளிகையாகவுஞ் சிந்தைகளென்கிற இருட்டுக்குச் சந்திரிகையாகவும், வித்தைகளுடைய விளையாட்டுக்கு நாகணவாய்ப்புள்ளாகவும், விஷ்ணுவுக்கு உரமாலையாகவும், எனக்குப் பாரிஜாதபுட்பக்கொடியாகவுஞ் சந்தோஷமென்கிற சமுத்திரத்துக்கு அலையாகவும் இருக்கிறாயென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஒ விஸ்வாவசுவே, காந்தியினாலே சஞ்சலமென்கிற மின்னலை அதிகரித்திருந்தாலும், நடத்தையால் அதிக சஞ்சலமுள்ளவளும் அனுசார ஜனங்களிடத்திலே விஸ்வாசமுள்ளவளுமாகிய இந்த இலட்சுமிதேவியை வித்துவானானவன் எப்படி ஸ்தோத்திரஞ்செய்வான் எனெனில் இந்த இலட்சுமிதேவியினுடையகடாட்சந் தப்பிப்போனபிற்பாடு முன்பு இரத்தினகசிதமாகிய கட்டிலில் சயனித்துக்கொண் டிருந்தவன் பின்பு உதிர்ந்த வைக்கோல் சம்பந்தமாகிய சயனத்தை மிகவும்

அபேட்சித்துப் பிரார்த்திக்கிறான் முன்பு எவன் பாலன்னத்தை யுங் கெட்டதாக நினைத்திருந்தானோ பின்பு அவனே கஞ்சித்தண்ணீரை அமிர்தமாகப் பானஞ்செய்கிறான் முன்பு சுவர்னவஸ்திரங்களை அணிந்திருந்தவன் பின்பு கந்தையை யாசிக்கிறான் முன்பு அரசனாகவிருந்தவன் பின்பு சேவகனாகிறான் இன்னும் எவன் தாதாவினுடைய வாயிலில் தடைப்பட்டிருந்தானோ அவனுடைய வாயிலில் ஆனைகளைப் பார்க்கிறோம் எவன் பருகாலமாக வெறுந்தரையில் சயனித்துக்கொண்டிருந்தானோ அவனுடைய புஜத்தில் பூமி சயனிக்கிறது என்றால் அரசனாகிப் பூமியை யாளுகிறான் எவனுடைய ஸ்திரீகள் புசிக்க ஆகாரங்கள்கூட கிடைக்காதிருந்தார்களோ அவனுடைய ஸ்திரீகள் நானாவிதமாகிய ஆரங்களைப் பொருந்தியிருக்கிறார்கள் ஆகையால் இலட்சுமிதேவியினுடைய கடாட்சங்களென்கிற அலைகளால் பள்ளங்கள் மேடுகளாகின்றன இன்னும் ஓ இலட்சுமிதேவியே தனத்துக்காக அரசர்களல்லாத பந்துஜனங்களை சம்மாரஞ்செய்கிறவர்களும் நூறுமுதலிய பரஸ்திரீகளைச் சேருகிறவர்களும் ஜந்து இம்சைகளால் விளையாடிக்கொண்டிருக்கிறவர்களும் வஞ்சனை ஜனங்களுடைய சகவாசத்தினாலே சந்தோஷத்தை யடைகிறவர்களுங் கடினமாகியே அயுக்தமாகியே பேசுகிறவர்களுஞ் சுவல்பமாகவே சமையல்செய்கிறவர்களுமாகிய ஜனங்களுடைய வீடுகளிலேயே எப்போதும் நடனஞ்செய்துக்கொண்டிருக்கிறாய் இந்தக் காரியம் உனக்குத்தான் சம்மதமானது இன்னும் ஓ இலட்சுமிதேவியே எவர்களுடைய நேத்திரங்கள் பரஸ்திரீகளுடைய தரிசனமென்கிற வித்தையில் வித்பத்தியில்லாததுகளோ மனதுகள் பரதிரவியங்களைச் சிந்திக்கிறதில் மூடத்தன்மையுள்ளதுகளோ வாய்கள் பொய்ப்பேச்சுகளை அறியாததுகளோ எவர்கள் பசுவின் பாலைத் தெரியாதவர்களாகிப் பசியுள்ள சிசுக்களை சுத்தஜலத்தால் திருப்திசெய்கிறார்களோ அப்பேர்ப்பட்டவர்களுடைய வீடுகளைப் (பயமென்கிற நதிக்கு மரக்கலம்போலிருக்கிற) உன்னுடைய நேத்திரங்களால் நீ ஒருகாலத்திலேயும் பார்க்கமாட்டாயல்லவாவென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனாகிய கிருசானுவே உன்னுடைய இந்த வாக்கு மனதுக்குத் துன்பத்தை யுண்டாக்குகின்றது துஷ்டஜனங்களிடத்தில் காண்பிக்கிறதுஞ் சத்ஜனங்களுக்கு உபயோகமில்லாதிருக்கிறதுமாகிய அயோ

க்கியசம்பத்து மோட்சத்துக்குக் காரணமாகிய இலட்சுமிகிருபா கடாட்சம் இல்லாமற்போவதற்கு அறிகுறியாக விருக்கின்றது (முன்பு ஒரு வித்துவானுலே குணங்களில்லாமற்போவதற்கு இலட்சுமிதேவி பராமுகமாக விருக்கிறதே காரணமென்று சொல்லப் பட்டிருக்கிறதல்லவா எப்படியெனில் விஷ்ணுவுக்குப் பிரியமான வளாகியும் உலகத்துக்கு மாதாவாகியுமிருக்கிற ஓ இலட்சுமி நீ எவனிடத்தில் பராமுகமாகிறுயோ அவனுடைய ஆசாரமுதலிய எல்லாக் குணங்களுக்குந் துர்க்குணங்களாகிவிடுமல்லவா வென்பதே) ஆகையால் துர்ஜனங்களுக்கு அயோக்கியமாகிய மார்க்கத்தினுல் எந்த சம்பத்து பிராப்தியாகுமோ அந்த சம்பத்து பின்பு நரகத்தினுடைய அனுபவமே பிரயோசனமுள்ளதாகும் அது இலட்சுமிதேவியினுடைய கிருபைக்குப் பிரயோசனமல்ல எப்படியென்றுல் தன்னியரல்லாத தம்மைத் தன்னியராக நினைத்துக்கொண்டிருக்கிறபடியால் வித்துவான்களைத் துருணமாக நினைக்கிறவர்களுந் துஷ்டமாகிய புத்தியுள்ளவர்களுந் தருமங்களில் பொருமையுள்ளவர்களுந் தமோகுணசம்பந்தமாகிய புண்ணியலேசத்தால் பிராப்தியாகிய சுவல்பசம்பத்துள்ளவர்களும் ஜாரபுருஷர்களுமாகிய இந்த நீசர்கள் சுவல்பதினங்களுக்குள்ளேயே பிராணன்களை விட்டு எமன் சம்பந்தமாகிய நரகங்களில் அநேகவிதமாகிய வேதைகளை அனுபவிக்கப்போவார்கள். நீபார் இன்னும் யோக்கியர்களாகிய சிரேஷ்டஜனங்களை இலட்சுமி பார்க்கிறதில்லையென்று உன்னுலே எந்தவசனஞ் சொல்லப்பட்டதோ அது அஞ்ஞானமூலமானபடியால் திரஸ்காரஞ் செய்யத்தகுந்தது. அப்பேர்ப்பட்ட சிஷ்டஜனங்களுக்கு மோக்ஷமென்கிற ஐஸ்வரியமே முடிவாகவுள்ள திடமாகிய பகவத்பக்தியென்கிற சம்பத்தைக் கொடுக்கிறுள். சமுத்திரத்துக்குக் குமாரத்தியாகிய இலட்சுமிதேவியினுடைய கடாக்ஷமென்கிற அமிர்த தாரையானது சமுசார பாசங்களென்கிற விகாரங்களை தூரமாகத் தள்ளிவிடும் எப்படியென்றுல் சம்போகஞ் செய்கிறகாலத்தில் விருத்தியடைந்துக்கொண்டிருக்கிற மதமுள்ள ஜாரபுருஷர்களுடைய காடாலிங்கனத்தால் தழுவப்பட்ட பிரவிடஸ்திரிகளுடைய முத்தாரங்களின் நூல்கள் அறுந்து போவதுபோலே நாசத்தையடைகிற சம்பத்துகள் சத்புருஷர்களுக்குச் சம்பவிக்காது அந்த சத்புருஷர்கள் அந்தத்தில் சுவர்க்கலோகத்தையும் நரகத்தைப்போ லெண்ணுவதற்குத்தகுந்ததாகிய பரமபதத்தில் சாஸ்விதமானதும் முடிவில்லாததுமாகிய ஆனந்த

ரூபமான மோக்ஷத்தை அநுபவிப்பார்கள். இன்னும் எந்தஇலட்சுமி கடாக்ஷத்தினுடைய தாரதம்மியத்தால் எந்த ஜந்துக்களானாலும், மனுஷர்களுக்குந் தேவர்களுக்கும், பசுக்களுக்கும் அதிபதிகளாகுமோ அப்பேர்ப்பட்ட இலட்சுமிகடாக்ஷப் பிரவாகமென்பது சர்வோத்தமமாக விருக்கின்றதென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓவிஸ்வாவசுவே அதிகமாகிய இலட்சுமிகடாக்ஷம் வைபவங்களுடைய அபிவிருத்திக்குக் காரணமென்றுசொல்வது யுக்தமல்ல சுவல்பமாகிய அந்த இலட்சுமிகடாக்ஷம் அதிகமாகிய சம்பத்துக்குக்காரணமாக விருக்கின்றது. எப்படியென்றால், விஷ்ணுவுக்குப் பாரியாளாகிய இலட்சுமிதேவியினுடைய சூட்சுமமாகிய கடாக்ஷத்தால் அஸ்வம் ஆனை இரதம் பல்லக்குமுதலிய வாகனங்கள்வரும் அந்தஇலட்சுமி அதிககடாக்ஷத்தால் மேகமும் எருதும் பட்சியும் வாகனங்களாகுமென்றான் என்றால் மேற்கண்டவைகளை வாகனங்களாக இந்திரனும் ருத்திரனும், பிர்மாவும் ஆவார்களென்பதாம்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன், புன்சிரிப்புக்கொண்டு ஓ கிருசானுவே இந்தப்படி சிறப்பைக்காண்பிக்கிற இலட்சுமியினுடைய நிந்தையைக்குறித்து நான் சந்தோஷிக்கிறேன் இன்னும் பூமியில் சத்புருஷரானவர்கள் கர்வத்தைக்கொடுக்கிற அதிக தனத்தால் மதித்தவர்களும், மன்மத பாணங்களுக்கு வசப்பட்டவர்களுமாகிய இராஜர்களால் பிரயோசனமில்லையென்று யோசனை செய்து தேவேந்திரனால் ஸ்துதிசெய்யப்பட்டவளும், பத்மநாபனாகிய விஷ்ணுவுக்கு அந்தப்புரஸ்திரீயுமாகிய இலட்சுமிதேவியை எப்போதுந் தியானஞ் செய்வார்களென்றுசொல்லி மறுபடியுந் தியானஞ்செய்து கரங்களைக் கூப்பினவனாகச்சொல்லுகிறான் விஷ்ணுவுக்குப் பிரியமாகியும், எனக்குத் தாயாகியுமிருக்கிற ஓ இலட்சுமிதேவியே பிராதக்காலத்தில் மலர்ந்த கமலக்கூட்டங்களைச் செயித்ததுஞ் சுபகரமுள்ள குணங்களுள்ளதுமாகிய உன்னுடைய கண்களை நமஸ்காரஞ்செய்கிறேன். எட்டுகண்களும், மூன்றுகண்களும், ஆயிரங்கண்களும், பன்னிரண்டு கண்களும்உள்ள தேவர்களெல்லாம் உன்னுடைய கண்களுக்குப் பாத்திரராகவேணுமென்று பிரார்த்திக்கிறார்களல்லவாவென்று சொன்னான்.

கருடாழ்வாரைக்குறித்து.

அப்புறம் இன்னேரிடத்தை விஸ்வாவசுவென்பவன் பார்த்துச் சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் பயங்கராளாகிய சத்துருக்களைத் திரஸ்காரஞ்செய்கிற தேவகூட்டத்தால் சுற்றியிருக்கப்பட்ட தேவேந்திரனுடைய கர்வத்தையும் பராக்கிரமத்தையும் பங்கஞ்செய்தவனும், பக்ஷிராஜனுமாகிய கருடாழ்வான் என்னுடைய இரண்டுகண்களில் சம்பூர்ண விஸ்வாசத்துடன் கூடியிருக்கிற சந்தோஷரசத்தைப் பொழிகிறுனென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே மரியாதை அதிக்கிரமித்த இந்த கருடனை ஏன் வர்ணிக்கிறுய். ஏனெனில், இந்த கருடன் வேதங்களே தேகமாக வுடையவனுகியும், பக்ஷிராஜ்னுகியும் விஷ்ணுவைத் தாங்கினவனுகியுமிருந்துஞ் சங்கையில்லாமல் * கிராதர்கிராமத்தை யெப்படி விழுங்கினுனென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே அந்தக் கிராதர்கிராமத்தை விழுங்கினதினுலே இந்த கருடனிடத்தில் சாதுஜனங்களை அனுக்கிரகஞ்செய்வதற்குந் துர்ஜனங்களை நிக்கிரகஞ்செய்வதற்குஞ் சாமர்த்திய மிருக்கிறதென்றும், யோக்கியம் அயோக்கியம் விவரிப்பதில் சாதுரியமிருக்கிறதென்றும், பிரகாசமாகிறபடியால் இந்த பூஷணத்தை ஏன் தூஷணமாகச் சொல்லுகிறுய் எப்படியென்றுல், பக்ஷிராஜனுகியகருடன் பாபங்களுடனே கூடியிருக்கிறதும், அந்த கிராமத்துக்குள்ளே யிருக்கிறதுமாகிய துஷ்டகிராதகூட்டத்தை விழுங்கினவனுய் தன்னுடையகண்டத்திலிருந்து தீனனுகிய ஒருபிராமணனை க்கிவிட்டான். இன்னும் பக்ஷிகளுக்குத் தேவேந்திரனுகிய இந்த கருடன் எதேச்சையாய் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற காலங்களிலும், விஷ்ணுவினுடைய கயிங்கரியமென்கிறது தடையின்றியிருக்கிறது. எப்படியென்றுல், இந்த கருடன் தன்னுடையவேகத்தின் இறக்கைகளுடைய காற்றினுல் எழும்பப்பட்ட பூ சம்பந்தமாகிய தூளிகளால் கப்பப்பட்டதுந் தனக்கு ஜேஷ்டனுகிய அருணனுல் ஓட்டும்படியான அஸ்வங்களுள்ள இரதத்திலிருக்கிற சூரியனுடைய மண்டலத்தில் வாசஞ்செய்யப்பட்ட நாராயணமூர்த்தியால் பொருந்தப்பட்டதுமா

* கிராதர்-என்பது குறவர் வேடர்.

கிய ஆகாசமார்க்கத்தை ஷெ கருடன் தன்னுடைய வேகத்தால் சமுத்திரத்திலிருந்து எழும்பும்படியாகிய பெரியஅலைகளால் கழு வினவணுகி அவைகளால் சிதறப்பட்ட நுரைக்கண்டங்களென்கிற புஷ்பக்கூட்டங்களால் அலங்கரிக்கிறான் இன்னும் விஷ்ணுவினு டைய சேவைகாலங்களில் சிவனுடைய ஆபரணங்களாகிய சர்ப்ப க்கூட்டங்களால் பயந்து ஓடிக்கொண்டிருக்கிற தேவர்களுக்கு எந்தக் கருடனுடைய தரிசனந் தைரியசம்ரட்சணைசெய்கிறதோ அப்பேர்ப்பட்டவனும் மேருபருவதத்தினுடைய சிகர காந்திக் குச் சமானமாகிய தேககாந்தியுள்ளவனுஞ் சத்துருக்கூட்டங்க ளைச் சேதிக்கிறவனும் வேதசொரூபனுமாகிய பட்சிராஜன் எங்க ளுக்கு க்ஷேமங்களைச் செய்யக்கடவது இன்னும் தேகமாகச் செ ய்யப்பட்ட வேதசாகைக ளுள்ளவனுஞ் சுந்தரமாகிய இரக்கைக ளுள்ளவனும் உத்தமனும் வினதையென்கிற தாயாருக்கு மிகவும் வினயத்துடனே நடந்துக்கொள்ளுகிறவனுமாகிய கருடன் பருவ தத்துக்குச் சமானமாகிய ரூபத்தைப் பொருந்தியிருக்கிறான் மது வென்கிற இராட்சதனுக்குச் சத்துருவாகிய விஷ்ணுவினால் ஸ்திர மாகிய சந்தோஷத்தை யடைகிறானென்று சொன்னான்.

அரிதாசர்களைக்குறித்து.

அப்புறம் நகரமுழுமையும் விஸ்வாவசுவென்பவன் பார்த்து கரங்களைக் கூப்பினவனாகச் சொல்லுகிறான் என்னவெனில் ஸ்ரீர ங்கக்ஷேத்திரத்தில் நியமமாக வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறவர் களுஞ் சமுசாரபயங்களை நீக்கினவர்களுஞ் சிஷர்களுடைய புத்தி யை மலரும்படிச் செய்கிறவர்களுமாகிய அரிதாசர்களுக்கு நமஸ் காரமென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இ ந்த நகரத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற எல்லாரையும் நீ நமஸ்காரஞ்செய்யாதே ஏனெனில் நிறைந்திருக்கப்பட்ட கூட்டங் களுள்ள அரிதாசர்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த நகரத்தில் சிலபேர் அன்னத்தை விக்கிரயஞ் செய்கிறவர்க ளிருக்கிறார்கள் எப்படியெனில் சுவாமிக்கு நிவேதனஞ்செய்யப்பட்டதும் பாபங் களைப் பரிகாரஞ்செய்யப்பட்டதும் இந்திரன் முதலாகிய தேவர் கள் நிமித்தமாகத் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதுமாகிய அன்

னத்தை தனஞ் சேர்ப்பதில் சபலமுள்ள சிலபேர் விக்கிரயஞ்செய்கிறார்கள் இன்னுஞ் சுவாமிக்குச் செய்யுங் கயிங்கரியநிமித்தமாகக் கொடுக்கப்பட்ட தங்களுடைய கிரகங்களை தனத்தில் ஆசையுள்ளவர்களாய் விக்கிரயஞ்செய்யாமலே திருப்தியடையமாட்டார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ மந்தபுத்தியுள்ள கிருசானுவே இப்படிச் சொல்லாதே ஏனெனில் முகுந்தனுடைய பாதாரவிந்தங்களை வந்தனஞ்செய்துக்கொண்டிருக்கிற தேகிகளுக்கு எந்தெந்தக் காரியந்தான் ஜீரணமாகமாட்டாது எப்படியெனில் பிரபலமான ஔஷதத்தைப் புசித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு அபத்தியஞ்செய்தால் ஏதாவது அனர்த்தஞ்சம்பவிக்குமாவென்று சொல்லி நகரத்தையெல்லாம் பார்த்துச் சிறப்புடனே சொல்லுகிறான் என்னவெனில் மன்மதனுக்குச் சத்துருவாகிய சிவனுடைய க்ஷேத்திரங்களிலாவது கம்சனுக்குச் சத்துருவாகிய விஷ்ணுவினுடைய க்ஷேத்திரங்களிலாவது சப்தப்பிராகாரங்களினால் சூழப்பட்டிருக்கிற இந்த ஸ்ரீரங்கத்துக்கு இதரமாகிய எந்த க்ஷேத்திரங்களாவது உலகத்தில் பார்க்கப்பட்டிருக்கிறதாவென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இப்படிச் சொல்லாதே இந்த ஸ்ரீரங்கத்தினுடைய சமீபத்திலேயே காவேரிதீரத்தில் சப்தப்பிராகாரங்களால் சூழப்பட்டிருக்கிற சைவக்ஷேத்திரத்தைப் பாரென்றான்.

திருவாவிணக்காவைக்குறித்து.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் புன்சிரிப்புக்கொண்டு சப்தப்பிராகாரங்களால் சூழப்பட்டிருக்கிற இந்த நகரத்தைச் சமத்காரத்தினால் அரங்கக்ஷேத்திரத்துக்குச்சமானமென்று சாதனைசெய்கிறாயென்று சொல்லி சிறப்பாகச் சொல்லுகிறான் என்னவெனில் சுந்தரனாகிய மன்மதனுடைய கர்வத்தை நாசஞ் செய்வதில் சமர்த்துள்ள நேத்திர அக்கினியால் சிவப்பாகவுள்ள நெற்றியுள்ளவனுஞ் சர்ப்பராஜர்களென்கிற பயங்கரமாகிய ஆபரணங்களால் சுந்தரனாகவிருக்கிறவனுமாகிய எந்த சிவன் வெள்ளிமயமான கைலாயபருவதத்தில் அந்தப்புர ஜனங்களுடனேகூடிப்

பிரகாசிக்கிறனே? அப்பேர்ப்பட்ட பரிபூரணகாந்தியுள்ள சங்கரன் பூமியில் சகியபருவத குமாரத்தியாகிய காவேரிநதியினுடைய தீரத்தில் பருகாலமாக வாசஞ்செய்துக்கொண் டிருக்கிறனென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சினேகிதனே இந்த ஸ்தலத்தில் பிரபஞ்சத்தில் விரோதமாகிய கிரமங் காண்பிக்கிறதினால் இந்த ஸ்தலத்திலிருக்கக்கூடாது. ஏனெனில், எந்தஜனங்கள் நதிஜலங்களால் அபிஷேகஞ் செய்யப்படுவார்களோ அந்த ஜனங்களுடைய * தாபம் பரிகாரமாகுமென்று லோகப் பிரசித்தியாகவிருக்கின்றது. இந்த ஸ்தலத்தில் விபரீதமாய் ஈஸ்வரனுடைய அபிஷேகத்தால் காவேரிநதி தன்னுடையதாபத்தைப் பரிகாரஞ் செய்துக்கொள்ளுகின்றதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் நீ இப்படிசொல்வது என்னகாரணந் தெரியவில்லையென்றான்.

அதற்கு கிருசானுவென்பவன் சொல்லுகிறன். என்னவெனில், கங்காநதியினுடைய சங்கமத்தால் யமுனாநதி மிகவுங் கர்வமுள்ளதாகவிருக்கின்றது. தனக்கோ அந்தகங்கையினுடைய சம்பந்தமில்லையென்று சகிக்கக்கூடாத தாபமுள்ள இந்தக் காவேரி கங்காதரனுகிய சிவன் தன்னுடைய ஜலத்தினல் அபிஷேகஞ் செய்யப்படுகிறபடியினலே அந்த தாபத்தைப் பரிகாரஞ்செய்துக்கொள்ளுகிறதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இப்பேர்ப்பட்ட தூஷணமானது குணங்களைக் கிரகிக்கிறவர்களுக்குச் சம்மந்தமானதேசரி (ஆகிலும், இந்த ஈஸ்வரன் பாலத்திலிருக்கிற அக்கினி நேத்திரத்தினுடைய வெப்பந் தணியும்பொருட்டு சிரேஷ்டமாகிய கங்கையையுஞ் சந்திரனையுஞ் சிரசில் தரித்துக்கொண்டிருப்பதுடன் தேவர்கள் அமிர்தங்கடைந்தபோது க்ஷீராப்தியினுண்டான ஆலகால விஷத்தைப் பானஞ்செய்தது கண்டத்திலிருப்பதாலுந் தாருகாவனரிஷிகள் ஏவிய ஓமகுண்டத்தைக் கையில் மழுவாயுதமாக வைத்துக்கொண்டிருப்பதாலுங் கொடியவிஷமுள்ள சர்ப்பக்கூட்டங்களை அங்கங்களில் ஆபரணமாக அணிந்துக்

* தாபம்-என்பது வெப்பத்துக்குந் துன்பத்துக்கும் ஆகும்.

கொண்டிருப்பதாலுங் ○ திகம்பரனுனதாலுங் தேக முழுமையும், அதிக வெப்பங்கொண்டிருக்கிறபடியால் இந்தக்காவேரிஜலத்தின் அபிஷேகத்தால் மிகவுஞ் சந்தோஷமுள்ளவனுயிருக்கிருன். ஆன தால் இந்த ஈஸ்வரன் அப்புலிங்கமென்கிற நாமதேயத்துடன் தன் அடியார்களுக்கு இஷ்டார்த்தங்கள் முதலானவைகளை நிறைவே ற்றிக்கொண்டும், உலகமாதாவாகிய அகிலாண்ட வம்மையுடன் பிரகாசித்துக்கொண்டும் இருக்கிருன். இன்னும் இதற்குச்சமீபத் தில் பிரகாசிக்கின்ற திரிசிரபுரமென்கிற சிரேஷ்டமாகிய நகரத் தைப்பார் அதில் அநேக வித்துவச்சிரோன்மணிகளும் செல்வவா ன்களுமிருந்து உலகோபகாரமான காரியங்களைச் செய்துக்கொ ண்டு சிறப்புற்றிருக்கிருர்களென்று சொன்னுன். ஆ-ஐ.

சோழதேசத்தைக்குறித்து.

அப்புறம் இன்னேரிடத்துக்கு விமானத்தைநடத்தி விஸ்வா வசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிருன். என்னவெ னில், சேஷசயனனுன விஷ்ணுவினுடைய சுபஸ்தலங்களால் அல ங்கரிக்கப்பட்ட பூமிகளுள்ளதும் விஷபானஞ்செய்த சிவனுடைய ஸ்தலங்களால் நிறைந்திருக்கப்பட்ட பிரதேசங்களுள்ளதும் மந்த வாயுவினுடைய சஞ்சாரகாலங்களில் உஞ்ச லாடிக்கொண்டிருக் கிற மதுரமாகிய மாமரங்களுடைய நூதனமாகிய தளிர்களுள்ள துமாகிய சோழதேசங்கள் மிகவும் பிரகாசிக்கின்றன. இன்னும் அழகுள்ள வெற்றிலைக்கொடிகளால் ஆலிங்கனஞ் செய்யப்பட்ட பாக்குமரங்கள் சுந்தரஸ்திரீகளால் ஆலிங்கனஞ்செய்யப்பட்ட கா முகப்புருஷர்களைப்போலே ஆனந்தகரமாக விருக்கின்றன. இன் னுங் காவேரிநதியினுடைய கரைகளில் உத்பத்தியானதும் ஆகாச மார்க்கத்தை வியாபித்திருப்பதும் பெரிதாகியபழங்களுள்ளதுமா கிய தென்னமரங்களைப்பார் இந்த விருக்ஷங்கள் தங்கள்சமீபத்தில் வருகிறவனுஞ் சூரிய மண்டலத்தைப் பொருந்தியிருக்கிறவனுமா கிய சுவாமிக்குப் பக்தியினுல் நூதனமாகிய காணிக்கைகளைக் கொடுப்பவைகளைப்போலே பிரகாசிக்கின்றனவென்ருன்.

○ திகம்பரன்-என்பது வஸ்திரமில்லாதவனென்றுந் திக்கு களை வஸ்திரமாக வுள்ளவனென்றும், ஆகும்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே என் புத்திக்குத் தோன்றுவதென்னவெனில் அசைவாடிக்கொண்டிருக்கிற தீர்க்கமாகிய ஓலைகளுள்ளதும், பெரிதாகிய பழங்களுள்ளதும், வாயுவினலெழும்பிய தூசுகளால் கப்பப்பட்டிருக்கிறதும், மிகவும் உன்னதமுள்ளதுமாகிய எதிரிலிருக்கும் இந்ததென்னமரங்கள் தூமபானஞ்செய்கிற குடுக்கைகளைத்தரித்தவர்களும் அசைவாடிக்கொண்டிருக்கிற தீர்க்கமாகிய ஜடைகளுள்ளவர்களும், பஸ்மத்தால் பூசப்பட்ட தேகமுள்ளவர்களும், திகம்பரர்களுமாகிய பாஷண்டிகளைப்போலே பிரகாசிக்கின்றனவென்றான்.

இதைக்கேட்ட விஸவாவசுவென்பவன், புன்னகையுள்ளவனாய் இன்னொரிடத்தைக் காண்பித்துச்சொல்லுகிறான். என்னவெனில், பத்மினி ஸ்திரீகளுடைய மனதையிழுக்கிற பரிமளபுட்பங்களுள்ளதும், அதிகமாகிய காற்றின் சம்பந்தத்தால் மிகவுந் தூசுகளால் மூடிக்கொண் டிருக்கிறதுமாகிய புன்னுகவிருக்ஷங்களையுங் கமலக் கொடிகளைப் பிடுங்கும்படியான வாசனையுள்ள மதங்களுள்ளதும், மன்மதனுடைய பயங்கரமான பாணப்பிரயோகத்தால் பெண் யானைகளுடனே சங்கமத்தைப் பொருந்தியிருக்கிறதுமாகிய ஆண்யானைகளையும் பார் இன்னுமிந்தசோழதேசத்தினுடைய ரமணீயத்தன்மை மிகவுஞ் சிறப்பாகவிருக்கின்றது எப்படியெனில் ஜோதிஷடோமம், ஸ்தோமம், உக்தியம், அதிராத்திரம், அபதோரியாமம், ஷோடசி, வாஜபேயம், பௌண்டரீகம் முதலாகிய எந்த மகாஎக்கியங்களுண்டோ அவைகளெல்லாம் இந்த தேசப்பிராமணர்கள் விதிப்படி செய்துக்கொண்டுவருகிறார்கள் இன்னும் வீடுவீடுகளிலும் அக்கினியோத்திரங்கள் செய்பவர்களுஞ் சாஸ்திரங்களை மலரும்படிச்செய்கிறவர்களுந் தோஷங்கள் இல்லாதவர்களும் புண்ணியத்தில் மனதுள்ளவர்களும் வேதமே முக்கியமானபொருளாக உள்ளவர்களுமாகிய பண்டிதோத்தமர்கள் உலகத்தையெல்லாம் பரிசுத்தஞ்செய்வார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சினேகிதனாகியவிஸ்வாவசுவே இந்த தேசவிஷயமான சிறப்பை ஒன்றின்மேலொன்றாகச் சொல்லாதே இந்த தேசத்திலிருக்கிற ஜனங்களில் அனேகமாகிய துராசாரங்கள் காண்பிக்கின்றது எப்படியெனில் இந்தத் தேசப் பிராமணர்கள் பிராதக்காலத்தில் நதியில் ஸ்நானஞ்செய்கிறார்கள் விதிப்படி சந்தியாவந்தனமுதலாகிய கர்மங்களைச் செய்கி

ளுர்கள் அக்கினியோத்திரங்களை நடத்திக்கொண்டுவருகிறுர்கள் கிரமமாக யாகங்களைச் செய்கிறுர்கள் சாஸ்திரங்களையும் அத்தியயனஞ்செய்கிறுர்கள் சிரேஷ்டமாகிய புட்பங்களால் தேவர்களை அர்ச்சனைசெய்கிறுர்கள் அதிதிகளைப் பூசைசெய்கிறுர்கள் ஆனுலும் புராதனமாகிய அன்னங்களால் தேகத்தைப் போஷித்துக்கொண்டு மிகவுந் தூஷணத்துக்குப் பாத்திரராக விருக்கிறுர்கள் இன்னும் இந்தத் தேசத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற ஸ்திரீகளுக்கும் எப்போதும் வெட்கமில்லாமலிருக்கின்றது பார்க்கிறதற்கு மிகவுங் கஷ்டமாகவிருக்கின்றது எப்படியென்றுல் இச்சோழதேசத்தில் எப்போதுமிருக்கிற எவ்வனஸ்திரீகளுடைய குசகும்பங்களை ரவிக்கைகளால் கட்டாதிருக்கிறது மிகவும் விரோதமாகவிருக்கின்றது இன்னும் மறைவில்லாத யானைக்கும்பங்களைப்போலிருக்கிற கடின ஸ்தனங்களுள்ளதும் கமலங்களுடைய கர்வத்தை ஜெயித்த கண்களுள்ளதுஞ் சமத்காரமுள்ளதுமாகிய இத்தேசத்து ஸ்திரீகளுடைய கூட்டம் புருடர்களுடைய மனதுகளில் ரதிகாந்தனுகிய மன்மதனுடைய பாணங்கள் பிரயோகமாகும்படி செய்கின்றது இன்னும் நூதனமாக ருதுவான மகோச்சவங்களில் கிரகங்களுக்கு வெளியில் ஆயிரமாயிரமாக ஸ்திரீகள் சேர்ந்து பயமில்லாமல் கணக்கில்லாத காமப்பாட்டுகளைச் சொல்பவர்களாய் கொப்பிகளடித்துக்கொண்டு பருவதத்தைப்போலே கடினமாகிய ஸ்தனங்களைப் பிரகாசஞ்செய்வதனுல் அபராதமில்லாத முனிவர்களுக்குங் கனமாகிய காமவிச்சையை உண்டாகச்செய்கிறுர்களென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனுகிய கிருசானுவே இந்தத் தேசத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற ஜனங்களை நீ நிந்தைசெய்யாதே ஏனெனில் எந்த ஜலத்தால் சகல பதார்த்தங்களுக்கும் பரிசுத்தியாகிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றதோ அப்பேர்ப்பட்ட ஜலத்தில் வைத்திருக்கப்பட்டதுந் தேவதாநிவேதனஞ் செய்யப்பட்டதும் இராத்திரிகளில் பரிசுத்தமாகக் காப்பாற்றிக்கொண்டிருக்கப்பட்டதுமாகிய அன்னத்தைப் புசித்தால் அதனு லென்னதோஷம் பழையசாதமென்பது சாஸ்திரநிஷேதமாகிறபடியால் தூஷிக்கத்தகுந்ததென்று சொன்னுல் நெய்யினுல் பக்குவமான பதார்த்தங்களையும் எண்ணெயால் பக்குவமான பதார்த்தங்களையும் அப்படியே சொல்லவேண்டுமல்லவா

ஆகையால் இது தூஷணத்துடன் சேர்க்கத்தகுந்ததல்ல இன்னும் எப்போதும் பதிவிரதாதருமத்தைப் பொருந்தி தோஷமில்லாத ஆசாரங்களால் பரிசுத்தமான மனமுள்ள இத்தேச ஸ்திரீகளுக்கு ஸ்தனங்களில் ரவிக்கை யில்லாமற்போனால் அதனு லென்னதோஷம் ஸ்திரீகளுக்கு கிரீடைக்கு உபயோகமான அங்கங்களைப் பிரகாசஞ்செய்வது தோஷமென்று சொன்னால் எப்போதும் அதரத்தையும் வஸ்திரத்தினால் கட்டிக்கொள்ளாதிருக்கிற தென்னவென்று சொன்னான்.

கும்பகோணத்தைக்குறித்து.

அப்புறம் ஓர் பக்கத்தைப் பார்த்து விஸ்வாவசுவென்பவன் விநயத்துடனே சொல்லுகிறான் இந்தத் தேசத்தினுடைய பாக்கியமென்பது இவ்வள வவ்வளவென்று சொல்வதற்கு அசக்கியமாகவிருக்கின்றது எப்படியென்றால் மல்லிகைப்புட்பங்களுடைய ராசிக்குச் சமானமாயிருக்கிற மணிமயமான சேஷசயனத்தில் உலகங்களுடைய துன்பங்களையெல்லாஞ் சாந்திசெய்கிற யோகநித்திரையைப் பொருந்தியிருக்கிறவனும் * தஹராகாசத்தில் தேஜோரூபனாக விருக்கிறவனும் தேவதாசார்வ பூமனுமாகிய விஷ்ணு பாபக்கூட்டங்களை நாசஞ்செய்கிற கும்பகோணத்தில்தரிசனைக் கொடுத்துக்கொண் டிருக்கிறானென்றுசொல்லி அந்தப்பட்டணத்துக்குள்ளேயிருக்கிற ஜனங்களைப்பார்த்து சிரக்கம்பத்துடனே சொல்லுகிறான். என்னவெனில், இந்த கும்பகோணத்தில் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிற சிரேஷ்டாளாகிய அனேக பிராமணர்கள் காவேரியினுடைய ஜலத்தில் ஸ்நானஞ்செய்து ஜபமுதலாகிய கிரமங்களால் மிகவும் பரிசுத்தர்களாய் அக்கினியில் ஓமங்களைச்செய்து ஒருத்தரால் சொல்லப்படாமல் சுயமாகப்பிரகாசிக்கிற வேதங்களைப் பாராயணஞ்செய்து சமுசாரமென்கிற வியாதியை அரிக்கிறஅரியை நமஸ்காரஞ்செய்து அந்தசுவாமியை பத்தியுடனே ஸ்தோத்திரஞ்செய்து இந்தப்படி காலங்கழித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எந்தசுவாமி கோபிகாஸ்திரீகளால் ரமணீயமாகவிருக்கிற யமுனாநதிதீரத்தில் புதர்வீடுகளில் சஞ்சாரஞ்

---

* தஹராகாசம்-என்பது இருதய ரந்தரத்திற்குள்ளே யிருக்கிற சூட்சும ஆகாசம்.

செய்துக்கொண்டு கோபாலனென்று பிரசித்தியாக விருந்தானே இன்னுஞ் சலனமில்லாத கிருபையுள்ளவனும், எண்ணுவதற்கு அசக்கியமாகிய வைபவங்களுள்ளவனுமாகிய அந்த கோபால சுவாமி இந்த சம்பகாரண்ணியத்தைப்பொருந்தி ஆனந்தமாகவிருக்கிறுன். இந்த ஸ்தலத்தில் இந்த இராஜகோபால சுவாமியினுடைய பாதகமலங்களை ஆசிரயித்த சாதுஜனங்கள் (சோபங் கர்வமென்கிற அவஸ்தைகளின் மிகவுங்கடினமாகிய வார்த்தைமுதலான அயோக்கியநடத்தைகளால் யாசகஜனங்களுடைய இருதயங்களை வருந்தும்படிச்செய்கிற) துஷ்டஇராஜர்களால் என்னபிரயோஜனமென்று தாபங்களுடனே கூடியிருக்கிறவர்களும் ஒருதரஞ் சரணத்தை யடைந்தவர்களுமாகிய ஜனங்களுக்கு முக்திகொடுப்பதில் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிற இந்தஇராஜகோபால சுவாமியையே பாபங்களுடைய பரிகாரத்துக்காக ஆசிரயிக்கிறேமென்று எப்போதுந் தியானிப்பார்களென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ அன்புள்ள விஸ்வாவசுவே இந்த சுவாமியினிடத்திலும் விரோதமாகிய நடத்தையே எனக்குத் தோன்றுது எப்படியென்றுல் முராராதியாகிய இந்த சுவாமி * சுமனசுகளுடைய சிரசுகளில் பாதங்களை வைத்துக்கொண்டிருக்கிறவனும், o மதுஹாரியும், ? திவிரேபனுமாகியிருந்துஞ் சம்பகாரண்ணியத்தை ஆசிரயித்துக்கொண்டிருக்கிறுனே யென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே விரோதமுள்ளவர்களைக் கூடியிருக்கும்படி வைத்துக்கொண்டிருக்கிற இந்தப் பகவானிடத்தில் விரோதமிருக்கிறதென்று நீ சொல்லாதே எப்படியென்றுல் எந்தப் பகவானிடத்தில் சூரிய சந்திரர் நேத்திரங்களாயுஞ் சேடன், கருடன், சையனம் வாகனமாயுந் தேஜசுள்ளவர்களாய் சந்தோஷத்துடனே வாசஞ்செய்துக்கொண்

---

* சுமனசுகள் - என்பது தேவர்களுக்கும், புட்பங்களுக்கும் ஆகும்.

o மதுஹாரி-என்பது மதுவென்கிற இராக்கதனைச் சம்மரித்தவனென்றும், புட்பத்தேனைப் பானஞ்செய்கிறதென்றும் ஆகும்.

? திவிரேபம்-என்பது முராராதியென்கிற பேரில் இரண்டு ரகரங்களுள்ளவனென்றும், வண்டென்றும் ஆகும்.

டிருக்கிறார்களோ அப்பேர்ப்பட்ட பகவானுடைய சமீபத்தில் விரோதம் லேசந்தானெப்படி வருமென்று சொல்லி எங்கும் நிறைந்திருக்கிற மதுரமாகிய மாமரங்களாலும் உன்னதமாகிய தென்னமரங்களாலுஞ் சூரியகிரணங்கள் பிரவேசிப்பதற்கு அசக்கியமாகிய பிரதேசங்களுள்ளதும், பாபங்களை ஆபோசனஞ்செய்வதுமாகிய சோழதேசத்திலிருக்கிற சகல திவ்விய ஸ்தலங்களுக்கும் நமஸ்காரமென்று சொன்னான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இந்தத் திவ்விய ஸ்தலங்களுக்கு நமஸ்காரஞ் செய்வது உனக்கேயிருக்கட்டும் எனக்கானால் இந்தத் தேவாலயங்களை அனுசரித்து ஜீவனஞ்செய்கிற அர்ச்சகர்முதலிய ஜனங்களுடைய துராசாரங்களை ஆலோசனைசெய்தால் நமஸ்காரஞ் செய்யவேணுமென்கிற இச்சையுண்டாகிறதில்லை எப்படியென்றால் இந்த அர்ச்சகர்களால் வேசியாஸ்திரீகளுடைய குசங்களைப் பிசைந்துக்கொண்டிருக்கிற கைகளாலேயே சுவாமிக்கு அர்க்கியமுதலாகியதுகளைக் கொடுக்கிறார்கள் அந்த ஸ்திரீகளுடைய தாம்பூல ரசத்தால் வாசனையிருக்கும்படி செய்துக்கொண்டிருக்கிற வாய்களால் சுவாமி சந்நிதியில் மந்திரங்களைச் சொல்வார்கள் சுவாமியினுடைய சொத்துக்களைப் பயமில்லாமல் அபகரிப்பார்கள் இப்பேர்ப்பட்ட அர்ச்சகர்களால் பூஜிக்கப்பட்ட விக்கிரகங்களில் சுவாமி எப்படி வாசஞ்செய்துக்கொண்டிருப்பார் இன்னும் எந்த அர்ச்சகர்களால் வேசியாஸ்திரீகளுடைய கூந்தல் * ஆக்கிராணஞ் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறதோ சந்தியாவந்தனமுதலாகிய கிரியைகள் செய்யப்படுகிறதில்லையோ அயோக்கியமான வார்த்தைகளையே அப்பியாசஞ்செய்யப்பட்டிருக்கிறதோ வேதாட்சரம் வாசிக்கப்படுகிறதேயில்லையோ அப்பேர்ப்பட்டவரும் அன்னங்களை அபகரிக்கிறவர்களுந் துஷ்டவம்சங்களில் பிறந்தவர்களுமாகிய இந்த அர்ச்சகர்களால் பாகஞ்செய்யப்பட்டதும் நிவேதனஞ் செய்யப்பட்டதுமாகிய அன்னமுதலானவைகளை பகவான் எப்படி யங்கீகரிப்பான் இன்னுங் கலிமகிமையால் சகல ஜனங்களுக்கு மிருக்கிற இந்த அவிவேகம் நிவாரணஞ்செய்வதற்கு அசக்கியமாக விருக்கின்றது எப்படியென்றால் சத்துவகுணத்தால் உத்தமராகியும் பூதேவர்களாகியுமிருக்கிற பிராமணர்களால் கிரகங்களில் ஆசாரப்படி பாகஞ்செய்து

* ஆக்கிராணம்-என்பது மோந்துப்பார்த்தல்.

விசுவாசத்துடனே சமர்ப்பிக்கப்பட்ட அன்னங்களைப் பெரியோர்களும் ஆதரிக்க யோசிப்பார்கள் தேவாலயங்களிலானால் துராசார ஜனங்களால் பாகஞ்செய்யப்பட்டதும், அயோக்கியரால் தொடப்பட்டதுஞ், சகலஜனங்களால் பார்க்கப்பட்டதுந், துஷ்ட ஜனங்களாலேயே கொடுக்கப்பட்டதுமாகிய அன்னங்களைச் சங்கையில்லாமல் புசிப்பார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஒ கிருசானுவே திவ்விய க்ஷேத்திர மகிமைதெரிந்த நம்மைப்போன்றவர்களுக்கு உன்னுடைய வீண் தூஷணையாகிய வசனங்கள் ருசிக்கமாட்டாது ஏனெனில் பிராதக்காலத்திலேயே ஸ்நானஞ்செய்து பரிசுத்தியடைந்த தேகங்களுள்ளவர்களுந் தங்களுடைய ஆகமசாஸ்திரங்களில் பிரவீணர்களும் பாபங்களை நீக்கியிருக்கிறவர்களுமாகிய இந்த அர்ச்சக ஜனங்கள் விதிப்படிக்குச் செய்யப்பட்டதும் பரிசுத்தமுமாகிய அன்னமுதலானவைகளால் உலகங்களை சம்ரட்சணை செய்வதற்காக எப்போதுஞ் ஜாக்கிரதையுள்ளவர்களாய் பரமபுருஷனுடைய ஆராதனை செய்வார்கள் இன்னும் நீ சொல்லியதை அங்கீகரித்தே சொல்லுகிறேன் கேள் எப்படியெனில் விதிப்படியானாலும் அவிதிப்படியானாலும் பக்தியினாலாவது அபக்தியினாலாவது சுசியாயாவது அசுசியாயாவது இங்கேயிருக்கிறவர்கள் பகவானை பூசைசெய்வார்கள் பிரதிதினமும் வந்து தேவர்களால் பூசிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த பிரகாசமாகிய விக்கிரகங்களில் எந்த * ஆஸ்திகனுக்குத்தான் பக்தி யில்லாமற்போகும் இன்னு மிந்த அர்ச்சகர்கள் சிலபேர் சக்கரதரனாகிய சுவாமிக்கு அபசாரமாகுமென்று பயமுள்ளவர்களாயுஞ் சிலபேர் அரசர்களுக்குப் பயப்பட்டவர்களாயுஞ் சிலபேர் பக்தியுள்ளவர்களாயுஞ் சாவதானமாக அன்னமுதலானவைகளைப் பக்குவஞ்செய்வார்கள் எதிரில் நிவேதனஞ்செய்யப்பட்ட அன்னமுதலானவைகளை சுவாமிதரிசனத்தால் அங்கீகரிக்கிறான் ஆகையால் பாக்கியவந்தரானவர்கள் அந்த அன்னத்தைப் பாபங்கள் நாசமாகவேண்டுமென்கிற அபேட்சையால் புசிப்பார்கள் இன்னுந் தேவாலயங்களில் நிவேதனஞ் செய்யப்பட்ட அன்னத்துக்கும் இதர ஸ்தலங்களில் செய்யப்பட்ட அன்னத்துக்கும் உயர்வு தாழ்வு என்பது அனுபவ சித்தமாக

* ஆஸ்திகன்-என்பது கடவுள் ஒருவன் உண்டென்று நம்புகிறவன் ஆகும்.

விருக்கின்றது எப்படியென்றால் அனேகமாகியஉபகரணங்களால் விருத்தியாகி ருசியுள்ளதாகவிருந்தாலும் வீடுகளில்செய்யப்பட்ட அன்னத்தை வித்துவான்கள் மிகவும் புசிப்பதற்குச் சந்தேகப்படுவார்கள் மிகவும் உபகரணங்க ளில்லாததாக விருந்தாலும் தேவாலயத்தில் செய்யப்பட்ட அன்னத்தை எப்போதும் புசிக்கத்தகுந்ததாயும் பாபங்களைப் பரிகாரஞ்செய்வதாயும்நினைப்பார்கள் இன்னும் தேவாலயங்களைச் சேவிக்கிற ஜனங்கள் பரிசுத்தமாயிருந்தாலும் துராசாரமாயிருந்தாலும் அவர்களை சுவாமி அங்கிகரித்திருக்கிறபடியால் புத்திமான்களும் மரியாதை செய்யவேண்டியது உலகத்தில் ஈனனுயிருந்தாலுந் தான் சேர்ந்திருப்பவர்களுடைய கவுரவத்தால் மிகவும் மானத்தையடைவான் சித்திரக்குள்ளனும் பேடியும் இராஜர்களுடைய அபிமானத்தால் கவுரவத்தை யடைகிறுர்களல்லவாவென்று சொன்னுன்.

சேதுவைக்குறித்து.

அப்புறம் மற்றேரிடத்துக்கு விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பிக்கொண்டு சந்தோஷத்துடனே சொல்லுகிறுன் என்னவெனில் மகாபாதகமுள்ள ஜனங்களை சம்ரட்சணைசெய்வதற்கும் அஞ்ஞானமென்கிற சமுத்திரத்தைப் பானஞ்செய்வதற்கும் இராட்சதருடைய இலங்கைப்பட்டணத்துக்குப் போவதற்கும் இராவணன் முதலிய சத்துருக்களாகிய இராட்சதரை யுத்தரங்கத்தில் ஜெயிப்பதற்கும் * வியோகத்தை அனுபவிக்கிற பூமிபுத்திரியாகிய சீதாதேவிக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவதற்கும் சாஸ்விதமாகிய கீர்த்தியை அடைவதற்கும் பக்தஜனங்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பதற்கும் ஸ்ரீராமசுவாமியினுல் நிர்மாணஞ்செய்யப்பட்ட சேதுவை நமஸ்காரஞ்செய்கிறேம் இன்னுங் கடினர்களானவர்களுக்குஞ் சம்பந்தமுள்ள ஜனங்களிடத்தில் விசேஷப் பிரீதி யுண்டாகுமல்லவா எப்படியென்றுல் பூமியில் தரித்திருக்கிற பருவதங்கள் இலங்காபுரத்தில் இராவணுசுரனுலே விரோதிக்கப்பட்ட பூமிபுத்திரியாகிய சீதாதேவியைச் சம்பந்தமுள்ளதானபடியால் அந்தச் சீதையைப் பதிசமீப

---

* வியோகம்-என்பது பிரிதல் முதலியது.

த்துக்கு மறுபடியுஞ் சேர்க்கவேணுமென்கிற அபேட்சையினுல் சமுத்திரத்தில் மிதந்துக்கொண்டு சேதுவாக விருக்கின்றன இன்னுஞ் சமுத்திரத்தின் மத்தியில் மிதந்துக்கொண்டிருக்கிறதும் அலைகளுடைய வேகத்தி லுண்டாகிற நுரையினுல் வியாபிக்கப்பட்டதும் நளனுல் நிர்மிக்கப்பட்டதுமாகிய இந்தச் சேது பருவதங்கள் சமுத்திரத்துக்குள்ளே முழுகியிருக்கிற மந்தரபருவதத்தைப் பார்த்து நகைப்பதுபோல விருக்கின்றன இன்னும் இந்தச் சமுத்திரராஜன் இலங்கையில் வாசஞ்செய்திருக்கிறவனும் (இராமனுக்கு) சத்துருவானவனுமாகிய இராவணுசுரனுடைய சம்பந்தத்தினு லுண்டாகிற பாபத்தினுற்றுனே இறக்கைகளுள்ள பருவதங்களால் உள்ளே நிறைந்திருக்கப்பட்டவனுகவிருந்தும் இறக்கைகளில்லாத பருவதங்களால் கட்டப்பட்டான் இன்னும் பரிசுத்தியுள்ளதும் புண்ணியகரமுள்ளதுமாகிய இந்தச் சேதுவை ஆசிரயித்திருக்கிறதும் உக்கிரமாகிய மழையையும் வெயிலையுஞ் சகித்துக் கொண் டிருக்கிறதுமாகிய இந்தப் பருவதங்கள் சமுத்திரஜலத்தினின்று கோரமாகிய தவத்தைச் செய்துக்கொண்டிருக்கின்றன இப்பேர்ப்பட்ட பருவதங்கள் எப்போதும் நாட்டியஞ் செய்துக் கொண்டிருக்கிறதும் அதிகமாகிய வாயுவினுலே அசைவாடிக் கொண்டிருக்கிறதும் விசேஷ காந்தியுள்ளதாக விருக்கிறதுமாகிய இந்த அலைகளென்கிற ஸ்திரீகளைப் பார்த்து ஒருகாலத்திலேயுஞ் சஞ்சலமுள்ளதாகிறதில்லை (என்றுல் எப்பேர்ப்பட்ட அலைகள்வந்தாலும் அப் பருவதங்கள் அசையாமல் ஸ்திரமாகவிருக்கிறதென்பதாம்.) என்று சொல்லி க்ஷணநேரந் தியானஞ்செய்து கரங்களைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறுன் என்னவெனில் ஓ இரகுபதியாகிய சுவாமியே இந்த சமுத்திரத்தின் பரிபூரணமான திருப்தியுள்ளவனுயிருந்தும் உன்னுடைய எந்தகோபத்தினுலே பயந்து பெரிதாகிய பாஷாணங்களால் நிறைந்திருக்கிற சேதுவைத் தரித்திருக்கிறுனே அப்பேர்ப்பட்டதும் பாபங்களுள்ள உலகங்களைச் சம்ரட்சணைசெய்வதுமாகிய உன்னுடைய கோபத்துக்கு நமஸ்காரஞ் செய்கிறேனென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நதிபதியாகிய சமுத்திரன் ஸ்ரீராமனுடைய கோபத்தால் பயந்தவனுய் பாரமுள்ள வஸ்துக்களை மிதக்கும்படியான ஜலமுள்ளவனுனன் அதனுலேயே வானரங்கள் இந்தச் சமுத்திரத்தைப் பாதங்களால் தாண்டுவதற்கு சக்கியமாக விருந்ததேயன்றி இந்தச் சே

துவை நிர்மாணஞ்செய்த சிரமத்துக்கு என்ன பிரயோஜனம் சொல்லென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இதைக்குறித்து முதலில் என்னால் சொல்லப்பட்டிருந்தும் நீ செவ்வையாகத் தெரிந்துகொள்ளவில்லையாதலால் மறுபடியுஞ் சொல்வதை சாவதானமாகக் கேள் என்னவெனில் புண்டரீகாட்சனாகிய ஸ்ரீராமன் சமுத்திரம் வானரர்கள் தாண்டுவதற்கு அசக்கியமென்பது காரணமாகச் செய்துகொண்டு மனுஷர்கள் பாபராசியைத் தாண்டுவதற்காக ஜலராசியில் பெரிதாகிய இந்தச் சேதுவைக் கட்டினான் இன்னும் இது சமுத்திரமல்ல ஆகாசந்தான் இவைகள் நுரைக்கண்டங்களல்ல விஸ்தாரமாகிய நட்சத்திரக்கூட்டங்கள்தான் இது சேதுவல்ல மனுஷர்களை நாசஞ்செய்கிற இராட்சசர்களுக்குத் தூமகேதுதான் இன்னும் இந்த சமுத்திரத்தில் ஜலசரங்களாகிய ஜந்துக்கள் சஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கிற ரீதியைப் பார் எப்படியென்றால் இந்தச் சமுத்திரத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கிற முதலைகள் நளனால் நிர்மிக்கப்பட்ட சேது சம்பந்தமாகிய பருவதங்களை யானைகளென்கிற பிராந்தியினால் விழுங்கவந்து கூடாமையால் ஆயாசமடைந்து வாயைத்திறந்து கூச்சலிட்டுக்கொண் டோடிப்போகின்றன இன்னும் நுரைக்கண்டங்களால் வெண்மையான காந்தியுள்ளதுந் தீர்க்கமாயுள்ளதும் மிகவும் விஸ்தாரமுள்ளதுமாகிறபடியால் சமுத்திரத்தினாலே தரிக்கப்பட்ட வெண்மையாகிய உத்தரீயத்தைப்போ லிருக்கிற இராமசேதுவை நமஸ்காரஞ்செய்கிறேன் இன்னுஞ் சேஷன் பகுகாலமாக பூமியினுடைய அதிகபாரத்தால் பீடிக்கப்பட்ட சரீரமுள்ளவனாகையிருந்தபடியால் தன்னுடைய கிருத்தியத்தைத் திக்கஜங்களுக்குக் கொடுத்துவிட்டு சிரமத்தை நீக்கிக்கொள்ளுவதற்காக சீதளமாகிய சமுத்திரஜலத்தில் சேதுவென்கிற பேர் வகித்து சயனித்துக்கொண் டிருக்கிறானென்னமோவென்று சொல்லி விமரிசைசெய்து சிறப்புடனே சொல்லுகிறான் என்னவெனில் எந்த சேது பூர்வத்தில் * பாபதசகனாசத்துக்குச் சாதனமாகவிருந்ததோ அது இப்போது பஞ்சமகாபாதகங்களை நாசஞ்செய்வதில் எப்படி சமர்த்தில்லாமற்போகுமென்று சொன்னான்.

---

* பாபதசகமென்பது-பத்து பாபங்களென்றும், பாபிஷ்டனாகிய பத்து தலைகளையுடைய இராவணனென்றும் ஆகும்.

மதுரா மீனுட்சியம்மையைக்குறித்து.

அப்புறம் மற்ருேரிடமாகிய பாண்டியதேசத்திற்கு விமான த்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பிக்கொண்டு பக்தியுடனே சொல்லுகிருன் என்னவெனில் வாசனைபொருந்திய கடம்பவனஞ் சூழும்படியாகிய மதுரையில் வாழும் மலையத்துவஜ பாண்டியராஜன் தவத்தில் வந்த செல்வியே சொக்கலிங்கர் பக்கத்தில் வாசஞ்செய்யாநின்ற அங்கயற்கண்ணியே அன்பர்க ளிஷ்டப்படி மனமகிழும்படியானவளே பதினுன்குலகுருந் தாயாகிய திரிசூலியே உத்தமகுணங்களை யுடையவளே இலகும்படியாகிய நித்தியகலியாணியே அபிராமியென்கிற பெயருடைய குணசீலியே, இந்திரன் பிரம்மத்தீர்த்த ஈஸ்வரியே, இஷ்டகாமியங்களைக் கொடுக்கும்படியான அஷ்டலட்சுமிகளுடன் இலங்கும் படியான சுந்தரமீனுட்சியே, அடியார்களைக் காப்பாற்றும் அன்னையேயென்று ஸ்தோத்திரஞ்செய்து பக்கத்தில் பார்த்து இப்பேர்ப்பட்ட அம்மைக்குத் தலைவனுகிய எந்த சொக்கலிங்கர் தருமியென்னும் பிராமணனுக்குத் திருஅகவல் பாடித்தந்து அவனுடைய இஷ்டார்த்தங்களை நிறைவேற்றினுரோ வைகைநதியில் அளவற்ற வெள்ளம் வந்தபோது அடியாளுக்காக மண் சுமந்து பிரம்படி பட்டாரோ தேவர்கள் அமிர்தங் கடைந்தபோது உண்டாகிய ஆலகாலவிஷத்தைப் பானஞ்செய்து அத் தேவர்களைக் காப்பாற்றினுரோ அப்பேர்ப்பட்ட இந்தச் சிவனையும் நம்முடைய பாபத்தைப் பரிகாரஞ் செய்யும்பொருட்டு துதிசெய்கிறேனென்று சொல்லி இன்னும் இந்த பாண்டியதேசத்தினுடைய சிறப்பைக் கேளென்று சொல்லுகிருன் பொற்ருமரைத் தீர்த்தத்தின்கண் தமிழ்க்கரசராக வீற்றிருக்கின்றவர்களும் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருக்கோவையில் நூறு குற்றங் கூறினவர்களுஞ், சொக்கலிங்கசுவாமி பிராமணனுக்குப் பாடித்தந்த பாடலிற் குற்றங்கூறி சுவாமியே வந்து நெற்றிக்கண் காண்பித்துங் குற்றங் குற்றமே யென்றவர்களும் அகஸ்தியரையும் வெற்றிகொள்ளும்படியானவர்களுமாகிய நக்கீரராதிப்புலவர்களிருந்துசங்கத்தாரென்று சிறப்பு பெற்றிருந்தார்களென்ருன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஒ பக்தியுள்ள விஸ்வாவசுவே நீ வைஷ்ணவதாசனென்று பெயர்பெற்றிருந்துஞ் சைவ

க்ஷேத்திரங்களையுந் துதிசெய்கிறபடியால் நான் மிகவும் ஆச்சரியப் படுகிறேன் ஏனெனில் இவ்வுலகத்தில் சிலபேர் சைவசமயத்தை யுஞ் சிலபேர் வைஷ்ணவசமயத்தையும் அனுசரித்தவர்களாய் ஒரு வருக்கொருவர் விரோதிகளாயுந் தூஷித்துக்கொள்பவர்களாயு மிருக்கிறார்களே அப்பேர்ப்பட்டவர்களை நீ பார்த்ததில்லையா வென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் புன்சிரிப்புள்ளவ னாகி ஓ இஷ்டனாகியகிருசானுவே நான்சொல்வதை உன்னுடைய மேன்மைபொருந்திய அறிவிற்கொண்டு சற்று யோசிப்பாயாகில் நியாயமென்றே அங்கீகரிப்பாயென்று நம்புகிறேன் என்னவெ னில் விஷ்ணுசம்பந்தமாகிய வைஷ்ணவமும் சிவசம்பந்தமாகிய சைவமும் உலகங்களுக்குத் தாய்தந்தையைப்போ லிருக்கின்றன எப்படியெனில் தாயில்லாமல் பிள்ளையும் அல்லது தகப்பனில்லா மல் பிள்ளையும் பிறப்பதில்லையென்பதுந் தாய்தகப்பனிருந்தே பிள்ளை பிறக்கவேணுமென்பதும் உலகப்பிரசித்தியாக விருப்ப தைப்போலவே விஷ்ணு சிவன் என்கிற இருவரிருந்தே உலகங்க ளை யுண்டாக்கினார்கள் இதில் பிரம்மம் சக்தி என்கிற இவ்விரண் டில் ஒன்றிருந்து ஒன்றில்லாமற்போகுமேயானால் இவ்வுலகமுத லானவைகள் உண்டாகவேமாட்டாது இப்படியிருக்க நீ சொல் லியபடி சிலர் சிவனையுஞ் சிலர் விஷ்ணுவையும் வணங்குகிறார்கள் என்பதில் நான் தோஷஞ்சொல்ல வரவில்லை ஆனால் அப்படி நட ப்பவர்களுக்குக் கொஞ்சங் குறைவிருக்கின்றது எப்படியெனில் ஒரு பிள்ளையானவன் தாய்க்கு நடந்துக்கொள்ளவேண்டிய கிரம ப்படி நடந்து அவ ளிஷ்டத்தைமாத்திரம் பெற்றுக்கொண்டு தக ப்பனுக்கு விரோதமாக நடந்தால் அவன் தாயினால் வரப்பட்ட சௌக்கியத்தைமாத்திரம் அடைந்து தகப்பனால் வரப்பட்ட சவு க்கியத்தை இழந்துப்போகிறானல்லவா அல்லது ஒரு பிள்ளையா னவன் தகப்பனுக்கு நடந்துக்கொள்ளவேண்டிய கிரமப்படி நட ந்து அவன் இஷ்டத்தைமாத்திரம் பெற்றுக்கொண்டு தாய்க்கு வி ரோதமாக நடந்தால் அவன் தகப்பனால் வரப்பட்ட சவுக்கியத் தை இழந்துப்போகிறானல்லவா அல்லது ஒரு பிள்ளையானவன் தாய்தகப்பனுக்கு நடந்துக்கொள்ளவேண்டிய கிரமப்படி நடந் துக்கொண்டால் அவன் அத் தாய்தந்தையால் வரப்பட்ட அளவ ற்ற சவுக்கியத்தை அனுதினமும் அனுபவித்துக்கொண்டு அறி வோர் முதலானவர்களும் ஸ்துதிசெய்யும்படி யிருக்கிறானல்லவா

இவைகளைப்போலவே விஷ்ணு சிவன் என்கிற பேதமுள்ளவர்கள் அனுபவிக்கும் அற்ப சந்தோஷங்களைவிட விஷ்ணு சிவன் என்கிற பேதமில்லாதவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் பேரானந்தமாகிய சந்தோஷத்தை எவர்களால் அளவிடக்கூடும் இன்னும் (திருத்தும நாராயண நமசிவாயவென்று ஜெபிக்கு மந்திரமிரண்டும் மெய்தானே உரைக்கு மந்திர மிரண்டில் இரண்டாமெழுத் திரண்டும் ஒரு ராமனாகி வந்த பெருமானே) என்றும் இன்னும் பல பெரியோர்களும் அரியும் அரனும் ஒன்றென்று அநேக சாஸ்திரமுதலானவைகளில் சொல்லியிருப்பதை நீ படித்துப் பார்த்ததில்லையோவென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் திருப்தியுள்ளவனாய் சிரக்கம்பஞ்செய்து மௌனமாக யிருந்துவிட்டான். ஆ-ஐ.

திருமாலிருஞ் சோலைமலை

அழகரைக்குறித்து.

அப்புறம் மற்றோரிடத்துக்கு விமானத்தை நடத்தி விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பிக்கொண்டு அன்புடனே சொல்லுகிறான் என்னவெனில் அழகுபொருந்திய பொற்றகட்டின் நெடிய விதழைப்போ லிதழையுடைய செந்தாமரையி லிராநின்ற இலட்சுமியினுடைய கறுப்புநிறத்தையுடைய நீலோற்பலத்தையொத்த கண்களும், மனமுங்குளிர்ச்சியடையவும், வண்டுகள் மிதித்து சந்தோஷ மிகும்படியாக சூடிய புட்பமாலையுந் தேவாமிர்தத்துக்குச் சமானமாகிய கவிமாலையுந், தந்த சூடிக்கொடுத்த நாச்சியாருடைய கனத்த குசங்கள் புளகாங்கிதம்பொருந்தவும் பழமையாகிய நான்குவேதங்களுங் குமுறவும் பத்தாழ்வார்களுடைய முத்தமிழ் முழங்கவும் பழங்கள் உதிர்ந்துக்கொண்டிருக்குந் திருமாலிருஞ் சோலைமலையின் பசுமைதங்கிய மரகதத்தைப்போற் பிரகாசிக்கவும் விமானத்தினிடமாக வந்த தேவர்கள் புட்பங்களைத்தூவி வணங்கவுஞ், சந்திரனைப்போல அழகுஞ் சிரேஷ்டமும் பொருந்திய சங்கையும், சௌந்தரியத்தையுமுடைய பரஞ்சோதியே மேகங்கள் பந்தலைப்போலிருந்து குறுந்துளி தூவவும், இடையர்கள் தறித்துவிட்ட மரங்களெல்லாந் தழைத்து புட்பித்துப் பழுத் துக

வவும், கடூரமாகிய புலிகள் அயர்ந்து சித்திரதேகமுள்ளதெனும் பெயர் விளங்கவும், கொடிதாகிய சர்ப்பங்கள் சந்தோஷத்துடனே சிரோஷ்டம்பொருந்திய இரத்தினத் தீபங் காட்டவும், கருங்கற்கள் வெண்ணெயைப்போல் கனைந்தோடவும், விரைந்தோடி வரும்படியான இளங்கன்றுகளையுடைய பசுக்கள் இமைத்தலை நீங்கிநிற்கவும், வளமையுடைய எருதுகள் அவ்வவ்விடத்தில் திகைத்து நிற்கவும், மிகவும் வல்லவர்களாகிய சித்திரக்காரர் எழுதுவதற்குங் கூடாத திரிபங்கியுடன் சுகத்தையுடைய இளமைதங்கிய கோபிகாளுடைய மழலைச்சப்தத்தைப்போலே புள்ளாங்குழலினிடத்துப் பாடுகின்ற அழகனே சப்திக்கும்படியாகிய சங்குக்கூட்டங்கள்பொருந்தியும் பாபங்களை நாசஞ்செய்வதுமாகிய சிறப்புப் பொருந்திய சிலம்பாற்றி னிறைவனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே அடியேங்களுடைய பாபங்களைப் பரிகாரஞ்செய்து காப்பாற்றுமென்று தியானஞ் செய்துக்கொண்டிருந்தான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இந்த அழகனென்கிற பேருள்ள மோசக்காரனாகிய கிருஷ்ணனையுந் துதிசெய்கிறாயல்லவா இவனுடைய அக்கிரமத்தைக் கேளென்று சொல்லுகிறான் என்னவெனில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் உண்டாகிய விரோதத்தில் தானுழைந்து கௌரவர்களையும் அவர்களைச்சார்ந்த அனேக அரசர்முதலானவர்களையும் குருக்ஷேத்திரபூமியில் மடியும்படிச் செய்தானே இதனால் இக் கிருஷ்ணனுக்கும் உலகத்துக்கும் என்ன பிரயோசனம் உண்டாகியது சொல்லென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசு வென்பவன் ஓ மந்தபுத்தியையுடைய கிருசானுவே இந்தப் பகவானுடைய மகிமையும் நீதியுஞ் சொல்ல என்னைப்போன்றவர்களுக்கு அசக்கியமாகினுங் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளென்று சொல்லுகிறான் துஷ்டர்களுந் துரோகிகளுமாகிய அனேக பாதக ஜனங்களால் நிறைந்த பாரத்தைப் பூமிப்பிராட்டி சகிப்பதற்குத் தன்னால் அசக்கியமாக விருந்தபடியால் தன் தலைவனும் உலக ரட்சகனுமாகிய விஷ்ணுவினிடத்தில் ஒருகாலத்தில் முறையிட்டுக்கொண்டபோது பகவானானவர் பூமிதேவியைப் பார்த்துச் சொல்லியதாவது ஓ தேவியே துவாபரயுகத்தின் அந்தியத்தில் நாம் கிருஷ்ணனென்கிறஅவதாரஞ் செய்து மேற்படி துஷ்டர்கள்யாவரையுஞ் சம்மாரஞ்செய்து சிஷ்

டர்கள் யாவரையுங் காப்பாற்றுவோமென்று வாக்குத்தத்தஞ்செய்திருந்தபடியே அனேகம் பெரியோர்களுடைய அகமலர்தழைத்தோங்கவும் கொடியோர்களுடைய அகமலர் குவியவுங் கிருஷ்ணுவதாரஞ்செய்து கஞ்சன்முதலாகிய கொடிய விராட்சதர்களைக் கொன்று உலகோர் துதிக்கும்படியாகத் திரிலோகத்திலுங் கீர்த்தி பரவும்படி யிருக்குங்காலத்தில் திருதராட்டிரன் குமாரர்களாகிய கௌரவர்கள் தங்கள் தாயாதிகளாகிய பஞ்சபாண்டவர்களை வஞ்சனைசெய்தும் சகலவிதத்திலுந்துரோகமியற்றியுங் கடைசியில் காட்டில் வாசஞ்செய்யும்படிச் செய்தும் அவர்களை எப்போதுங் கெடுக்கவேணுமென்கிற எண்ணங்கொண்டே அனேக அக்கிரமங்கள் செய்துக்கொண்டுவந்தும் தருமராஜன்முதலிய யாவரும் அனேகவிதத்தில் பொறுத்துக்கொண்டும் ஸ்ரீகிருஷ்ணனுடைய திருவடியே தஞ்சமென்று மிருந்தபடியால் இவைகளைக் கண்ட பக்தரட்சகனுகிய இக் கிருஷ்ணபகவான் பாண்டவர்களுடைய இஷ்டப்படி கௌரவர்களிடத்துக்குத் தூதுபோய் அனேகவிதத்தில் புத்திகளைச் சொல்லியுங் கேட்காமற்போனபடியால் அப் பாண்டவர்க ளிருக்க ஐந்து வீடுகளாவது கொடுவென்று இரந்துங் கொடேனென்று மறுத்து உமக்கும் அவர்களுக்கும் வல்லமை யிருந்தால் எங்களைச் செயித்துக்கொள்ளலாமென்று கடின வசனத்துடன் சொன்னபடியால் அந்தப்படியே யோக்கியர்களாயுந் தருமவான்களாயும் வீரர்களாயுமிருந்த பஞ்சபாண்டவர்களைக்கொண்டு மேற்படி கௌரவர்களையும் அப்பேர்ப்பட்ட கொடிய துஷ்டர்களுக்குச் சகாயமாகவிருந்த அனேகஅரசர்முதலானவர்களையும் மடியும்படிச் செய்து தன் பக்தர்களாகிய பாண்டவர் முதலானவர்களைக் காப்பாற்றி சிரேஷ்டமாகிய இராச்சியாதிபத்தியத்தையுங் கீர்த்தியையும் மோட்சத்தையுங் கொடுத்தவராதலால் இப்பேர்ப்பட்ட இக் கிருஷ்ணபகவானை யாவர்தான் ஸ்தோத்திரிக்காமலும் வணங்காமலு மிருப்பார்களென்று சொல்லி பின்னுஞ் சொல்லுகிறுன் இந்தப்படி இந்தப் பகவானுனவர் கொடியோர்களாகிய துஷ்டர்களைக் காப்பாற்றிக்கொண்டுவருவதைக்குறித்து பாரதமுதலாகிய பல நூல்களில் அனேகம் பெரியோர்கள் சொல்லியிருப்பதைப் படித்துங் கேட்டு மிருக்கிறவர்களிற் சிலர் இக்காலத்திலேயுந் தாயாதிகளிடத்தில் மேற்படிகௌரவர்களைப்போலே பாரததுரோகமுதலிய கொடிய அக்கிரமங்களைச் செய்துக்கொண்டிருக்கிறுர்களே இவர்களும் மேற்படி கௌ

ரவர்கள் அடைந்த கெதியை யடையாமற்போகமாட்டார்களல்லவாவென்று பக்தி அதிகரித்தவனாகச் சொல்லுகிறான் ஓ அழகனென்கிற கிருஷ்ணமூர்த்தியே உன்னுடைய எந்த கிருபையானது ஆதிமூலமேயென்றழைத்த ஆனையைக் காப்பாற்றியதோ அரியேயென்றழைத்த துரௌபதியினுடைய மான சவரட்சணை செய்ததோ அடைக்கலமென்ற விபீஷணனைக் காப்பாற்றி அழியாத இராச்சியாதிபத்தியத்தைக் கொடுத்ததோ தஞ்சமென்ற சுக்கிரீவனுக்கு மகுடாபிஷேகஞ்செய்துவைத்ததோ அரிஓம் என்ற பாலனாகிய பிரகலாதனை சம்ரட்சணைசெய்ததோ கல்மழையால் வருத்திய பசுக்களையும் ஆயர்களையுங் காப்பாற்றியதோ பக்தர்களாகிய பாண்டவர்களைக் காப்பாற்றி பாராளச்செய்ததோ அப்பேர்ப்பட்ட கிருபையை அனுதினமுந் தியானித்துக்கொண்டிருக்கிறேனென்று சொன்னான். ஆ-ஐ.

தாம்பிரபரணியைக்குறித்து.

அப்புறம் விமானத்தை மற்றோரிடத்துக்கு நடத்தி விஸ்வாவசுவென்பவன் சந்தோஷத்துடனே சொல்லுகிறான் என்னவெனில் சமுத்திரனுக்கு மூன்றுலகங்களிலும் பிரசித்தியுள்ள அந்தப்புற ஸ்திரீயுங் கரைகளில் பிரகாசிக்கிற முனிவர்கள் கூட்டங்களுள்ளதுமாகிய தாம்பிரபரணியென்கிற நதி இந்த யிடத்தில் மனுஷர்களுக்குப் பாபங்களென்கிற காட்டுத்தீயினால் உண்டாகிற தாபத்தை நாசஞ்செய்கிறது இன்னும் வைராக்கியத்தால் பரிபக்குவமான திரிவிக்கிரம பக்தியுள்ள வைஷ்ணவர்களால் மிகவும் பரிசுத்தமாகிய இந்த தாம்பிரபரணியினுடைய கரையில் திடமானநியமமுள்ள சடகோப ஆழ்வாருடைய மார்பிலிருக்கிற வகுளமாலைகளில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற வண்டுகளுடைய தொனியினால் இரட்டிப்பாகிய திரவிட வேதத்தினுடைய பாராயணத்தொனிகளால் பிரகாசிக்காநின்ற திருக்குருகூரென்கிற க்ஷேத்திரம் பிரகாசிக்கின்றது இன்னும் இந்த யிடத்திலிருக்கிற தருமவான்களாகிய அரிபக்தர்கள் எப்போதுந் தியானஞ்செய்வார்கள் எப்படியென்றால் ஆயிரஞ் சாகைகளுள்ளதும் எங்களுக்கெல்லாஞ் சந்தோஷகரமுள்ளதுஞ் சர்வோத்தமமுள்ளதுமாகிய திராவிடசங்கிதையை சிருஷ்டிசெய்தவரும் ரிஷிசிரேஷ்டருமாகிய சடகோப

றென்கிற குருவுக்கு எப்போதும் நமஸ்காரங்களைச் செய்கிறோம் இன்னும் எந்த புளியமரத்தினுடைய அடியில் சடகோபனென்கிற பேருள்ள எங்களுடைய தவத்தினுடைய பலம் ஆவிர்ப்பவித்திருக்கின்றதோ அப்பேர்ப்பட்ட ஆச்சரியமுள்ளதும் ஐந்து கற்பக விருட்சங்களையுந் திரஸ்காரஞ் செய்வதுமாகிய புளியமரத்தைப் பூசைசெய்கிறோம் இன்னும் ஆயிரஞ் சாகைகளுள்ள திரவிடவேதத்தைச் சிருஷ்டிசெய்த சடகோபனென்கிற முனிசிரேஷ்டர் எந்த விருட்சமூலத்தை ஆவாசமாகச் செய்துக்கொண் டிருக்கிறாரோ அப்பேர்ப்பட்ட புளியமரந் தன்னை ஆசிரயித்தவர்களுக்கு மோட்சமென்கிற பலத்தைக் கொடுக்கும்படியானதாய் ஆச்சரியமாகப் பிரகாசிக்கின்றது இன்னும் பெரியோர்கள் எந்த சடகோபஆழ்வாரையே தியானஞ்செய்யவேணுமென்றும் அவருடைய பிரபந்தத்தையே மோட்சத்தை யபேட்சிக்கிறவர்கள் பாராயணஞ் செய்யவேணுமென்றுஞ் சொல்லுவார்களோ அப்பேர்ப்பட்டவரும் இவ்விடத்தில் அவதாரஞ் செய்திருக்கிற விஷ்ணுவானவருமாகிய வகுளாபரணத்தையுடைய சடகோப ஆழ்வாரைச் சரணமடைவோம் இன்னும் எந்த சடகோபஆழ்வாருடைய பிரபந்தங்களை இந்த லோகத்தில் எந்த ஜனங்கள் பெருந்தொனியுடனே பாராயணஞ்செய்து தேகாந்தத்தில் திவ்விய பதவியைப்பொருந்தி அந்த யிடத்தில் சாருபமுக்தியை அடைவார்களோ அப்பேர்ப்பட்ட சடகோப ஆழ்வாரிடத்தில் எங்களுக்குத் திடமாகிய பக்தி யிருக்கவேண்டியது இன்னும் பாபங்களை நீக்குகிறதும் உபநிடதங்களுடைய அபிப்பிராயத்தைப் போதிக்கிறதும் இலட்சுமிபதியாகிய விஷ்ணுவை சுவாதீனஞ் செய்துக்கொண்டிருக்கிறதுமாகிய சடகோபருடைய பிரபந்தங்களுக்கு அமிர்தமுஞ் சமானமல்லவென்பதேயென்று ஜனங்களைக்குறித்து சொல்லுகிறான் என்னவெனில் உதரபூர்த்திக்காக கடினசித்தமுள்ள துஷ்ட அரசர்களை ஸ்துதி செய்கிற நீசசுலோகங்களை ஒருகாலத்திலேயுஞ் சொல்லாதிருங்கள் திடமாகிய அந்தகாரமுள்ள சமுசாரமென்கிற கிணற்றில்விழுந்து புரளாதிருங்கள் ஆயாசமில்லாமல் மோட்சத்தைக் கொடுக்கிற சடகோபருடைய வசனங்களைப் பாராயணஞ் செய்யுங்களென்று கிருசானுவுக்கே சொல்லுகிறான் ஓ விரோதமாகிய புத்தியுள்ள கிருசானுவே நமஸ்காரஞ் செய்கிறவர்களுக்கு மோட்சத்துக்கு முக்கிய உபாயமிருக்கிற சடகோப ஆழ்வாருக்கு நீ நமஸ்காரஞ் செய் பாபங்கள் தேகத்தைவிட்டு நீங்குவதற்காக இந்த குரு

காபுரியில் பக்திவைத்துக்கொண்டிரு இன்னுஞ் சத்புருஷர்களின் வாயினால் சொல்லும்படியான வகுளாபரணருடைய வசனங்களை விஷ்ணு ஆலயங்களுக்குள்ளே பெருமொலியால் பாராயணஞ் செய்பவர்கள் பிரபஞ்சத்தையெல்லாம் பரிசுத்திசெய்பவர்கள் இன்னும் வைராக்கியத்துக்கு ஆஸ்தானமண்டபத்தைப்போ லிருக்கிறதும் விஷ்ணுபக்திக்கு நடனசாலையைப்போலிருக்கிறதும் மோட்சத்துக்கு ஏணியைப்போ லிருக்கிறதுஞ் சுகுர்தங்களுடைய பரிபாகத்துக்குப் பலமாக விருக்கிறதுஞ் சங்கதிகளுக்கு உத்தியான பூமியைப்போ லிருக்கிறதும் ஒருவரால் சொல்லப்படாததாகிய வேதத்துக்குப் பிரியமாகிய சினேகிதனைப்போலிருக்கிறதும் அறிவென்கிற மூளைக்கு நல்ல பூமியைப்போ லிருக்கிறதுமாகிய வகுளாபரணனுடைய வாக்கு சர்வோத்தமமாக விருக்கிறதென்று அந்தப் பட்டணத்தையெல்லாம் பார்த்து கிருசானுவுக்கே சொல்லுகிறான் தத்துவத்தைச் சித்தியடையவேணுமென்கிற இச்சையினால் குருகாபுரியில் வாசஞ்செய்துக்கொண் டிருக்கிறவர்களும் வேதாந்தத்தை அப்பியாசஞ் செய்பவர்களுமாகிய சத்புருஷர்களுக்கு நீ யெப்போதும் நமஸ்கார முதலியவைகளைச் செய்யென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியது சத்தியந்தான் ஆனாலும் இந்த ஸ்தலத்தில் வேதமார்க்கத்தை அதிக்கிரமித்திருக்கிற சிலபேர் எதிகள் இருக்கிறபடியால் மிகவுஞ் சிறப்பு செய்யத்தக்கதாக வெனக்குத் தோன்றுவதில்லை எப்படியென்றால் இங்கே யிருக்கிற எதிகளுக்கு மூன்று சந்தியாகாலங்களிலும் ஸ்நானமுமில்லை கமண்டலந் தரிக்கிறதுமில்லை சாதுர்மாசியமுதலாகிய நியமங்களுமில்லை பிட்சாடனவிதியுமில்லை ஆசைத்தியாகமுமில்லை உபநிடதங்கள் பாராயணஞ் செய்வதுமில்லை இந்தப்படிக்கு வேதமார்க்கத்தை அதிக்கிறமித்து நடக்கிறபடியால் இவர்களிடத்தில் எதிதர்மமேயில்லை இதுமாத்திரமல்ல இன்னுஞ் சொல்லுகிறேன் கேள் என்னவெனில் சகலமான வியாபாரங்களையுந் தியாகஞ்செய்திருக்கவேண்டிய சந்நியாசவாசிரமத்தை ஆசிரயித்திருந்தாலுஞ் சபலசித்தமுள்ளவர்களாய் அரிகயிங்கரியஞ் செய்யவேணுமென்று சாக்குவைத்துக்கொண்டு இராஜதானிகளில் பிரவேசித்து திடமாகிய மடங்கள் கட்டிக்கொண்டு திரவியங்களைச் சம்பாதனைசெய்வார்கள் மிகவும்ருசிகரமான அன்னங்களைப் புசிப்பார்கள் ஓ ராம ராம கலியினா லுண்டாகிற

இந்த துர்நடத்தைகளை எவன்ருன் சகிப்பான் இன்னு மிந்த பாழ் கலியுகத்தில் இந்தச் சந்நியாசிகள் இல்லறத்தார்களுக்கு நமஸ்காரஞ்செய்வார்கள் இதைவிட அநியாயமானது என்னவிருக்கின்றது இன்னு மிந்த எதிகள் புத்தியில்லாதவர்களாய் இவனும் வைஷ்ணவனென்று ருத்திரனுக்கு நமஸ்காரஞ்செய்வார்கள் இதைப் பார்த்தால் மனதை அறுக்கிறதென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நீ இந்தப்படி சொல்லாதே இந்த சில சந்நியாசிகள் நியமங்களை அநுஷ்டானஞ் செய்யட்டும் அல்லது தியாகஞ்செய்யட்டும் பிட்சாவிதியைச் செய்யட்டும் அல்லது செய்யாமற்போகட்டும் அரியினுடைய பாதகமல கயிங்கரியத்தில் களங்கமில்லாத மனதுள்ள பக்தியுள்ளவராக விருந்தால் இவர்களுக்குப் பாபத்தினுடைய சம்பந்தம் எப்படி வரும் இன்னுஞ் சேஷசயனனுகிய விஷ்ணுவினுடைய கயிங்கரியத்துக்காக சஞ்சாரஞ்செய்கிறது சந்நியாசவாசிரமத்துக்குத் தகுந்ததல்லவென்று நீ சொல்லியது செவ்வையாகிய வாலோசனையினுல் சொன்னதாகவில்லை எப்படியென்ருல் சில பேர் சந்நியாசிகள் தனக்குத்தானே ஆசையை விட்டவர்களாய் புண்டரீகாட்சனுகிய விஷ்ணுவினுடைய கயிங்கரியுத்துக்காக சஞ்சாரஞ்செய்வார்கள் அவர்கள் மிகவும் தன்னியர்கள்தானே இன்னும் போகத்துக்காகவே ஸ்திரீயை விவாகஞ்செய்கிறதும் பிரசித்திக்காகவே யோகாப்பியாசஞ் செய்கிறதும் தன்னெருவனுக்கே சமையல்செய்கிறதுந் துஷ்ட பாத்திரத்தில் கொடுப்பதற்காகவே திரவிய சம்பாதனை செய்கிறதுந் தானம் வாங்குவதற்காகவே வேதங்களை அத்தியயனஞ் செய்கிறதுந் தர்க்கத்துக்காகவே சாஸ்திரத்தில் சிரமஞ்செய்கிறதும் உதரபூர்த்திக்காகவே அரிகயிங்கரியஞ்செய்கிறதுமாகிய இவையெல்லாந் தூஷிக்கத்தகுந்ததுகளென்று யோக்கியா யோக்கியதை தெரிந்தவர்கள் உதகரிப்பார்களல்லவா இன்னும் அனேகமாகிய தோஷங்களால் கூடியிருந்த புருஷனுனும் யோக்கியமான பகவத்பக்தியைப் பொருந்தியிருப்பானுனல் சத்துவகுணமுள்ள பெரியோர்களால் பூசிக்கத்தக்கவனுவான் பெரிதாகிய சர்ப்பங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தாலும் அதிகமாகிய முள்ளுகளுள்ளதாக விருந்தாலும் பரிமளிக்காநின்ற புட்பங்களுள்ள தாழைமரம் பாக்கியவான்களால் ஆதரிக்கத்தகுந்ததல்லாமற்போகுமாவென்று சொன்னுன்.

சமயவிளக்கத்தைக்குறித்து.

அப்புறம் கிருசானுவென்பவன் விமானத்தைக் கொஞ்சம் மேலே வுயர்த்தி நான்கு திக்குகளிலும்பார்த்துச் சொல்லுகிறன் இந்துக்களில் சிலர் முன்னோர்கள் நாள்முதற்கொண்டு பூசித்து வணங்கிவராநின்ற மகா ஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் விக்கிரகங்கள் மனிதர்களால் செய்யப்பட்டதென்றும் அவைகளைப் பூசித்து வணங்குவதால் யாதொருபிரயோசனம் இல்லையென்றுஞ் சொல்லிக்கொண்டு காலத்தை வீணுகக் கழிக்கிறூர்களென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனுகிய கிருசானுவே மேற்கண்ட விக்கிரகங்களைக்குறித்து மேற்படிஸ்தானங்களில் தங்கள் நுட்பமாகிய அறிவைச் செலுத்தி முழுதிலும் பார்த்திருப்பார்களாகில் ஒருபோதும் இப்படிச் சொல்ல அவர்கள் நா வெழவேமாட்டாது ஆகையால் அதைக்குறித்து இவ்விடத்தில் விவரிக்கில் காலம் அதிகரிக்குமாகையால் சில முக்கியசங்கதிகளைமாத்திரஞ் சொல்லுகிறேன் என்னவெனில் முன்னோர்களில் மகாத்துமாக்களாகவிருந்த பெரியோர்கள் தாங்கள் கொண்டிராநின்ற இம் மானிடதேகத்திலிருந்தே (அகரமுதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றேயுலகு) என்று சொல்லியிருக்கின்ற உலகுக்கு முதற்காரணனுகிய பகவானைக் கண்டு தெரிசிக்க எண்ணங்கொண்டவர்களாக விருந்தபடியால் அப்பேர்ப்பட்ட மகாத்துமாக்கள் எவ்விடத்தினின்று எவ்விதமாகப் பாவனைசெய்து தங்கள் மனதில் தியானித்து நின்றூர்களோ அவ்விதமே அந்தட்சணம் பகவான் வந்து தெரிசனங்கொடுத்து அவர்கள் மனோபீஷ்டத்தை நிறைவேற்றியிருக்கின்றதால் மேற்படி மகாத்துமாக்கள் எந்தயிடத்தில் எந்தச் சாயலாகக் கண்டு தெரிசித்தார்களோ அந்தச் சாயலாகத்தானே அந்தந்தயிடத்தில் தற்செயலா யுண்டாயிராநின்ற விக்கிரகங்களுக்கு ஆலயமுதலாகியதுங் கட்டி நிறைவேற்றிவைத்து தங்களுக்குப் பின்வரும் அடியார்கள் மேற்படி சொரூபங்களைக் கண்டு திரிகரணசுத்தியாக பக்திசெய்திருந்து பலான மகாத்துமாவுக்காக இவ்வித கோலத்துடன் காட்சி கொடுக்க வந்த ஓ ஜகத்பகவானேயென்று மனமுருகி ஸ்தோத்திரஞ்செய்தால் அவர்கள் மனோபீஷ்டப்படிக்கு பரப்பிரம்மமாகியபகவான் நிறைவேற்றுவனென்று மேற்படி சிறந்த மகாத்துமாக்களால் ஆக

மங்களில் சொல்லப்பட்டிருப்பதுடன் இன்னுங் கியானமுள்ள அடியார்கள் மனோபீஷ்டமும் நிறைவேறப்பட்டே வருகின்றது ஒருவேளை சிலர் மற்றவிடத்தில் இல்லையோவெனில் (சூரியனுடைய பிம்பமானது எங்குஞ் சமமாகப் பிரகாசிப்பதாக விருந்தாலும் பரிசுத்தமாகிய ஜலத்தில் பிரதிபலித்துப் பிரகாசிப்பதைப்போலே அசுத்தமாகிய ஜலத்தில் பரிசுத்தமாகப் பிரகாசிக்காதல்லவா) அதைப்போலே உலகத்தில் பகவான் எங்கும் நிறைந்திருந்தாலும் மேற்கண்ட மகாத்துமாக்களுக்குக் காட்சிகொடுத்த இடங்களிலிருந்து அடியார்களுக்கு உடனே தெளிவான காட்சி கொடுத்துவருகிறார்.

உதாரணம்.

திராவிடவேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்துள்
போய்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

வெண்பா.

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவந் தானே
தமருகந்த தெப்போமற் றப்போர்—தமருகந்த
தெவ்வண்ணஞ் சிந்தித் திமையா திருப்பரோல்
அவ்வண்ண மாதிய னும்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இஃதிருக்கட்டும் இன்னொன்று கேட்கிறேன் மேற்கண்டவர்கள் உலகத்துக்குக் கர்த்தா ஒருவனென்றும் ஒருசமயத்தி லிருக்கிறவன் இன்னொரு சமயத்தில் விரும்பினாலும் அவனுக்கு மோட்சராச்சியங் கிடைக்குமென்றுஞ் சொல்லுகிறார்களேயென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே உலகத்திற்குப் பகவான் ஒருவனாகவே யிருந்தும் அவர் பல ரூபமாக விளங்குகின்றாரென்று எவ்வகை மதஸ்தர்களும் ஒப்புக்கொள்ள அவரவர்கள் வேதங்களே சாட்சியாக விருக்கின்றன அஃதெப்படியெனில் சத்தரூபமாகியுஞ் ஜோதிரூபமாகியுஞ் சொரூபரூபமாகியும் இவ்வித பலவித ரூபமாகக் காட்சி கொடுத்திருப்பதாகச் சொல்லியிருப்பதனால் அவர் தன் னிஷ்டப்படி உருவத்தைக் கா

ட்டி உண்மையாகிய அடியார்களை இரட்சிக்க அவர் சுதந்தரஸ்த ராக விருக்கிறார் என்பதைக்குறித்து யான் அதிகமாக விவரித்து சொல்லவேண்டியதில்லையென்றே நம்புகிறேன் ஆகையால் அவருடைய இஷ்டப்படியே பலசமயங்களும் உண்டாக்கி அவ்வச்சமயங்கள் உலகின்கண் நிலைபெற்றிருக்கும்படி தன் பெருங்கருணையால் இந்துசமயத்தில் வேதவியாசரென்றும், துருக்கசமயத்தில் மகம்மதுவென்றும், ஈரோப்பிய சமயத்தில் கிறிஸ்துவென்றும் மகாத்துமாக்களை உற்பத்திசெய்து மேற்படி சமயங்களுக்குத்தகுந்த நீதிச்சட்டங்களை அவர்களால் திருந்தச்செய்து அந்தப்படியே கிரமமாகவும் உண்மையாகவும் நடந்துக்கொள்ளும் அவ்வவ் வடியார்களுக்கு மோட்சத்தைக் கொடுக்கவும் அப்படியே நடவாது தங்கள் மனதின்படி விபரீத வியாக்கியானஞ் செய்துக்கொண்டு நடப்பவர்களுக்கு நரகத்தைக் கொடுக்கவும் ஏற்படுத்தியிருக்கும் அப் பகவான் எண்ணத்துக்கு மாறுபட்டு ஒரு சமயத்தி லிருக்கின்றவன் இன்னொரு சமயத்தை விரும்பலாமென்று சொல்பவரை யோசிக்கில் பெரிய குற்றவாளிகளாகி மோட்ச இராச்சியத்தை இழந்துப்போவார்கள் அஃதெப்படியெனில் புருடர் ஸ்திரீகள் எல்லாரும் பகவானாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்களாகவிருந்தாலும் ஒரு ஸ்திரீ தனக்கு நியமித்த புருடனையே பூசித்து கற்பழியாமல் நடக்கவேண்டுமேயன்றி அயல்வீட்டுப்புருடனை இச்சித்து அவனைச் சேரலாமா அப்படிச் சேர்ந்தால் அவளுக்கு மோட்ச இராச்சியங் கிடைக்குமா ஒருபோதுங் கிடைக்காதல்லவா ஒரு வேளை கிடைக்குமென்று எந்தப் புத்திமானாவது சொல்லத்துணிவானாகில் அதை எவ்வகை சமயத்தி லிராநின்ற விவேகசாலிகளும் ஒப்புக்கொள்ளவேமாட்டார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே இஃதிருக்கட்டும் இன்னொன்று கேட்கிறேன் என்னவெனில் மேற்கண்டவர்கள் இந்துசமயத்தில் கர்த்தர் இப்படி யிருக்கிறாரென்றும் நடந்துக்கொள்ளவேண்டியது இன்னவிதமென்றும் இதரசமயங்களில் சொல்லியிருப்பதைப்போலே இல்லையென்றுஞ் சொல்லிப் பொழுதுபோக்கிறார்களேயென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ அன்புள்ள கிருசானுவே இவர்கள் இந்துசமயத்திலிருக்கின்ற ஆகமநூல்களில் எந்த நூல்களை ஆசாரியர்மூலமாக சாங்கோபாங்கமாகப் பார்த்து

அதுகளில் என்னென்ன காரியங்களைச் சொல்லப்படாமலிருக்கின்றன யாவுஞ் சொல்லியிருந்தும் இவர்களுடைய அறியாமையாலும் சோம்பலினாலும் தங்கள் சமயசொரூபத்தைத் தெரிந்துக்கொள்ள முன்னோர்கள் நூலில் தங்கள் புத்தியைச் செலுத்தி அதனுண்மையை உணர்ந்துக்கொள்ளாமலிருக்குங் காலத்திற்றானே (சில அறியாமையையுடைய தாய் தந்தை சுற்றத்தாரவர்கள் அந்நியபாஷைகளினிடத்து) இவர்சள் புத்தியைச் செலுத்த நீண்டகாலங்களைக் கொடுத்துவிடுகிறபடியால் இவர்கள் மேற்படியார் மனதின்படி அப் பாஷைகளில் கொஞ்சங் கற்றுக்கொண்டு அச்சமயங்களின் ஸ்வரூபமும் இப்பேர்ப்பட்டதென் றுணராமலே (சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளையைப்போல் சிலருடைய போதனைக் குட்பட்டு அவர்கள் சொன்ன·சொல்லைக் கற்றுக்கொண்டு அவைகளி லேலேதோ பிரயோஜனமிருக்கிறதென்றெண்ணியே) "தந்தைதாய்ப்பேண். அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம். தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்றாங் கைம்புலத்தாரோம்பறலை." என முன்னோர்கள் திருவாய்மலர்ந்திருக்கின்ற நீதிகளுக்கு மாறுபட்டு தாய் தந்தை சுற்றத்தார் குரு தெய்வம் இவர்களுக்குத் துரோகிகளாகிப் பதிதராய்ப்போகின்றார்கள் இவர்கள் தங்கள் சமயத்திலிருக்கும் முக்கியமாகிய நூல்கள் எல்லாவற்றையும் பார்க்காமற்போனாலும் தமிழ்வேதமாகிய திருக்குறளொன்றில் அதிகாரங்களில் ஒவ்வொருபாடலை ஆசிரியர்மூலமாக நுட்பமாகப் பார்வையிட்டு அதன் உண்மையை உண்டிருப்பார்களானால் மேற்கண்ட ஸ்திதியில் ஒருபோதும் உட்படமாட்டார்களென்றே நம்பவேண்டியிருக்கின்றது அஃதெப்படியென்றால் தன் வீட்டில் முக்கனிப்பதார்த்தங்களுடனே திவ்விய போஜனத்தை வயிறுநிறைய உண்டு களித்திராநின்ற ஒருவனுக்கு அந்நிய வீட்டா னொருவன் மேற்கண்டவைகளுக்கு சில மாறுபட்டிருப்பதைக் கொடுத்து பலவித உபசரணை செய்து உண்ணென்றாலும் ஒருபோதும் உண்ணமாட்டானல்லவா ஒருவேளை தாட்சண்யத்துக்கு உண்ண நினைத்தாலும் அவன் வயிறு கொள்ளாமல் வெளியில் தள்ளிவிடுமல்லவா மேற்கண்ட திவ்விய போஜனத்தை உண்டிராமல் பசியோடிருப்பவன் கண்டதை உண்பானென்பதற்குச் சந்தேகமில்லாததுபோலாம் ஆகையால் (சுற்கக்கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக) இதன்பொருள்-ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்கக்கடவன் அப்படிக் கற்றபின்னே அக்

கல்விக்குத்தகுதியாக அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே நிற்கக்கடவன் கற்பவையென்றதனால் அறம் பொருள் இன்பம் வீடு என்கிற உறுதிப்பொருளை உணர்த்துகிற நூல்களென்பது ஆம் கசடறக்கற்றலாவது விபரீத சந்தேகங்களைநீக்கி மெய்ப்பொருள்களை நல்லோர் பலருடனேயும் பலதரமும் பழகுதல் ஆம் நிற்றலாவது இல்வாழ்க்கையிலே கருமங்களைச்செய்து யோக்கியருக்குக்கொடுத்து தான் அநுபவித்தலிலும் துறவிலே தவத்தால் மெய்யுணர்ந்து அவா அறுத்தலிலுந் தவறுமை ஆம் என்று திருவள்ளுவர்முதலிய பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்களென்று இன்னுஞ் சொல்லுகிறான் ஓ சினேகிதனே உன்னால் சொல்லப்பட்டவைகளுக்கு விடைசொல்லியதெல்லாம் பகவான் இஷ்டப்படி உண்டாக்கப்பட்டிருக்கிற ப்ல சமயங்களில் ஒன்று உயர்ந்ததென்றும் ஒன்று தாழ்ந்ததென்றுஞ் சொல்லவந்தவனே யல்ல அப்படிச் சொல்ல நினைப்பவர்களும் பகவானுக்குமுன் பாதகர்களாவார்களென்றே புத்திமான்கள் நினையாதிரார்களல்லவா ஆனதால் நான் முக்கியமாகச் சொல்வ தென்னெனில் அந்தந்த சமயங்களில் பகவானுடைய பெருங்கருணையால் அவதாரஞ்செய்திருந்த மகாத்துமாக்கள் திருவாய்மலர்ந்திருக்கின்ற கற்பனைகளைப் பார்க்கும்போது மெத்தவும் அருமையான உயர்ந்த புத்தியைத் தருவதாகவே யிருக்கின்றன அந்தப்படியே அக் கருத்தின் உண்மையை யுணர்ந்து அவ்வச்சமயங்களி லிராநின்றவர்கள் கிரமமாக நடந்துக்கொள்வார்களேயானால் அப்பேர்ப்பட்ட புத்திமான்கள் இகபரபிரயோஜனங்களை அடையாதிரார்களென்பதை எவ்வகை சமயத்தி லிராநின்ற இல்லற விவேகிகளும் துறவறப்பெரியோர்களும் அங்கீகரிப்பார்களென்று சொன்னான். ஆ-ஐ.

அத்துவைதிகளைக்குறித்து.

அப்புறம் விமானத்தை இன்னொரிடத்துக்கு நடத்தி நான்கு திக்குகளையும் பார்த்து விஸ்வாவசுவென்பவன் கரங்களைக் கூப்பிக்கொண்டு சொல்லுகிறான் என்னவெனில் கிரியைகளால் பலமுள்ளதாகச் செய்யப்பட்ட வேதங்களுள்ளவர்களும் அனேகமாகிய வேதார்த்தங்களை உபதேசஞ்செய்பவர்களும் பாண்டியதேசத்திலுஞ் சோழதேசத்திலும் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறவர்களுமாகிய பண்டிதர்களுக்கு நமஸ்காரமென்றான்.

இதைக் கேட்ட கிருசானு வென்பவன் ஓ விஸ்வாவசுவே பூதேவர்களாகவிருந்தாலும் இவர்களை நமஸ்காரஞ்செய்வதற்கு எனக்கு அபேட்சையில்லை இவர்களுக்குள் மித்தியாவாதிகளே பகுஜனங்க ளிருக்கிருர்கள் இவர்கள் பிரமாணமாகிய விஷயங்களைத் தூரமாகச் செய்து அப் பிரமாண விஷயங்களை அங்கீகரிப்பார்கள் எப்படியென்ருல் பிரத்தியட்சவிஷயமாகிய சகலமான பிரபஞ்சத்தையும் இந்த மாயாவாதிகள் பொய்யென்று சொல்லுவார்கள் சகலமாகிய பிரமாணங்களுடைய மார்க்கத்தை அதிக்கிரமித்திருக்கிறதும் விகாரங்களில்லாததுமாகிய பரப்பிரம்மத்தை ஆசிரயிப்பார்கள் இந்த மூர்க்கஜனங்கள் பரப்பிரம்மத்துக்குந் துரோகஞ்செய்வார்கள் எப்படியென்ருல் எந்தப் பரப்பிரம்மமென்கிறது சகலத்தையுந் தெரிந்ததென்றுந் தோஷங்களில்லாததென்றுஞ் சமுசாரதுக்கங்களை அரிக்கிறதென்றும் * உபநிஷதங்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அப்பேர்ப்பட்ட பரப்பிரம்மத்தை இந்த மூடர்கள் சமுசாரதாபங்களை அனுபவிக்கிறதென்று சொல்லுவார்கள் இவர்கள் பரப்பிரம்மத்துக்குத் துரோகஞ்செய்கிறது மாத்திரமேயல்லாமல் அந்தப் பரம்பிரம்மத்தின் விஷயத்தில் பிரமாணமாயிருக்கிற வேதங்களுக்குந் துரோகஞ்செய்வார்கள் எப்படியென்ருல் வேதத்தில் கர்மகாண்டம் பொய்விஷயங்களைச் சொல்லப்படுகிறதென்று இந்தபுத்திஹீனர்கள் சொல்லுகிறபடியினுலே கர்மகாண்டம் பிரமாணமல்லவென்று சித்தஞ்செய்து பிரமகாண்டத்தில் குருவசனங்களால் பிரம்மமென்கிற சப்தமாத்திரஞ் சத்தியமென்று மீத்திவைத்தார்கள் இவர்களுடைய மதத்தில் மோட்சமுண்டாகிறதென்பது பொய்விஷயமானது பரப்பிரம்மமும் வாச்சியத்துவம் என்கிற குணத்துக்கு ஆசிரயமாகிறதில்லை ஆனபடியால் பதப்பிரகிருதியும் பரப்பிரம்மத்தைச் சொல்லுகிறதில்லை ஆகையால் இந்த அத்துவைதிகள் உபநிஷதங்கள் பிரமாணமென்றுதான் எப்படி நினைப்பார்கள் இதல்லாமல் * சரீரகசாஸ்திரத்துக்குந்துரோகஞ்செய்வார்கள் எப்படியென்ருல் வியாசமுனிவரால் பிரம்மக்கியானத்துக்காக நிர்மாணஞ்செய்யப்பட்ட சாஸ்திரத்தை இந்த அத்துவைதவாதிகள் சமன்வயமான அர்த்தமில்லாமற் செய்தார்கள் இன்னும் விரோதமான புத்தியுள்ள இவர்கள் ஈஸ்வ

---

* உபநிஷதங்கள்-என்பது வேதத்தினுடைய பிரமகாண்டத்தின் பெயராம்.

ரன் எந்தெந்த சுவபாவங்களுள்ளவனோ அதற்கு விரோதமாகவே சொல்லுவார்கள் எப்படியென்றால் சர்வக்ஞனானவனை அக்ஞனென்றும் (என்றால் ஞானத்துக்கு ஆதாரமானவ னல்லவென்றுஞ்) சர்வ பதங்களுக்கும் அர்த்தமானவனை எந்த பதங்களாலுஞ் சொல்லத்தகுந்தவ னல்லவென்றுஞ் சகலமாகிய சத்குணங்களுக்கும் ஆதாரமாக விருக்கிறவனை நிற்குணனென்றுஞ் சகலமான வேதங்களாலுந் தெரியத்தகுந்தவனை எதினாலேயுந் தெரியத்தகுந்தவ னல்லவென்றுஞ் சொல்வார்கள் இன்னும் அனேகவிதமாகிய பாபகூட்டங்களால் உண்டாகிற அதிக வியசனங்களாலே பீடிக்கப்பட்டவனும் அதிசுவல்பமான புத்தியுள்ளவனுமாகிய ஜீவனுக்கு பரமேஸ்வரனுடனே அபேதத்தைச் சொல்லி சந்தோஷசமுத்திரத்தைப் பொருந்தியிருக்கிற இவர்களுக்கு (மசகத்துக்கும் மகாகஜத்துக்கும் பேதமில்லையென்று) சொல்லத்தகுந்ததாகவிருக்கும் இன்னும் இவர்களுக்குத் திருசியமாகியபிரபஞ்சமும் பொய் திருஷ்டியையுடைய ஜீவனும் பொய் தோஷமும் பொய் என்கிற எந்தப்புத்தியுண்டோ அது ஆதாரமாகிய பரப்பிரம்மவிஷயத்திலும் ஏன் இல்லாமற்போய்விட்டதோ வென்கிற சிந்தை யோக்கியராகிய பண்டிதர்களுக் குண்டாகிறதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனாகிய கிருசானுவே பூதேவர்களாகிய பிராமணர்களுடைய தூஷணங்களில் சம்பிரமப்படாதே ஏனெனில் இந்தப் பிராமணர்கள் தங்களுடைய குலத்தில் பாரம்பரியமாகவந்த மார்க்கத்தை விடக்கூடாதென்று அத்துவைதத்தையே அனுசரித்துப் பிரபஞ்சம் பொய்யென்று சொல்லட்டும் வேதங்களைப் பூரணமாக அத்தியயனஞ் செய்வதற்கும் ஆஸ்திகராய் கர்மங்களைச் செய்வதற்கும் இவர்கள் மிகவுஞ் சமர்த்துள்ளவர்கள் இதராளில் இப்பேர்ப்பட்டவர்கள் யார்தா னிருக்கிறார்கள் இன்னும் வேதங்களை அத்தியயனஞ் செய்பவர்களும் பிரதிதினமும் எந்த சாஸ்திரத்தையும் பாடஞ்செய்பவர்களும் யாகங்களைச் செய்பவர்களும் எந்த மந்திரங்களையாவது ஜபஞ்செய்பவர்களுஞ் சிரார்த்தமுதலாகிய கர்மங்களைச் செய்பவர்களுமாகிய இந்த ஸ்மார்த்தர்கள் எவைகளையும் அனுஷ்டா

* சரீரகசாஸ்திரம்-என்பது வியாசர்முதலான பெரியோர்களால் சொல்லப்பட்ட வேதாந்தசாஸ்திரங்களாம்.

னஞ்செய்கிறபடியினுல் வேதத்தை அப்பிரமாணமாக நினைக்கிற தில்லையென்றுன்.

சைவப்பிராமணர்களைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் அத்தேசத்தையெல்லாம் பார்த்து இந்தத் தேசங்கள் சமானமில்லாததாக விருந்தாலுஞ் சைவர்கள் விசேஷமாக விருக்கிறபடியால் சிறப்பு செய்யத் தகுந்ததாகவில்லை ஏனெனில் இந்தச் சைவர்கள் தத்துவமாகிய புருஷார்த்தங்களைக் கிரமமில்லாமல் விரோதமாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்களாய் வித்துவான்களையும் மயங்கும்படிச்செய்வார்கள் எப்படியெனில் மன்மதனுக்குத் தகப்பனுனவனும் * ஆதங்கமில்லாதவனும் நற்குணங்களுக்கு நிதியாக விருக்கிறவனுமாகிய பரமபுருஷனிடத்தில் இலட்சுமிதேவியைப்போலே எப்போதுஞ் சம்பந்தப்பட்டிருக்கிற வேதத்தை இந்தச் சைவர்கள் o சூலத்தோடு கூடியிருக்கிறவனும் மன்மதனைத் தகித்தவனுமாகிய பசுபதியிடத்தில் தரித்திரம்பிடித்தவளைப்போலே சம்பந்தப்பட்டதென்று சொல்லுவார்கள் இன்னுஞ் சூரியனுல் ஆரோக்கியத்தை யபேட்சிக்கவேணும் அக்கினியினுல் சம்பத்தை யபேட்சிக்கவேணும் ஈசானனுல் ஞானத்தை இச்சிக்கவேணும் விஷ்ணுவினுல் சாஸ்விதமாகிய மோட்சத்தை இச்சிக்கவேணுமென்று இவைமுதலாகிய சத்தியவாதிமுதலிய முனிவர்களுடைய வசனங்களை இந்தச் சைவர்கள் தெரிந்திருந்தும் பவமென்கிற சமுசாரத்தினுடைய நாசத்துக்காக பவனென்கிற பேருள்ள சிவனையே தியானஞ்செய்வார்கள் இன்னுந் தமோகுணத்துக்குத் தூரமாகவிருக்கிற ஞானிகளால் நிறைந்திருக்கப்பட்டதும் நிர்மலமாகிய பரமானந்தசுரூபமானதுஞ் சாஸ்விதமாயிருக்கிறதுமாகிய விஷ்ணுவினுடைய பரமபதத்தை இந்தச் சைவர்கள் அபேட்சிக்காமல் எப்போதும் வேதாளபூதங்களுடனே கூடியிருக்கிறதும் பயங்கரமானதும் நசிக்கிறதுமாகிய சிவலோகத்தை அடைவதற்குப் பிரயத்தினப்படுவார்களென்றுன்.

---

* ஆதங்கமென்பது-ரோகத்துக்கும் பயத்துக்குமாகும்.

o சூலத்தோடு-என்பது சூலநோய்க்கும், சூலாயுதத்துக்கும் ஆகும்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனுகிய கிருசானுவே குணங்களைக் கிரகிப்பதில் சந்தோஷமுள்ளவனுயிரு எப்படியென்றால் இந்தச் சைவர்கள் பரிசுத்தியுள்ளவர்களாய் நித்தியகர்மங்களைச் செய்வார்கள் வேதங்களையுஞ் சாஸ்திரங்களையும் அத்தியயனஞ்செய்வார்கள் யாகங்களைச் செய்வார்கள் பக்தியினுலதிதிகளைப் பூசிப்பார்கள் திரிநேத்திரனுகிய சிவனை எப்போதும் பக்தியினுல் அர்ச்சனைசெய்வார்கள். இப்பேர்ப்பட்ட தர்மங்களுள்ள சைவர்களுடைய சில தோஷங்களை என் சகிக்கக்கூடாது இன்னு மிந்த ஜன்மத்தில் மன்மதனை அரித்த சிவனுடைய பூசை செய்தால் இன்னொரு ஜன்மத்துக்கு அரிபக்தி வரும் அந்த அரி பக்தி பாபகூட்டங்களைச் சாந்திசெய்கிற மோட்சத்தைக் கொடுக்கின்றது ஆகையால் சிவபூசை செய்பவர்களுக்கு எப்படித்தான் பலனில்லாமற்போகும் ஆனல் எந்த சிவபக்தி விஷ்ணுவினிடத்தில் சுவல்பத்துவேஷத்தையுஞ் சகிக்காமலிருக்கிறதோ அது சுப பலத்தைக் கொடுக்கும் எந்த பாரியை ஜாரர்புருஷர்களால் தொடப்படாமலிருப்பாளோ அவள்தான் தர்மநியமங்களுக்கு யோக்கியமானவளாவாள் இன்னும் புருஷர்களுக்கு சேஷசயனனுன விஷ்ணுவினிடத்தில் துவேஷமென்பது பாபங்களுக்கெல்லாம் இராஜனுகவிருக்கும்எப்படியென்றால் விஷ்ணுவினிடத்தில் துவேஷமென்பது நாஸ்திகத்தன்மையை யுண்டாக்குகின்றது நரகத்தைக் கொடுக்கின்றது புத்திப் பிரகாசத்தையுஞ் சம்பத்தையும் ஆயசையும் நாசஞ்செய்கின்றது சகல பாபங்களையும் விருத்திசெய்கின்றது ஆகையால் விஷபானத்துக்குச் சமானமாக விருக்குமென்று சொன்னுன்.

பண்டாரங்களைக்குறித்து.

அப்புறம் கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியது எதார்த்தந்தான் ஆனுலும் இந்தப் பிராந்தியங்களில் வேதசம்பந்தமல்லாத நியமங்களிலேயே பிரயாசைப்படுபவர்களுமாகிய இந்தப் பாஷண்டிகளுடைய வேஷமே மிகவும் பயங்கரமாக விருக்கின்றது எப்படியென்றால் அயோக்கியமான மார்க்கத்தை ஆசிரயித்தவர்களும் பஸ்மத்தால் வாடிப்போகிற நெற்றியுள்ளவர்களுஞ் ஜடைகள் தரித்தவர்களும் ஸ்புடமாகிய வார்த்தைகளில்

லாதவர்களும் மசான அக்கினிக்குச் சமானமாகிய நேத்திரங்களால் தகிக்கிறவர்களுமாகிய இந்தப் பாஷண்டிகள் பிசாசங்களைப் போலே திக்குதிக்குகளிலுந் திரிந்துக்கொண்டிருக்கிறார்கள் இன்னும் இவர்களுடைய ரீதி யோக்கியமானதல்ல எப்படியெனில் இவர்கள் சிவனைப் பட்சமாகமாத்திரஞ் செய்துக்கொண்டு சித்தியில்லாதவர்களும் மானமில்லாதவர்களுமாகி லிங்கதரிசனமாத்திரத்தினாலே தனத்தையுஞ் ஜயத்தையுஞ் சித்தியும் அடையவேணுமென்று இச்சிப்பார்கள் இன்னும் இவர்களுக்குள் சிலபேர் தீர்க்கமாயும் வக்கிரமாயுமிருக்கிற நகங்களுள்ளவர்களுங் கார்த்தபத்தைப்போ லிருக்கிறவர்களுங் கரங்களை மேலெடுத்துக்கொண்டிருக்கிறவர்களுந் தேகம் பரிசுத்தி செய்துக்கொள்ளுவதற்குஞ் சமர்த்தில்லாதவர்களுமாய் சுவல்பபுத்தியுள்ள ஜனங்களுடைய மனதுகளை மயங்கச்செய்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சிநேகிதனே குணங்களைக் கிரகிக்கிறவர்களால் இவர்களுந் தூஷிக்கத்தகுந்தவரல்ல எப்படியென்றால் சீதோஷணங்களுடைய துன்பங்களைச்சகிக்கிறவர்களுஞ் ஜிதேந்திரியர்களுங் கஷ்டமாகிய உபவாசங்களால் வற்றிப்போன தேகங்களுள்ளவர்களும் புண்ணிய ஸ்தலங்களின் யாத்திரைகளால் பாபங்களை நீக்கினவர்களுமாகிய இந்த ஜடாதாரிகளுக்குள்ளே சிலபேர் மிகவும் யோக்கியர்களாக விருக்கிறார்களென்றான்.

ஜோசியர்களைக்குறித்து.

அப்புறம் இன்னொரிடத்தை விஸ்வாவசுவென்பவன் பார்த்து ஓ கிருசானுவே உதயகாலத்திலெழுந்து புஸ்தகங்கள் தரித்தவர்களாய் அங்கிங்குஞ் சஞ்சாரஞ்செய்கிற இவர்களாரென்றான்.

இதைக் கேட்ட கிருசானு வென்பவன் பரிகாசத்துடனே சொல்லுகிறான் ஓ விஸ்வாவசுவே மோசக்காரராகிய இந்தஜோசியர்கள் அனேகமாகிய சாமான்னியவசனங்கள் விசேஷவசனங்களென்கிற அலைகளால் நிறைந்திருக்கிற ஜோதிஷசாத்திரமென்கிற மகாசமுத்திரத்தில் சில பிந்துக்களை யெடுத்துக்கொண்டு கிருதார்த்தரானவர்போலே தனமுள்ளவர்களுடைய வீடுவீடுகளிலும்

பிரவேசித்து நீர்க்காயசு புத்திரசம்பத்து முதலானவைகளைச்சொல்லி அடிக்கடி அவர்களை மயங்கச்செய்வார்கள் இன்னுமிந்த ஜோசியர்கள் கிரமமாகவாவது அக்கிரமமாகவாவதுஜனங்களுக்குஜன்மப்பத்திரிகளை எழுதிக்கொடுக்கிறார்கள் அது ஒருவேளை பலித்தாலப்போது தன்னுடைய சாமர்த்தியத்தைக்காண்பிக்கிறார்கள் ஒருவேளை பலிக்காமற்போனால் ஜனனகாலத்தில் இலக்னம் பார்த்தவனை மூட்டனென்று சொல்லுவார்கள் இந்தப்படிக்கு மோசத்தினாலேயே தனத்தை அபகரிப்பார்கள் இன்னும் ஒரு புருஷனுக்கு விதிவசத்தினாலே சந்தோஷமாவது வியசனமாவது சம்பவித்தால் நான் இதை முன்னமே சொல்லியிருந்தேனென்று பொய் சொல்லுகிறார்கள் இஷ்டார்த்தமாகவேணுமென்றுந் துன்பங்கள் பரிகாரமாகவேணுமென்றும் அபேட்சையுள்ள ஜனங்களை மேஷமுதலாகிய இராசிகளை எண்ணுவதினாலேயே மயங்கச்செய்வார்கள் இன்னும் ஒருவேளை எதார்த்தமாகச் சொல்லுகிற ஜோசியனிருந்தாலும் அவனுடைய வசனங்களைக் கேட்கிறது வியர்த்தமானதுதான் ஏனெனில் தேகத்தை எடுத்தவர்கள் கர்மங்கள் பக்குவமாகிறகாலங்களில் சுகமாவது துக்கமாவது அந்தந்த பலங்களைத் தப்பாமல் அனுபவிப்பார்கள் அதை ஜோசியனானவன் முதலிற்றானே சொல்லியிருந்தாலும் அதனா லென்ன பிரயோஜனம் உண்டாகுமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இகபரங்களுக்குச் சாதகமாகிய கர்மங்கள் செய்வதற்கு உபயோகப்படுகிறஜோசியர்கள் நிந்திக்கத்தகுந்தவர்களல்ல எப்படியென்றால் எந்த தேசத்தில் ஜோதிஷந் தெரிந்தவர்க ளில்லையோ அந்த தேசத்தில் நட்சத்திரங்களும் நவக்கிரகங்களுடையசஞ்சாரங்களுந் திதி முதலானவைகளுந் தெரியாமற்போகிறபடியினால் தேவதாகாரியங்கள் பிதுர்காரியங்கள் முதலானவைகளெல்லாஞ் சித்திக்காமற்போகும் இன்னுஞ் ஜோசியருடைய வசனங்களைக் கேட்கிறது விநிர்த்தமென்று நீ சொல்லியதை பண்டிதர்கள் ஒப்பிக்கொள்ளமாட்டார்கள் ஏனெனில் சூரியகிரகணமாவது சந்திரகிரகணமாவது முதலே நிர்ணயஞ்செய்கிறபடியால் பாபங்களையெல்லாம் பரிகாரஞ்செய்கிற தீர்த்தயாத்திராதிகள் ஜனங்களுக்குக் கிடைக்கும் சந்தோஷமான காரியங்கள் முதலே நிச்சயஞ்செய்து சொன்னால் ஜபமுதலாகிய சாந்திகளால் அதைப் பரிகாரஞ்செய்துக்கொள்ளு

வதற்காகும் இன்னும் ஜோசியர்களுடைய வசனங்களில் நம்பிக்கைவைக்காமலிருக்கிறதுந்தகுந்ததல்ல ஏனெனில் சந்திரனுடைய விருத்திக்ஷயங்களுஞ் சூரிய சந்திர கிரகணங்களுஞ் சுக்கிரன் முதலான கிரகங்களுடைய உதயாஸ்தமயங்களுஞ் ஜோசியர் நிர்ணயஞ்செய்தபடிக்குச் சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாக விருக்கின்றது ஆகையால் இந்தஜோசியர்களால் சொல்லப்படுகிற சகல வசனங்களிலும் பிரமாணத்தன்மையென்பது (பானைசாதத்துக்கு ஒரு சாதம் பிடித்துப் பக்குவந் தெரிந்துக்கொள்வதைப்போலே) ஸ்திரப்பட்டிருக்கும் இன்னுஞ் ஜோசியனில்லாத கிராமத்தையும் வித்துவானில்லாத இராஜசபையையும் வேதம்வாசிக்காத வாயையும் அரசனில்லாத தேசத்தையும் துராசாரமுள்ள பாரியையும் அரிகதையில்லாத காவியத்தையும் போதனுசக்தியில்லாத குருவையும் புத்திமான்கள் தியாகஞ்செய்யவேணுமென்றான்.

வைதியர்களைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே மேற்சொல்லிய திருக்கட்டுமென்று இன்னொரிடத்தைப்பார்த்து பரிகாசத்துடனே சொல்லுகிறான் என்னவெனில் பொய்யான மூலிகைகளாலும் பொய்யான கியாழங்களாலுஞ் சகிக்கக்கூடாத லேகியங்களாலும் எதார்த்தமல்லாத தைலங்களாலும் இந்த வைதியர்களென்பவர்கள் ரோகமுள்ள ஜனங்களை வஞ்சனைசெய்து தங்களுடைய உதரபாண்டங்களை நிரப்பிக்கொள்ளுகிறார்கள் இன்னும் இவர்களுக்கு நாடிக்கியானமுமில்லை வைதியசாஸ்திரத்தில் செவ்வையாய் பரிசயமுமில்லை ரோகங்களுடைய தத்துவநிச்சயமுமில்லை வஸ்துக்களுடைய குணங்களைத் தெரிகிற சக்தியுமில்லை ஆனாலும் இவர்கள் வைதியரென்று பாமரஜனங்களை சபலமுண்டாகச் செய்பவர்களாய் (எமதூதர்கள் பிராணன்களைக் கொண்டுபோவதுபோலே) ரோகமுள்ள ஜனங்களுடைய தனங்களையுங் கொண்டுபோகிறார்கள் இன்னுங் கியாழங்களாலும் உபவாசங்களாலுஞ் செய்யப்படுகிற லகுத்தன்மையை இந்த வைதியர்கள் தன் ஔஷதத்தாலே உண்டானதென்று மோசஞ்செய்து தனங்களை அபகரிப்பார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே உலகத்துக் குபகாரிகளாகிய வைத்தியர்களிடத்தில் இந்தப்படி தூஷணங்களைச் சொல்லாதே சிரசு சகிக்கக்கூடாத வேதனையினால் வியாபிக்கப்பட்டதாயும் பேச்சுக ளுள்ளடங்கியதாயுந் தேகஞ் சுவராக்கினியினால் காய்ந்துக்கொண்டிருக்கிறதாயும் இந்திரியங்கள் வாடியதாயுந் துக்கமுள்ள பந்துஜனங்களெல்லாம் பிரலாபஞ்செய்கிறதாயுமிருக்கிற சமயத்தில் ரோகங்களைச் சாந்திசெய்கிற சாமர்த்தியமுள்ள வைதியனைவிட எவன்றான் மறுபடியுந் தைரியத்தைச் சொல்லுவதற்குச் சமர்த்தனாவான் இன்னு மிவர்கள் வைதியசாஸ்திரத்தைத் தெரியாதவர்களாகவே யிருந்தாலும் மகாரோகங்கள் பிராப்தமான சமயங்களில் யார் வைதியமொன்று பிரசித்திப்பொருந்தி யிருக்கிறார்களோ அவர்களையே விவேகமுள்ளவர்களும் அழைத்துக்கொண்டுவருகிறார்கள் ஆகையால்வைதியனைத் தூஷிக்கக்கூடாது இன்னும் உபகாரஞ்செய்த வைதியர்களிடத்தில் விவேகமில்லாத ஜனங்கள் அபகாரஞ்செய்வார்கள் இந்தவிஷயத்தில் வித்துவான்கள் இப்படி உதகரிப்பார்கள் எப்படியென்றால் யாகத்தை நிறைவேற்றிக்கொண்டவன் ருத்விக்கானவனையும் நதியைத் தாண்டினவன் படகுக்காரனையும் ஜயத்தைப் பொருந்திய அரசன் யுத்தத்தில் மிகவுஞ் சிரமப்பட்ட படனையுந் தன்னிருப்பிடஞ்சேர்ந்தவன் சுமந்துவந்தவனையும் எவ்வனத்தைப் பிரித்துப்போட்ட ஜாரபுருஷன் கிழவியாகிய வேசியாஸ்திரீயையும் ரோகங்களைப் பரிகாரஞ்செய்துக்கொண்ட புருஷன் வைதியனையும் (அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கேட்டசமயத்தில்) துவேஷஞ் செய்வார்களென்பதாமென்று சொன்னான்.

கவீஸ்வரரைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் விமானத்தைக் கொஞ்சம் நடத்தி எதிரில் பார்த்து ஓ சினேகிதனாகிய விஸ்வாவசுவே இந்த யிடத்தில் சாஸ்திரங்களுக்கு விரோதமாகிய இந்தக் கவீஸ்வரர்களுடைய நடத்தைகளைப் பார் என்னவெனில் இந்தக் கவீஸ்வரர்களுக்கு இலட்சுமிபதியாகிய விஷ்ணுவை ஸ்துதிசெய்வதற்கு யோக்கியமான கவித்துவமுள்ள வாக்குகளை வீணாக நீசராகிய துஷ்ட அரசர்களுக்கு ஆதீனமாகச் செய்வார்கள் புத்திமா

ன்கள் சுவாமியினுடைய அபிஷேகத்துக்கு யோக்கியமானதூ் தூரத்திலிருந்து கொண்டுவரப்பட்டதுமாகிய திவ்விய கங்காஜலத்தைக் கிளைப்பாத்திகளை நனைப்பதற்கு விநியோகஞ்செய்வார்களா இன்னும் நீதியில்லாத அரசன் சுவாமியினுடைய மகுடத்துக்கு யோக்கியமாகிய திவ்விய இரத்தினங்களால் வீட்டிலிருக்கிற நாயினுடைய தேகத்துக்கு அலங்காரஞ்செய்வதைப்போலே இந்தக் கவீஸ்வரர்கள் (ஸ்துதிசெய்பவர்களுடைய சமுசாரபாசங்களை நிவிர்த்திசெய்கிற அரி யிருக்கும்போது) நிந்திக்கத்தகுந்த ஸ்திரீ சரித்திரங்களுடைய வர்ணனையைச் செய்வார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே அகவிருளுக்குச் சூரியனைப்போலிருக்கிற கவீஸ்வரர்களை நீ ஆட்சேபஞ் செய்யக்கூடாது ஏனெனில் உலகத்தில் கவீஸ்வரர்களுடைய அனேக வாக்குகள் பிரயோசனமில்லாமற்போனாலுங் கேட்பவர்களுக்குச் சகல இஷ்டார்த்தங்களையுங் கொடுக்கிற மதுஹரனாகிய விஷ்ணுவினுடைய கதைக ளிருக்கவேயிருக்கின்றது மகந்தாதாவினுடைய திரவியமுந் துஷ்டஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது பிரயோசனமில்லாமற்போனாலுஞ் சத்பாத்திரத்தில் கொடுக்கப்பட்ட தனங்களால் மிகவுந் தன்னியத்தன்மை கிடைக்குமல்லவா இன்னும் பகவானுடைய கதைகளை இணைப்பதனால் சுபகரமாகிய காவியத்தை கவீஸ்வரர்கள் நிர்மாணஞ்செய்கிறபோது அந்தக் காவியத்துக்கு அங்கமாக சிங்காரரசமுதலாகிய நவரசங்களைச் சொன்னால் அதனால் என்ன தோஷந்தான் வரப்போகின்றது வியாசர் வால்மீகி முதலானவர்களுடைய கிரந்தங்களில் சொல்லப்பட்ட மார்க்கத்தையே இந்தக் கவீஸ்வரர்களும் ஆசிரயித்திருக்கிறார்கள் என்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே முக்கியமாக நாஸ்துதிசெய்கிற இந்தக் கவீஸ்வரர்கள் வித்துவான்களால் சிறப்பு செய்யத்தகுந்தவ ரல்லவென்று சாஸ்திரமார்க்கங்களில் பிரவேசித்தவர்கள் இவர்களை நிந்திப்பார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓகிருசானுவே தனத்தில் சபலமுள்ள சகல ஜனங்களுக்குஞ் சாதாரணமாகவிருக்கிற இந்த தூஷணத்தை அவிவேகிகளானவர்கள் கவீஸ்வரர்களிடத்திலேயே சொல்லுவார்கள் ஆனால் கவீஸ்வரர்கள் மிகவும் ரமணீயமாகிய பாட்டுகளால் அரசர்களைத் துதிசெய்வார்கள் இதர ஜனங்

கள் சமத்காரமில்லாததுஞ் சாரமில்லாததுமாகிய பேச்சுகளால் அந்த அரசர்களைத் துதிசெய்வார்கள் இந்தக் கவீஸ்வரர்களுக்கும் இதர ஜனங்களுக்கும் பாட்டுகள் சொல்வதில் சாமர்த்தியமும் அது இல்லாததும் பேதமேதவிர நாஸ்துதியினால் சம்பவிக்கிற தோஷமென்பது சகல ஜனங்களுக்கும் யிருக்கிறதென்று க்ஷணநேரம் ஆலோசனைசெய்து விஸ்வாசத்துடனே சொல்லுகிறான் என்னவெனில் வால்மீகி வியாசர் பராசர் முதலாகிய புராதன கவீஸ்வரர்கள் உலகத்தினால் மிகவும் பூசிக்கப்பட்டவர்கள் உலகோபகாரமாய் நூதனமான கவிக்கூட்டமுங் குணங்களைக் கிரகிக்கிறவர்களால் பூசிக்கத்தகுந்தது எப்படியென்றால் மாகன் மயூரன் முராரி பாரவி சாரவித்யன் ஸ்ரீஹர்ஷன் காளிதாசன் பவபூதி போஜராஜன் தண்டி டிண்டிமன் வேதாந்ததேசிகர் பல்லடன் பட்டன் பரணன் சுபந்து முதலான கவீஸ்வரர்கள் இந்த உலகத்தில் கிரந்தங்களால் ஆனந்தத்தை யுண்டாக்கியிருக்கிறார்கள் ஆனால் சம்பத்துக்கு அகங்காரமில்லாததுஞ் சாஹித்தியத்துக்கு சாஸ்திரபாண்டித்தியமுஞ் சாமர்த்தியத்துக்கு ஜனோபகாரமுஞ் சாம்பிராச்சியத்துக்கு தாட்சண்ணியமும் மகா தாதருத்துவத்துக்குப் பிரியவசனங்களும் ஆசாரத்துக்கு ஞானமுஞ் சேர்ந்திருக்கிறது மிகவுஞ் சிறப்புக்குக் காரணமென்று சிரேஷ்டரான வித்துவான்கள் சொல்லுவார்கள் இன்னுந் தொண்டரடிப்பொடியார் விண்டுசித்தர் சடகோபர் பொய்கையார் பூதத்தார் மதுரகவி முதலிய ஆழ்வார்களும் இன்னுஞ் சில தன்னியர்களும் நல்ல கிரந்தங்களால் உலகத்தைப் பரிசுத்தஞ்செய்துக்கொண் டிருக்கிறார்களென்றான்.

தர்க்கசாஸ்திரிகளைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இன்னோரிடத்துக்கு விமானத்தை நடத்தி ஒரு பக்கத்தில் பார்த்து ஓ விஸ்வாவசுவே இந்த அக்கிரகாரப் பிராமணர்களைப் பார் இவர்கள் தர்க்க கிரந்தங்களை எப்போதுஞ் சிந்தனைசெய்து வீணாய் சிரமப்படுவார்கள் எப்படியென்றால் இந்த தர்க்கசாஸ்திரிகள் போகத்தையும் மோட்சத்தையுங் கொடுக்கிற கர்மவிசாரணையும் பிரம்மவிசாரணையும் விட்டு கண்டம் வறண்டுப்போகும்படியாகக் கூச்சலிட்டுக்கொண் டிருக்கிறார்கள் அதில் 1-பிரத்தியட்சமென்பது சம்ரட்சணைசெய்

கிறதில்லை. 2-பரமாணுக்கூட்டமென்பது பாபங்களைபரிகாரஞ்செய்வதில்லை. 3-வியாப்தியென்பது பந்தத்தை நீக்குவதில்லை. 4-அனுமிதியென்பது காப்பாற்றுகிறதில்லை. 5-பட்சதையென்பது இரட்சிக்கிறதில்லை. இன்னும் அனுமிதிக்கு விசிஷ்டகியானங் காரணமாகும் இரண்டு கியானங்கள் காரணமாகிறதில்லை வாயு மெய்யிந்திரியத்தால் பிரத்தியட்சமாகிறதில்லை யென்கிற வாதங்களால் கூச்சல்போட்டுக்கொண்டிருக்கிற தார்க்கிகர்களை வித்துவான்களென்று சொன்னால் (ஆட்டினுடைய வினை இத்தனைப் பலமென்றுங் காக்கையினுடைய பற்கள் எத்தனையென்றும் எப்போதும் வாதஞ்செய்பவர்களையும்) வித்துவான்களென்று ஏன் சொல்லக்கூடாது இன்னும் வெறுந்தர்க்கமே படித்தவனுடைய கிரமம் விவேகவான்களுக்கு மிகவும் பரிகாசத்துக்குக் காரணமாகவிருக்கும் எப்படியென்றால் இந்தத் தர்க்கம் படித்தவன் வேதத்தை மோந்துப்பார்க்கிறதேயில்லை * வேத அங்கங்களைத் தொடுகிறதேயில்லை புராணங்களை அங்கீகரிக்கிறதேயில்லை தருமசாஸ்திரங்களை நினைப்பதேயில்லை வெறுந் தர்க்கத்தைமாத்திரம் பாடஞ்செய்துக்கொண்டு பரலோகப் பிரயத்தினத்துக்குப் பங்கமுள்ளவனாய் அந்நியர்களை ஜெயிக்கிறதே பிரயோசனமாகவுள்ள பேச்சுகளாலேயே சகலமான ஆயசையுங் கழிக்கிறார்கள் இன்னும் அதிகமாகிய பிரயத்தினத்தால் அப்பியாசஞ்செய்யப்பட்ட குச்சிதமாகிய தர்க்கப் பிரகரணங்களுள்ளவர்களாய் சில பதக்கூட்டங்களை வாய்ப்பாடமாகச் செய்துக்கொண்டு சபையில் வாயாடிகளாய் செவிகளுக்

1-பஞ்சேந்திரியங்களாலுண்டாகிற கியானங்களுக்கு பிரத்தியட்சமென்பதாம்.

2-கவாட்சியில் சூரியகிரணங்களில் காண்பிக்கிற சூட்சும அணுவி லாறி லொருபாகத்துக்கு பரமாணுவென்பதாம்.

3-எங்கே புகையிருக்கிறதோ அங்கே அக்கினியிருக்கிறதென்கிற நியமம் வியாப்தி என்பதாம்.

4-ஒரு மலையில் புகையைப் பார்த்து இந்த மலை அக்கினியுள்ளதென் றுண்டாகிற கியானம் அனுமிதி யென்பதாம்.

5-அந்தப் புகை மலையி லிருப்பதற்கு பட்சதை என்பதாம்.

* வேத அங்கங்கள்-என்பது சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருக்தம், ஜோதிஷம், கல்பம்.

ருக் கடூரமாய் கட பட சப்தங்களைக் கூச்சற்போட்டுக்கொண்டி ருக்கிறவர்களாய் வெட்கப்படுகிறதுமில்லை அசங்கியப்படுகிறதும் இல்லையென்றான்

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனாகிய கிருசானுவே அனேக யுக்திகளை நிர்மாணஞ்செய்கிற தார்க்கிகர் களை அவமானஞ்செய்யாதே ஏனெனில் தர்க்கசாஸ்திரத்தில் பரி சயமென்பது அஞ்ஞானத்தை நிவாரணஞ்செய்கின்றது புத்தியை நிர்மலமாகச் செய்கின்றது சமஸ்கிருதபதங்களால் வாதஞ்செய் கிற சாமர்த்தியத்தை யுண்டாக்குகின்றது இதர சாஸ்திரங்களை அப்பியாசஞ் செய்வதற்குஞ் சாமர்த்தியமுண்டாக்குகின்றது ஆ கையால் இந்த உலகத்தில் இது எந்த உபகாரத்தைத்தான் செய் யாமற்போகும் இன்னும் மிகவுங் காவியங்களாலேயே வயசெல் லாங் கழித்தவனாகவிருந்தாலும் வியாகரணசாஸ்திரமென்கிற சமு த்திரத்தினுடைய முடிவு தெரிந்தவனாகவிருந்தாலும் இந்த தர்க்க மென்னும் நியாயசாஸ்திரத்தை அப்பியாசஞ்செய்யாமலிருக்கிற புருஷனுக்கு சபையில் வாதம் ஆரம்பமாகிறகாலத்தில் ஒரு வாக் கியத்தைச் சொல்லவேணுமென்று அபேட்சித்தால் நாக்கு தடு மாறிப்போகின்றது இது கஷ்டமான அவஸ்தையல்லவா இன் னும் இலட்சணங்களிலும் பிரமாணங்களிலும் பரிசயமில்லாதவர் களும் பதார்த்தங்களுடைய தத்துவ விமரிசையைத் தெரியாதவர் களுஞ் ஜயப்பிரதமாகிய யுக்தி கூட்டங்கள் சுவாதீனமாக வில்லா தவர்களுமாகிய தர்க்கசாஸ்திரத்தை அப்பியாசஞ்செய்யாதவர்க ளால் என்னபிரயோஜனம் இன்னும் அஞ்ஞானத்தால் சம்பந்தப் படாதவருங் களங்கமில்லாத சந்திரனைப்போ லிருப்பவருமாகிய கௌதமமுனிவர் எந்த நியாயசாஸ்திரத்தை விருத்திசெய்தாரோ அப்பேர்ப்பட்டதும் அகாதமுள்ளதுமாகிய தர்க்கசாஸ்திரமென் கிற சமுத்திரம் ஆச்சரியகரமானது இன்னுங் கௌதமர் கணாதர் ஸ்ரீபட்சலர் உதயநர் வர்த்தமானர் கங்கேஸ்வரர் சரதரர் இன்னு மனேக நூதன வித்துவான்கள் நியாயக் கிரந்தங்களால் மனதிலி ருக்கிற இருளைப் பரிகாரஞ்செய்வார்களென்றான்.

மீமாம்சகரைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இன்னேரிடத்துக்கு விமானத்தை நடத்தினவனைப் எதிரில் பார்த்து நிந்தையுடனே சொல்லுகிறுன் என்னவெனில் ஓ விஸ்வாவசுவே இந்த விடத்தில் சிலபேர் மீமாம்சகர்கள் சேர்ந்திருக்கிறுர்கள் இவர்கள் வேதம் பிரமாணமென்று சாதிக்கிறவர்களாக விருந்தாலும் உபநிஷதங்களால் திடமாகச் சொல்லப்பட்டதுஞ் சகலத்திலு மீந்திருக்கிறதுமாகிய பிரம்மத்தையே அங்கிகரிக்காதிருப்பதனுலே நமஸ்காரஞ் செய்யத்தகுந்தவரல்ல இன்னும் விசேஷமாக மீமாம்சக சபையில் சேர்ந்தவர்கள் பகவத்பக்தர்களால் வேடர்களைப்போலே தூஷிக்கத்தகுந்தவர்கள் ஏனெனில் மீமாம்சா சாஸ்திரத்தில் உலகப்பிரசித்தியாகிய வித்துவான்கள் சகலமான ரிஷிகளுடைய சக்தியைச் சகிக்கிறதில்லை பிரபஞ்சம் ஈஸ்வர னில்லாததென்று சொல்லுவார்கள் தேவதைகளில் சைதன்னியத்தை * அபலாபம் செய்வார்களென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே சகலமாகிய வேதங்களுடைய அர்த்தத்தை திடமாக நிச்சயஞ்செய்வதில் மிகவும் அபேட்சையுள்ள மீமாம்சகரிடத்திலுந் தூஷணஞ் சொல்வதற்கு எத்தனஞ்செய்யாதே ஏனெனில் முதல் தருமத்தில் பிரமாணத்தையும் பின்பு விதியையும் சேஷத்தையும் பிரயுக்தியையும் பூர்வாபராதிகாரங்களையும் அனேகவிதமாகிய அதிதேசங்களையும் ஊகத்தையும் பாதத்தையுந் தந்திரப் பிரசங்கத்தையும் நியாயங்களென்கிற அனேக நேத்திரங்களால் செவ்வையாய் ஆலோசனைசெய்கிற மீமாம்சகரைவிட பூமியில் யார்தான் விஸ்வாசத்துடனே வேதத்தை சம்ரட்சணைசெய்வார்கள் இன்னும் பூஜிதையுடைய ஜைமினிமுனிவருடைய சாசனமென்பது பகவானுடைய சாசனத்தைப்போலே சகலமான வைதிகர்களாலும் அதிக்கிரமிப்பதற்கு அசக்கியமானது பார் எப்படியென்றுல் தர்க்க சாஸ்திரந் தெரிந்தவர்களும் வியாகரணசாஸ்திரந் தெரிந்தவர்களும் வேதாந்தங்களில் அனுபவமுள்ளவர்களும் வாதகலகங்கள் சம்பவித்தசமயத்தில் ஜைமினிசம்பந்தமாகிய நியாயத்தை வுதகரி

---

* அபலாபம்-என்பது இருப்பதை இல்லையென்பது.

க்தால் மௌனமாயிருப்பார்கள் இந்த மீமாம்சகரிடத்தில் நீசொல்லிய தோஷம் விமரிசைசெய்தால் சம்பவிக்கிறதில்லை எப்படியென்றால் இவர்கள் பகவானை அங்கீகரிக்காமலிருப்பதுங் கேவர்களுடைய சைதன்னியத்தை அபலாபஞ்செய்கிறதுங் கர்மத்தில் பக்தி விருத்தியாகி அந்தக் கர்மமே பிரதானமென்று திடமுண்டாக்குவதற்கேதவிர வேறில்லை ஆகையால் வேதத்தினுடைய சுவரூபத்தை விசாரணைசெய்தவரும் ஆயிரம் அதிகரணங்களால் அந்நிய மதங்களை சிட்சைசெய்தவருமாகிய ஜைமினி யோகீஸ்வரர் விஷயத்தில் என்னுடைய மனது மிகவுஞ் சந்தோஷப்படுகின்றது இன்னுஞ் சபரர் குமாரிலர் அண்டமண்டனர் பவதேவர் பார்த்தசாரதி இன்னும் உலகத்தில் பகுமானஞ் செய்யத்தகுந்தவர்களும் மீமாம்சா சாஸ்திரத்தை சம்ரட்சணைசெய்பவர்களுமாகிய வித்துவான்கள் சர்வோத்தமமாக விருக்கின்றார்களென்றான்.

வையாகரணரைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இன்னொரிடத்துக்கு விமானத்தை நடத்தினவனைப் பக்கத்தில் பார்த்து பரிகாசத்துடன் சொல்லுகிறான் என்னவெனில் ஓ விஸ்வாவசுவே இந்த விடத்தில் சிலபேர் (டிட்டாணங் வயசசு அசிஙசோஸ்திபு சிஷ்டடு நாஷ்டடு ரதயிநு லோபோரிவியோருவலி விருத்தி ரேசியெசு) என்னும் இவைமுதலிய கடூரமாகிய சப்தங்களைப் படனஞ்செய்துக்கொண்டு சகல வருஷங்களையுங் கழிக்கிறார்கள் இன்னும் பாணினிமுனிவரால் சொல்லப்பட்ட அனேகமாகிய சூத்திரங்களால் சப்தக்கூட்டத்தை சுவரூபநிர்ணயஞ்செய்து நாராயணனுடைய ஸ்தோத்திரத்தைச் செய்வதற்கு அசமர்த்தராய் நிஷ்பலமாகிய சிரமமுள்ள இந்த வையாகரணங்கள் (மிகவும் வருத்தத்தினால் அனேகவிதமாகிய பட்சியங்கள் முதலாகிய அன்னங்களைப் பாகஞ்செய்து அதை மோந்துப்பார்க்கிறதற்குஞ் சமர்த்தில்லாதவர்களுஞ் சுவல்ப பலமுள்ளவர்களும் மந்தாக்கினியுள்ளவர்களுமாகிய ஜனங்களை) ஒத்திருக்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே பூமிக்குப் பூஷணத்தைப்போலிருக்கிற வையாகரணரிடத்தில் நீ லேசமாவது தோஷஞ்சொல்லாதே ஏனெனில் பாபங்களை நிவாரணை

செய்கிற வியாகரணத்தை அத்தியயனஞ்செய்த சாதுரியமானபுத்தியுள்ள பண்டிதன் (வித்துவஜனங்களை எண்ணுங்காலத்தில்) கனிஷ்ட விரலி லேருகிருன் இன்னுங் கங்காநதியினுடைய ஜலத்தில் முழுகுகிறதும் பதஞ்சலிமுனிவரர் சம்பந்தமாகிய இந்த வியாகரணசாஸ்திரத்தில் பிரவேசிக்கிறதும் விஷ்ணுவினுடைய பூசை செய்கிறதுஞ் ஜனனமுதல் மரணம்வரைக்குஞ் சகலமான சித்தியுங் கொடுக்கிறதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள் இன்னுந் (தநுர்வேதத்தினுடைய மார்க்கத்தைத்தெரியாத புருஷர்களுக்கு சூரர்களாகிய ஜனங்களால் பிரவேசிக்கத்தகுந்த யுத்தபூமியைப் பொருந்துவதற்கு எப்படி அசக்கியமோ) அந்தப்படிக்கு ஆதிசேஷனுல் சொல்லப்பட்ட வியாகரணத்தை அப்பியாசஞ்செய்யாதவர்களுக்கு சிரேஷ்டமாகிய வித்துவான்களுடைய சபையைப்பொருந்துவதற்கு அசக்கியமானது இன்னும் வியாகரணமென்கிற அவுஷதத்தை அங்கிகரிக்காத ஜனங்களுடைய வாக்குகள் மிகவும் படுத்துவமில்லாமலிருக்கும் சபையில் இச்சைப்படிக்கு ஒரு பதத்தைச் சொன்னுல் தேகம் வேர்வைவிட்டு நடுக்கமூண்டாகும் மென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ சினேகிதனுகிய விஸ்வாவசுவே இதர வியாகரணங்களைவிட பாணினிமுனிவரால் சொல்லப்பட்ட வியாகரணத்தையே சத்புருஷர்கள் என்னத்துக்காக ஆதரிக்கிருர்களென்றுன்.

இந்த வசனத்தைக் கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே பாணினிமுனிவரால் சொல்லப்பட்ட வியாகரணமே பிரயோகங்களுக்கு உபயோகமான்தும் விவரமாய் ஞானமுண்டாவதற்குக் காரணமானதுமாகிறபடியால் வித்துவான்களுக்கு அதிலேயே ஆதரணையுண்டாயிருக்கிறது எப்படியென்றுல் பாணினிமுனிவரால் நிர்மாணஞ்செய்யப்பட்ட சூத்திரங்களைத் தெரிந்தவன் நல்ல ஞானத்தை வகிப்பான் "அட்சரங்கள் முதலியவைகளுடைய இலட்சணங்களைத் தெரிந்து விதிப்படிக்குப் பிரயோகிப்பானென்றுன்.

உபாத்தியாயர்களைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இன்னொரிடத்துக்கு விமானத்தை நடத்தி எதிரில் பார்த்து ஓ சினேகிதனாகிய விஸ்வாவசுவே திரவியத்தில் சபலத்தினால் வேதங்களை விக்கிரயஞ்செய்கிற இந்த உபாத்தியாயர்களைப் பார் இவர்கள் சிஷ்டாராயிருந்துந் திருப்தியில்லாதவர்களாய் திரவியத்தின் ஆசையினால் மாதமாதஞ் சம்பளத்தை வாங்கிக்கொண்டு வேதங்களை அத்தியயனஞ்செய்து வைக்கிறார்களென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே இந்த உபாத்தியாயராகிய ஜனங்கள் சிஷ்யர்களுக்கு மிகவும் பிரயாசத்தால் வேத அத்தியயனஞ் செய்துவைக்காமற்போனால் இந்த பூமண்டலமெல்லாம் வேதவசனங்க ளில்லாததும் யாகங்களில்லாததுமாகிப் போகுமல்லவா (அந்தப்படி போகாமல் விருத்தியாகும்பொருட்டு சிரமமெடுத்துக்கொள்ளுகிறபடியால் அப்பேர்ப்பட்டவர்கள் உணவின்பொருட்டு சிஷ்யர்களால் கொடுக்கப்பட்ட சில பொருளை அங்கிகரிக்கிறார்களென்றான்.)

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே என் விரோதமாகப் பேசுகிறாய் வேதாப்பியாச மில்லாமற்போனால் ஏன் யாகங்கள் விருத்தியாகக்கூடாதென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே யாகத்தில் எஜமானனாகவிருக்கிறவன் வேதத்தைப் படிக்காதவனாகவிருந்தால் அவனால் செய்யப்பட்டது யாகமென்கிற பேருள்ளது எப்படி யாகுமென்றான்.

இராஜசேவை செய்கிறவர்களைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் இன்னொரிடத்தைப் பார்த்து பரிகாசத்துடனே சொல்லுகிறான் ஓ விஸ்வாவசுவே அரசர்களை சேவைசெய்பவர்களும் இரண்டு லோகங்களின் சவுக்கியமில்லாதவர்களும் ஸ்புடமாகிய மூடத்தன்மையுள்ளவர்களுமாகிய இந்தப் புருஷர்களைப் பார் இவர்களுக்குக் காலந்தப்பாமல் சந்தி

யாவிதியுமில்லை சாங்கமாக அரிபூசை முதலியதுஞ் சம்பவிக்கிறதி ல்லை சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட காலங்களில் ஓமகியமங்க ளும் நடக்கிறதில்லை வேதங்களினுடைய அர்த்தவிசாரணையுமில்லை பசித்த காலங்களில் நியமமாகப் பசியைத் தணித்துக்கொள்வதற் குமில்லை நித்திரைக்கு அவகாசமுமில்லை ஆகையால் இவர்களைப் போலவே மற்ற வருணத்தார்களுக்கும் இகபரமென்கிற இரண்டு லோகங்களுடைய சவுக்கியமு மில்லையென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே நீ சொல்லியபடி பலபேரிருந்தாலும் அவர்களில் சிலபேர் கிரமமாக வும் அனேக ஜனங்களைப் போஷித்துக்கொண்டும் வருகிறபடி யால் அவர்களைத் தூஷிக்கத்தகுந்ததல்ல எப்படியென்றால் அநே கதுன்பங்களை விருத்திசெய்துக்கொண்டிருக்கிற இக் கலியுகத்தி லுஞ் சுதர்மந் தப்பாம லிருப்பவர்களும் பிரதிதினமும் வித்துவா ன்களுக்கு உபகாரஞ்செய்பவர்களும் அனேக ஜனங்களைப் போ ஷணைசெய்வதில் தீட்சைவகித்தவர்களுமாகிய இந்தப் புருஷர்கள் தங்களுடைய சுகத்தையும் விட்டு இராஜசேவை செய்கிறார்கள் யென்றான்.

பிறனில்விழைவோரைக்குறித்து.

அப்புறம் கிருசானுவென்பவன் கொஞ்சம் விமானத்தை மேலே வுயர்த்தி அஷ்டதிக்குகளிலும் பார்த்துச் சொல்லுகிறான் ஓ சினேகிதனுகிய விஸ்வாவசுவே (பிறனுக்கு உடைமையாந்தன் மையவளை இச்சித்து நடக்கின்ற அறியாமையானது பூமியினிடத் தில் அறநூலையும் பொருள்நூலையும் ஆராய்ந்து அறிந்தவரிடத் தே இல்லையென்றும் இன்பமொன்றையே நோக்குங் காமத்தோர் இப் பொல்லா வொழுக்கத்தையும் அனுசரிப்பார்களென்றும்) முன்னோருரைத்திருக்கின்றபடியே அவ்வவ்விடங்களில் சிலபேர் அந்நியர் மனைவிகளிடத்து ஆசைவைத்து அறம்பொருள்களை யிழ ந்து அதனிடத்திலேயே காலத்தைக் கழிக்கிறார்களே அது யுக்த மோ அல்லது அவர்கள் நடந்துக்கொள்ளவேண்டிய கிரமத்தை யாவது நீ தெரிவிக்கவேண்டுமென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ அன்புள்ள கிரு சானுவே நீ நற்குணங்களில் ஆட்சேபணை செய்யுங் குணத்தை

விட்டு நற்குணத்தில் ஆட்சேபித்துக் கேட்பதைக்குறித்து யாவருஞ் சந்தோஷப்படுவார்களாகையால் பெரியோர்களாலும் அவர்கள் செய்த நூல்களாலும் நான் தெரிந்துகொண்டிருக்கிறவளாயில் சொல்வதை நீ கேட்பாயென்று சொல்லுகிறுன் அது என்னவெனில்,

உலகத்திற் புருடர்களாகப் பிறந்தவர்கள் ஆண்மக்கள் குணங்களாகிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி யென்னும் நால்வகை குணங்களையும் உடையவர்களாய் அவற்றிற் பிறழாமற் கிரமமாக நடந்துக்கொள்ளவேண்டும் அக் குணங்களில் அறிவு என்பது கல்வி, நிறையென்பது முறையினிலைமை, ஓர்ப்பு என்பது பொறுமை, கடைப்பிடி யென்பது கருமமுடிக்குந் துணிவுஎன்பனவாம்.

வேதசாத்திர புராணங்களிற் சொல்லியிருக்கின்றபடி ஒருவன் நூறுவருடம் வயதுள்ளவனனபோதிலும் ஐம்பது வருடம் நித்திரையிலும் சிலவருடம் பாலியத்திலுஞ் சிலவருடம் யௌவனத்திலுஞ் சிலவருடம் மூப்பிலும் மற்றவருடங்கள் நோயிலும் வீணுகக் கழித்துப்போகின்றனவென்று முன்னோர் உரைத்திருக்கின்றூர்களாதலால் மிகுந்த கொஞ்சகாலத்திற்குள்ளாகவே இம்மை மறுமையை யடைதற் கேதுவான நற்காரியங்களைச் செய்துக்கொள்ளவேண்டியது அவனுக்கு முக்கிய கடமையாக விருக்கின்றது.

விவேகப்பெருக்கமில்லாத பாலியகாலத்தில் தங்களை மிகுந்த அன்புடனே பெற்றெடுத்த அன்னை தந்தையர் முதலானவர்களுடைய ஆணையைக் கடக்காமல் அவர்க ளளிக்கும் அன்னமுதலாகியவற்றை யுண்டும் அவர்கள் தரும் வஸ்திரமுதலாகியவைகளை அணிந்தும் அவர்க ளிஷ்டப்படி கல்வியைக் கற்றும் அவர்கட்கு அடங்கி நடக்கவேண்டும்.

கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியனிடத்தில் தகுங்காலத்திற் போய் வழிபாடுசெய்து அவருடைய குணங்களோடு பழகி அவர் குறிப்பின் வழியைச்சேர்ந்து உட்காரச்சொன்னபின்உட்கார்ந்து படியென்று சொன்னபின் படித்து பசித் துண்பவனைப்போன்ற விருப்பத்தினனுகிச் சித்திரப்பதுமையைப்போல அசைவின்றி அடங்கியிருந்து காதுகள் வாயாகவும் மனமானது கொள்ளுமிடமாகவும் முன் கேட்டவற்றைப் பின்னுங் கேட்டு அப் பொருள்க

ளை மறந்துவிடாமல் உள்ளத்தில் அமைத்துக்கொண்டு பேரவென்றபின்பு போகவேண்டும்.

அப்படி கிரகித்தவைகளை மறக்காமல் பலகாற் சிந்தித்தலினும் படித்தோர்களுடனே பழகுதலினும் படித்துக்கொள்வோர்களுக்குப் போதிப்பதினுஞ் ஜாக்கிரதையாகவிருந்து கல்வியை விருத்திசெய்யவேண்டும்.

கற்கப்படும் நூல்களைக் குற்றமறக்கற்று அந்நூலிற் சொல்லிய நிஷேதங்களைக் கடிந்து விதிப்படி நடந்து நல்லோர் பலருடனே பழகி இல்வாழ்க்கையிற் கிரமப்படி யிருந்து பாத்திரமறிந்து கொடுத்து தானும் அனுபவித்துப் பின்பு துறவிற் சென்று தவநிலையினின்று அவாவறுத்து பரவஸ்துவை யுணர்ந்துக்கொள்ளவேண்டும் இப்படி நடந்துக்கொண்டவர்களல்லவா புருடசிகாமணிகளென்று புகழ்பெற் றிருக்கின்றூர்கள்.

யெள்வனம் வந்தவுடனே தாய் தந்தை முதலானவர்க ளாணையின்படி தங்கள் பந்துக்களால் நல்ல யோக்கியதையுள்ளவர்கள் குடும்பத்தில் ஒரு கன்னிகையை விவாகஞ்செய்துகொண்டு பின்னும் அவர்க ளனுமதியின்படி நடந்து அவர்கட்கு ஊழியக்காரனைப்போலப் பணிவிடை முதலியவற்றைச் செய்து அவர்களுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெறவேண்டும்.

இப்படி நடந்தால் உலகத்தோர் இவனைப் பெற்றெடுத்த தாய்தந்தை முதலானவர்களுடைய தவமே மேலான தவமென்று மிகவுங் கொண்டாடுவார்களல்லவா இதைவிட உலகத்தில் புருடர் பெறும் பிரயோஜனம் வேறென்ன விருக்கின்றது.

விவேகம் வந்தபின்பு உழவு வர்த்தகம் உத்தியோகமுதலிய தொழில்களிற் பிரவேசித்துப் பழிபாவங்களுக்குஅஞ்சி பொருள் சம்பாதித்து அதை ஆறுபங்கு செய்து தென்புலத்தார் தெய்வம் விருந்தாளிகள் சுற்றத்தார் தான் என்கிற இவ் வைந்து வழிகளிலும் பங்கிட்டு மீதியாகிய ஒரு பங்கை தானிருக்குந் தேசத்தைக் காத்திருக்கும் அரசனிடத்திற் கொடுக்கவேண்டும்.

"சந்ததிக்கழகு வந்திசெய்யாமை" என்பதனுல் தன் வமிசம் பெருகுதற்கு அழகாவது மலடியாகச் செய்யாமல் தன் பெண்சாதியோடு கூடி வாழ்தலாம் வினைவசத்தா லுண்டாகிற எழுவகைப்

'பட்ட பிறப்பிலுந் துன்பங்கள் சென்று ஒருவனை யடையமாட்டாது பிறரால் பழிக்கப்படாத பிள்ளைகளைப் பெறுவானாயின் என்றிருப்பதால் தன்னுடைய பத்தினியிடத்திற்றானே காமத்தை யனுபவிக்கவேண்டும் ஆதலால் கண்ணிற்கண்ட காரிகையரைக் கலந்து வியாதி யவமானமுதலிய தாழ்வை யடைந்து வீணாகக் காலத்தைக் கழித்து இம்மை மறுமைகளை யிழந்துப்போகாமல் கிரமமாக நடக்கவேண்டியதே முக்கியம்.

தகப்பன் வசனத்தைத் தள்ளினவனுந் தாயார் வசனத்தை இகழ்ந்தவனும் ஆசிரிய னுபதேசத்தை மறந்தவனும் வேதமார்க்கத்தை யிகழ்ந்தவனும் பிறன்மனையாளை யிச்சித்தவனும் செந்தழல்மயமாகிய நரகத்தின் வாயில் வீழ்வார்களென்று நூல்களிற் கூறியிருக்கிறபடியால் நியாயப்படி நடக்கவேண்டும்.

மின்னலைப்போன்ற ஒளியையுடைய பெண்சாதி வீட்டில் வியசனத்தா லாழ்ந்திருக்க பரதாரங்களையுந் தாசிகள் முதலானவர்களையும் விரும்பி காமத்தி லாழ்ந்தவர்களுந் தாய்தந்தையர்களைப் பகைப்போரும் அறிவில்லாத கசடரொன்று நூல்களி லுரைத்திருக்கின்றபடியால் மனைவியிடத்துக் காமசுகத்தையுந் தாய்தந்தையரிடத்து பட்சத்தையுங் காண்பிக்கவேண்டும்.

பிறன்மனைவி வேசிகள் முதலானவர்களை விரும்புவதனால் அறம்பொருள்கள் அழிவதுமல்லாமல் ஆக்கைக்குத் தீராநோயுந் துன்பமும் பழியும் அடையவேண்டிவரும்.

கட்டளைக்கலித்துறை.

கானவழிக்குத் துணைகோல்புகழிற் கணவறத்தின்
தானவழிக்குத் துணைநன்மனைவிச் சகத்துக்கர
ரானவழிக்குத் துணைமந்திரிமுத்தி சாதனத்து
ஞானவழிக்குத் துணைநீயொண்ஸ்ரீ ரங்கநாயகியே.

என்றிருப்பதால் தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை மனைவியிடத்தில் கொடுத்து அவளுந் தானும் மனம் ஒருமித்துத் தன்னிடத்தில் வந்து யாசிக்கும் எளியோர் முதலானவர்களுக்கு அன்னம் வஸ்திர முதலியவைகளை அளித்து இம்மையில் புகழையும் மறுமையில் சுவர்க்காதிபோகங்களையும் அடையவே

ண்டுமேயல்லது பரதாரமுதலானவர்களை நம்பி வீணில் மேற்படி பொருளையும் கீர்த்தியையும் மறுமையையும் இழந்துப்போவது புத்திமான்களுக்குத் தகாத காரியமாகும்.

ஆசாரதருமங்களை ஒன்றுனும் அழிவில்லாம லிச்சித்து வருந்தியுங் காக்கவேண்டும் பலவறங்களையும் ஆராய்ந்து இருமைக்குந் துணையாவது எதுவென்று யோசித்துப்பார்த்தாலும் ஆசாரமொன்றே தோன்றுகிறபடியால் அவ் வாசாரமும் பிறன்மனைவி முதலானவர்களை இச்சியாவிடத்திற்றான் மேன்மையடையும்.

பெரியோர்குணஞ் சிறிய இனத்தை அஞ்சுதல்செய்யுஞ் சிறியோர்குணம் அச் சிறிய இனத்தையே சுற்றமாகக்கொண்டு அற்பமான காரியங்களைச் செய்து அபகீர்த்தியைச் சம்பாதித்துக்கொள்ளுமென்பதை அறிவினுற் பகைக்கவேண்டும்.

தீயவைகளை பிறன் செய்யக்கண்டால் கோபித்துப் புத்தி சொல்லுகிற தன்மையையுடைய பெரியோர்களை நேசித்த ஒருவனைப் பாபங்களும் நீதியில்லாதவைகளும் சேரப் பயப்படுமென்றிருப்பதால் ஒருவனை உருவத்தினுல் பெரியோர் சிறியோரென்று நிதானிப்பதை விட்டு அவர்களுடைய குணங்களினுல் நிதானித்தறிந்து நேசிக்கவேண்டும்.

காமத்துக்குக் காரணமாகிய கள் முதலிய மயக்க வஸ்துக்களையுண்டு அறிவு மயங்கி தன்மனைவி பிறன்மனைவி என்பதைப் பகுத்தறியாமல் விபசரித்துப் பழிபாவங்களைத் தேடிக்கொள்வது உத்தமர்களுக் கொழுங்கல்லவே.

புருடர்களாக ஜனனமெடுத்தவர்கள் உண்மையாகிய ஞானத்தை அறியவேண்டும் அல்லது தருமவானுகவேண்டும் அல்லது பூமிப்பிரதட்சணஞ்செய்யவேண்டும் அல்லது கீர்த்திமானுகவேண்டும் அல்லது நல்ல சற்குணவிவேகியாகவேண்டும் அல்லது சகலரும் புகழ்கின்ற வித்துவானுகவேண்டும் அல்லது சத்துருக்களைச் சங்கரிக்கும் வீரனுகவேண்டுமென்றும் இக்குணங்களில் ஒன்றும் இல்லாதவர்களைப் படைத்ததனுற் பிரயோஜன மென்னவென்று முன்னோர் சொல்லியிருப்பதை முக்கியமாகக் கவனித்து அவற்றில் யாதாயினு மொன்றைத் தனக்கு உரிய பொருளாகச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்.

ஒருவன் காமமயக்கத்தினாலே தன்னுடைய பெருங்குற்றத்தைத் தினையளவும் நினையாமல் அந்நியன் மனையாளை அனுபவிப்பானாயின் அவன் எவ்வளவு பெருஞ்செல்வத்தை யுடையவனாக விருக்கினுந் தனக்குரிய எல்லாப் பெருமையையும் இழந்து சிறுமையை யடைவான் ஒருவன் தருமங்களைத் தனக்கு உரியதாகக் கொள்ளாதவனாயினும் அவன் அந்நியன் அதிகாரத்திலிருக்கும் பெண்தன்மையை இச்சிக்காதிருப்பானாகில் அதுவே சிறந்த தருமமாகும் மற்ற குற்றங்க ளிருந்தபோதினும் அவைகளெல்லாம் மறைய இக் குணமே மேலாகத்தோன்றும் ஆனதால் இதை முக்கியமாக கவனிக்கவேண்டும்.

இன்னுஞ் சொல்லுகிறேன் தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரங்களாகிய எழுவகைத்தோற்றங்கட்குள் மிகுந்த பெருமைபெற்ற நரஜன்மமாய் உத்பவிப்பது அரிது அதிலும் மேலான நல்ல ஜாதியிற் பிறப்பது அரிது அதிலும் உருவத்தோடு அவயவங்கள் குறையாமற் பிறப்பது அரிது அவ்வாறு பிறந்தாலும் இது பாவம் இது புண்ணியமென்றறிந்து குற்றமற்ற வழியி னிற்றலரிது அதிலும் பெருஞ் செல்வவானாவது அரிது அதனிலும் இரக்கமுள்ள உள்ளத்தை யுடையவனாத லரிது அதிலும் உலகரட்சகன் திருவடிக்குப் பத்தியுள்ள அடியார்களாய் வருவது உலகத்தினிடத்திற் பெரிதும் அரிதாம் என்று முன்னோர் சொல்லியிருக்கிறபடியால் மனிதனாகப் பிறந்தவன் புண்ணியபாவங்களை யறிந்து உயிர்களிடத்தில் இரக்கம்வைத்துத் தருமஞ்செய்து தெய்வபத்தி யுடையவனாக விருக்கவேண்டுமேயன்றி பிறன் மனைவிமுதலானவர்கள்மேற் காமங்கொண்டு விபசரித்தும் பொறாமையாற் பிறருக்குத் தீமைசெய்துங் கள்முதலிய மயக்கவஸ்துக்களை யுண்டுங் காலங்கழிப்பது கனத்தைத் தருமோ?

ஒருவன் நல்ல முகூர்த்தத்திற் பலரும் அறியும்படி வாத்திய முழங்கக் கலியாணஞ் செய்துக்கொண்ட கற்பினையுடைய தன் மனைவியை இச்சியாமல் அந்நியருடைய மனைவியை இச்சிப்பதனால் என்ன பயனென்று திருவள்ளுவநாயனார் திருவுளம்பற்றியிருக்கிறபடியால் இதை ஞாபகத்தில் வைக்கவேண்டியது முக்கியமன்றோ!

தங்களுடைய குலங் கீர்த்தியாற் பிரகாசிக்க முன்னோரியற்றிய குலதருமங்களைச் செய்துவரவேண்டியதுடன் பெருமைமிகுந்த தானங்களைச் செய்து கனமான புண்ணியத்தை யுடையவனெ

ன்கிற பேர்பெற்றுத் தந்தை தாய் குரு வசனங்களை மறுக்காமல் அவர்களிட்ட ஏவல்களைச்செய்து வழிவழியாக வழிபாடுசெய்து வராநின்ற தனது குலதேவனுக்குப் பத்திசெய்து தீர்க்காயுளையும் கல்வியையும் புத்தியையும் கொடையையும் மற்ற நல்லமார்க்கங்களையும் உடையவனாகி யிருப்பவனே புத்திரனென்றும் இவனை ஈன்றவர்களே புண்ணியவான்களென்றும் உலகம் புகழ வாழாமல் மேற்கண்டவற்றிற்கு மாறுபாடாக நடந்து இந்தப் பிள்ளையைப் பெற்ற தாய் தந்தையர் என்ன பாவஞ் செய்தனரோவென்று கண்டோர்களுங் கேட்டோர்களும் இகழ்ந்துரைக்கக் கடிவாளமில்லாத குதிரையைப்போல் அடங்காது மனம்போன வழியே திரிதல் நன்மையன்று.

புண்ணிய பாவமென்பதைச் சற்றும் அறியாமலும் அறிந்ததற்கேற்பத் தானதருமங்களைச் செய்யாமலும் இருமைக்கும் ஏதுவாகிய கல்வியைக் கற்காமலும் பெரியோர்களைப் பணியாமலும் பிறன்பொருளை அபகரிப்பவர்கள் துஷ்டரென்றும் நினைத்த நல்லகாரியங்களைச் செய்யாதவர்களும் தாம் தற்காலத்திற் பலமுள்ளவர்களென்று நினைத்துக் கருவித்து எவர்க்குந் துன்பஞ்செய்பவர்களும் இரக்கமில்லாமலும் நரகத்துன்பத்திற்குஅஞ்சாமலும் பொய்சொல்பவர்களும் வஞ்சனைசெய்பவர்களும் இராட்சதரென்றும் ஏழைகளை வெருட்டுவோர்களும் வலியவரை நேசித்து வஞ்சனையில் வெல்பவரும் ஆசாரமுந் தருமமுங் கெடுமே நரகம்வருமே பழிநிலைக்குமேயென்று பயமும் வெட்கமுமில்லாதவர்களாகி நாரிய ரெவர்களையுங் கூடி மதயானையைப்போலத் திரிபவர் பூதங்களென்றும் நல்லோர் நூலில் உரைத்திருக்கிறார்க ளாகையால் இக்கொடுந்தொழில்கட்கும் மாறுபட்டு நல்வழியில் நடந்து மகாபுருடனென்று நல்லோர் சொல்லும்படி வாழவேண்டும்.

கற்பழிந்த அந்நிய மாதர்களுடைய வீடு ஆவணமென்றும் அவர்கள் படுக்கைவீடு பொதுவாகிய சபையென்றும் அவர்கள் மெத்தை சந்தையிலிராநின்ற பாறையென்றும் அவர்கள்சரீரமோ குளங்களென்றும் அவர்களின் கனிவாய் தாம்பூலம் படிக்கமென்றும் அவர்கள் துடைகள் தண்ணீர்ப்பந்தலில் நடும் வாழைமரமென்றும் அவர்களுடைய மார்பு வாடகைக்குதிரையென்றும் அவர்கள் இடை ஏணியென்றும் அவர்கள் மோகம் எட்டிக்கனியென்றும் நீதிநூல்கள் விளம்புகின்றவற்றைக் கவனித்துக் கிரமமாக நடக்கவேண்டும.

உண்மையாகிய பல புத்திகளை நல்லோர் சொன்னபோதினுங் கேட்காமல் தனக்கே தோன்றியபடிநடப்பவன் மூர்க்கனென்றும் மிகுந்த பெரியோர்களைத் தாழ்வுசெய்து அற்பர்களை மேன்மைப்படுத்துவோன் மூடனென்றும் செய்யத்தகாத காரியமானபோதினுந் தான் பிடித்த பிடியே சரியென்று செய்பவன் துஷ்டனென்றும் தனக்கு அனேக நன்றிகளைச் செய்தவர்கட்கே துன்பமுண்டாகும்படி செய்பவன் கொடிய பாதகனென்றும் ஆண்டவனே மன்னிப்பாயெனப் பணிந்தபோதினும் கோபத்தை யடக்காதவன் குரூரனென்றும் நாடோறுந் தீமையான காரியங்களில் உழல்வோன் சொல்லுக் கடங்காத மகா பாதகனென்றும் பெரியோர் சொல்லுகிறபடியால் இவைகட்கு மாறுபட்டு நன்மார்க்கத்தில் நடந்துக்கொள்வதே மகா முக்கியமாம்.

ஒருவன் பிறர் மனையாளிடத்துக்குப் போகுங்காலத்திலும் அச்சம். அவளிடத்தி லிருந்து மீளுங்காலத்திலும் அச்சம். அவளோடு சிற்றின்பத்தை நுகருங்காலத்திலும் அச்சம. அந்நுகர்ச்சியைப் பிறரறியாமற் காக்குங்காலத்திலும் அச்சம். இவ்வாறு எப்பொழுதும் அச்சத்தையே தருவதாக விருக்கிறபடியால் பிறர் மனையாளை விரும்புதல் என்ன பிரயோஜனத்தைக் கருதியோவென்று முன்னோர் இரக்கமுற்றிருப்பதை முக்கியமாகக் கவனித்து மோட்சவழியைத் தேடவேண்டும்.

பிறரைப் புறங்கூறுகின்றபேர்களும் தாய்தந்தையர் வருத்தமுற்றிருக்கத் தாம் சவுக்கியத்தை அனுபவிப்பவர்களும் ரணக்களத்திற்கு துணிந்துபோய் பின்பு சண்டைசெய்யாமல் முதுகிட்டபேர்களும் கொடுப்பதாகச் சொன்ன பொருளைக் கொடுப்பதில்லையென்றபேர்களும் பெரியோர்கள் ஆமென்றதை அல்லவென்றபேர்களும் ஒருவர் செய்த நன்றியை மறந்தபேர்களும் பெரியோர் சபையில் பயனில்லாத வார்த்தையைச் சொல்லுகின்றபேர்களும் சுகமுண்டென்று அந்நிய மாதரையும் பொதுமாதரையுங் கூடி நல்ல பெண்சாதியைத் துயரத்திலேயே ஆழ்ந்திருக்கச்செய்வோர்களும் நரகத்தில் அழுந்துவார்களல்லவா இவைகளை யோசித்துப் பயந்து நீதியாக நடக்கவேண்டும்.

கற்காமல் ஏட்டி லெழுதிவைத்த வித்தையும் சமயத்துக் குதவுமென்று அந்நியனிடத்தில் வைத்த பொருளுந் தமக் கடங்காது தேசாந்திரம் போயிருக்கின்ற பிள்ளையினுடைய வாழ்வுஞ் சொல்

வேறு மனம்வேறுமாகிய வஞ்சகருடைய நேசமும் இல்லாளை நீங்கிப் பிறர் பாரி சதமென்றிருக்கின்ற வாழ்க்கையும் சமயத்தில் உதவாமற் போய்விடு மாகையால் இப்படிப்பட்டவற்றை நம்பாமற் கிரமப்படி நடந்துக்கொள்ளவேண்டும்.

தன் பெண்சாதியன்றிப் பிறன் பெண்சாதிமேல் நினைவுவைத்த காமிகளுக்குத் தயவுமில்லை நிசமுமில்லை மானமுமில்லை யுத்தத்தில் தைரியங் கொஞ்சமுமில்லை அழகையுடைய பெண்சாதியுமில்லை தொடர்ந்துவராநின்ற முறையுமில்லை நிலையுமில்லை அறமுமில்லை ஜாதியுமில்லை தவமுமில்லை செல்வமுமில்லை இராக்காலத்திற் றனிவழி நடக்க மனதில் அச்சமுமில்லை கெடாத ஜனமுமில்லை இனமுமில்லை சினேகமுமில்லை பெருமையுமில்லை நயமுமில்லை இளமைப்பிராயத்தில் பலமுமில்லை மோட்சத்தைப் பெறற் கேதுவாகிய ஞானமுமில்லையென்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே இவைகளை யோசித்துத் தன் தாரத்தினிடத்திற்றானே காமத்தைக் கழித்தால் அவன் மேற்கண்ட தயவு முதலியவைகளைப் பெறுவானென்பதற் கையமின்றே.

சந்தேகமில்லாமல் தம்மை நல்லவரென்று நம்பினவருடைய மனையாளிடத்தே பாவத்திற் கேதுவாகிய காமானுபவத்தை இச்சித்து நடப்பவர் உயிருடையவரா யிருந்தாலுஞ் செத்தவரை ஒப்பாவார் எனெனில் உயிருட னிருக்கினும் அவ்வுயிர் அறம் பொருள் இன்பங்களாகிய பயன்களை அடையாமற்போதலினாலென்க ஆதலால் அப்பேர்ப்பட்ட பாவச்செய்கைகளை எப்போதும் நினையாமல் இகபரங்களுக் கேதுவாக நடந்துக்கொள்ளவேண்டும்.

முன்னால் அரிச்சந்திரமகாராஜன் வேட்டையாடி சோலைகள் சூழ்ந்த ஓர் தடாகக்கரையி னருகில் வந்து தன் பரிவாரங்களுடனே அங்கு தங்கியிருக்கும்போது விஸ்வாமித்திரன் கோபத்தினால் விட்ட மூச்சினின்று தோன்றிய கருந்திருக்களென்று சொல்லும் இரண்டு ஸ்திரீகள் அவ் வரசன் முன்பாக வந்து பரதசங்கீதநாட்டியங்களிற் பிசகாமல் பாடி யாடியும் அரசன் அவர்களை இச்சிக்காமல் அவர்களுக்கு வேண்டிய பரிசு கொடுத்தனுப்பும்படி மந்திரிகளுக்கு உத்தரவு செய்தனனாக அப்படியே மந்திரிகள் வேண்டிய வெகுமதிகள் கொடுக்கிறோம் வாங்கிக்கொள்ளுங்களென்று சொல்ல அதைக் கேட்ட ஸ்திரீகள் நாங்கள் இந்த வெகுமதிகளை இச்சித்துவந்தவர்களல்ல அரசனுடைய புயங்களைத்தழுவ வந்தோ

மென்று சொல்ல அவ்வார்த்தையை அரசன் கேட்டு நகைத்து இந்த ஸ்திரீகள் இன்னும் எதைக்கேட்டாலுங் கொடுப்பேனன்றி இப்பேர்ப்பட்ட ஸ்திரீகளை என் புயத்தால் எக்காலத்திலுந் தழுவ மாட்டேனென்றும் விஸ்வாமித்திரனே நேரில் வந்து சொன்ன போது,

அன்னியமாதர்தம்மை யருங்கனவதிலுநாடேன்
என்னைவாளாற்பிளந்தே யிரண்டுகூறிடினுமிந்தக்
கன்னியர்தம்மைக்கூடேன் கருதிநீரளிக்குஞ்சாபம்
என்னவந்தாலுங்கொள்வே னினியுன்றன்கடாட்சஞ்சுவாமி

என்றும் சொல்லி நீதியின்படி கிரமமாக நடந்து அதனுல் நேரிட்ட பற்பல துன்பங்களையும் பொறுத்துக்கொண்டதினுலல்லவோ அவ்வரசன் புகழ் நாளைக்கும் நிலைபெற்றிருக்கின்றது ஆனுல் நீ சொல்லிய காமிகள் இதை ஞாபகத்தில் வைக்காமல் அவ்வரசன் அந்த ஸ்திரீகள் இஷ்டப்படி காமத்தை அனுபவியாமல் அவர்கட்குக் கனகாபிஷேகஞ் செய்தனுப்புவதாகச் சொன்னது என்ன பைத்தியமென்றுஞ் சொல்லுவார்கள் அதை விவேகவான்கள். அங்கீகரியாமல் புருடரானவர்கள் தாங்கள் அக்கினி அருந்ததிமுதலானவர்க ளறிய விவாகஞ்செய்துக்கொண்ட பத்தினியையன்றி பிறன்மனையாள் வேசிகள் மற்ற ஸ்திரீகள் முதலானவர்கள் பேரில் தங்கள் மனதைச் செலுத்தாமல் ஜாக்கிரதையாகவே யிருந்து புகழையும் புண்ணியத்தையும் பெறவேண்டியதே முக்கியமென்று சாதிப்பார்கள்.

இன்னுஞ் சொல்லுகிறேன் அருச்சுனமகாராஜன் தேவர்களுடைய சத்துருக்களைச் செயித்து வெற்றியைத் தந்ததால் தேவேந்திரன் முதலாகிய தேவர்களும் மற்றவர்களும் நிறைந்த கொலுவில் மேற்படி அருச்சுனமகாராஜனை சிம்மாதனத்தில் வீற்றிருக்கச்செய்து ஊர்வசி திலோர்த்தமை முதலிய தேவரம்பைகள் நிருத்தஞ்செய்யுஞ் சமையத்தில் ஊர்வசியானவள் மேற்படி அருச்சுனராஜன்பேரில் மோகித்து தன் காமத்தைத் தணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடியால் அவ் வரசன் அந்நியர் அதிகாரத்திலிருக்கும் உன்னை நான் சேரமாட்டேனென்று சொல்லினுக அதற் கவள் என்னை நீ சேராமற்போவையானுல் நீ பேடியாகப்போகும்படி சாபங் கொடுப்பேனென்று சொல்லியும் அவ்வரசன் சம்மதிப்படாமல் மேற்படி சாபத்தையே பெற்றுக்கொ

ண்டானென்று பாரதத்திற் சொல்லியிருக்கின்றதே மேற்படி அரசன் மேற்படியாள் காமத்தை அனுபவித்தபின்பு வரும் பழிபாவங்களுக்கு அஞ்சியல்லவோ அந்த பேடிரூபத்தைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டதாக விளங்குகின்றது இதை மறக்காமல் மனதில் வைக்கவேண்டும்.

மகா தவசிரோன்மணியாகிய பொய்யாமொழிப்புலவரானவர் பாண்டியராஜனைக் காணப்போனசமையத்தில் தனக்குத் தகுந்த மரியாதை செய்யாததினால் அவ்வரசனைவெறுத்து தன்னுடன் வாசித்தவராகிய மேற்படி அரசன் மந்திரியாகிய ஆதிசைவர் வீட்டில் தான் போய்ச் சேர்ந்தவுடனே அந்த மந்திரியால் செய்யப்பட்ட உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு அன்றையதினம் அவர் வீட்டி லிருக்கும்போது இராத்திரிகாலத்தில் அவ்விடத்து நடந்த கச்சேரி முதலாகியதைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது நெடுநேரமானதால் சயனித்துக்கொள்ள விருப்பமுடையவரா யிருந்தபடியால் அதைக் கண்டு மேற்படி மந்திரி தன்னுடைய சயனத்திலவரைப் படுத்துக்கொள்ளச்செய்து தான் மற்ற அலுவல்களை நடத்திக்கொண்டிருந்தார் மேற்படி மந்திரியின் மனைவியானவள் நெடுநேரமானதால் தன் கணவன் சயனித்துக்கொண் டிருப்பாரென்று நினைத்து தானும் அந்தப்புரவாசலின்வழியாகவந்து அச்சயனத்திற்போய் பக்கத்தில் படுத்து நித்திரை செய்துவிட்டாள் அந்த காலத்தில் மேற்படி மந்திரி தன் அலுவலை முடித்துக்கொண்டு தானுந் தன் சிநேகிதராகிய புலவர்பக்கத்தில் சயனித்துக்கொள்ளப்போனவர் பெண்சாதியும் படுத்திருப்பதைக் கண்டு அவ்விருவர்பேரிலுங் கொஞ்சமாவதுசந்தேகங்கொள்ளாமற்படிக்கு சிநேகிதராகிய புலவரைத் தட்டி கொஞ்சம் ஒத்திக்கிடவென்று சொல்ல புலவரானவர் அப்படியே ஒத்திக்கொள்ள தான் அவ்விருவர்மத்தியில் படுத்து நித்திரைசெய்தார் அங்கு வெளிப்புறத்திலிருந்த பாங்கிகள் அம் மூவர்பேரிலும் அரசன்வரையில் பழிச்சொற்களைப் பிரஸ்தாபஞ்செய்தார்கள் இவைகளைக் கேட்ட அரசன் புலவர்மீது மிகவுங் கோபங்கொண்டு வரவழைக்குங்காலத்தில் கண்டசுத்தியாக நடந்த விருத்தாந்தமெல்லாம் பாவினமாகச் சொல்லி அரசனை முன்னிலும் அதிகமாக வெறுத்துக்கொண்டு மந்திரியினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் னூருக்குப்போய்விட்டார் பிறகு சிலகாலஞ் சென்றபின்பு புலவர் தனக்குக் கா

லம் முடிவாகுமென்று முன்னுடித் தெரிந்து தனது சினேகிதராகிய மந்திரியைப் பார்த்து விடவேணுமென்கிற அவாவினுல் மந்திரி ஊருக்குச் சமீபமாக வருந்தருணத்தில் மேற்படி மந்திரி இறக்க அவரது பத்தினியும் உடன்கட்டை ஏறவேணுமென்று சகல பிரயத்தினமுஞ் செய்யுங்காலத்தில் அரசன்முதலானவர்கள் தடுத்துங் கேளாமையாய் மசானம்வரையில் மேற்கண்ட கோலத்துடனடக்க வித்துவானும் ஊரில் வந்து விசாரிக்க மசானத்துக்குப் போயிருப்பது தெரிந்து தானும் பல்லக்குச் சவாரியுடனே மசானத்துக்குவர மேற்படி அரசனுக்கு அந்நாள்முதல் இந்நாள்வரையிலும் புலவர்பேரிலிருந்த சந்தேகத்தினுல் இவரைக்கொண்டு மேற்படி மந்திரியின் மனைவியைத் தடுக்கும்படியாகச் சொல்லியதின் பேரில் அப்புலவர் அதற்குச் செவிகொடாமல் தானும் அந்தக் காஷ்டத்தில் தன் சினேகிதராகிய மந்திரி சவத்தைப் பார்த்து அன்று ஒத்திக்கிடவென்றவனே இன்றைக்கு நீ ஒத்திக்கிடவென்ற மாத்திரத்தில் அச் சவம் ஒருக்களித்துக்கொள்ள தான் வலதுபாரிசத்திலும் மந்திரியின் மனைவி இடதுபாரிசத்திலுமாகப் படுத்து தகனமானுர்கள் இதைக்கண்ட அரசனும் மற்றவர்களும் தாங்கள் முன்பு கொண்டிருந்த சந்தேகம் நீங்கி முன் இவர்கள் ஒரு சயனத்தில் நித்திரைசெய்தது சினேகத்தன்மையென்றே நிச்சயித்துத் தங்களை மிகவும் நொந்துக்கொண்டார்கள் அதுமுதல் மேற்படி பொய்யாமொழிப்புலவருடைய நற்குண நற்செய்கைகளுக்காக யாவருடைய ஞாபகத்திலு மிருக்கவேணுமென் றெண்ணி அந்நாளிலிருந்த பெரியோர்கள் சில ஸ்தலங்களில் அவரைப்போன்ற ரூபத்தைச் செய்துவைத்து முக்கியமான நாட்களில் பூஜிதைசெய்துக்கொண்டு வருகிறுர்கள் ஆனதால் உலகத்தில் எவர்களுஞ் சினேகிதன் பிறன்மனைவி முதலானவர்களிடத்தில் தன் சிந்தையைச் செலுத்தாம லிருப்பார்களானுல் மேற்சொல்லிய புலவரைப் போலவே பெருமையடைவார்கள்.

விதற்பதேசத்து அரசனுகிய உருக்குமாங்கதனென்பவன் செங்கோற் செலுத்திவருங்காலத்தில் சிலகுடிகள் மிருகங்கள் பயிர்களை அழிக்கின்றனவென்று பணிந்து சொல்ல அவ்வரசன் தன்னுடைய நால்வகைச்சேனையோடும் வேட்டைக்காரர்களோடுங் காட்டிற் சென்று கொடிய மிருகங்கள் யாவற்றையுங் கொன்று தன் பரிசனங்களையெல்லாம் விட்டு நீங்கி நெடுந்தூரஞ்சென்று தா

கத்திறல்வாட்டமுற்று அங்கு அருகிலிருந்த கலியென்னும் முனீ ஸ்வரருடைய ஆசிரமத்திற் சென்று அம்முனிவர் ஸ்நாநஞ்செய்தற்குப் போனமையால் தனித்திருந்த அவருடைய மனைவியாகிய முகுந்தையைக் கண்டு தாயே தாகத்திற்கு ஜலந் தருகவென் றிரப்ப அவள் அவ்வரசன் கேட்டபடிக்கு தாகத்திற்குத் தாராமல் அவனழகைக் கண்டு மயங்கி என் காமதாகத்தைத் தணியென்று எதிர்வினவினளாக கேட்ட அரசன் திடுக்கிட்டு நீ அந்தணர்குலத்துப் பெண் நான் இராஜகுமாரன் நீதிவழுவாமற் செங்கோற் செலுத்துகின்றவன் பிறர் மனைவியை விரும்பாததையே விரதமாகக் கொண்டவன் அன்றியுந் தங்கள்தங்களுக்குரிய தலைவரோடு அல்லது தலைவியரோடு கூடுவதினா லுண்டாவதும் அளக்கலாத் தின்பமே யாம் பிறர்க்குரியாரோடு கூடுங்கால் அச்சமிகுதியும், உண்மையால் அத்துணை இன்பமும் இன்றாகும் சொல்லற் கடங்காத நரகத்துயரும் வரும் நரகவாதை யுண்டாகுமோ இல்லையோ பிறகு பார்த்துக்கொள்ளலாமென்றால் விபசரித்தவர்களுக்கு நரகவாதை வாராமற் றப்பாது தக்காலத்தில் பழிச்சொல் வளரும் உன் புருடனுக்கு அந்நியர்முன்பு உண்டாகும் பெரும் பெருமையுங் கெடும் ஆகையால் அதற்குச் சம்மதிக்கமாட்டேனென்றுசொல்ல அவள் அச்சொல்லைக் கேளாமல் அவனைப் பலவந்தமாகத் தழுவினாளாக அதற்கு அவ்வரசன் சகியாமல் இப்படிப்பட்ட துஷ்டஸ்திரீ யிருக்கிற விடமென்று தெரியாமல் வந்துவிட்டோமேயென்று மனங் கலங்கி அவளை உதறித் தள்ளிவிட்டுச் செல்ல அக் கன்னியானவள் என்னுடைய இஷ்டத்தைத் தீர்க்காமல் போகிறபடியால் உனக்குக் குஷ்டம் வரக்கடவதென்று சாபமிட்டாள் அச்சாபத்தைக் கேட்ட அரசன் குஷ்டத்தை அநுபவித்தாலும் அநுபவிக்கலாமேயல்லது இந்த ஜேஷ்டை முகத்தைப் பார்ப்பது நமக்குத் தகாதென்று தீர்மானித்துக்கொண்டுபோகையில் நாரதமகாமுனிவைக் கண்டு நடந்த விருத்தாந்தமுந் தனக்கு நேரிட்ட கஷ்டத்தையுஞ் சொல்லி அவரிட்ட கட்டளைப்படி விநாயகரைப் பூஜித்து தனக்கு நேரிட்டிருந்த குஷ்டவியாதியைத் தீர்த்துக்கொண்டதாக விநாயகபுராணத்தில் கூறியிருக்கிறதே இதைப் புத்தியில் அமைத்துக்கொண்டு புருட சிகாமணிகளென்று புகழுண்டாக வாழவேண்டும்.

(பர சையோகம் பண்ணாதிருக்க) என்று நூல்கள் சொல்லுகிறபடியால் எவர்களும் அந்நியருடைய மனைவியை எக்காலத்தி

னும் விரும்பாதிருக்கவேண்டும் ஏனெனில் தன் மனையாளிடத்து ஒரு பருதுண்டானல் தனக்கு அதனால் உண்டாகும் மானக்கு றையும் அதனை நீக்கவொண்ணுமையையும் தான் பரிக்குமளவும் ஒரு வர் அருகு போயிருத்தற்கு நாணமுடைமையால் வரும் நெஞ்சு நடுக்கமும் தான் இறந்தபின்பும் நிற்பதாகிய பழிப்புரையும் நினை த்து பிறர் மனையாளிடத்து தான் நினைத்த பொல்லா வொழுக்கம் ஒழுகுங்காலத்து அவள் புருடனுக்கும் மேற்கண்டவைகள் உண் டாகுமென்றுந் தனக்கு மறுமைக்கும் நரகமென்றும் இம்மைக் கும் அரசன் முதலானவர்களால் கேடு வருமென்றும் நிற்கத்தக்க பழிப்புரையென்றும் பயந்து பிறர் மனைவி முதலானவர்களை நய வாமல் மனமாகிய குதிரையை அறிவாகிய கடிவாளத்தால் இறு கப் பிடித்து (கொண்ட பெண்டனைக் கூடி வாழ்க) என்னும் மா ர்க்க நீதியின்படி தன் பத்தினியிடத்திற்றனே காமத்தைக் கிரம ப்படி அனுபவிக்கவேண்டும் இப்படி நடக்கப்பட்டவர்களை மற்ற நன்மைகளும் ஒன்றொன்றாகச் சேருமென்பதற் கையமின்றே (நலக்குரியார் யாரெனினும் நீர்வைப்பிற்-பிறர்க்குரியாடோடோ யாதார்) என் றிருப்பதால் மேற்சொல்லிய நியாயங்களைச் சிந்தித் துக் கிரமமாக நடந்துகொள்ளும் அல்லது நடந்துக்கொண்டிரு க்கும் விவேகமான்கள் அடையும் இம்மை மறுமையின் நன்மை களைக்குறித்து அளவிட்டுச் சொல்ல எவர்களா லாகுமென்றுன்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியதெல்லாஞ் சத்தியந்தான் ஆனால் அதில் ஊர்வசியினு லும் முருக்கைதியினாலும் அருச்சுனராஜனுக்கும் உருக்குமாங்கத னுக்கும் சாபம் சம்பவித்ததாக விருக்கிறதே அவ்வரசர்கள் தங்க ளுக்குச் சாபம் நேரிட என்ன குற்றத்தைச் செய்தார்கள் செய்த தில்லையே இப்படி குற்றமற்றவர்பேரில் நினைத்தபோதே குற்றமு டைய விபசாரிக ளிட்ட சாபம் சம்பவிக்க யாதொரு காரணத் தையுங் காணேம் அப்படிக் காணுதிருந்தும் அவ்வரசர்களுக்கு என்னிதத்தினுலே சாபஞ் சம்பவித்ததோ அக்காரணத்தைத் தெ ரியச்சொல்லுமென்றுன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ அன்புள்ள கிருசா னுவே இதற்குஞ் சொல்லுகிறேன் கேளென்று சொல்லுகிறுன் என்னவெனில் ஒரு ஸ்திரீயானவள் அந்நிய புருடனை நினைந்தமா த்திரத்தில் கற்பழிந்தாளென்று நூல்களிற் சொல்லியிருப்பதாக

நீ சொல்வதை ஒருபட்சத்தில் ஒப்புக்கொள்ளவேண்டியதிருந்தா லும் நாம் முக்கியமாக ஆலோசித்துப்பார்த்தால் ஒன்றை நினைப் பதற்கும் ஒன்றைச் செய்வதற்கும் அனேக வித்தியாசம் யிருக்கி றதென்று பட்டம்பகற்போலத் தெரியுமல்லவா அஃதெப்படியெ னில் ஒருவன் வீட்டிற் பாத்திரத்திலிருக்கும் அன்னத்தை மற் றொரு வீட்டிலிருக்கிறவன் பார்த்துப் புசிக்கவேணுமென்று நினை த்தமாத்திரத்தால் மேற்படி பாத்திரத்திலிருந்த அன்னங் குறைந் துபோமா நினைத்தவன் வயிறு நிரம்பிவிடுமா நிரம்பமாட்டாதே அவன் அதைத் தின்றுவிட்டால் (முன் சொன்னவனுக்கு அன் னங் குறைந்துபோவதினால்) அவனுக்குப் பழியும் பாவமும் தெ ண்டனையும் வருமேயல்லாமல் நினைத்தமாத்திரத்தில் மேற்கண்ட தெண்டனை முதலியவற்றை யடையமாட்டானே இன்னும் ஒருவ னை மற்றொருவன் கொலைசெய்ய நினைத்தமாத்திரத்தில் முன் சொ ன்னவனுக்குப் பிராணன் போய்விடுமா அவன் குடும்பத்தார்க ளும் மற்றவர்களும் பரதவித்து அழுது அலைவார்களா மாட்டார் களே அவன் கொலைசெய்துவிட்டால் முன் சொன்னவனுடைய ஆத்துமா நீங்குவதுமல்லாமல் அவனுடைய குடும்பத்தார்களும் மற்றவர்களும் பரதவித்து அழுது அலைவார்களல்லவா அன்றியுங் கொலைசெய்தவனுக்கு இம்மையில் பிரஜைகளாற் பழிச்சொல்லும் அரசர்களால் தெண்டனையுங் கிடைப்பதோடு மறுமையிலும் நர கத்தி லழுந்திப் படாதபாடு படவேண்டிவருமல்லவா இப்பேர்ப் பட்ட சிட்சையை நினைத்தவர்கள் பெறமாட்டார்கள் என்பது யாவரும் அறியாததல்லவே ஆனதால் ஒரு பாவகாரியத்தைச்செ ய்வதே பெரிய குற்றமல்லாமல் நினைப்பது அவ்வளவு குற்றமாக மாட்டாது இப்படியானால் சில நூல்களில் அப்படிச் சொல்லவே ண்டிய தென்னவென்றால் நினைத்தமாத்திரத்திலே குற்றமுண்டா குமென்றுசொன்னால் செய்தால் எவ்வளவு பெரிய குற்றமுண்டா குமோவென்று யாவரும் பயந்து பாவகாரியங்களைச் செய்யாமல் சன்மார்க்கத்தில் நன்மார்க்கத்தில் நடந்துக்கொள்ளுவார்களென் பதற்கேயென்று நாம் உறுதியாக நம்பவேண்டியிருக்கின்றது ஆ னதால் மேற்படி ஸ்திரீகள் தாங்கள் அதுவரையில் கிரமமானவழி யில் நடந்துக்கொண்டு வந்தவர்களாகையால் அவர்கள் புண்ணிய மெல்லாம் நினைத்தமாத்திரத்தில் போய்விடுமா விடாதே (பேத மையென்பது மாதர்க் கணிகலம் எண்ணுதெண்ணி யெழுதிப்ப டிக்கினும் பெண்புத்திபேய்பேய் பேயாகும்மே) என்னும் பழ

மொழி நிச்சயமாகையால் தங்களுக் குண்டாகிய காமத்தைத் தடுக்கமாட்டாமல் அவ்வரசர்கள்பேரில் மோகித்து அவர்கள் சம்மதிக்காமற்போனதினால் அந்த யுகங்களில் தங்களுக்கிருந்த சுதந்தரத்தினால் அதுவரையில் தாங்கள் தாங்கள் கிரமமாக நடந்து சம்பாதித்திருந்த புண்ணியங்களைச் சாபவழியாக தாரைவார்த்து விட்டார்கள்.

விநாயகர் புராணம்.

முகுந்தை சொல்லல்.

விருத்தம்.

முள்ளரைக்கமலத்தண்ணல் முகனுகமிரண்டன்மாட்டுந்
துள்ளுமீன்விழியினார்க்குச் சுதந்திரம்வைத்தானற்றால்
வள்ளலேபிறனிற்பட்ட மாதரோயானுந்தாமே
நள்ளுறநினைந்துகூடில் நவையுமின்றழிவுமின்றே.

மீண்டவன்றன்னைநோக்கி வெஃதெனமுகுந்தைசீறித்
தீண்டுதற்கரியதாமென் றிருத்தருகற்புஞ்சிந்த
ஈண்டுபேரழகிப்பேர்ந்தா யின்பமுங்கொடுத்தாயில்லை
மாண்டநின்னுடலிற்குட்டம் மருவுகவல்லையென்றாள்.

பாரதம்.

தேவர்கள் சொல்லல்.

விருத்தம்.

அன்னைநீபிறர்க் காகினுமாசையின்
இன்னதீர்ப்ப தெவர்க்குமியல்பரோ
மன்னனாகினும் வார்பிழைசெய்தனன்
என்னனாக ரிவட்கிதங்கூறினர்.

காமமிக்கநின் கட்டுரைத்தாபநோய்
பூமிபொய்ப்பினும் பொய்ப்பதன்றாலரோ
வேய்மலர்த்தொடையாய் நெஞ்சில்வேண்டுநாள்
ஆமிவற்கிவ் வுருவருள்செய்தநீ.

இவைகளைக்கேட்ட மேற்படி அரசர்கள் பரதாரகமனத்தை நீக்கிய புருடசிகாமணிகளாகையால் தாங்கள் பிரதிசாபமிட்டால் தாங்க ளதுவரையில் கிரமமாகக் கஷ்டப்பட்டு சம்பாதித்திருந்த புண்ணியங்களைத் தாரைவார்த்துவிடவேண்டிய திருக்கின்றதே யென்றும் ஏதோ இப்பேர்ப்பட்ட கஷ்டம் நம்முடைய பூர்வ கர்மத்தினால் அனுபவிக்கவேண்டி வந்ததென்றும் பொறுமையோடும் பொறுத்துக்கொண்டார்களென்று நினைக்கவேண்டி யிருக்கின்றது.

இவைகளுக்குத் திருஷ்டாந்தம்.

மாந்தர் நீதி.

சாந்தமுள்ளவன் றன்னியனுவான்.

திருக்குறள்.

தன்னைத்தான்காக்கிற் சினங்காகக்காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

நாலடியார்.

சிறுகாபெறுகா முறைபிறழ்ந்துவாரா
உறுகாலத்தூற்ருகா வாமிடத்தேயாகுஞ்
சிறுகாலைப்பட்ட பொறியுமதனுல்
இறுகாலைத் தென்னை பரிவு.

என்பவைகளேயாம்.

இதன்றியில் பொருள் சம்பாதித்திருந்த ஒருவன் தன் பொருளைத் தூர்விஷயத்தில் செலவுசெய்துவிட்டு தான் நினைத்த வேலையை முடித்துக்கொள்ளச் சக்தியுள்ளவனுக விருக்கிருனல்லவா அதைப்போலவே மேற்கண்ட ஸ்திரீகளுந் தங்கள் புண்ணியமாகிய பொருளைத் தூர்விஷயத்தில் சாபத்தின்வழியாகத் தாரைவார்த்துத் தங்களுடைய சாபத்தைப் பலிக்கச் செய்துக்கொண்டார்களென்று நம்பவேண்டியிருக்கின்றது.

மேற்கண்ட இரண்டு அரசர்களும் பரதாரத்தை இச்சிக்காதவராகையால் அவர்களில் அர்ச்சுனராஜன் ஊர்வசியிட்ட கொடிய சாபத்தாலேயே அஞ்ஞானவாசத்திற் றன்னை யொருவரும் அறியாமற் காத்துக்கொண்டனன் சாபம் பெற்றதனுல் அவனுக்கொரு குறையுமில்லை அச்சாபம் அவனுக்கு நன்மையைத்தந்தது இகலோக பரலோகங்களில் கீர்த்தியையும் மோட்சத்தையும் அடைந்தனன் உருக்குமாங்கதராஜனேவென்ருல் முகுந்தையின்சாபத்தால் தனக்கு நேரிட்ட குஷ்ட வியாதியை மறுதினத்திலேயே எளிதில் நீக்கிக்கொண்டு அழியாத புகழையும் புண்ணியத்தையும் பெற்றனன் இதனுல் அவ்விரண்டு அரசர்களுடைய தவத்தின் மேன்மை யுலகத்திற்கு நன்ருகவிளங்குகிறதென்றுசொன்னுன்.ஆ-ஐ.

கல்விகற்போரைக்குறித்து.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் திருப்தியுள்ளவனை ஒ விஸ்வாவசுவே சிலர் பகலிரவுங் கல்வியினிடத்திலேயே தங்கள் காலத்தைக் கழிக்கின்ருர்களே அதனுல் அவர்களுக்கு என்னபிரயோசனம் உண்டாகிறதென்ருன்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ கிருசானுவே சொல்லுகிறேன் கேள் பிள்ளையானவர்கள் தாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய உபகாரமென்னவெனில் தங்களைக் கண்டறிந்தவர்கள் யாவரும் இந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள் எப்பேர்ப்பட்ட தவஞ் செய்தார்களோவென்று மகிழ்ந்துரைக்குபடியாகத் தான் ஆனால் இந்தப்படி சிறப்புறுவதற்குக் கல்விப்பயிர்ச்சியின்றி யமையாததால் எவர்களுங் கல்வியைக் கற்றுணரவேண்டும்.

இளமைப்பருவத்தில் கல்வியைக் கற்கவேண்டும் இந்தப்படி கல்வியைக் கற்காமல் சோம்பலுற்றவன் தரித்திரத்தை யடைவான் கல்வியால் நல்லறிவு மிகும் அது பெரியோர்கள் சென்ற நல்லொழுக்கத்தில் புத்தியைச் செலுத்தும் கணிதநூலும் இலக்கண நூலும் மனிதருக்குக் கண்களென்று சொல்லத்தக்கவைகளாம் ஆதலால் கற்றவர்கள் கண்ணுடையவர்களென்றுங் கல்லாதவர்கள் குருடர்களென்றுஞ் சொல்லப்படுவார்கள்.

நன்றாய் வாசித்தறிந்தவர்களை யாவரும் வணங்கி யுபசரிப்பார்கள் ஆதலால் கல்வியினிடத்து இடைவிடாது சிந்தையை வைத்துக் கற்கவேண்டும் மணற்கேணி தோண்டுமளவும் நன்னீர் சுரப்பதுபோலக் கல்வியைக் கற்குமளவும் நல்லறிவு மிகும் மிகுந்த தூரத்திலிருக்கும் அந்நியதேசத்திற்கூட சுவதேசத்தைப்போல உபசரிக்கப்படுவதற்குக் கல்வியே காரணமாதலால் அதை வாழ்நாளளவும் பயிர்ச்சிசெய்துவரவேண்டும்.

ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பிலுந் துணையாமென்று பெரியோர் கூறுவராதலால் கல்விப்பயிர்ச்சியினிடத்துச் சோம்பலை யகற்றிக் கற்கவேண்டும் கற்ற கல்வியினாலே யுண்டாகிய பிரயோசனங் கற்றவர்களுக்குமாத்திரமேயன்று அவர்களை யடுத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உண்டாகும் பிறருக்குப் போதிக்கின்றவர்களுடைய கல்வி நாளுக்குநாள் வளர்ந்தேறுமென்பதற்குப் பிரமாணந்திரம் வேண்டுவதில்லை.

சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிற விதியையும் விலக்கையும் அறிந்துநடக்கின்றபெரியோர்களுக்குத் தொண்டுசெய்து நடந்துக் கொள்ளுவதே வித்தியார்த்திகளின் கடமையாம் அறிவுடையவர்களுடைய சபையிற் செல்லுங் கல்வித்திறத்தோர் மேம்பாட்டை யடைவார்களென்பதற்கு அவர்களுடைய சலக்ஷணமான கல்வியே காரணமென்று சொல்லப்படும் பல நூல்களை யாராய்ந்து அவைகளின் சாரமான பொருளைச் சிந்தையில் வைத்து உலகநடையைபற்றுவதே கல்வி கற்றோர்க்கு அழகாகும்.

நூல்களிற் சொல்லியிருக்கின்ற முடிவான பொருள் இன்னதென்று அறிவதற்கு அதிக கேள்வியும் அறிவும் வேண்டுமாயினும் அதற்குக் கல்வியே காரணமாதலால் அதை எக்காலத்துங் கற்கவேண்டும் சாஸ்திரங்களை ஆராய்ந்து அவைகளிலுள்ள பொ

ருள்களைப் பகுத்தறிந்து பிறருக்கு உபயோகப்படுத்துவதனுல் நன்மையுண்டாகும் கல்வியைக் கற்றும் அறிவு விளங்காமல் குருடனைப்போல் ஒன்றை பட்சமாகக்கொண்டால் கற்றதனுல் பயனில்லை ஆதலால் அறிவோடு கல்விகற்று அறவழியில்நிற்கவேண்டும்.

அறிவுடையவர்கள் கற்ற கல்வியின் உண்மை விருத்திசந்திரன்போல் வளர்ந்தேறும் ஆதலால் அவர்களிடத்தில் எப்போதும் பழகுதலால் வித்தியார்த்திகளுக்கு மிகுந்த நன்மை யுண்டாகும் நன்மார்க்கத்தை யடைய விரும்புகிறவர்கள் பலநூல்களை ஓதியுணரவேண்டும் அதனுல் மனதிலுள்ள பற்று நீங்கும் கல்விப்பொருளை யறிந்த அறிவுடையவர்களுடைய வரவுக்கு யாவரும் எதிர்பார்ப்பார்கள் மற்றவர்களையோவென்ருல் அப்படி நோக்காராதலின் கல்விப்பொருளே யெல்லாவற்றிலுஞ் சிறந்ததென்று அறியவேண்டும்.

கல்வியைக் கல்லாத அறிவீனர்களுடைய கூட்டத்திற் சேரலாகாது சேர்ந்தால் பல தீமைகள் உண்டாகுமென்று அறியவேண்டும் அஃதென்னெனில் சொக்கட்டான், சதுரங்கம், கூத்து, பொய், களவு முதலான தீயவைகள்தான் அவைகள் நம்மைச் சேரமலிருக்கும்படி முன்னுடி சர்ஜன மந்திரிபோ லிருந்து எச்சரிக்கை செய்வது கல்வியாதலால் அதை விரும்பிப் பார்க்கவேண்டும் கல்வியை நன்ருய்க் கற்ற புத்திமானுக்கு அதைவிட தோழமை வேறு வேண்டுவ தில்லையென்று பெரியோர் உரைத்திருக்கின்ருர்கள்.

தீபம் இருளைத் துலக்குவதுபோலக் கல்வியாகிய தீபம் மனிதர்களுடைய தெரியாமையென்னும் இருளைத் துலக்கி நல்லறிவை விளக்கும் சூரியன், சந்திரன், சுடர் இம்மூன்று மிருளைத் துலக்குமாயினும் ஒவ்வோர்காலத்திலும் ஒவ்வோரிடத்திலுமாத்திரம் அப்படிச் செய்யும் கல்வியானது அதனைப் பெற்றவருக் கெப்போதும் எவ்விடத்திலும் இருளை யகற்றி எப்பொருளையும் விளங்கச் செய்யும் ஆதலால் அஃது கல்விச்சூரியனென்றும், கல்விச்சந்திரனென்றும், கல்விச்சுடரொன்றும் சிறந்த பெயர்களைப் பெற்றிருக்கின்றது.

கல்விப்பொருளிலுஞ் செல்வப்பொருளிலுங் கல்விப்பொருளேசிறந்ததாம் ஏனெனில் செல்வப்பொருள் செலவழியும் அதைக்குறித்து களவுசெய்யப்படும் கொடுக்கப்பட்டால் குறைந்துப் போகும் கல்விப்பொருளோவெனில் கொடுக்கக்கொடுக்க மேன் மேலும் விருத்தியாகும் செலவழித்தாலும் பெருக்குமேயல்லது குறையாது களவிற்கும் உரித்தாகாது ஆதலால் கல்வியைக் கற்றவனுக்கு ஒருக்காலுங் குறைவில்லை.

திரவியத்தினிடத்தில் வைத்த ஆசையால் கல்வியாகிய தெப்பத்தைக் கைவிட்டால் திரவியமிருந்தும் பயன்படாது அதையுடையவரும் பெருமையடையார் கல்வியினுல் நல்லொழுக்கமும்

நல்லொழுக்கத்தினால் யோக்கியதையும் யோக்கியதையினால் பொருளும் பொருளினால் தருமமும் அதனால் சுகமும் உண்டாகுமாதலால் எல்லாநன்மைக்குங் கல்வியே காரணமாகவிருக்கின்றது.

ஒரு வித்வான் படிப்பி லூற்றமில்லாமல் விளையாடிக் கெட்டுப்போகிற தனது குமாரரைப் பார்த்து ஐயோ பிள்ளைகளே நீங்கள் இளமையிற் கல்வி கற்கச் சோம்பலுற் றிருக்கிறீர்கள் ஆதலால் உங்களுக்கு வயது வரும்போது கல்விமான்கள் முன்பாக உளையி லழுந்திய கடாப்போல் விழிப்பீர்களென்றான் ஆதலால் இதைக் கருதி தகுந்தபடி நடக்கவேண்டும்.

கல்வி கற்றவன் எவ்வளவு தாழ்ந்தவனாகவிருந்தாலும் அது அவனை மேம்பாடடையச்செய்யும் ஆகையால் பருவமிருக்கும் போதே வித்தையைக் கற்கவேண்டும் சஸ்திரவித்தை சாஸ்திரவித்தை இவ்விரண்டிலுஞ் சாஸ்திரவித்தையே சிறந்ததாகும் ஏனெனில் முற்கூறியது முதுமையில் உபயோகப்படமாட்டாது பிற்கூறியது எப்பொழுதும் பெருமையடையும் கல்விமான்களிடத்தில் நற்குணங்களே விளங்கும் மூர்க்கரிடத்தில் குற்றங்கள் விளங்கும் ஆதலால் ஆயிரம்பெயர் மூர்க்கருக்குள் கல்விமானாக ஒருவனிருந்தாலும் அவனே யாவராலும் பூசிக்கப்படுவானென்று பெரியோ ருரைத்திருக்கின்றார்கள்.

எல்லாச் சங்கைகளையும் அறுத்துப் புறப்பொருள் யாவையும் விளக்குஞ் சாஸ்திரங்களே கண்களென்னப்படும் ஆதலால் அக்கண்க ளில்லாதவன் குருடனென்னப்படுவதற்குச் சந்தேகமில்லை கல்வி ஆரம்பத்தில் வருத்தமென்னுந் துன்பத்தைத் தோற்றுவிக்கும் பின்பு சாதிக்கப்படுமாகில் மடமையென்னும் அறியாமையை நீக்கி விவேகத்தை யுண்டாக்குவதுமன்றி செல்வத்தையுஞ் சிறப்பையும் பெருகச்செய்யும் எப்படியெனில் பயிர்செய்யுங் குடியானவனுக்கு அது முதலில் கஷ்டத்தையுண்டாக்கி முடிவில் சௌக்கியத்தைக் கொடுப்பதுபோலேதான்.

யாவருக்கும் அழகுண்டாக்கும் நவரத்நாபரணங்களுக்கு அழகுசெய்யவேண்டுமோ அப்படியே கல்வியென்னும் பூஷணத்தையுடையவனுக்கு வேறு பூஷணம் வேண்டுவதில்லை கல்வியானது தாழ்ந்தவனை யடைந்திருந்தாலும் மேம்பாடான ராஜசமுகத்திற் சேர்க்கும் எப்படியெனில் மகாநதியானது இயல்பாகத் தாழ்ந்த விடத்திலுள்ள ஜலத்தையும் எளிதிற் சேரக்கூடாத சமுத்திரராஜனைச் சேரச்செய்வதுபோலேதான்.

முதலிற் கல்வியைக் கற்று பின்பு பொருளை ஈட்ட விரும்பியவன் பழிபாவங்களுக்குஅஞ்சி சம்பாதிப்பானென்றும் அப்படி சம்பாதித்த பொருளை பாத்திராபாத்திரமறிந்து தருமஞ்செய்து புகழ்புண்ணியங்களைத் தேடிக்கொள்ளுவானென்றும் பெரியோர் உரைத்திருக்கின்றார்கள் ஆகையால் கல்வியானது சகலவிதத்திலும் இகபரசௌக்கியங்களை யுண்டாக்குமெனக் கருதி அக் கல்

விச்செல்வத்தை எவர்களும் அபிவிருத்திசெய்தே வாழவேண்டிய தென்றும் அப்பேர்ப்பட்டவர்களுக்கு நாம் வந்தனஞ்செய்கிறோமென்றுஞ் சொன்னான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் திருப்தியுள்ளவனாய் ஓ விஸ்வாவசுவே நீ சொல்லியதெல்லாஞ் சத்தியந்தான் ஆனால் வேஷம்போட்டு ஆடுங் கூத்தையுந் துர்விஷயமாகச் சொன்னபடியால் அதைப் பார்ப்பதனாலுங் குற்றம் வருமோவென்றான்.

இதைக்கேட்ட விஸ்வாவசுவென்பவன் ஓ நேசனாகிய கிருசானுவே இப்பேர்ப்பட்ட கேள்விக்கு விடை சொல்லவேண்டியது அகத்தியமானதால் சொல்லுகிறேன்கேள் ஸ்திரீகள் வேஷம்போட்டுக்கொண்டு ஆடுவதைப் பார்த்த புருடர்கள் அறிவு மயங்கி அவள்பேரில் மோகித்து அனேகம் பொருளைக் கொடுத்து அனுபவிப்பதுபோல புருடர்கள் வேஷம்போட்டுக்கொண்டு ஆடும்போது பார்த்த ஸ்திரீகள் மதிமயங்கி அவன்பேரில் மோகித்து பல உபசரணைசெய்து அனுபவிப்பார்களென்று நான் சொல்லவேண்டுமோ ஆனதால் உத்தமபுருடர்களானாலும் கற்புடைய ஸ்திரீகளானாலும் மேற்படி கூத்துகளைப் பார்க்கும்விஷயத்தில் சபலபுத்தியடைதற் கேதுவாகிறதாகையாலும் அதனா லனேக காரியங்களுக்கு கெடுதியும் பழியும் பாவமும் வருகிறதாகையாலும் பெரியோர்கள் அக்கூத்தையுந் துர்விஷயத்தில் சேர்த்திருக்கிறார்களென்றும் நீ விவேகசாலியாகையால் இன்னும் விரிவாகச் சொல்லவேண்டிய தகத்தியமில்லையென்றும் இவ்வளவில் நிறுத்தினேனென்று சொன்னான். ஆ-ஐ.

சகல திவ்விய ஸ்தலங்களிலுமிருக்கிற

சுவாமியைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் சகலமான திவ்வியக்ஷேத்திரங்களையும்பார்த்து கரங்களைக் கூப்பிக்கொண்டு கிருசானுவை நோக்கிச் சொல்லுகிறான் ஓ சிநேகித சிகாமணியே கங்காப்பிரவாகத்துக்கு உத்பத்திஸ்தானமாகிய பாதமுள்ளவனும் உலகங்களுக்கெல்லா மூலகாரணமானவனும் அரங்கக்ஷேத்திரமுதலாகிய திவ்வியஸ்தலங்களில் பகுகாலமாக * ஸாந்நித்தியமுள்ளவனுந் தன்னா லுண்டான பிரபஞ்சத்தைப் பிரகாசமாகப்பார்க்கிறவனும் நமஸ்காரஞ் செய்பவர்களுக்குத் தன் னாமக் கீர்த்தனத்தால் தாபங்களை நீக்குகிறவனுமாகிய பரவஸ்து சுரூபமாகிய விஷ்ணுவை நமஸ்காரஞ் செய்யென்றான்.

---

* ஸாந்நித்தியம்-என்பது வாசஞ்செய்தல்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் ஓ அன்புள்ள விஸ்வாவசுவே நீ சொல்லியதில் ஒரு சங்கதிமாத்திரம் எனக்கு ருசிக்கிறதில்லை ஏனெனில் எந்த சுவாமியினுடைய நேத்திரங்கள் o புஷ்பவந்தங்களென்று பிரசித்தமாக விருக்கின்றதோ அந்த சுவாமி சகலப் பிரபஞ்சத்தையும் ஸ்புடமாகப் பார்க்கிறதற்கு எப்படி சமர்த்தனுவானென்றான்.

இதைக்கேட்டவிஸ்வாவசுவென்பவன் ஓகிருசானுவே சூரிய சந்திரர்களே அரிக்கு நேத்திரமென்று சுவாமியை ஸ்துதிசெய்கிற உன்னிடத்தில் நான்கோபஞ்செய்யமாட்டேன் ஆனதால் இதைக் கேள் எந்த சுவாமி பிரபஞ்சமே சரீரமாகவுள்ளவனே சூரியசந்திரர்கள் நேத்திரங்களாகவுள்ளவனே, குசன், லவன், பிரம்மா முதலானவர்கள் புத்திரர்களாகவுள்ளவனே அப்பேர்ப்பட்டவனும் நீலமேகத்துக்குச் சமானமாகிய தேககாந்தியுள்ளவனும் இலட்சுமிதேவிக்குத் தலைவனுஞ் சிந்தாமணிக்குச் சமானமாகிய கடாட்சமுள்ளவனுந் திரிமூர்த்திசுரூபனுமாகிய ஸ்ரீமந்நாராயணன் எல்லாருக்கும அதிகமாகிய சுகத்தைக் கொடுக்கட்டுமென்றான்.

முக்கியபலவினைக்குறித்து.

அப்புறம் விஸ்வாவசுவென்பவன் ஓ சினேகிதனுகிய கிருசானுவே சுருக்கமாக நான் சொல்லப்போகிற சாரமாகிய இந்த அர்த்தத்தைக் கிரகித்துக்கொள் என்னவெனில் மனிதர்களாவது தேவர்களாவது, பசுக்களாவது, இதர ஜந்துக்களாவது யோக்கியமான புருஷனுல் நிந்தைசெய்யத் தகுந்ததல்ல தோஷங்களால் நிறைந்திருக்கிற கலியுகத்திலும் மூன்றுலகங்களில் அவரவர்களில் குணங்களில்லாதவர்க ளிருக்கமாட்டார்களென்றான்.

இதைக்கேட்ட கிருசானுவென்பவன் அங்கீகரித்து ஓ எனதன்புள்ள விஸ்வாவசுவே சகல வஸ்துக்களிலுங் குணசம்பத்துகளைத் திடஞ்செய்வதற்காகவே நிச்சயமான அர்த்தத்திலேயே ஆட்சேபணை யுண்டாக்கி தூஷண வசனங்கள் என்னுல் சொல்லப்பட்டதேதவிர வேறில்லையென்றான்.

---

o புஷ்பவந்தங்களென்பது-பூவுடைய கண்களென்று தோஷகற்பனையும், சூரியசந்திரர்களாகிய கண்களென்று யெதார்த்தமுமாகும்.

கிரந்தகர்த்தா சொல்லியது.

இந்தப்படி சகலஜனங்களுடைய சுபாவகுணாதிசயங்களையுஞ் சகலவஸ்துக்களுடைய சுபாவங்களையுஞ் சொல்லியவர்களும் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்வியக்ஷேத்திரமுதலானவைகளைச்சேவித்து கிருதார்த்தரானவர்களுங் கபடமில்லாத திடமான சினேகமுள்ளவர்களும் கந்தருவ சிரேஷ்டர்களுமாகிய கிருசானு, விஸ்வாவசுவென்பவர்கள் அதிகமாகிய ஆனந்தத்தால் பூர்ணராய் தங்களுடைய ஸ்தானத்துக்குப் போய்ச் சேர்ந்தார்களென்றும் பூமியில் சகல ஜனங்களுக்குங் குசலமுண்டாவதற்காக சகல திவ்விய ஸ்தலங்களிலுஞ் சம்வச்சரோச்சவமுதலாகிய வுச்சவங்கள் அபிவிருத்திப் பொருந்தி யிருக்கட்டும் பிரஜைகளுக்கெல்லாம் க்ஷேமமுண்டாகும்படிக்கு இராஜர்கள் நியாயமான மார்க்கத்தினாலே பூமியை சம்ரட்சணைசெய்யட்டும் சமுசாரமென்கிற ரோகத்தைப் பரிகாரஞ்செய்கிற யாகங்களை அனுஷ்டிப்பதனால் உலகங்களுக்கு க்ஷேமஞ்செய்கிறபிராமணர்கள் சுபமுள்ளவர்களாய் நிர்ப்பயமாக விருக்கட்டும் வேதங்களுடைய மார்க்கந் தடங்கலில்லாமல் அபிவிருத்திப் பொருந்தி யிருக்கட்டும் மேகங்கள் காலந்தப்பாமல் வருஷித்துக்கொண் டிருக்கட்டும் பூமி பயிர்களால் பூரணமாகவிருக்கட்டும் ஜனங்களெல்லாம் புத்திர பௌத்திர சம்பத்துள்ளவர்களாய் நூறுவருஷ மிருக்கட்டும் பகவானுடைய அடியார்களின் மகிமை பலகாலமிருக்கட்டும் திரிமூர்த்திசுரூபனாகிய பகவான் பல்லாண்டா யிருக்கட்டுமென்றும் இந்த கிரந்தத்தில் விஸ்தாரமாகத் தோஷங்களிருந்தாலும் புத்திப்பிரகாசமுள்ள சத்புருஷர்களாகிய வித்துவான்கள் கிருபையினால் கிருசானுவைப்போலெண்ணாமல் விஸ்வாவசுவைப்போலே யெண்ணக்கடவதென்று சொல்லியிருக்கிறார்.

பயன்.

இன்னிசை வெண்பா.

உலககுணக் கண்ணாடி யோதினோர் கேட்டோர்
அலகிலாச் செல்வத்தோ டாயுள் மகவுமிகப்
பெற்றுபக வானருளாற் பேரின்பஞ் சார்வரொன்றே
சுற்றுபக வான்மனதே சொல்.

உலககுணக் கண்ணாடியென்னும்

தெய்வகுணவெளிச்சம்,

முற்றுப்பெற்றது.
